பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் வைணவத் திருத்தலப் பயண அநுபவங்களும் வரலாறும்

திருமதி பி ஜோதிமணி, ஆய்வியல் நிறைஞர் (2016-2019)

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி)

பாரதியார் பல்கலைக் கழகம்

EBOOK

மின்நூல்

பேராசிரியரின் ஆதார நூல்கள்

சோழநாட்டுத்திருப்பதிகள் – 1 :: சோழநாட்டுத்திருப்பதிகள் – 2

பாண்டியநாட்டுத்திருப்பதிகள் :: தொண்டைநாட்டுத்திருப்பதிகள்

வடநாட்டுத்திருப்பதிகள் :: மலைநாட்டுத்திருப்பதிகள்

ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN: 978-81-939835-8-4

ஆய்வேட்டின் நூல்வடிவு

பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் வைணவத் திருத்தலப் பயண அநுபவங்களும் வரலாறும்

[ஆய்வியல் நிறைஞர் ஆய்வேட்டின் நூல்வடிவு]

திருமதி பி ஜோதிமணி, ஆய்வியல் நிறைஞர் (2016-2019)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
பாரதியார் பல்கலைக் கழகம்

ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின்
வைணவத் திருத்தலப் பயண
அநுபவங்களும் வரலாறும்

All rights are reserved. No part of the publication may be reproduced,
stored in a retrieval system(including but not limited to computers,
disks, external drives, electronic or digital devices, e-readers, websites),
or transmitted in any form or by any means(including but not limited to
cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical,
recording, electronic, digital versions) without the prior written permission of the publisher,
not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchase.

Price: Rs.275.oo

முதல் பதிப்பு — செப்டம்பர் 2019

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

NA SUBBU REDDIAR 100 EDUCATIONAL TRUST
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939835-8-4

9 788193 983584 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்



23 Mar 1893 :<>: 4 Jan 1974

Quick Facts:

- **Full Name:** Gopalswamy Doraiswamy Naidu
- **Better Known as:** G.D. Naidu
- **Also Known as:** The Edison of India, The Wealth Creator of Coimbatore
- **Famous as:** Scientist, Inventor, Businessman, Photographer, Philanthropist
- **Birth Place:** Kalangal, Coimbatore District, Tamil Nadu
- **Nationality:** Indian

The late Sir C V Raman, made a *posthumous* compliment:

'A great educator, and entrepreneur in many fields of engineering and industry, a warm hearted man filled with love for his fellows and a desire to help them in their troubles, Mr Naidu is truly a man in a million – perhaps this is an understatement!'

பொருளடக்கம்

ஆய்வு செய்யப்பெற்ற நூல்களின்
அணிந்துரைகள்

"பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின்
வைணவத் திருத்தலப் பயண
அநுபவங்களும் வரலாறும்"

திருமதி பி ஜோதிமணி, ஆய்வியல் நிறைஞர் (2016-2019)
அவர்கள் வழங்கிய ஆய்வேடு

பேராசிரியரின் நூற்றாண்டு நிகழ்வுகள்

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான ***"கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு"*** எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** மற்றும் **NSR100 Research Fellowship** வழங்கி வருகின்றது.

தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் பரிந்துரைத்த திருமதி பி ஜோதிமணி (ஆய்வியல் நிறைஞர்) அவர்கட்கு ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் நூல்களை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்த இவ்வாய்வியல் நிறைஞருக்கு

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூல்களும் **(சோழநாட்டுத் திருப்பதிகள் –1, சோழநாட்டுத் திருப்பதிகள் –2, பாண்டியநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், மலைநாட்டுத் திருப்பதிகள்),** வழங்கப்பெற்றன.

அவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடு தொகுக்கப்பெற்று நூலாக வெளியிடப் பெறுகிறது. இவ்வாய்வியல் நிறைஞருக்கு, இந்நூலின் ஒரு படியும், கொங்கு கலை அறிவியல் கல்லூரிக்கு (தன்னாட்சி), ஐந்து படிகளும் வழங்கப்பெறுகின்றன.

நூற்றாண்டுக்குழு

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து, திருவரங்கம்
பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை
முடிய 20 திருத்தலங்களை பற்றியும், அங்குப்
பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார
எம்பெருமான்களைப் பற்றியும் விளக்குகின்றார்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-1-6

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1 1981

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் ஜி இராமாநுஜம்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் ஜி. இராமாநுஜம்)

''சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்'' என்று முமுட்சுப்படி பேசும். இதுவே சேதநருக்கு நலம் அளிப்பதெனக் கொண்டனர் ஆழ்வார் பெருமக்கள். இந்த அர்ச்சாவதார எம்பெருமான்களை 108 என்று கணக்கிட்டு கூறுபவர்களின்மீது பாசுரங்கள் பாடிப் போற்றியுள்ளார்கள். இந்த எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ள சோழ நாட்டுத் திவ்விய தேசங்கள் 40. இந்த நூல் திருவரங்கம் பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை முடிய 20 திருக் கோயில்களைப் பற்றியும் அங்குப் பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களைப் பற்றியும் கூறுவது. ஏனைய 20 திருத்தலங்கள் பற்றி அடுத்த பகுதியில் வெளிவரும் போலும்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் என்பதை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயின்றபோதே அறிவேன். வைணவ சமயத்தைச் சார்ந்த நான் இன்று வைண சமயத்தில் பேராசிரியர் ரெட்டியார் இவ்வளவு ஊற்றம் பெற்றிருப்பதையும் ஆழ்வார் பாசுரங்களில் மிகவும் ஆழங்கால் பட்டிருப்பதையும் காணும்போது எனக்குப் பெரு வியப்பு ஏற்படுகின்றது. ஆழ்வார் பாசுரங்களில் இவர் தன்னைப் பறிகொடுத்திருப்பதை நூலெங்கும் காணலாம். ஆங்காங்கு வைணவ தத்துவக் கருத்துகளை எடுத்துக் காட்டியிருப்பது இத்திருத்தலப் பயண நூலுக்கு பொலிவும் அழகும் ஊட்டியிள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறும் 'மாயோன்' தமிழ் நாட்டில் கண்ணனாக வளர்ந்ததையும் இதுவே தமிழ் நாட்டார் கிருஷ்ணபக்திக்கு முதலிடம் தந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் (பக்கம்-15) ஆசிரியர் சுட்டியுள்ளது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

வைணவ சமயம் கூறும் அர்த்த பஞ்சக ஞானம் (பக். 31-33) சரீர - சரீரிபாவனை (பக். 36-39, 142-144) இதனை விளக்க ஈட்டாசிரியர் காட்டும் எடுத்துக் காட்டு (பக். 41-42), இறைவன் மூன்று காரணங்களாக இருக்கும் நிலை (பக். 46-47), பெரிய பிராட்டியாரின் புருஷகாரம் (பக். 68), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பெற்ற வரலாறு (பக். 74-75), வைணவ தத்துவ விளக்கம் (பக். 138-140) அழகின் தத்துவமே ஆண்டவன் தத்தும் (பக். 152-155) போன்ற கருத்துகள் நூலினைப் படிப்போருக்கு ஓரளவு வைணவதத்துவம் பற்றிய சிறு சிறு விளக்கங்களாக அமைந்திருப்பது போற்றத் தக்கது. ஆங்காங்குக் காட்டப் பெற்றுள்ள பாசுரங்களின் விளக்கம் படிப்போரிடம் பிரபந்தத்தைப் பயிலவேண்டும் என்ற அவாவை எழுப்புவதாக அமைந்துள்ளது. வியாக்கியாதாக்கள் கூறியுள்ள குறிப்புகளைச் சுட்டி உரைத்திருப்பது வியாக்கியானங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை நம்மிடம் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்நூல் படிப்போருக்கு ஆராவமுதமாய், தெவிட்டாத தெள்ளமுதமாய் இனிக்கின்றது என்று கூறின், அது மிகையாகாது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவைப் பாடுபட்டுப் பெற்றவர். அத்துறைகளில் எல்லாம் பன்னூல்களை எழுதிக் குவித்திருக்கின்றார். இன்றும் எழுதிக் கொண்டே இருக்கின்றார். பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் தன் முயற்சியால் நிறுவி அதன் தலைவராக இருந்து பணியாற்றியவர். இதில் இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெறவேண்டியது. இவருடைய பல துறை அறிவு, ஆட்சித் திறன், விடா முயற்சி, எண்ணியதைச் செய்து முடிக்கும் திண்ணிய ஆற்றல் இவை யனைத்தும் ஒருங்கே யமைந்து ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அதைச் சிறப்புற வளர்க்கும் திறன் இவரிடம் அமைந்து கிடப்பதை நேரில் பார்க்கின்றேன். இத்தனைக்கும் மேலாக, இவருடைய தெய்வ பக்திக் கொப்பத் தமிழ் பக்தியும் இவரிடம் நிறைய உண்டு. பலதுறை அறிவு நூல்கள் தமிழில் பெருகினாலன்றி தமிழ் ஏற்றம் பெறாது என்ற அதிராக் கொள்கையை யுடையவர். இவர், எல்லாம் இறைவன் செயலால் தான் நடைபெறும் என்ற நம்பிக்கையுடையவர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் தமிழ்ப் பணியாற்றியதால் திருவேங்கடவன் திருவருள் இவர்மீது வெள்ளங் கோத்திருப்ப

தாகவே கருதுகின்றேன். ஓய்வு காலத்திலும் தளராது எழுதி வருவதைப் பாராட்டுகின்றேன். அதுவும் தத்துவம், சமயம் இவைபற்றிய நூல்களை எழுதி வருவது பாராட்டற் பாலது. வயதிற்கும் ஏற்றது. இவர்தாம் முயற்சி வெல்க. இவர் நோய் நொடியின்றி நெடிது வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒல்லும் வகையெல்லாம் பணியாற்றவேண்டும் என்று இறைவனை நினைந்து வாழ்த்துகின்றேன்.

ஜி. இராமாநுஜம்

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து,
திருத்தலங்களின் பெருமைகளை விளக்கியிருக்கும்
பாங்கு நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச்
சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை
நம்மிடம் எழுப்புகின்றது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-2-3

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2 1981

வழங்கியோர்:

பு.ரா.கோகுலகிருஷ்ணன்
தலைமை நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்



அணிந்துரை

சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி
பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி) பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சியின் விளைவிலே வெளிவருகிறது. உழைப்பால் உயர்ந்து, உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப் பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும், அறிவாற்றலும், ஆழ்ந்து ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள். சமய நூல்கள் செந்தமிழைப் பெரிதும் வளர்த்துள்ளமை நம் தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாடாகும். சைவ நெறியும், பௌத்த நெறியும், சமண நெறியும், வைணவ நெறியும் இன்பத்தமிழ் பாடி எண்குணத்தான் பெருமையினைத் தமிழிலே போற்றி மகிழ்ந்துள்ளது.

'தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதிய' *பெருமை வைணவப் பாசுரங்களுக்கு மிக உண்டு.* ***'வேதம் அனைத்திற்கும் வித்தாகும் சோதை தமிழை'*** *வில்லிபுத்தூராரின் கோதையின் திருப்பாவையில் கண்டு மகிழ்கின்றோம். திருப்பதிக்கும், தென்மண்டலத்திலே இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டும் வைணவம் சொந்தமல்ல. சோழநாட்டுத் திருப்பதிகளைக் கண்ணுறுங்கால் வைணவம் செழித்து வளர்வது நன்கு புலப்படும் என்பதனைப் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை நம் கண்முன் தம் எழுத்தோவியத்தின் மூலம் சித்திரித்துக் காட்டுகின்றார். இந்நூலில் அருமையான வைணவ தத்துவங்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதியுள்ள பான்மை ரெட்டியார் அவர்களுடைய ஆழமான அறிவினை எடுத்துக்காட்டுகின்றது.* ***'திராவிட சிசு'*** *என்று ஆதிசங்கரரால்*

வழங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ஒரு குறளாய் இருநில மூவடிமண் வேண்டி என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்தார என்ற நிகழ்ச்சியைப் பேராசிரியரின் இந்த நூல் மூலம் அறிந்து வியப்புற்றேன்.

இறைவனுடைய அபய முத்திரை குற்றம் புரிந்தவாகளையும் திருத்தும் தன்மைத்து என்று பொருள்பட ரெட்டியார் அவர்கள் அபய முத்திரையை விளக்கி,

உங்கள் குறங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா. என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்.

என்பது அன்பைக் காட்டும் வாத்சலயத்தின் விளக்கம் என்று எழுதியுள்ள பான்மை நம்மையெல்லாம் கவர்கின்றது. இதே கருத்தை நாவுக்கரசர்,

“பிழைத்தோர் பிழைப்பு அறியவல்ல அடி”

என்று இறைவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடுகின்றார்.

திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழுப்புகின்றது. குறிப்பாக, ***‘தலைச்சங்காடு’*** *என்ற திருப்பதியை திரு. ரெட்டியார் அவர்கள் உதாரணத்தோடும், தகுந்த ஆதாரங்களோடும் விளக்கி, இவ்விடம் ஒரு காடாக இருந்ததாகவும், காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து சிறந்த சங்குகள் இங்கு விற்பனைச் செய்யப்பட்டனவாகவும், அதனால் இந்த இடம்* ***‘தலைச்சங்கம்’*** *என்று பெயர் பெற்றுப் பிறகு* ***‘தலைச்சங்கக்காடு’*** *— தலைச் சங்காடு என்று மருவியது என்பதனை அழகாக எடுத்து விளக்குகின்றார். இத்தகைய அருமையான விளக்க உரைகள் எம்பெருமான் எழில் உருவத்தின் தத்துவங்களையும், அவர் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் பெருமைகளையும் எடுத்து இயம்புகின்றன.*

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்ல தமிழறிஞர். அறிவு எப்போதுமே ஓய்வதில்லை. உள்ளத்தில் இளமையும், அதன் காரணமாகச் சிந்திக்கும் திறமையும், இவற்றிற்கெல்லாம் மேலாக ரெட்டியார் அவர்களுடைய ஆழ்ந்த

படிப்பும், அவர்தம் தமிழ்ப் பணியை, ஆராய்ச்சித் திறனைத் தொடர்ந்து செய்யத் தூண்டுகிறது. இத்தகைய அறிவாற்றல் நிறைந்தவர்களுடைய பணி நம்முடைய சமுதாயத்திற்கு மிகவும் தேவை. ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகள் பலவற்றையும் இவ்வையகம் அறியும்படி விளக்க உரைகள் எழுதுவார் என்ற நம்பிக்கை எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் உண்டு.

வாழ்க சுப்புரெட்டியார் அவர்கள்! வளர்க அவர்தம் தெய்விகத் தமிழ்த் தொண்டு!

— பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சென்னை — 20

30–06–1981.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டின்
18 வைணவ திவ்விய தேசங்களைத் தாம் சென்று
தரிசித்ததோடு நில்லாது நம்மையும்
தன்னோடு கூடவே தம் அருமையான
எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ
தரிசனம் செய்து வைக்கின்றார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939561-1-3

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் 1977

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் பா ச கைலாசம்
உச்ச நீதிமன்றம், புதுதில்லி



அணிந்துரை

ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்,
(உச்ச நீதிமன்றம் புதுடில்லி.)

தண்ணார் தமிழளிக்கும் தண்பாட்டி நாட்டின் பதினெட்டு திவ்விய தேசங்களைத் தாம் சென்று தரிசித்த தோடு நில்லாமல் நம்மையும் தன்னோடு கூடவே தம் அருமையான எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ தரிசனம் செய்துவைக்கின்றார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். திருக்கோட்டியூரிலே தொடங்குகின்ற இவர்தம் பக்திப் பயணம் திருக்குறுங்குடியிலே போய் முடிவடைகின்றது. இத்தனைத் திருப்பதிகளையும் இவரோடு தரிசிக்கின்ற நாம் 'மறந்தும் புறந்தொழா மாந்தராய்' மாறி விடுகின்றோம்.

'தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்வோர்கள்' நிறைந்த திருக்கோட்டியூரிலேயே நமக்கு எட்டெழுத்து உபதேசம் ஆகிவிடுகின்றது. 'புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்ற சரணாகதி தத்துவம் தொடர்கின்றது. 'சோராத காதல் பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும் பாராது' அவனுக்குப் பல்லாண்டு பாடும் பான்மையினை நினைத்து நெகிழ்கின்றோம். 'தான் அறப் பெய்யும் காளமேகத்தைத்' திருமாலிருஞ் சோலை மலையிலே 'அறு கால் வரி வண்டுகள் ஆயிரம் நாமம் சொல்லிச் சிறுகாலையிலே பாடும்'

அருமையை அநுபவிக்கின்றோம். 'மாயனை — மன்னு வடமதுரை மைந்தனை — தூய பெரு நீர் யமுனைத் துறைவனை — வாயினால் பாடி — மனத்தினால் சிந்தித்து — அறிவொன்று மில்லாத ஆயர்குலத்துப் பெண்களின்' நிலையிலிருந்து அநுபவித்த ஆண்டாளின் அருள் வெள்ளத்திலே கும்மாளம் அடித்து விட்டு திருத்தண்காலூர் சென்று அப்பனைத் தரிசிக்கின்றோம்.

'இதுவோ திருநகரி ஈதோ பொருநை? இதுவோ பரம பதத்து எல்லை — இதுவோதான், வேதம் பகர்ந்திட்ட மெய்ப் பொருளின் உட் பொருளை, ஓதும் சடகோபன் ஊர்' என்று நம்மை மறந்து ஆழ்வார் திருநகரிலேயே நின்று விடுகின்றோம். வானுற வளர்ந்து விளங்கிய திவ்வியமான பேரொளியைக் கண்டு நம்மாழ்வாரைத் தெரிந்து கொண்டு தனது குருவாக ஏற்றுக் கொண்ட மதுரகவி பிறந்த மண்ணிலே — திருக்கோளூரிலே வைத்தமா நிதியைக் கண்டு மகிழ்கின்றோம். சிறுவர்களின் விளையாட்டின் சுவையிலே ஈடுபட ஆசைப்பட்டு அங்கிருந்த பெரிய திருவடியை 'சற்றே நகர்ந்திடு, கருடா' என்று கூறிய மகர நெடுங்குழைக் காதனின் விளையாட்டு ஆசையை எண்ணி வியக்கின்றோம். 'குழகன்' என்றால் மகானாக இருக்கும் தனது மேன்மையினைப் பாராது சிறியாரோடும் கலந்து பழகுபவன் என்று பொருள் சொல்லும் பேராசிரியர் சுப்புரெட்டியார் நாம் அப் பொருளில் உணர்ந்து உருகி 'அவன்' அழகையும் அருளையும் பருகும் வகையில் அப் பேரருளாளனின் பெருமையனைத்தையும் உணர்த்தி விடுகின்றார்.

கீதையின் பதினெட்டு அத்தியாயங்கள் பதினெட்டு யோகங்களைச் சொல்வது போல இவர்தம் பதினெட்டுக் கட்டுரைகளும் பல்வேறு பக்தித் திருப்பதிகளின் பெருமை களை விளக்குகின்றன. திருமந்திரத்தின் பெருமையை — நலந்தரும் சொல்லை — பரத்துவம், வியூகம், விபவம்,

அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற எம்பெருமானின் ஐந்து நிலைகளை—பக்தி, பிரபத்தி வழிகளை பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய வினைகளின் தொகுதியை – எம்பெருமானின் திருமேனியாக வைணவ சித்தாந்தம் பேசும் சித்து அசித்துபற்றி—சகல வேத சாரத்தைத் தன்னுள்ளேயே அடக்கி வைத்துள்ள முதல் பதமாகிய பிரணவம் பற்றி மிகவும் எளிதிலே புரிந்து கொள்ளும் வகையில் மிக அழகாக விளக்கியிருக்கும் நேர்த்தி உள்ளத்தைக் கவர்கிறது. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத அழகிய தீந்தமிழ் உள்ளத்தின் ஆழத்திலே ஒரு குளுமையை ஏற்படுத்துகிறது. வைண நூல்களை எவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார் பேராசிரியர் சுப்புரெட்டியார் என்பது புரிகின்றது. இது போல இன்னும் பல நூல்களை எழுதி மொழிக்கும் முதல்வனுக்கும் தொண்டாற்றிய வண்ணமிருக்க எம்பெருமான் அருள் புரிய வேண்டுகிறேன்.

—ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தொண்டைநாட்டு திருப்பதிகளை நேரில் கண்டும்,
பாசுரங்களை கற்றும், கேட்டும், துதித்தும் தாம் பெற்ற
அநுபவத்தினை இந்நூல் வாயிலாக மானசீகமாக திவ்வியதேச
யாத்திரைக்கு நம்மை இருப்பூர்திகளிலும், பேருந்துகளிலும்
அழைத்து செல்கிறார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-9-9

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் 1976

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் என் கிருஷ்ணசாமிரெட்டி
நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி)

மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்-நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவோர் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்தலைமேல் பூ.[1]

ஞானானந்த சொரூபனாய், ஞான சக்தியாதி கல்யாண குணங்களையுடையவனாய், தேசகால வஸ்து பரிச்சேத மில்லாதவனாய், தேஜோமயமான திவ்விய மங்கள விக்கிரகமுடையவனாய், எல்லாவுலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் கர்த்தாவாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயன்களை அளிப்பவனாய், இலட்சுமி பூமி நீளா நாயகனாய் இருக்கும் நாராயணன் சேதநருக்கு உவப்பான பொன், வெள்ளி, தாமிரம், சிலை, மரம், மண் முதலிய திரவியங்களையே திருமேனியாகவும், அவரிட்டதுவே பெயராகவும் கொண்டு, தேசகால அதிகார பேதமின்றி எல்லோராலும் கண்டு பற்றுதற்குச் சௌலப்பியம் சௌசீல்யம் கருணம் முதலிய நிறைய குணங்களுடைய அர்ச்சாவதாரமாக, இருந்த கோலம், நின்ற கோலம், கிடந்த கோலமாக, 'சொன்ன வண்ணம் செய்த பெருமாளாக', உலகோர் உய்யும் பொருட்டு இம்மண்ணுலகில் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றான்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருக்கோயில்களை நூற்றெட்டுத் திருப்பதிகளாகக் கொள்வது வைணவ மரபு. இத்திருப்பதிகள் பூர்வாசார்யர்களாலும், ஏனைய பெரியோர் களாலும் போற்றப்பட்டவை தியானிக்கப்பெற்றவை. இவ்வளவு சிறப்புப்பெற்ற திவ்விய தேசங்களை தரிசிப்பவர்களும்,

1. நூற்.திருப்.அந்.

இவைகளைப் பற்றிப் பெரியோர் அருளிய வாக்குகளைக் கற்பவர்களும், சிறப்பித்துப் பேசுகிறவர்களும், சிரவணம் செய்து கொண்டிருப்பவர்களுமாகிய திருமாலடியார்களின் பொற் பாதங்கள் 'என் தலைமேற் சூடும் மலராகும்' என்று பணிவுடன் போற்றுவர் அழகிய மணவாளதாசர்.

இந்நூலாசிரியர் டாக்டர் **என். சுப்பு ரெட்டியார்** அவர்கள் பழுதறவோதிப் பகவானின் கருணை வெள்ளம் கோக்கப் பெற்றவர்கள். இத்திருப்பதிகளை நேரில் கண்டும் அவற்றின் மீதுள்ள திருப்பாசுரங்களைக் கற்றும் கேட்டும் துதித்தும் தாம் இயற்றியுள்ள 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்னும் இந்நூலின் வாயிலாக இத்திருப்பதிகளின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே மானசீகமான திவ்வியதேச யாத்திரைக்கு நம்மைப் இருப்பூர்திகளிலும் பேருந்துகளிலும் அழைத்துச் செல்லு கின்றார். திருக்கோயில்களிலுள்ள மதில்கள் மண்டபங்கள் மூர்த்திகள் தீர்த்தங்கள் இவற்றையெல்லாம் சுற்றிக் காட்டுகின்றார், சுட்டியும் உரைக்கின்றார்; திருத்தலங்களின் வரலாறுகளையும் கூறுகின்றார். அத்துடன் நில்லாது ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமான்களை அநுபவித்த நெஞ்சு நெக்குருகும் சில பாசுரங்களையும் பாடி நம்மையும் அவ்எம்பெருமான்கள் எம்பெருமாட்டிகள் இவர்கள் எதிரே கொண்டு நிறுத்தி ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றார். இவற்றிற்கிடையே வைணவ சமயக்கருத்துகள் பலவற்றை நம் சிந்தையில் தூவி சிந்தனையையும் கிளறுகின்றார்.

இந்த நூலினைப் பயிலும் நாமும், இந்த நூலாசிரியரின் துணையின்றியே, தனியாக நம் குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரையை **உண்மையிலேயே** உடனே மேற்கொள்ளலாமா என்கின்ற எண்ணத்தை நம்மிடையே எழுமாறு தூண்டிவிட்டுக் கொண்டே நம்மையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றார். இந்நூலின் வாயிலாக நாமும் மானசீகமான நம்முடைய திவ்வியதேச யாத்திரையை நிறைவு செய்து கொண்டோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். அத்தகைய நூல் நிலைத்து வாழ்க.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் சைவக் குடும்பத்தில் தோன்றியவராயினும் வைணவத்தில் பற்றும் ஈடுபாடும் உடையவர்; ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டவர்; கண்ணன் கழல் இணைகள் நண்ணும் மனமுடையவர்.

தற்சமயம் திருப்பதியில் வாழ்பவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆராய்ச்சி செய்து நம்மாழ்வார் தத்துவத்தை ஆங்கில ஆராய்ச்சி நூலாக வடித்துத் தந்து 'டாக்டர்' (Ph.D.) பட்டம் பெற்றவர். குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரை செய்து தாம் அநுபவித்த இன்பப் பேற்றைப் பிறரும் பெற்று அநுபவிக்கவேண்டும் என்னும் எண்ணத்தின் விளைவாக இந்நூலையும் இதற்கு முன்னர் வெளிவந்த **'மலைநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூலையும் ஆக்கித் தந்திருக்கிறார்கள். மேலும், தாம் சென்று வந்த ஏனைய திவ்விய தேசங்கட்கும் இதுபோலவே தாம் படைக்கும் நூலின் வாயிலாக நம்மையும் மானசீக யாத்திரையில் உட்படுத்தித் தம்முடன் அழைத்துச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மலிவான நல்ல அச்சில் வெளியிடப் பெற்றுள்ளது. இதனை மனமுவந்து ஏற்று வெளியிட்டவர்கட்கும் என் பாராட்டு. இதனை எல்லோரும் வாங்கிக் கற்று, மற்றவர்கட்கும் கற்பித்து எம்பெருமான் திருவருள்பெற்று, இன்புற வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். வாழ்க 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' வளர்க இந்நூலாசிரியரின் சமயம் கலந்த தமிழ்த் தொண்டு!!

- **கிருஷ்ணசாமி ரெட்டி**

வடநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருவேங்கடத்தில் தொடங்கும் பக்திப்பயணம்
சிங்கவேள் குன்றம், நைமிசாரண்யம், துவாரகை,
அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம்,
கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பத்ரிகாச்சிரமம், ஆகிய
திருத்தலங்களை சேவித்துவண்ணம் சாளக்கிராமத்தில்
நிறைவு பெறுகின்றது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-7-6

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

வடநாட்டுத் திருப்பதிகள் 1980

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் சூரியமூர்த்தி



அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். சூரியமூர்த்தி)

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளி யிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் புலப்படுத்திக் கொண்டு, அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளி யுள்ளான். வைணவர்கள் இவற்றை 108 என்று கணக் கிட்டுள்ளார்கள். இவற்றுள் சோழ நாட்டிலுள்ளவை 40; பாண்டிய நாட்டிலுள்ளவை 18; மலைநாட்டிலுள்ளவை 13; நடுநாட்டிலுள்ளவை 2; தொண்டை நாட்டி லுள்ளவை 22; வடநாட்டிலுள்ளவை 12; திருநாடு ஒன்று. இந்தக் கணக்கைப் பிள்ளைப் பெருமாள் அய்யங் காரின்,

> ஈரிருப தாம்சோழம்;
> ஈரொன்ப தாம்பாண்டி;
> ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு);
> ஓரிரண்டாம்—சீர் நடுநாடு;
> ஆறோடு ஈரெட்டுத்தொண்டை
> அவ்வடநா(டு) ஆறிரண்டு;
> கூறுதிரு நா(டு)ஒன் றாக்
> கொள்.

என்ற வெண்பாவால் அறியலாம், இந்த வடநாட்டுத் திருப்பதிகட்கு நம்மை இட்டுச் செல்லுகின்றார் பேராசிரி யர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் இந்த நூலின் மூலமாக.

சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும்போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார். திருவேங்கடத்தில் தொடங்கும் இவர்தம் பக்திப் பயணம் சிங்கவேழ் குன்றம், நைமிசாரண்யம் துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம், கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பதரிகாச்சிரமம் ஆகிய திருத்தலங்களைச் சேவித்த வண்ணம் சாளக்கிராமத்தில் நிறைவு பெறுகின்றது; பாற்கடலையும் பரமபதத்தையும்கூட இப்பயணத்தில் தரிசனம் செய்து வைத்து விடுகின்றார்; நாமும் இவருடன் பயணத்தை மேற்கொண்டு இத்திருத்தலங்களையெல்லாம் சேவித்த பேற்றைப் பெற்றுவிட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகின்றோம்.

இத்திருத்தலப் பயண நூலில் திருத்தலங்களின் இயற்கைச் சூழ்நிலைகள், அங்குத் திருக்கோயில் கொண்டிலங்கும் எம்பெருமான்களின் சிறப்புகள் இவற்றையும்; பிருந்தாவனம் கோவர்த்தனம் இவ்விடங்களில் கண்ணன் கன்றுகளை மேய்க்கும்போது ஆற்றிய வீரச் செயல்கள், ஆயர்பாடியில் வளரும்போது ஆற்றிய அருஞ் செயல்கள் ஆகியவற்றையும்; திருப்பாற்கடலிலும் பரமபதத்திலும் எம்பெருமானின் இருப்பையும் கண்டு மகிழ்கின்றோம். இத்தனைக்கும் மேலாகப் பிரபத்தியின் பெருமை, புருஷகாரத்தின் மகிமை, எம்பெருமானின் திருவடிகளின்

சீர்மை, பிரணவத்தின் அருமை, திருமந்திரத்தின் சிறப்பு இத்தத்துவங்களில் ஈடுபடுகின்றோம். இத்திருத்தலப் பயணத்தில் எம்பெருமான்களைப் பற்றிக் காட்டப் பெறும் ஆழ்வார் பாசுரங்கள் ஆராவமுதமாய் இனிப்ப தையும் உணர்கின்றோம்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவை முறையாகப் பயின்று பெற்றவர்; அரும்பாடுபட்டு அத்துறைகளிலெல்லாம் பல நூல்களை எழுதிப் புகழ் அடைந்தவர். பதினேழு ஆண்டுகள் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். அங்கு அரும்பாடுபட்டுத் தமிழ்த் துறையை உருவாக்கியிருக்கும் அவரது உரன், திறன் வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியவை. இதனைத் தவிர உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் ரெட்டியார் பல உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கிய வர். ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கும் தகுதியும், திறமையும் உடையவர். என்ன செய்தாலும் இவர் அதனைத் தாம் செய்ததாக ஒப்புக்கொள்வதில்லை. இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் நடைபெற்றதாகக் கொண்டு மகிழ்வர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதி யில் பணியாற்றும் பேறு பெற்றமையால் ஏழுமலையா னின் திருவருள் இவர்மீது பாய்கின்றதாகக் கொள்வதே சரியாகும். ஓய்வுக் காலத்தில் சமய, தத்துவ நூல்களை எழுதிக் கண் போன்ற காலத்தைப் பொன் போன்று போற்றுவர். இவர்தம் முயற்சி வெல்க! வாழ்க!

—எஸ். சூரியமூர்த்தி

மலைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு
போவது போல் பாசாங்கு செய்யும் பேராசிரியர்,
உண்மையில் வைணவ சமய தத்துவங்கள் ,
பக்தி நிலைகள், மரபுகள் – இவற்றையெல்லாம்
நமக்கு சுற்றிக் காட்டி விடுகின்றார்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978 -81-939685-9-8

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

மலைநாட்டுத் திருப்பதிகள் 1971

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் மகராஜன்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்)

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு போவதுபோல் பாசாங்கு செய்யும் இவ்வாசிரியர், உண்மையில் வைணவ சமய தத்துவங்கள், பக்தி நிலைகள், மரபுகள் — இவற்றையெல்லாம் நமக்குச் சுற்றிக் காட்டி விடுகின்றார்.

வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர், ஆனாலும் வைணவத்தைப்பற்றிப் பேசும்போதும் எம்பெருமானைச் சேவித்து அவனுடைய பரம கலியாண குணங்களை எடுத்து விரித்துரைக்கும் போதும், அதிசயிக்கத்தக்க ஈடுபாட்டோடும் விரிந்து பரந்த மனப்பாங்கோடும், தன்னையே வைணவத்தோடு இரண்டும் ஒன்றும் அறக் கரைத்துக் கொள்கின்றார். ஆசிரியருடைய ''நினைவும் சொல்லும் ஒருமைப் பட்டிருக்கையாலே'' இந்த அரிய சாதனை அவருக்குக் கை வந்திருக்கின்றது.

மெய்ப்பொருளோடு ஊடாடுவதற்கென்று ஒவ்வொரு சமயத்திலும் பல உத்திகளை வகுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால், வைணவ ஞானிகள் வகுத்து வைத்திருக்கும் உத்திகள் தனிச்சிறப்புடையவை. மூர்த்திகளை வெறும் அடையாளப் பொருள்களாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மூர்த்தியும் இறைவன் எடுத்த அர்ச்சாவதாரம் என்று கொண்டு, மெய்ப்பொருளோடு உறவாடும் போது, பக்திக் கடல் மடை திறக்கின்றது. மெய்யுணர்வு பெருக்கெடுத்தோடுகின்றது.

அர்ச்சாவதாரத்தை அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் வானவர்கள். ஆகவே, வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள், ''இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு'' என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகின்றார் ஆசிரியர்.

எம்பெருமானுக்கு விண்ணுலகச் சூழ்நிலையில் அவ்வளவு அழகு இருப்பதில்லையாம். மண்ணுலகச் சூழ்நிலையிலேயே அவனுடைய அழகு சோபிக்கிறதாம். ஏன்? வானவர் நாடு ஞானஒளி வீசும் நாடு, ஆகையால், அங்கிருக்கும் எம்பெருமான், பகல் விளக்குப்போல், ஒளி குன்றிக் காணப்படுகிறான். ஆனால், அஞ்ஞான இருள் சூழ்ந்த தம் மண்ணுலகத்திலோ, அவன் இருட்டறை விளக்குப்போல, திவ்ய ஒளி வீசி மிளிர்கின்றானாம். ஆகவே, பேரொளியை அநுபவிப்பதற்கு மண்ணுலக இருட்டும் தேவைப்படுகின்றது என்றே தோன்றுகின்றது. இல்லையேல், ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்று அப்பர் அடிகள் சொல்லியிருப்பாரா!

புறத்தே நின்ற பேரொளியைக் கொண்டாடக் கொண்டாட, அது ஆழ்வார் அகத்திலும் குடியேறிவிடுகின்றது. குடியேறிய திருவடிகளிலுள்ள துளவம் ஆழ்வார் உள்ளத்தை நிறைத்து, ஆழ்வாருடைய மெய்யெலாம் கமழச் செய்கின்றது. இந்த நிலையில்,

> **''என்நன்றி செய்தேனோ**
> **என்நெஞ்சில் திகழ்வதுவே''**

என்று வியந்து ஓலமிடுகின்றார் ஆழ்வார். இந்த வியப்புக்கு விளக்கம் கொடுக்கின்றது ஈடு. எப்படி? ''சடாயுவைப் போல், பிராட்டி சென்ற திசையை எம்பெருமானுக்குக் காட்டி

விட்டு உயிர் துறந்தேனோ? அல்லது, அநுமனைப் போல் ‘‘கண்டனன் கற்பினுக் கணியை’’ என்ற முழக்கத்தோடு வந்து, பெருமானின் துயரத்தைத் தீர்த்தேனோ? அல்லது, வேறு என்ன உதவிதான் செய்தேனோ? அறியேன். ஆனால், அவன் என் நெஞ்சத்துள் புகுந்து அருள் செய்து விட்டான்’’ என்று தான் செய்த நன்றியைப் பாராட்டுகின்றாராம் ஆழ்வார்.

இப்படியெல்லாம் இறைவனோடு ஊடாடித் திளைப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் அந்த வழியிலே நம்மை நடத்திச் செல்லுகிறது இந்நூல்.

ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் **டாக்டர் சுப்பு ரெட்டியார்.** அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக் குடியில் சந்தித்தபோது, ‘‘எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.’’ என்று அவரிடம் சொன்னேன். மித மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது. வாழ்க ‘‘மலைநாட்டுத் திருப்பதிகள்!’’

NSR100
KAMATCHI AMMAL
FELLOWSHIP

MPhil Students in Tamil

AWARDED TO :

ப ஜோதிமணி

(பதிவு எண்: 2016 PRO 545)

(பேராசிரியரின் நூல்களை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த ஆய்வியல் நிறைஞர்)

உதவித்தொகையும், நூல்களைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூல்களும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் வைணவத் திருத்தலப் பயண அநுபவங்களும் வரலாறும்

பேராசிரியரின் நூல்: சோழநாட்டுத்திருப்பதிகள் – 1, சோழநாட்டுத்திருப்பதிகள் – 2, பாண்டியநாட்டுத்திருப்பதிகள், தொண்டைநாட்டுத்திருப்பதிகள், வடநாட்டுத்திருப்பதிகள், மலைநாட்டுத்திருப்பதிகள்

துறை: தமிழ்த் துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம்.

நெறியாளர்: முனைவர் க முருகேசன்

வருடம்: மே 2019

www.nasubbureddiar100.in

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் வைணவத் திருத்தலப் பயண அனுபவங்களும் வரலாறும்

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்)
பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

ப. ஜோதிமணி

பதிவு எண் : 2016 PRO 545

நெறியாளர்

முனைவர் க. முருகேசன்

தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறை

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

(தேசிய மதீப்பீடு மீள்தர நிர்ணயக்குழுவின் ‘A’ தகுதி பெற்றது)

(பல்கலைக்கழக மானியக்குழுவின் தனிச்சிறப்புத் திறன் தகுதி பெற்றது)

கோயம்புத்தூர் - 641 029.

மே - 2019

நன்றியுரை

ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பு நல்கிய கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தலைவர் **முனைவர் மா.ஆறுச்சாமி** அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். கல்லூரிச் செயலர் மற்றும் இயக்குநர் **டாக்டர் சி.ஏ.வாசுகி** அவர்களுக்கும் முதல்வர் **முனைவர் வே.பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக்குத் தேவையான கருத்துகளைக் கூறி நெறிப்படுத்திய தமிழ்த்துறைத்தலைவர் மற்றும் நெறியாளர் **முனைவர் க.முருகேசன்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன். ஆய்வுக்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய கல்லூரி நூலகர் **முனைவர் ஆர்.செந்தில்குமார்** மற்றும் நூலகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாய்வேடு சிறப்பாக அமையப் பல வகையிலும் உறுதுணையாக இருந்த என் குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வேட்டைச் சிறப்பான முறையில் தட்டச்சு செய்தளித்த **திருமதி.மைதிலி** அவர்களுக்கும், அழகான கட்டமைப்புடன் செம்மையாகப் புறவடிவம் அமைத்துக் கொடுத்த **வசந்தி பிரிண்டர்ஸ்** நிறுவனத்தினருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றேன்.

சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள்

உ.ஆ.	–	உரையாசிரியர்
குறள்.	–	திருக்குறள்
தொல்.	–	தொல்காப்பியம்
நற்.	–	நற்றிணை
நூ.	–	நூற்பா
ப.	–	பக்கம்
பா.	–	பாடல்
பா.	–	பாசுரம்
புறம்.	–	புறநானூறு
பொருள்.	–	பொருளதிகாரம்

பொருளடக்கம்

			பக்க எண்.
இயல் – 1	முன்னுரை	–	1–4
இயல் – 2	வைணவ இலக்கியங்களும் ஆழ்வார்களும்	–	5–19
இயல் – 3	திருத்தலப் பயணங்களும் ஆழ்வார் பாசுரங்களும்	–	20–125
இயல் – 4	புராண வரலாற்றுக் கூறுகளும் அகப்பொருள் மரபுகளும்	–	126–144
இயல் – 5	முடிவுரை	–	145–148
	துணைநூற்பட்டியல்		
	பின்னிணைப்பு		

இயல்–1

முன்னுரை

சைவம் தழைக்கச் செய்த காலம் முதலே திருமாலடியார்களும் தீஞ்சுவைக் கவியாத்த பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆகிய பன்னிரு ஆழ்வார்கள் 108 வைணவத் தலங்களுக்குச் சென்று திருமாலைப் பாடிப் பரவி வைணவ சமயத்தை வளர்த்தனர். அந்த 108 திருத்தலங்களுக்கு நேரில் சென்று தரிசனம் பெற்று வந்த பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பயண அனுபவங்கள் சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, மலைநாடு, வடநாடு போன்ற நாடுகளின் திருத்தலப் பயணக் குறிப்புகளில் பதிவாக்கப்பட்டுள்ள தன்மையைக் கண்டறிவதும், அவற்றின்வழியாகத் திருத்தலங்களின் மகிமைகளை உணர்த்துவதும் இன்றியமையாத தேவையாகின்றது.

ஆய்வின் இன்றியமையாமை

பக்திக்கும், இறை வழிபாட்டிற்கும் முழுமையான சுதந்திரம் பெற்றுள்ள இம்மண்ணில், பல சமயத்தவர் வாழ்வதோடு அவரவர் சமயங்களில் ஆழ்ந்த பற்றும் ஈடுபாடும் கொண்டுள்ளனர். சமயங்கள் பலவாயினும் அவை ஆற்றுப்படுத்தும் உண்மையாகிய பரம்பொருள் நிலை ஒன்றுதான் என்பதை உணர்ந்து செயல்படும் போது, சாதி, சமய, இனப்பூசல்கள் இன்றி அமைதியான வாழ்வு நிலைபெறும். சைவ, வைணவத் திருப்பாடல்கள் இத்தகையதொரு அறவாழ்வை உணர்த்தி நின்று, காலங்காலமாகச் சமூகத்தின் கீழ்மைகள் மறைந்து போகவும், நன்னெறிகள் கடைபிடிக்கப்பட்டு உயர்ந்தோங்கவும் வழிகாட்டுகின்றன. மானுட வாழ்க்கையே மாறிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் வாழ்வின் உண்மை நெறியை உணர்ந்து கடைப்பிடிப்பதன் மூலமாக மனித மனங்களைச் செம்மைப்படுத்தி வாழ்வியலை அர்த்தமுடையதாக அமைத்துக் கொள்ள முடியும் என்ற உயரிய கருத்தை உணர்த்தும்நோக்கிலும் இவ்வாய்வு இன்றியமையாத ஒன்றாகின்றது.

ஆய்வு நோக்கம்

ஓர் இலக்கியம் அது சார்ந்துள்ள சமுதாயத்திற்கு நல்லறங்களைக் காட்டும் அறநூலாகவும் மானுட வாழ்வின் மகத்துவத்தை உணர்த்தும் வாழ்வியல் களஞ்சியமாகவும் திகழ வேண்டியது அவசியமாகின்றது. அவ்வகையில் திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் பாடப்பட்டும், கேட்கப்பட்டும், சிந்திக்கப்பட்டும் மக்களின் மனங்களில் நிலைபெற்றன. ந.சுப்புரெட்டியார் திவ்ய தேசங்களுக்குப் பயணம் மேற்கொண்டு பதிவு செய்துள்ள திருத்தலத்தின் மேன்மைகளையும், இறையருளின் சிறப்புக்களையும், ஆழ்வார்களின் பாசுரங்களில் திருத்தலங்கள் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள தன்மைகளையும் ஆராய்ந்து வெளிப்படுத்தக் காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் கருதுகோள்

“ஆழ்வார்களின் உலகியல் வாழ்வும், அருளியல் வாழ்வும் அனைவரும் கடைபிடித்தொழுகத் தக்கவையாக அமைந்திருப்பதோடு, இன்றைய இயந்திர உலகில் அதிதீவிர பொருள் வேட்கையுடன் அல்லலுறுகின்ற மக்களுக்கு உண்மையான உலகியல் வாழ்வை அறிவுறுத்திக்காட்டி, வாழ்வின் உறுதிப்பொருட்களை உணர்த்தி நன்னெறி காட்டும் நோக்கில் ந.சுப்புரெட்டியாரின் பயண இலக்கியங்கள் அமைந்திருக்க வேண்டும்” என்னும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு முன்னோடிகள்

“பெரியதிருமொழி ஓர் ஆய்வு” என்னும் தலைப்பில் து. லலிதா ஆய்வு மேற்கொண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார் (1990). “நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் சரணாகதி நெறி” எனும் தலைப்பில் இரா. இராசகோபாலன் பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார் (1992). “சைவ வைணவ சமயநெறி வளர்ச்சியில் மகளிர் பங்கு” எனும் தலைப்பில் ஒ.அரசப்பன் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார் (1995). “திருக்கோவையாரில் அகப்பொருள் நலம்” எனும் தலைப்பில் இரா. கனகசபாபதி முனைவர் பட்டத்திற்காகப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்துள்ளார் (1997). “ஆழ்வார் பாடல்களில் சிற்றிலக்கியக் கூறுகள்” என்னும் தலைப்பில் தி.தா. கீதாராணி ஆய்வு மேற்கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார் (1998). பாரதியார் பல்கலைக்கழகத்தில் “திருநாவுக்கரசரின் ஆறாம் திருமுறை, திருமங்கையாழ்வாரின் பிரபந்தம் இறையியல்புகளும் சித்தாந்த நெறிகளும்” எனும் தலைப்பில் வெ. செல்வசுப்பிரமணியன் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2002). “திருவாசகம் இரட்சணிய யாத்திரிகம் ஓர் ஒப்பாய்வு” என்னும் தலைப்பில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் மூ. அங்கப்பன் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2003). அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் “பக்திநெறியில் மணிவாசகரும் திருமங்கையாழ்வாரும்” எனும் தலைப்பில் இரா.மதன்குமார் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2007). பாரதியார் பல்கலைக்கழகத்தில் “திருவிருத்தம் – திருவாய்மொழி ஒப்பீடு” என்னும் தலைப்பில் தா. லோகநாயகி முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2008). “நாலாயிர திவ்வியப் பிரபந்த யாப்புக் கூறுகள்” எனும் தலைப்பில் இரா. அர்ஜீனன் பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2009). “நம்மாழ்வார் பாசுரங்களில் இறையியல்புகளும் இலக்கிய நயங்களும்” என்னும் தலைப்பில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் செ.சிவகாமி முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார் (2011). இவ்வாறான ஆய்வுகளின் தொடர்ச்சியாகவும், புதிய நோக்கிலும் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு

''பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் வைணவத் திருத்தலப் பயண அனுபவங்களும் வரலாறும்'' என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வின் எல்லை

ந.சுப்புரெட்டியாரின் வைணவ இலக்கிய நூல்கள் மட்டும் இவ்வாய்வின் எல்லைகளாக அமைகின்றன.

ஆய்வு ஆதாரங்கள்

ஆய்விற்கான அடிப்படை ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என்ற வகைகளில் பகுக்கப்பட்டுள்ளன.

முதன்மை ஆதாரங்கள்

பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியாரின் கீழ்க்கண்ட ஆறு பயண நூல்கள் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

1. சோழநாட்டுத் திருப்பதிகள் (முதல்பாகம், இரண்டாம் பாகம்)
2. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
3. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
4. வடநாட்டுத் திருப்பதிகள்
5. மலை நாட்டுத் திருப்பதிகள்

துணைமை ஆதாரங்கள்

பக்தி இலக்கியம் தொடர்பான திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள் ஆகியவை துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறைகள்

இவ்வாய்வில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை, பகுப்பாய்வு அணுகுமுறை ஆகியவை பின்பற்றப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் கட்டமைப்பு

ஆய்வேடு கீழ்க்கண்ட முறையில் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் – 1 முன்னுரை

இயல் – 2 வைணவ இலக்கியங்களும் ஆழ்வார்களும்

இயல் – 3 திருத்தலப் பயணங்களும் ஆழ்வார் பாசுரங்களும்

இயல் – 4 புராண வரலாற்றுக் கூறுகளும் அகப்பொருள் மரபுகளும்

இயல் – 5 முடிவுரை

முன்னுரை

முன்னுரையில் ஆய்வின் இன்றியமையாமை, ஆய்வின் நோக்கம், ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் எல்லை, ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுப் பகுப்பு போன்றவை இடம் பெறுகின்றன.

இயல் – 2 வைணவ இலக்கியங்களும் ஆழ்வார்களும்

இவ்வியலில் வைணவத்தின் தொன்மை, வைணவர்களின் பங்களிப்பு, நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும் ஆழ்வார்களும், ஆழ்வார்களின் அவதாரம், ஆகிய உட்தலைப்புக்களில் செய்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இயல் – 3 திருத்தலப் பயணங்களும் ஆழ்வார் பாசுரங்களும்

ந.சுப்புரெட்டியார் மேற்கொண்ட 108 திவ்ய தேசப் பயணத்தின் விளக்கமும் ஒவ்வொரு தலத்திலும் அவர் உணர்ந்து கொண்ட அனுபவங்களும், அத்தலங்களை ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ள விவரங்களும் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இயல் – 4 புராண வரலாற்றுக் கூறுகளும் அகப்பொருள் மரபுகளும்

ந.சுப்புரெட்டியார் பயணம் செய்த 108 திவ்ய தேசங்களுக்குப் பொருந்துகின்ற புராண வரலாற்றுக் கூறுகளை அவர் எடுத்துரைத்துள்ள தன்மையையும், நாயக நாயகி பாவத்தில் நின்று இறைவனை அனுபவித்த அகப்பொருள் மரபுக்கூறுகளும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

இயல் – 5 முடிவுரை

மேற்கண்ட இயல்களின் வழியாக ஆராய்ந்து கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் இப்பகுதியில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளத்தக்க புதிய ஆய்வுக்களங்கள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

பின்னிணைப்புகள்

ஆய்விற்குத் துணைநின்ற நூற்களின் பட்டியல் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுத் துணைநூற்பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கைக் குறிப்புகளும் நூல்கள் அட்டவணையும் இணைக்கப்பட்டுள்ளது.

இயல் – 2

வைணவ இலக்கியங்களும் ஆழ்வார்களும்

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். சைவத்தைப் போலவே வைணவமும் வைதிக சமயமாகும். சமண, பௌத்த சமயங்கள் வேதநெறிக்குப் புறம்பானவை. வைணவம் சங்க காலத்திலேயே வேரூன்றிய சமயம் ஆகும். வைணவத்தை வாழ்விக்க வந்த சான்றோர்கள் ஆழ்வார்கள் என்றும் ஆசாரியர்கள் என்றும் அழைத்தனர். ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவார்.

நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்

ஆழ்வார்களில் முதலாழ்வார் மூவரும் தவிர மற்றவர்கள் ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் விளங்கியவர்கள். இவர்கள் பன்னிருவரும் திருமாலை வழிபட்டுப் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பே நாலாயிரத்திவ்யப் பிரபந்தம். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் திகழும் பாசுரங்கள் ஒவ்வொன்றும் செஞ்சொல்லால் ஆனவை. சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறந்தவை. ஆழ்வார் அருளிச் செயல், திவ்வியப்பிரபந்தம், ஸ்ரீகோசம் என்று வேறு பெயர்களால் திவ்யப்பிரபந்தம் வழங்கப்பெறும். மக்களின் கீழ்மையை அகற்றி மேன்மையை அளிக்கும் மறையாய் விளங்குதலின் இதனை, 'தென்மொழி மறை' என்பர்.

திவ்வியப்பிரபந்தத்தின் பகுப்பு

வேதம், அங்கம் உபாஅங்களுடன் விளங்குதல் போல திவ்யப்பிரபந்தமானது நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு தமிழ் வேதங்களும், திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுக் கூற்றிக்கை, பெரிய திருமடல், சிறிய திருமடல் என்னும் அங்கங்களுடனும், பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி, ஆண்டாள் அருளிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி, குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழி, திருமழிசையழ்வார் அருளிய திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி, தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளி எழுச்சி, திருமாலை, மதுரகவியாழ்வார் அருளிய கண்ணிநுண் சிறுதாம்பு, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முறையே அருளிய முதலாம் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிப் பிரான் ஆகிய பதினான்கு உப அங்கங்களுடன் அமைகிறது.

திவ்வியப் பிரபந்தங்கள்

திவ்விய பிரபந்தத்தில் உள்ள பாசுரங்கள் குறிப்பால் பெயர் பெற்றும், அந்தாதித் தொடையால் பெயர் பெற்றும், குறிப்பாலும் அந்தாதித் தொடையாலும் பெயர் பெற்று வரும் சில பாசுரங்கள் பாடியவர்களால் பெயர்பெற்று விளங்குகிறது. பாவால், சிறப்பால், தன்மையால் பெயர் பெற்றவையும் இதில் இடம்பெற்றுள்ளன.

நாலாயிரத் திவ்யப் பிரந்தம் ஆயிரம் ஆயிரம் பாடல்களாக நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் முதலாயிரம் திருப்பல்லாண்டு, பெரிய திருமொழி, திருப்பாவை, ஆண்டர் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலானாதி பிரான், கண்ணிநுண் சிறு தாம்பு என்ற 10 உட்பிரிவுகளைக் கொண்ட முதலாயிரத்தில் 947 பாசுரங்கள் கொண்டுள்ளது. இரண்டாம் பகுதியில் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகியவை இடம் பெற்று 1134 பாசுரங்கள் உள்ளன. மூன்றாம் பகுதியில் முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகள் என 817 பாசுரங்களும், நான்காம் பகுதியாகிய திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும் உட்பிரிவு இல்லாமல் அமைந்துள்ளது.

நாதமுனிகள்

திவ்யப் பிரபந்தத்தைக் கண்டு இசை அமைத்துப் பரவும் வகை செய்தவர் நாதமுனிகள். இவர் வீரநாராயணபுரம் என்னும் சோழநாட்டின் சிற்றூரில் பிறந்தவர். கோயிலில் திருப்பணி தொண்டு செய்து வந்த இவர் நம்மாழ்வாரின் "ஆரா அமுதே" என்ற 8 பாசுரங்களைக் கேட்டு அப்பாசுரங்களில் மனம் ஒன்றி நின்றார். அதில் ஓராயிரத்துள் இப்பத்தும் என்ற வாசகத்தை செவிமடுத்து அந்த ஆயிரம் பாசுரகளைத் தேடி அலைந்து திருக்குருகூரை அடைந்தார். அங்கு மதுரகவியாழ்வாரின் சீடர் பரம்பரையிலே வந்த பராங்குசதாசர் என்பவரைச் சந்தித்து மதுரகவியாழ்வார் பாடிய "கண்ணிநுண் சிறுதாம்பு" என்ற பாசுரத்தை பெற்றார். அதை ஆழ்வார் திருநகரில் ஆழ்வார் முன் பன்னிராயிரம் முறை ஓத 'ஆழ்வார்' அவர் முன் தோன்றி நாலாயிர திவ்விய பிரபந்தத்தை அருளினார். நாலாயிரம் பாக்களையும் நம்மாழ்வார் அருளிச் செய்ய நாதமுனிகளால் இவ்வுலகுக்குப் பெறப்பட்டதாலும் இப்பாக்கள் "அருளிச் செயல்' ஆயிற்று.

நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் மகிமை

இந்நூல் வைணவ சமயத்தின் வழிபாட்டு நூலாக இராமானுசர் உயர்த்தினார். தேவராப் பாடல்களைப் போன்று கனிந்த மொழியையும், எளிய நடையையும் கொண்டு விளங்குவனவாகும். இசை அமைத்துப் பரவும் வகையில் வழி செய்தவர் நாதமுனிகள் ஆவார். இவை பக்திக் களஞ்சியமாக இருப்பதுடன் தித்திக்கும் தீஞ்சுவையாகவும் உள்ளன.

பன்னிரண்டு ஆழ்வார்களின் பெருமை

கி.பி.700–ல் தொடங்கி 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழ்நாட்டில் வைணவ பக்தி மார்க்கமும் வளரத் தொடங்கியது. இப் பக்தி இயக்கத்தை பாமர மக்களிடையே கொண்டு சென்ற பெருமை பன்னிரு ஆழ்வார்களைச் சாரும். சில ஆழ்வார்கள் சைவ சமய ஆசாரியர்களுக்கு முன்பாகவே தம் சமயத்தை பரப்ப முனைந்துள்ளனர். திருமால் வழிபாடு தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க நூல்களில் காணப்படுகிறது.

எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருமாலைத் தலைமையாகக் கொண்ட வைணவ வழிபாடு, பன்னிரு ஆழ்வார்கள் பக்திப் பாடல்களால் மறுமலர்ச்சி பெற்றது. இவ்வாழ்வார்கள் 108

வைணவத் தலங்களைப் பாடியுள்ளனர். கோயில்கள்தோறும் சென்று இறைவனை இசைபாடித் தொழுதுள்ளனர்.

ஆழ்வார்கள் – விளக்கம்

ஆழ்வார்கள் என்ற சொல்லுக்கு நமது முன்னோர்கள் இறைவனின் கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள் என்று பொருள் கூறுகின்றனர். கல்யாண குணங்கள் என்றால், எல்லையற்றவனாக, மேன்மை உடையவனாக எண்ணில்லாதவனாக உள்ள குணங்களை உடையவன் இறைவன் என்கின்றார் ஆளவந்தார். இறைவனை ஒரு குணக்கடல் என்கிறார்கள் ஆழ்வார்கள்.

ஆண்டவனின் அத்தகைய குணங்களை இடைவிடாமல் அனுபவித்தபவர்கள்தான் ஆழ்வார்கள். தெளிவான ஞானத்தையும் உண்மையான இறைநிலையினையும் மக்களுக்கு உணர்த்துவதற்கு இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் இல்லற வாசிகளாக உள்ள மக்களிடம் சமுதாயத்தில் தாங்களும் ஒருவராக வாழ்ந்து பக்தி என்னும் ஞானத்தைக் புகுத்தி இறைவனைந் சரணாகதி அடையும் வழியைக் காட்டி நெறிப்படுத்திய பெருமக்கள் என்பதில் ஐயமில்லை.

ஆழ்வார்கள் ஞானிகளைப் போல் சில குறிப்பிட்ட செயல்களுக்கு மன்னருக்காகத் தங்கள் ஞானத்தை வெளிக்காட்டவில்லை. ஆண்டவன் அவர்களுக்கு அருளியதை ஒட்டுமொத்த சமுதாயத்திற்குப் படைத்தவர்கள். பரம்பொருள் ஒன்றுதான் அதுவும் திருமால் மட்டும்தான் என்றும் பாடினார்கள். இறைவனை மட்டுமே பாடி, அவனுக்கு மட்டுமே அடிமையாகி அவன் அருளை அனைவரும் பெறவேண்டும் என்று உலகிற்கு எடுத்துரைத்த ஆழ்வார்கள், திருமாலின் வெவ்வேறு அம்சங்களாக மண்ணில் வந்து அவதரித்தவர்கள். அரசர்களையும், செல்வர்களையும் பாடுதவற்குப் பயன்பட்ட தமிழ், கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்படவேண்டும் என்ற கொள்கையுடையவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்கள் எப்போதும் பரம்பொருளின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருப்பவர்கள். இறைவனை விட்டுச் சிறிது பிரிந்து இருந்தாலும் அதுவும் அவன் திருஅருளே என்று எண்ணுபவர்கள். அவர்கள் இறைவனை விட்டுப் பிரிந்திருக்கும் போது தலைவனை விட்டுப் பிரிந்த தலைவி தலைவனுக்காகக் காத்திருப்பது போலவும், அந்தப் பிரிவுக் காலம் மிக அதிகமாக நீண்டு கொண்டே செல்லுமானால் தான் உயிருடன் இருக்க மாட்டேன் என்று இறைவனுடன் தர்க்கம் செய்யவும் தயங்காதவர்களாக ஆழ்வார்கள் காணப்படுகின்றார்கள்.

இராமபிரான் அயோத்தியை விட்டுக் காட்டுக்குச் செல்லும்போது அவருடன் தானும் வருவேன் என்று இலக்குவன் பிடிவாதம் பிடித்த நிலையே ஆழ்வார்களின் நிலையாகும். புராண, இதிகாச காலங்களில் முனிவர்கள் யாகம், வேள்வி, தவம் போன்றவற்றைச் செய்து தமக்குள் இறைவனைக் கண்டு மேன்மையான ஆனந்தத்தை அடைந்தனர். ஆனால் ஆழ்வார்கள் பாமர மக்களுடன் வாழ்ந்து கொண்டு, இல்லறவாசிகளுடன் பழகிக்கொண்டு சமுதாயத்தில் ஒருவராக இருந்து கொண்டு இறைவனைக் கண்டு மகிழ்ந்தார்கள். இவர்கள் பொருள் வேண்டி மன்னர்களையும், பிரபுக்களையும் பாடவில்லை. இவர்கள் பாடிய அனைத்துப் பாடல்களுக்கும்

தலைவன் என்பவன் இறைவன் மட்டுமே. உயிர்கள் அனைத்திலும் இறைவன் உள்ளான் என்ற ஆன்மநேயத்தை உலகுக்கு உணர்த்தியவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்கள் திருமால் ஒருவனைத்தான் பரம்பொருள் என்று உணர்ந்து அவனிடம் சரணடைந்து வேறு தெய்வங்களை வணங்கவில்லை. திருமாலை வணங்கினால் அவர்களை கண்டு எமதூதர்களும் வணங்கிச் செல்வார்கள் என்று கூறுகின்றனர். பன்னிரு ஆழ்வார்களும் பகவானின் அணிகலன்களாக இம்மண்ணில் அவதாரம் செய்துள்ளனர்.

பொய்கையாழ்வார் பகவானுடைய சங்கின் அம்சம், பூதத்தாழ்வார் பகவானின் தண்டாயுதத்தின் அம்சம், பேயாழ்வார் பகவானின் வாளின் அம்சம், திருமழிசையாழ்வார் பகவானுடைய சக்கரத்தின் அம்சம், மதுரகவியாழ்வார் குமுதன் என்ற நித்தியசூரியின் அம்சம், நம்மாழ்வார் சேனை முதலியார் என்ற நித்தியசூரியின் அம்சம், குலசேகர ஆழ்வார் பகவானின் கௌஸ்துபம் அம்சம், பெரியாழ்வார் பகவானின் வாகனமான கருடனின் அம்சம், ஆண்டாள் பகவானின் துணையான பூமிதேவியின் அம்சம், தொண்டரடி பொடியாழ்வார் பகவானின் மார்பை அலங்கரிக்கும் வனமாலையின் அம்சம், திருப்பாணாழ்வார் பகவானின் மறுவின் அம்சம், திருமங்கையாழ்வார் பகவானின் வில்லி அம்சம் எனக் குறிப்பிடுகின்றார் ந.சுப்புரெட்டியார் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.155).

பகவானுடைய படைக்கலன்களின் அம்சமாக தோன்றிய முதல் மூன்று ஆழ்வார்களும் அந்த ஆயுதங்களின் தன்மைக்கேற்ப வீரமிகுந்த வைணவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களின் பாசுரங்களில் வைணவ சமயத்தின் வீரக்கோட்பாடுகளைக் காணமுடிகிறது. மற்ற ஆழ்வார்கள் சாதுக்களாக இருந்து வைணவத்தின் தேன் சுவையைத் தங்கள் வாழ்க்கை முறைக்கேற்ப ஒருங்கிணைத்துக் கொண்டார்கள்.

இந்த ஆழ்வார்களில் முதல் ஆழ்வார்கள் மூவரும் எந்த தாயின் வயிற்றின் கருவருறையில் இருந்து அவதரிக்கவில்லை. ஆனால், குலசேகர ஆழ்வார் ஒருவரே மன்னர் குடும்பத்தில் அவதரித்து மன்னராக ஆட்சி செய்து திருமணம் புரிந்து மகனைப் பெற்று, பின்பே நாராயணனுக்கு அடிமையாகித் தன் மன்னர் பதவியைத் துறந்து ஆழ்வாரானார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் தாசி மீது விருப்பம் கொண்டு அலைந்து திரிந்தபோது, பெருமாள் அவரைத் தடுத்து ஆட்கொண்டு ஏற்றுக்கொண்டார். திருமங்கையாழ்வார் குமுதவல்லி என்பவரைத் திருமணம் செய்து கொண்டு அவருடன் சேர்ந்து வைணவத் தொண்டு புரிந்தார். மற்ற ஆழ்வார்கள் மண்ணிற்கும், பெண்ணுக்கும், பொன்னுக்கும் ஆசைப்படவில்லை. திருமாலைப் பாடும் பணியிலே வாழ்நாள் அனைத்தையும் செலவிட்டு இறைவனின் அவதார மேன்மைகளை உலகெங்கும் பரப்பினார்கள்.

ஆழ்வார்கள் வாழ்ந்த காலம்

ஆழ்வார்களின் காலம் துல்லியமாக இதுதான் என்று கூறமுடியாது. சில ஆழ்வார்களின் பாசுரங்களில் ஏதேனும் மன்னர்களின் பெயர்கள் இருந்தால் அதனைக் கொண்டு அவர்களின் காலத்தை குறிக்க முயல்கின்றார்கள்.

சில ஆய்வாளர்கள் கி.பி.7, 8–ஆம் நூற்றாண்டு முதல் 10–ஆம் நூற்றாண்டு வரை ஆழ்வார்களின் காலத்தைக் கணக்கிடுகின்றனர். ஆனால் அது சரியானது அல்ல. கி.பி.7–ம் நூற்றாண்டு முதல் 10–ம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தில் சில ஆழ்வார்கள் வாழ்ந்திருக்கலாம். ஆனால், பன்னிரு ஆழ்வார்களும் இந்த நூற்றாண்டுக்குள் தோன்றியிருப்பார்கள் என்று துல்லியமாகக் கணக்கீடு செய்ய முடியாது. ஆழ்வார்களின் வரலாற்று காலத்தைக் கணக்கிடும் போது தமிழ் மொழியை மன்னர்கள் வளர்க்கச் செய்த காலகட்டத்தையும் கணக்கீட்டுப் பார்க்க வேண்டும். ஆழ்வார்களை அவதரிக்கச் செய்ததன் மூலம் வைணவத் தத்துவங்களை பகவான் இவர்களின் மூலம் மக்களிடம் நிலைபெற்று நிற்க வழிகோலினார் எனக் குறிப்பிடும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

நம்மாழ்வார்

ஆழ்வார்களில் முதன்மையானவராகிய நம்மாழ்வாரை வைணவ உலகம் மதித்துப் போற்றுகின்றது. வைணவர்கள் இவரை உடலாகவும், ஏனையோரை உறுப்புகளாகவும் கொள்கின்றனர்.

இவர் பாண்டிநாட்டில் திருக்குருகூரில் வேளாண் மரபில் காரியார்க்கும் உடையநங்கைக்கும் பிரபாதி ஆண்டு வைகாசித் திங்கள் பௌர்ணமி திதியில் பிறந்தவர். பிறந்தது முதல் வாய் பேசாது இருந்தமையின் திருமால் கோயில் புளிய மரத்தடியில் கிடத்தினர். பதினாறு ஆண்டுகள் அவ்விடத்தே தவமியற்றித் திருமால்மீது பக்திப்பாடல்கள் 100 பாடினார். திருவிண்ணகர் எனப்படும் திவ்ய தேசத்தில் உள்ள ஒப்பிலியப்பன் நம்மாழ்வார்க்கு ஐந்து திருக்கோலங்களில் காட்சி கொடுத்தார்.

அவை பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், எண்ணப்பன், திருவிண்ணகரப்பன் மற்ற எந்த ஆழ்வார்க்கும் பெருமாள் இத்தகைய கோலங்களில் சேவை சாதிக்கவில்லை. மேலும் நம்மாழ்வார் சிந்தனை உள்ளத்திலிருந்து திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகிய பிரபந்தங்கள் அருவி போல் தோன்றின.

நம்மாழ்வார் பாடல்கள், 'கண்ணனே எல்லாப் பொருளுமாய் விளங்குகின்றான்' என்ற உண்மையைப் பலவிடங்கில் வலியுறுத்தும் திருவாய் மொழியில், 'உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்' என்றே கண்கள் நீர் மல்கிப் பாடியுள்ளமை சான்றாகும். அதனால் புலவர்களே நிலையில்லாத மனிதரைப் பாடிப் பரிசிலாகப் பெறும் செல்வம் உமக்கு எத்தனை நாளைக்கு வரும். அதைவிட்டு, அழியாத செல்வமாய் விளங்குகின்ற திருமாலைப் பாடுவீரேல், இம்மையில் மறுமையில் வீறுபேறு எளிதாகக் கிடைக்கும் எனக் கூறுகின்றார்.

"வாய்கொண்டு மானிடம் பாடவந்த
கவியேன் அல்லேன்;
ஆய்கொண்ட சீர் வள்ளல் ஆழிப் பிரான்
எனக்கே உளன்;
சாய்கொண்ட இம்மையும் சாதித்து,

வானவர் நாட்டையும்
நீ கண்டுகொள் என்று வீடும்
தரும் நின்று நின்றே" (திருவாய், 3217)

என்பது நம்மாழ்வாரின் வாக்கு. இவர் சடம் என்னும் வாயுவைச் சினந்தமையால் சடகோபர் என்றும், அரங்கப்பெருமானால் 'நம் சடகோபன்' என்றும் அழைக்கப் பெற்றாமையால் 'நம்மாழ்வார்' என்றும், உலகியலுக்கு மாறாக இருந்ததால் 'மாறன்' என்றும், பிற சமயமாம் யானைகட்கு அங்குசமாக அமைந்தமையால் 'பராங்குசர்' எனவும் அழைக்கப்பெற்றார். மகிழம்பூ என்னும் வகுளம்பூக்களால் செய்யப்பட்ட மாலையை அணிந்து கொண்டு பொலிவுடன் நின்றதால் இவருக்கு ' வகுளாபரணன் ' என்றும் பெயர் ஏற்பட்டது.

ஆழ்வார்கள் அனைவரையும் உடலாகக் கொண்டோமானால் நம்மாழ்வார்தான் அதில் உயிராகத் திகழ்பவர் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். நம்மாழ்வார் பகவானின் அவதாரம் என்ற காரணத்தினால் இவர் ஆத்மாவாகிறார். மற்ற ஆழ்வார்கள் பகவானின் ஆயுதங்கள் மூலமாக அவதரித்தவர்கள். எனவே நம்மாழ்வார் என்ற ஆத்மாவிற்கு அவர்கள் உடம்பாகிறார்கள். நம்மாழ்வாரின் பாடல்கள்தான் திராவிட வேதம் என்று அழைக்கப்படுகிறது.

உண்ணும்சோறு, பருகும்நீர், தின்னும் வெற்றிலை முதலிய எல்லாம் கண்ணனாகிய எம்பெருமானே, அவன் அருளால் பெறும் இன்பங்களே என்று கண்ணீர் மல்கி உருக வேண்டும் என்பது நம்மாழ்வாரின் அறிவுரை இவரைப் பாடிப் போற்றுவதையே மதுரகவியாழ்வார் தமது கடமையாகக் கொண்டிருந்தார் என்பதும் நம்மாழ்வாருக்கு ஒரு தனிச்சிறப்பாகும்.

மதுரகவியாழ்வார்

இவர் பாண்டிய நாட்டில் திருக்குருகூரையடுத்த திருக்கோளூரில் ஈசுவர ஆண்டு சித்திரை நட்சத்திரத்தில் கருடாழ்வார் அம்சமாகத் தோன்றியவர். இவர் நம்மாழ்வாரின் சீடர். செவிக்கினிய செய்யுட்களைப் பாடியமையால் 'மதுரகவி' என அழைக்கப்பெற்றார்.

திருக்கோளூரில் பிறந்த இவர் அயோத்திக்குச் சென்று அங்கு ஓர் ஒளிப்பிழம்பு கண்டு அதனைத் தொடர்ந்து திருக்குருகூரை அடைந்தார். தாம் கண்ட ஒளிப்பிழம்பு நம்மாழ்வார் எனத் தெளிந்து அவரைக் கண்டு வணங்கி அவரையே ஞானாசிரியராகக் கொண்டார். நம்மாழ்வார் பாடல்கள் அனைத்தையும் தம் கையாலே எழுதி மகிழ்ந்தார்.

இவர் பாடிய பாடல்கள் திருமாலைப் பற்றின அல்ல. அனைத்தும் நம்மாழ்வார் பற்றியன. 'கண்ணின்நுண் சிறுத்தாம்பு' என்னும் பதிகத்தை அருளிச் செய்துள்ளார். வைணவ அந்தணராகிய இவர் நம்மாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளிய பின் ஐம்பது ஆண்டுகள் அவர் திருவடிவத்தை வைத்து வணங்கி இன்புற்றார்.

மதுரகவியாழ்வார் பாடிய கண்ணிநுண் சிறுத்தாம்பு பாடலின் முதல் வரியால் பெயர் பெற்றுள்ளது. 12 ஆழ்வார்களில் மதுரகவியாழ்வார் மட்டுமே ஒரு திவ்ய தேசத்தையும் பாடாதவர். "நம்மாழ்வாரே என்னுடைய தெய்வம். எனக்கு வேறு தெய்வம் இல்லை. அவருடைய திருவடியே அடைக்கலமாகக் கொண்டு அவரின் பெயரையே என் நாவில் பாடுவேன்" என மதுரகவியாழ்வார் கூறியுள்ளார்.

முதலாழ்வார் மூவர்

பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதலாழ்வார் என அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் மூவருக்கும் தாய், தகப்பன், குரு என்பது இல்லை. சாதாரண மனிதர்களைப் போல் பிறக்காமல் சுயம்புவாகத் தோன்றியவர்கள். முதலாழ்வார் மூவர் பாடல்களிலும், பிற ஆழ்வார்கள் பாடல்களில் காணப்பெறும் பிற சமயவெறுப்பு என்பது இல்லை.

பொய்கையார் பொய்கையில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றார். காஞ்சிபுரத்தில் ஐப்பசித் திங்களில் திருவோண நட்சத்திரத்தில் பாஞ்ச சந்நியம் என்னும் சங்கின் அம்சமாக அவதரித்தார்.

பூதத்தாழ்வார் திருமாலைப் பூதம் எனத் தம் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டு இருந்தமையால் இப்பெயர் பெற்றார். திருக்கடல் மல்லையில் ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றியவர். பேயாழ்வார் பக்தி மேலீட்டால் அழுது சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர் போல் திகழ்ந்தமையால் இப்பெயர் பெற்றார். மயிலையில் ஐப்பசி சதய நட்சத்திரத்தில் நந்தகம் என்னும் வாளின் அம்சமாகத் தோன்றினார்.

பொய்கையார் திருக்கோவிலூருக்குச் சென்று திருமாலை வழிபட்டபின் அன்பர் ஒருவர் வீட்டின் இடைக்கழியில் துயிலக் கருதினார். அந்த சமயம் பேயாழ்வாரும் அங்கே சென்று இடம் வேண்டி அவருடன் இருந்தார். பூதத்தாழ்வாரும் அங்கே வந்த இடம் வேண்டினர்.

ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும், மூவர் நிற்கவும் இடம் இருந்தது. அப்போது இருட்காலம், மூவரும் இடையில் யாரோ ஒருவர் இருவரையும் நெருக்குவதாகத் தெரிந்தமையால் அவர் யார் என்று ஆராய்ந்து திருமால் என்று அறிந்து பின் வரும் பாடல்களைப் பாடினார். இப்பாடல் முதல் திருவந்தாதியில் உள்ளது.

"வையந் தகளியா வார் கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர் ஆழி நீங்குவே"

என்று பொய்கையார் பாடினார். பின்னர் பூதத்தாழ்வார்,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புறுகு சிந்தை இடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்"

என்று பாடினார். அதன்பின்னர் பேயாழ்வார்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கு கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று"

என்றும் படினார். உடலை வருத்திக் கடுமையான தவங்கள் செய்துவாட வேண்டியதில்லை. நெஞ்சு உருகிக் கடவுளை வழிபட்டால் போதும் என்பதே ஆழ்வார்களின் கொள்கை ஆகும். "கடவுளை உண்மையான அன்புடன் மலர்கள் தூவிக் கைதொழுது வழிபடுதல் போதும் தீவினைகள் வந்து சேராமல் போய்விடும்" என்கிறார் பேயாழ்வார்.

குலசேகர ஆழ்வார்

சேரமன்னர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இரத்தினமணி அம்சமாகப் பிறந்தவர். அரசப் பதவியைத் துறந்து வைணவத் தொண்டரானார். இராமபிரானிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் அரசுச் செல்வத்தையும் மானிடப் பிறப்பையும் பொருட்படுத்தாமல் திருமாலின் திருவேங்கட மலையில் பறவையாகவே பிறக்க ஆசைப்பட்டார். இவர் பாகவதர்களிடம் பேரன்பு கொண்டவர். ஒரு முறை பாகவதர் ஒருவர் திருடினார் என்ற சொல் இவர் காதில் விழ, இவர் அதனை நம்ப மறுத்து 'குடத்தில் பாம்பை இட்டுப்' பாகவதர் திருடியிருந்தால் பாம்பு தன்னைத் தீண்டட்டும் என்று கூறிப் பாம்பு கடிக்காதிருந்ததைக் காட்டினார் என்பர்.

தமிழ் மொழியிலும் வடமொழியிலும் புலமை உடைய இவர் தமிழில் 'பெருமாள் திருமொழி' நூலையும், வடமொழியில் 'முகுந்தமாலை' என்ற நூலையும் இயற்றியுள்ளார். திருவேங்கடமுடையானிடமும் கண்ணபிரானிடமும் காதல் கொண்டு பாடித் திருவேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழவே விரும்பினார். இன்றும் அங்குள்ள படிகள் 'குலசேகரன்படி' என்றே அழைக்கப் பெறுகின்றன.

குலசேகரர் தம்முடைய பதிகம் ஒன்றில் இராமாயணக் கதைச்சுருக்கம் முழுவதையும் பாடியுள்ளார். ஆழ்வார்களில் மன்னராக இருந்து முடிதுறந்த ஆழ்வார் என்னும் பெருமை பெற்றவர் குலசேகர ஆழ்வார் மட்டுமே. இராமாயணத்தை 10 பாடல்களில் விவரித்துப் பாடும் இவரது திருச்சித்திரக்கூடப் பதிகம் படித்தவர்களுக்கு இராமாயணத்தை முழுமையாகக் கற்ற இன்பம் கிடைக்கும். குலசேகர ஆழ்வாரைத் தென்னரங்கம் பாடவல்ல சீர்பெருமாள் என்று மணக்கால் நம்பி குறிப்பிடுகிறார்.

அடியார் ஒருவர் வந்து விட்டால் அவர்களை உபசரிப்பதைக் கடமையாகக் கொண்ட ஆழ்வார் தனது மாளிகைக்குத் திரும்பி அவருடன் இறைவனைப் பற்றிப் பேசுவதில் ஈடுபடுவாராம். குலசேகர ஆழ்வார் தினமும் திருவரங்கத்துக்கு யாத்திரை செல்வாராம். அந்த சமயங்களில் அவரது அமைச்சர்களும் அவர் மீது பற்றுக் கொண்டவர்களும் ஒரு வைணவ அடியவரை இவருக்கு முன்பாக அனுப்பி வைப்பார்களாம். திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பா சமுத்திரம் வட்டத்தில் மன்னார் கோவில் என்ற ஊர் உள்ளது. இங்குதான் அவர் இறுதிநாளை கழித்து வைகுண்டம் சென்றார் என்பது வரலாறு.

பெரியாழ்வார்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் கருடாம்சமாக வேயர் குலத்தில் தோன்றியவர். 'விஷ்ணு சித்தன்', 'பட்டர் பிரான்' என்றும்

அழைக்கப் பெறுகிறார். இயற்கையிலேயே அனைத்துக் கலைகளும் கற்றவரான பெரியாழ்வார் பகவான் மீது தீவிரப் பற்றுமிக்கவர்.

இவர் அருளிய பிரபந்தங்கள் திருப்பல்லாண்டில் 12 பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழியில் 461 பாசுரங்கள். இவ்வாறாகப் பல்வேறு பிரபந்தங்களைப் பாடிய இவரே ஆண்டாளை வளர்த்து ஆளாக்கி பகவானுக்கே மணம் முடித்து கொடுத்து அவனுக்கே மாமனாரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பூமாலை கட்டிப் பெருமாளுக்குப் பணி புரிந்தவர். இவர் புனைந்த பாமாலைகள் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்பன. கிருஷ்ண அவதாரத்தில் ஆழ்வார் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்த காரணத்தால் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்து பாடியுள்ள திறம் வியந்து போற்றத்தக்கது. பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்திற்கு அடித்தளமாகவும் தோற்றமாகவும் இவரது நூல் விளங்குகிறது. வளர்ப்பு மகளாக வளர்க்கப்பட்ட ஆண்டாளும் பெரியாழ்வாரும் ஒரே வீட்டில் வாழ்ந்து உத்தமன் வசப்பட்டவர்கள். குடும்ப பாசத்தில் தந்தையும் மகளுமாக இருந்தார்கள். பெருமாள் என்ற பொருளை இருவரும் விரும்பினார்கள். கண்ணபிரானின் பால வயது விளையாட்டில் பெரியாழ்வார் மெய் மறந்தார். தனது வாழ்நாளின் இறுதிகாலத்தில் அழகர் மலையில் வாழ்ந்து அங்கேயே வைகுந்த பதவியை அடைந்தார்.

ஆண்டாள்

பெரியாழ்வார் பயிரிட்ட நந்தவனத்தில் துளசிப் பாத்தியில் ஆடித்திங்கள் பூர நட்சத்திரத்தில் பூமகள் அம்சமாய்த் தோன்றியவர். இவரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி என்று வைணவர்கள் போற்றுவர். 'கோதை' என்பது இவர் பெயர் ஆண்டவனையே ஆண்டவள். ஆதலால் ஆண்டாள் என்றும், பெருமாளுக்கு மாலை சூடிக் கொடுத்தவள் ஆதலால், 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி', 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் அழைக்கப்பெற்றார்.

ஆண்டால் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழி திருப்பாவை என்பன. நாச்சியார் திருமொழி 10 பாடல்களை உடைய 14 திருமொழிகள். இதில் மாயவனை மணப்பதாகக் கனவு காண்கிறார். இவருடைய 'திருப்பாவையே' எல்லோராலும் போற்றிப் பாராயணம் செய்யப்பெறுகிறது. இப்பாவைப் பாட்டு மார்கழித் திங்களில் திருமால் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் பக்திப் பெருக்குடன் ஓதப்பெறுகின்றது.

ஆண்டாள் கண்ணனையே மணவாளனாக அடையவேண்டும் என்று கனவுகள் கண்டார். ஸ்ரீவில்லிபுத்தூர் திருவாய்ப் பாடியில் உள்ள பெண்களை ஆயர் குலப் பெண்களாகவும், தன்னை அவர்களில் ஒருத்தியாகவும் வடபெரும் கோயில் நந்தகோபன் வீடாகவும் அந்த கோயிலில் உள்ள இறைவனைக் கிருஷ்ணனாகவும் எண்ணி இடைப் பெண்கள் செய்த நோன்பைத் தானும் மேற்கொண்டார். அதன் காரணமாகத் திருப்பாவை என்ற ஒப்பற்ற பிரபந்தத்தைப் பாடினார்.

பெருமாள் நாராயணன் எப்போதெல்லாம் அவதாரம் எடுக்கிறாரோ அப்போதெல்லாம் தாயார் திருமகளும் அவதாரம் எடுப்பார். ஆனால், தாயார் திருமகள் ஆழ்வாராக அவதாரம் எடுத்த பெருமை தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தனிப்பெரும் புகழாகும். அனைத்து ஆழ்வார்களும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் பகவானுடைய கல்யாண குணங்களில் ஆழ்ந்து விடுகிறார்கள்.

ஆனால் ஆண்டாளோ, மிகச்சிறிய வயது முதல் மணத்தாலும் செய்கையாலும் பகவானின் மோகத்தில் மூழ்கினாள்.

தொண்டரடிப் பொடியாழ்வார்

சோழ நாட்டுத் திருமண்டங்குடியில் மார்கழித் திங்கள் கேட்டை நட்சத்திரத்தில் வனமாலை அம்சமாய் தோன்றியவர் இவர். பிராமண மரபைச் சேர்ந்த இவரது இயற்பெயர் விப்ர நாராயணர்.

இவர் திருமங்கை மன்னன் காலத்தவர். திருமங்கை மன்னன் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு மதில் கட்டுவித்த காலத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் பெருமாளுக்குத் திருமாலை சேர்க்கிற இடம் எதிர்ப்பட்டதாக அவ்விடத்தை விட்டு ஒதுக்கி மதில் கட்டுவித்ததாகக் குருபரம்பரை கூறுகின்றது.

திருவரங்கத்தில் திருமாலுக்கு மாலை சாத்தப் பூந்தோட்டம் அமைத்துத் தொண்டாற்றிய போது தேவதேவி என்னும் விலைமாதின் வயப்பட்டு வழிபாட்டினை மறந்து சிறையிடப்பட்டார். பின்னர் திருவரங்கன் தன் அடியானை விடுதலை செய்தார் என்றும் கூறுவர்.

சிறப்புகள்

தொண்டரடிப் பொடியாழ்வாரும் பெரியாழ்வாரும் மட்டுமே பெருமாளுக்கு மாலை கட்டித் தரும் தொண்டு புரிந்தவர்கள். அனைத்து திவ்ய தேசங்களிலும் பாடப்படும் காலை நேரத்து பாசுரங்கள் திருப்பள்ளியெழுச்சி. அதனைப் பாடியவர் தொண்டரடிப் பொடியாழ்வார். மற்ற ஆழ்வார்களைப் போல இல்லாமல் எப்போதும் மாலையும் கழுத்துமாகக் கூடையும் பூக்களுமாக பூக்களைப் பறிக்கக்கூடிய ஆயுதத்துடன் இருப்பார். தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலைப் பாசுரத்தில் இடம்பெற்றுள்ள,

"சுரும்பமர் சோலை சூழ்ந்த தரங்கமா கோயில் கொண்ட
கரும்பினை கண்டு கொண்டேன் கண்ணினை களிக்கு மாறே" (888)

என்ற அடிகளைத் திருமங்கையாழ்வார் தனது திருக்குறுந்தாண்டகத்தில் **13**வது பாடலாக அப்படியே எடுத்தாண்டுள்ளார். இதிலிருந்து இவர்கள் இருவரும் சமகாலத்தவர் என்பது சான்றாகும்.

திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் பல்வேறு மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், தொண்டரடி பொடியாழ்வாரின் வரலாற்றுடன் தொடர்புடைய மன்னனின் பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

தொண்டரடி பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சி தான் தமிழ் மொழியில் வெளியான முதல் சுப்ரபாதமாகும். தொண்டரடி பொடியாழ்வார் மங்களா சாசனம் செய்த திவ்ய தேசங்கள் **1.** திருவரங்கம், **2.**அயோத்தி, **3.** திருப்பாற்கடல் ஆகியவையாகும்.

திருமழிசையாழ்வார்

இவர் தொண்டை நாட்டில் 'திருமழிசை' என்ற ஊரில் பிறந்தமையால் 'திருமழிசை ஆழ்வார்' என அழைக்கப் பெற்றார். இவருக்கு 'பத்திசாரர்' என்ற பெயரும் உண்டு. திருமழிசை ஆழ்வார் மக நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்து பெற்றோர் இல்லாமையால் திருவாளன் என்ற

தாழ்குலத்தவன் மனையில் வளர்ந்தார். இவ்வாழ்வார் தம்மைக் சூத்திரர் என்று இகழ்ந்த வேதியரை வென்று திருக்குடந்தையில் யோகத்தில் அமர்ந்து திருநாட்டுக்கு எழுந்தருளினார். இவர் உலக முதற்பொருள் உண்மையை உணரவேண்டி சமணம், சாக்கியம் போன்ற பிறசமயங்களுக்குச் சென்று அவற்றிலிருந்து மீண்டு இறுதியில் பேயாழ்வாரிடம் ஞானோபதேசம் பெற்றார்.

புராண இதிகாசங்களில் அவதார புருஷர்களாகத் தோன்றியவர்கள் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. இவர் காஞ்சியில் பல்லவன் தம்மை இகழ்ந்ததற்காகத் திருமாலையும் அழைத்துக் கொண்டு அவ்வூரை விட்டுச் சென்றார் என்ற ஒரு வரலாறு கூறப்படுகிறது. காஞ்சியிலிருந்து வெளியேறிய காலை,

“கணி கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணி வண்ணா நீயிங் கிராதே – துணிவுடனே
செந் நாப்புலவன் யான் செல்கின்றேன் நீயு முன்றன்
பைந் நாகப் பாய் சுருட்டிக் கொள்”

என்று பாடினார். திருமழிசையாழ்வார் சித்தராக இருந்தது மட்டுமின்றித் தீவிர வைணவராக மாறிய பிறகு சோதிடக்கலையிலும் வல்லவராய் இருந்து சோதிடம் தொடர்பான நூல்கள் எழுதியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திருமழிசையாழ்வார் வைணவமே பெரியது என்று குறிக்கோளுடன் சிவநிந்தனையையும் பரவலாகத் தனது பாசுரங்களில் வைத்துப் பாடியுள்ளார். அதன் காரணமாகத்தான் இவரை பெருமானின் சக்ராயுத அம்சமாக கூறுகின்றார்கள் என்ற குறிப்பு இங்கு நோக்கத்தக்கது (ந.சுப்புரெட்டியார், வைணவச் செல்வம், ப.192).

திருமழிசையாழ்வார் தன் வாழ்நாளில் பாதியை மற்ற மதங்களிலேயே கழித்தார். கால்பகுதிக்கும் குறைவான காலத்தில்தான் வைணவத்தில் இருந்தார். அதிலும் பெரும்பாலான காலத்தை யோக நிஷ்டையிலும், யாத்திரையிலும் செலவழித்தார். பற்பல விஷயங்கள் குறித்து பலவிதமான நூல்கள் எழுதினார். இவர் 14 திவ்ய தேசங்களுக்கு மங்காளசாசனம் செய்வித்துள்ளார்.

மகான் ராமானுஜரின் உடனிருந்த திருவரங்கத்து அமுதனார் திருமழிசையாழ்வாரின் பாசுரங்களை நெஞ்சார பருகியவர் ராமானுஜர் என்கிறார். அப்படிப்பட்ட திருமழிசையாழ்வார் திருவடிக்கே அடிமை பூண்டு அன்பு செய்வேன் என்பதை,

“இடங்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடிப்போது
அடங்கும இதயத் திராமாநுசன் அம்பொற் பாதமென்றும்
கடங் கொண்டிறைஞ்சும் திருமுனி வர்க்கன்றிக் காதல் செய்யாத்
திடங் கொண்ட ஞானியர்க் கே அடியேன் அன்பு செய்வதுமே” (2802)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருப்பாணாழ்வார்

சோழநாட்டு உறையூரில் துன்மதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீவத்சம் என்னும் திருமருவின் அம்சமாய் நெற்கழனியில் தோன்றியவர். இழிவான குடியினர் என்று கருதப்பெற்ற பாணர் குடியினரால் வளர்க்கப் பெற்றமையால் திருப்பாணாழ்வார் எனப் பெயர் பெற்றார்.

"இழிகுலத்தவர் களேனும் எம்மடியார்களாகில்
நின்னொடு மொக்க அருளினாய்"

என்பது தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருப்பாசுர அடிகள். இவை திருப்பாணாழ்வாரைக் குறிப்பதால் இவர் அவரோடு ஒத்த காலத்தவர் ஆவார்.

இவர் இழிகுலத்தவரால் வளர்க்கப் பெற்றமையால் திருவரங்கம் திருக்கோயிலினுட் செல்ல இயலாது காவிரிக் கரையிலிருந்து இன்னிசையுடன் பெருமாளைப் பாடி மகிழ்ந்தார் என்பர். பெருமாளின் கட்டளைப்படி திருவரங்கப் பெருமாள் திருமுற்றத்தடியார் கூட்டத்தைச் சேர்ந்த யோக சாரங்கார் என்பவரால் தோளில் சுமக்கப்பெற்றுத் திருக்கோயிலினுட் சென்றார். அங்குப் பெருமாளைக் கண்ணாரக் கண்டு களித்து, "அமலனாதிப் பிரான்" என்னும் திருப்பாசுரத்தை அருளிச் செய்தார். அரங்கநாதர் மேல் பெண்ணொருத்தி காதல் கொண்ட பாங்கிலே அமைந்த அகப்பொருள் துறை சார்ந்த பனுவல் இது.

பன்னிரு ஆழ்வார்களில் திருவரங்கத்துப் பெருமானின் திருப்பாதங்களில் புகுந்து பெருமை பெற்றவர்கள் இருவர். ஒருவர் ஆண்டாள், மற்றொருவர் திருப்பாணாழ்வார்.

பிரணவம் என்பது அ உ ம என்னும் 3 எழுத்துக்களால் ஆனது. இந்த பிரணவ சொற்களையே முதல் மூன்று பாசுரங்களில் முதல் சொல்லாக அமைத்து முதல் பாடலை 'அமலனாதிபிரான்' என்றும், இரண்டாவது பாடலை 'உவந்த உள்ளத்தவா' என்றும் மூன்றாவது பாடலை 'மந்திப்பாய் வடவேங்கடம்' என்றும் பாடியுள்ளார். இவருடைய நான்காவது பாடலில் திருமாலின் வயிற்றிலிருந்து நாபிக்கமலத்தில் பூத்த தாமரை மலரில் அமர்ந்த பிரம்மன் உயிர்களைப் படைக்கிறான் என்றும் குறிப்பிட்டுப் பிரணவத்தை அறிவதற்கு 'சரணாகதியே' சிறந்தது என்று காட்டுகிறார்.

திருப்பாணாழ்வாரின் 10 பாசுரங்களே பரமாத்விற்கு ஜீவாத்மா அடிமைப்பட்டதன் தத்துவம் விளக்கப்படுகிறது. திருப்பாணாழ்வாரின் பாடல்களில் மனதைப் பறிகொடுத்த வேதாந்த தேசிகர், அதற்கு பெரிய தனிப் பேருரையே எழுதியுள்ளார். திருப்பாணாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் திருவரங்கம், திருவேங்கடம், திருப்பரமபதம் ஆகியவை ஆகும்.

திருமங்கையாழ்வார்

இவர் சோழவள நாட்டில் திருமங்கை நாட்டுத் திருவாலித் திருநகரிக்கு அருகில் உள்ள திருக்குறையலூரில் நள ஆண்டு கார்த்திகைத் திங்களில் வில்லின் அம்சமாய்த் தோன்றியவர். இவரை நீலி என்னும் படைத்தலைவனின் மகன் என்பர். நீலியின் மகன் ஆதலால், 'நீலன்' எனப்பட்டார். கள்ளர் மரபினர், சோழனால் திருமங்கை நாட்டுக்கு மன்னராக ஆக்கப் பெற்றமையால் 'திருமங்கை மன்னன்' எனப் பெயர் பெற்றான்.

இவர் குமுதவல்லி என்ற அம்மையாரை மணந்து வைணவ அடியார்களுக்குப் பணியாற்றினார். சோழவேந்தனுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தைக் கூட அடியார்களுக்குச் செலவிட்டு அரசனால் சிறை வைக்கப்பெற்று அரங்கனருளால் சிறைமீண்டார். நாலுகவிப் பெருமாள் என்ற பெயரையும் பெற்றவர் ஆவார்.

சிறப்புகள்

ஆழ்வார்கள் 12 பேரில் கொள்ளையடித்து போர் செய்து அன்னதானம் செய்து படைப்பரிவாரங்களுடன் சீடர்களுடன் சென்று மங்களா சாசனம் செய்தது திருமங்கையாழ்வார் மட்டுமே. இவர் தான் திவ்ய தேசத்து பெருமாள்களை எல்லாம் தட்டி எழுப்பி உரையாடியவர்.

பெருமாள் தானாக முன்வந்து ஒரு ஆழ்வாரை வாழ்த்தினார் என்றால் அதுவும் இந்த ஆழ்வாரின் வாழ்க்கையில் தான் நடந்தது. வேதம் என்ற பழத்தை கொத்திய கிளியாக நம்மாழ்வரையும், அதன் சாராம்சத்தை 6 சிற்றிலக்கியங்களில் விழித்துரைத்த திருமங்கையாழ்வாரை இளங்கிளி என்றும பெரியோர்கள் சொல்வார்கள். ஆழ்வார்களில் பன்னிருவரில் குலசேகர ஆழ்வாரும், திருமங்கையாழ்வாரும் மன்னர்களாக இருந்து ஆழ்வார்கள் மாறியவர்கள்.

ஆழ்வார்கள் பெரும்பாலும் பாசுரங்களைப் பாடி வைணவ நெறியை வளர்த்தார்கள். ஆனால் திருமங்கையாழ்வார் மட்டும் பாசுர மழை பொழிந்ததோடு நின்றுவிடாமல் திருக்கட்டிடப் பணிச் செய்தல், திருவிழாக்களை உண்டு பண்ணுதல், பழைய ஆழ்வார்களின் பாசுரங்களை ஏற்றுக் கொள்ளுதல், அன்னதானம் செய்தல், மற்ற சமயத்தாரிடம் வாதம் புரிதல், தன்சமயம் பெரிது என்று நிலைநாட்டல் போன்ற பணிகளைச் செய்தார்.

திருமங்கையாழ்வார் இயற்றிய நூல்கள் சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, பெரிய திருமொழி என்பன. இவ்வாறினையும் நம்மாழ்வார் இயற்றிய நான்கு திருப்பாடற்நெறாகையாகிய நான்மறைக்கும் ஆறங்கமாக வைணவர்கள் கருதுவர்.

'பெரிய திருமொழி' நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்துள் ஒரு பெரும் பகுதியாகும். இவரது பாடல்கள் இயற்கை அழகும், அகப்பொருள் நலமும், கவிவளமும், சொல்லினிமையும் மிக்கன.

பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியார் காட்டும் திவ்ய தேசங்கள்

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை எம்பெருமான் எழுந்தருளியிருக்கு திவ்ய தேசங்களாகும். இத்திவ்ய தேசங்களில் அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளியுள்ளார். வைணவர்கள் இத்திவ்ய தேசத்தை 108 என்று கணக்கிட்டு உள்ளார்கள். இவற்றுள் சோழ நாட்டிலுள்ளவை 40, பாண்டிய நாட்டிலுள்ளவை 18, மலை நாட்டிலுள்ளவை 13, நடுநாட்டிலுள்ளவை 2, தொண்டை நாட்டிலுள்ளவை 22, வடநாட்டிலுள்ளவை 12, திருநாடு ஒன்று.

இந்தக் கணக்கை பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,

"ஈரிருப தாம்சோழம், ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலை நாடு ஓரிரண்டாம் – சீர்நடு நா(டு)

ஆறோ(டு) ஈரெட்டுத் தொண்டை, அவ்வடநா (டு) ஆறிரண்டு

கூறுதிரு நாடகக் கொள்”

என்ற வெண்பாவால் அறியலாம்.

தொகுப்புரை

சமயம் பலவாறாகத் தோன்றினாலும் அவை உணர்த்தும் அறம் ஒன்றே என்பதை இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன. மனித வாழ்க்கையும், சமயங்களும் பிரித்தறிய முடியாத வகையில் இரண்டறக் கலந்துள்ளன. தமிழகம் பண்டு தொட்டு இன்று வரை அருளாளர் பலரைத் தோற்றுவித்து அரிய புகழைப் பெற்றுத் தந்த அருளாளர் வரிசையில் பிற்காலத்துத் தோன்றிய ஆழ்வார்களின் இலக்கியங்கள் பேசப்பட்டுள்ளது.

‘திராவிட வேதம்’ என்றும் ‘வேதத்தின் சாரம்’ என்றும் போற்றப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்தளித்த வரலாறு எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இறைவனின் கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டு மெய்ஞ்ஞானத்தில் மூழ்கித் திளைத்த ஆழ்வார்களின் அனுபவ மொழிகளே திவ்யப்பிரபந்தப் பாசுரங்களாக மிளிர்ந்துள்ளன.

ஆழ்வார்கள் தம் பாசுரங்களின் வாயிலாக மானுட வாழ்வு துன்பம் நிறைந்தது என்பதையும், துன்பக் கடலிலிருந்து நீந்திக் கரை சேர்வதற்கு இறைவனின் திருவடிகளே பற்று என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளார். ஆழ்வார்கள் திருமால் நெறியை நாடெங்கும் பரப்பி வைணவ சமயம் மறுமலர்ச்சி பெறக் காரணமாய் இருந்துள்ளார் என்ற செய்தி அறியப்படுகின்றது.

இயல் – 3

திருத்தலப் பயணங்களும் ஆழ்வார் பாசுரங்களும்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தன் கடுமையான உழைப்பாலும் பண்பட்ட உள்ளத்தாலும் உலகப் புகழ்பெற்ற செந்தமிழைந் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயேயும் பரப்பித் தமிழ்மொழிக்கு நீங்காத பெருமையினைச் சேர்த்துய்யார். ‘எண்குணத்தானின்’ பெருமையினை அழகான தெள்ளுதமிழிலேயே ஆழ்வார்களின் பாசுரங்கள் வாயிலாக அழகாக எடுத்து இயம்பியுள்ளார். வைணவத் தத்துவங்களில் அனைவரையும் மூழ்கடிக்கச் செய்துள்ள திறன், எண்குணத்தான் மீது ஆசிரியர் கொண்டுள்ள பற்று நிலையைக் காட்டுகின்றது. ஆசிரியர் திருப்பதிகளின் சிறப்புகளையும் இறைவனின் அருட்திறத்தையும் எடுத்துரைக்கும் தன்மையையும், திருத்தலங்களின் மேன்மைகளையும் அவருடைய நூல்களின் வழியாக ஆராய்ந்து எடுத்துரைக்க இவ்வியல் முற்படுகின்றது.

‘திராவிட சிசு’ என்று ஆதிசங்கரரால் வழங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ‘ஒரு குறளாய் இருநில மூவடி மண் வேண்டி’ என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்பித்தார் என்ற நிகழ்ச்சியை பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் நூல் மூலம் அறிய வருகின்றது (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–1, ப.17).

திவ்ய தேசங்களும் பேராசிரியரின் பயண அனுபவங்களும்

1. திருச்சித்திர கூடத்துச் செங்கண்மால்

வடபாரதத்தில் 'பிரயாகை' யின் அருகில் இருந்ததே சித்திரக்கூடமலையாகும். வால்மீகி முனிவரின் ஆசிரமம் இங்குதான் இருந்தது. இராமாயணத்து இராமகாதை இந்தக் காலத்தில் தான் நடந்தது. இராமன் வனவாசத்தை மேற்கொண்டபோது ஒரு சில நாட்கள் இந்த சித்திரக் கூடத்தில்தான் தங்கியிருந்தார். பின்னர் வனவாசம் முடிந்து இராமனுக்குப் பட்டாபிஷேகம் முடிந்ததும் இராமன், இராமராஜ்ய பரிபாலனத்தின் உத்திரவின் பேரில் சீதை நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போது இலட்சுமணன் தன் அண்ணியைக் கொண்டு வந்து விட்டுச் சென்றதும் இதே சித்திரக் கூடத்தில் தான் என்று காப்பியம் குறிப்பிடுகின்றது.

இராமகாதையைக் கேட்டு மனம் ஒன்றியிருந்த நிலையில் இராம, இராவண போரில் இராமனுக்குத் துணையாகத் தாமும் போர்க்கோலம் பூண்டு தன்மை மறந்து போர்க்குப் புறப்பட்டவர் குலசேகர ஆழ்வார். இவர் இத்தலத்தில் செய்த மங்களாசாசனம் பாசுரங்கள் பதினொன்றிலும் தலப்பெருமாளான கோவிந்தராஜரை ஸ்ரீராமராகவே உருவாகம் செய்து இராமாயண காவியத்தைப் பாடியதோடு, மூலவரைக் கல்யாணராமனாகவே கண்டு பக்தியுடன் வழிபட்டார்.

இத்திருத்தலத்தில் கோவிந்தராஜ பெருமாள் சித்திரமாகக் கிடந்த கோலத்தைக் கண்டு மகிழ்ந்தார். இத்திருக்கோயிலில் மூலவராக இருக்கும் இவர் போக சயனமாக கிழக்கு முகமாக சேவை தந்தருளுகின்றார். பெருமாளின் சந்நிதி நடராஜப் பெருமாளின் சந்நிதிக்கு அடுத்துள்ளது. தாயார் புண்டரீகவல்லி ஆவார். தாயார் தனிக்கோயில் நாச்சியராகத் தனிச் சந்நிதி கொண்டுள்ளார்.

அதன் பின்னர் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்கன் நடராஜர் கோயிலை விரிவுபடுத்தும்போது போக சயனத்தில் இருந்த கோவிந்த ராஜரை அடியோடு பெயர்த்துக் கடலில் எறிந்துள்ளார்.

சைவம், வைணவம் ஆகிய இரு சமயத்து சமத்துவ நெறியை இத்தலம் உணர்த்துகிறது. அப்போதும் சைவ, வைணவ பூசல்கள் இருந்து வந்தன. பின் செஞ்சியை ஆண்டு வந்த கிருஷ்ணப்ப நாயக்கன் இக்கோயிலில் நடைபெற்ற சைவ–வைணப் பூசல்களைத் தீர்த்து வைத்துள்ளார் என்ற குறிப்புக் கிடைக்கின்றது. அம்பலத்தில் ஆடும் கூத்தனையும், அந்த ஆனந்த நடனத்தை போக சயனமாக கிடந்த கோலத்தில் சேவை தரும் கோவிந்தராஜரையும் ஒரே சந்நிதியில் கண்டு சேவித்திடும் வாய்ப்பு இத்தலத்தில் மட்டுமே கிடைக்கக்கூடிய பெருமையுடையது.

இக்கோயிலின் புஷ்கரணியை புண்டரீகப் புஷ்கரணி என்று அழைக்கின்றனர். இக்கோயிலின் விமானம் சாத்வீக அமைப்பைக் கொண்டதாகும். இச்சித்திரக் கூடத் தலம் சிதம்பரத்தில் உள்ளது. தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் ஆனந்தக் கூத்தனைச் சேவிப்பது போலவே கோவிந்தராசரையும் சேவிக்கின்றனர். இதனை,

"மூவாயிர நான்மறை யாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்

திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே" (பெரிய திரு., 3:2:8)

என்று திருமங்கையாழ்வாரும்,

"தில்லை நகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவா யிரவர் ஏத்த" (பெரு., திரு., 10:2)

என்று குலசேகரப் பெருமாளும் திருசித்திரக் கூடத்தைக் குறிப்பிடுவதாக ஆசிரியர் கூறுகின்றார்.

திருமங்கையாழ்வார் தம் பாசுரங்களில் 'வருகின்றான்' , 'வருவான்' என்று அருளிச் செய்திருப்பதால், அவர் இத்திருப் பதிக்கெழுந்தருளிய சமயம் பெருமாளுக்குத் திருவீதிப் புறப்பாடாக இருந்திருக்காலாமென்று சிலர் கருதுவதாக ஆசிரியர் கூற்று. இதனை நிலை நிறுத்த,

"கருமுகில் போல்வது ஓர் மேனி;
கையன ஆழியும் சங்கும்;
பெருவிறல் வானவர்சூடி, ஏழ் உலகும்
தொழுது ஏத்த
ஒருமகள் ஆயர் மடந்தை, ஒருத்தி
நிலமகள், மற்றைத்
திருமகளோடும் வருவான் – சித்திர
கூடத்து உள்ளானே" (பெரி., திரு., 3. 3:7)

என்ற பாசுரத்தைச் சான்றாகக் காட்டியுள்ளார் சுப்புரெட்டியார்.

திருமங்கையாழ்வார் தனது பத்து பாசுரங்களின் இறுதி அடியில் "திருச்சித்திரக்கூடம் சென்று சேர்மின்களே" என்று நம்மை ஆற்றுப்படுத்துகின்றார். பிரகலாதாழ்வான் பொருட்டு நரசிம்ம உருவத்துடன் தோன்றி அவன் தந்தை இரணியனை அழித்தவன் இத்தகைய எம்பெருமான் திருச்சித்திரகூடத்திலிருப்பவன் அவனைச் சென்று அடையுங்கள் என்று ஆழ்வார்கள் ஆற்படுத்துவதை ஆசிரியர் அழகுடன் எடுத்து இயம்பியுள்ளார்.

"அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே – கொடிதாய
குத்திர கூடங்கி கொளுந்தாமுண் கோவிந்தன்
சித்திர கூடம் கருதிச் செல்" (நூற்., திரு., அந்., 22)

என்ற திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரத்தையும் ஆசிரியர் உள்ளங்கரைய ஓதினார் என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

2. காழிச் சீராம விண்ணகரத் தாடாளன்

இத்தலம் ஸ்ரீஇராமன் அவதாரம் செய்த திரேதாயுகத்திலேயே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இச்சேத்திரம் 'உத்தம சேத்திரம்' என்று அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் உறையும் திருவிக்ரமன், தனது இடது காலைத் தூக்கி விண்ணை அளந்த நிலையில் சேவை சாதிக்கின்றார். இத்தலத்தில் உறையும் பெருமாளுக்குத் தாடாளன் என்பது திருநாமம். தனது தாளைக் கொண்டு விண்ணை அளந்த காரணத்தால் தாளாளன் என்று அழைக்கப்பட்டது.

நாளடைவில் தாளாளன் என்பது மருவி தாடாளன் என்று வழங்கலாயிற்று என்கிறார் ந.சுப்புரெட்டியார் (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–2, ப.65).

எம்பெருமான் திரிவிக்ரமனாக உலகளந்த கோலத்தில் காட்சி தருவதில் காழிச்சீராம விண்ணகரம் ஒன்று. பண்டைய சோழ நாட்டில் உள்ள இத்தலத்தில் திருவிக்கிரமன் இடது காலைத் தூக்கி விண்ணை அளக்கும் நிலையில், கையில் ஐந்து ஆயுதங்களை ஏந்திச் சேவை தருகின்றார். காழிச்சீராம விண்ணகரத்தின் திருவிக்ரம அவதார சேவை மிகவும் பெருமையுடன் பேசப்படுகிறது.

இத்திருக்கோயிலின் புஷ்கரணிகளாகச் சங்கபுஷ்கரணியும், சங்கதீர்த்தமும் விளங்குகின்றன. இக்கோயிலில் பத்துப் பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். இங்கு மணவாள மாமுனிகளும் மங்களாசாசனம் செய்துள்ளார்.

சீர்காழி என்று தற்போது அழைக்கப்படுவதே அன்று திருக்கழிச் சீராம விண்ணகரம் என்னும் தலமாக விளங்கி வந்தது. சென்னை–தஞ்சை இரயில் மார்க்கத்தில் சீர்காழி நிலையம் ஒருகே ஒரு கி.மீ. தூரத்தில் இந்த ஆலயம் உள்ளது. நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், ஐந்து பெரு வேள்விகள், ஏழு சுரங்கங்கள், வீதி நிறைந்த திருவிழா சிறப்புகள் ஆகியவற்றால் புகழ்பெற்றது இத்திருத்தலம்.

"ஒருகுறளா இருநில மூவடிமண், வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவெனா மாவளையைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணை வீர்" (பெரி., திரு., 3.4:1)

என்று இத் திருக்கோயிலின் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பற்றிய சிறப்பை திருமங்கையாழ்வார் தமது பாசுரத்தில் எடுத்து இயம்புகின்றார். இத்திருத்தலம் 'தாடாளன் சந்நிதி' என வழங்குதலும் உண்டு.

தனக்கு ஆயுள் மிகுதியுள்ளது என்று அகங்காரம் கொண்டிருந்த நான்முகனின் செருக்கை உரோமசன்மரைக் கொண்டு அடக்கியவன் எம்பெருமான் என்றும், சிவனின் சாபத்தைத் தீர்த்தவன் என்றும், அடுத்து கோலவராகாவதாரம் எடுத்து பூமிப் பிராட்டியாரை அண்ட பித்தியினின்றும் விடுவித்துத் தம் கோட்டு நுனியில் வைத்தருளிய கோமான் என்றும், வாணனுடைய ஆயிரம் தோள்களைத் தம் சூராழியினால் அறுத்தெறித்தவன் என்றும், அழகெலாம் திரண்டு திகழும் சத்தியபாமாவுக்காக உம்பருலகச் சோலையினின்றும் பாரிசாத மரத்தைப் பிடுங்கி வந்த பெம்மான் என்றும் இப்பெருமாளைப் போற்றுகின்றார் ந.சுப்புரெட்டியார் (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–2, ப.133).

இத்தகைய எம்பெருமான்தான் காழிச்சீராம விண்ணகரில் கோயில் கொண்டு தன் அடியவர்களுக்கு அருள்பாலிக்கக் காத்திருக்கின்றான். சென்று அவன் திருவடிகளைப் பரவுங்கள் என்று அழைக்கின்றார் நூலாசிரியர்

3. திரு இந்தளூர்

திவ்ய தேசங்களில் ஒன்றான தலைச்சங்க நாண் மதியத்தைப் போலவே, இத்தலத்தில் உறையும் பெருமானால் சந்திரன் சாபவிமோசனம் பெற்றதால் இத்தலம் என் பெயரிலேயே வழங்கப்பட வேண்டும் என்றும், பெருமானிடம் கூறி ஆசிபெற்றத்தின் விளைவாக இத்தலம் சந்திரனை நினைவுறுத்தும் வண்ணம் திருஇந்தளூர் என்றும் அழைக்கப்படுவதாகக் கூறுவர்.

கங்கையைத் தனது தலையில் சிவபெருமான் கொண்டுள்ளதைப் போன்று, காவிரியை தன் தலைமாட்டில் கொண்டுள்ளார் இத்தலத்துப் பெருமாள்.

திரு இந்தளூர் பெருமானை திருமங்கையாழ்வார் மட்டும் மங்களாசாசனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் தன்னுடன் முகம் கொடுத்துப் பேசும் பெருமாளிடம் உடனே முக்தி தருமாறும் மன்றாடுவார். அவ்வாறே இந்தளூர் பெருமாளிடம் முறையிட்டு வாதாடினார். அப்போது இறைவனின் திருமேனியைக் காட்டுமாறு தம்பாசுரத்தில் வலியுறுத்துகின்றார்.

"நும்மைத் தொழுதோம்; நூம் – தம் பணி செய்து
இருக்கும் நும் அடியோம்;
இம்மைக்கும் இன்பம் பெற்றோம்;
எந்தாய்! இந்தளூரீரே!
எம்மைக் கடிதாக் கருமம் அருளி, ஆ ஆ !
என்று இரங்கி,
நம்மை ஒருகால் காட்டி நடந்தால்,
நாங்கள் உய்யோமே ?" (பெரி., திரு., 1328)

என்றும்,

"மல்லை முந்நீர் அதர்பட, வரிவெம்
சிலை கால் வளைவித்து
கொல்லை விலங்கு பணிசெய்ய
கொடியோன் இலங்கை புகல் உற்று" (பெரி., திரு., 1701)

என்றும் கண்ணபுரத்து எம்பெருமானின் பெருமைகளை திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் கண்டு பேராசிரியர் உவகை கொள்கின்றார். கொடிய இராவணுடைய இலங்கையை அடையக் கருதி வளமான வழிவிடும் படியாக வரியுடைய வன்மையான வில்லை வளைத்தும் காடுகளில் மரங்கள் கடலில் அடர்த்தும் அடைத்தான் இராமன். அப்போது நீரின் திவலைகள் கிளர்ந்து வானை எட்டின. அக்கடலை அடைந்த பெருமான் உறையும் இடமாகும் திருகண்ணபுரம் என்று திருமங்கையாழ்வார் தனது பாசுரத்தில் ஓதியுள்ளார்.

இத்தலத்து எம்பெருமான் பெரிய பிராட்டியார், பூதேவி, கீரிடம் தரித்த ஆண்டாள் நாச்சியார் ஆகியோருடன் பத்மாவதி என்ற பெயரினைக் கொண்ட மீனவ குலத்தைச் சேர்ந்த தாயர்களுடன் நின்ற கோலத்தில் சேவை தந்தளுகின்றார்.

காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த மன்னனாக இருந்து, பிறகு கடுந்தவம் புரிந்து மகரிஷியாக மாறிய தண்டக முனிவருக்கு இத்தலத்து எம்பெருமான் பிரதியட்சமாகி அருள் பாவித்துள்ளார்

என்று திருக்கண்ணபுரத்து எம்பெருமானின் பெருமைகளை எண்ணி ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் மாளாது உவகை கொள்கின்றார்.

மேலும் திருவிந்தளூரில் வாழ்பவரே! உன்னைத் துணையாகப் பற்றினோம், இப்போது தொண்டு செய்து அடியாரானோம். எம் பொருட்டு விரைவாக அன்பினை அருளி, ஐயோ! ஐயோ! என்றிரங்கி நம்மைக் குறித்து ஒருகால் உன் திருமேனி காட்டினால் நாங்கள் உய்யமாட்டோமோ ? என்று கண்ணீர் மல்க ஓதுகின்றார். மேலும்

"முன்னை வண்ணம் பாலின் வண்ணம்;
முழுதும் நிலை நின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்;
வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம், மணியின் வண்ணம்;
புரையும் திருமேனி" (பெரி., திரு., 1335)

என்ற பாடலில் பெருமானின் சிறப்புகளுடன் தனக்கு உன்மேனியை காட்டு என்று முறையிடுகின்றார்.

4. திருக்கண்ணபுரம்

கண்ணபுரத்து எம்பெருமானைக் குலசேகரப் பெருமாள் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் போன்றவர்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

நீலமேகம் பெருமாளான இப்பெருமானுக்கு சௌரிராஜன் என்ற பெயருமுண்டு. இப்பெருமானின் பெருமைகளை திருமங்கையாழ்வார் உள்ளம் உருகிப் பாடுகின்றார்.

"தொண்டரும் அமரரும் முனிரும் தொழுது ஏழ
அண்டமொடு அகல் – இடம் அளந்தவர்; அமர்செய்து
விண்டவர் பட, மதிள் இலங்கை, முன், எரி எழுக்
கண்டவர் கணபுரம் – அடிகள் – தம் இடமே" (பெரி., திரு., 1712)

என்றவாறு அடியவர்களும், தேவர்களும், முனிவர்களும் பணிந்து உய்வும் படியாக மண்–விண் அடங்கலும் அளந்தவன். முன்பு பகைவர்கள் முடியுமாறு மதில் சூழ்ந்த இலங்கையில் நெருப்புக் கிளர்ந்து எரிக்கும்படி கருதிய பெருமான் உறையுமிடம் திருக்கண்ணபுரமாகும் என்கிறார் ஆசிரியர்.

"மல்லைமுந்நீர் அதர்பட, வரி வெம்
சிலை கால் வளைவித்து
கொல்லை விலங்கு பிணசெய்ய
கொடியோன் இலங்கை புகல் உற்று" (பெரி., திரு., 1701)

என்ற பாடலில் கண்ணபுரத்து எம்பெருமானின் பெருமைகளை திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் கண்டு பேராசிரியர் குறிப்பிட்டு மகிழ்கின்றார்.

காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த மன்னனாக இருந்து பிறகு தடுந்தவம் புரிந்து மகரிஷியாக மாறிய தண்டக முனிவருக்கு இத்தலத்து எம்பெருமான் பிரதியட்சமாகி எண்ணி ஆசிரியர்

குறிப்பிடுகின்றார். நம்மாழ்வார் திருக்கண்ணபுரம் சேருமாறு பிறருக்கு தம் பாசுரங்கள் வாயிலாக உபதேசம் செய்கின்றார்.

"சரணம் ஆகும் தன தாள்
அடைந்தார்க்கு எல்லாம்,
மரணம் ஆனால் வைகுந்தம்
கொடுக்கும் பிரான்,
அரண் அமைந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன், தனது அன்பர்க்கு
அன்பு ஆகுமே" (திருவாய் மொழி, 3884)

என்றவாறு பகவான் தன் திருவடிகளை அடைந்தவர்களைக் காப்பாற்றுகிறான். ஒருவன் உயிர்நீங்குகின்ற மரணகாலத்தில் அவனுக்குப் பொன்னுலகைப் பகவான் தருகின்றான். திருக்கண்ணபுரம் தேயத்தில் எழுந்தருளியுள்ள அவன் எல்லாரையும் ஆள்கின்றவன். அவன் அன்பின் வடிவமாக அடியார்களிடத்து அன்பு காட்டுகின்றான் என்று நம்மாழ்வார் சரணாகதி அடைவோருக்கு இறைவன் எவ்விதம் அன்பு காட்டுவார் என்று தம் திருப்பாசுரத்தில் சுட்டிக்காட்டுவதை ந.சுப்புரரெட்டியார் மேற்கோள் காட்டுகின்றார்.

5. திருத்தலச் சங்க நாண்மதியம்

'தலைச்சங்க நாடு' எனத் தற்போது அழைக்கப்படுவதுதான் 'திருத்தலைச் சங்க நாண் மதியம்' என முதலில் அழைக்கப்பட்டு வந்தது. பூம்புகாரில் இருந்து கொண்டு வரப்பட்ட தலைசிறந்த சங்குகள் இத்தலத்தில் விற்பனை செய்யப்பட்டதால் தலைச்சங்கம் என்ற பெயரும், பூவரச மரங்கள் நிறைந்து இருந்த காரணத்தால் 'காடு' என்றும் இந்த இரு பெயர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து 'தலைச் சங்காடு' என்ற பெயர் வழங்கலாயிற்று.

இத்தலத்து மூலவர் சந்திரனது சாபந்தீர்ந்தமையால் 'சந்திர சாபஹரர்' என்ற திருப்பெயராலும் வழங்கப் பெறுகின்றார். இக்கோயிலில் தாயாருக்கு தனி சந்நிதி இல்லை. இத்திருக் கோயிலின் புஷ்கரணி சந்திர புஷ்கரணி ஆகும். இத்திருத்தலத்து எம்பெருமானை 'திருமங்கையாழ்வார்' ஒரே ஒரு பாசுரத்தில் பாடியுள்ளார்.

"கண் ஆர் கண்ணபுரம், கடிகை, கடி கமழும்
தண் ஆர் தாமரை சூழ் தலைச் சங்க மேல் திசையுள்!
விண்ணோர் நாள்மதைய; விரிகின்ற வெம் சுடரை—
கண் ஆரக் கண்டுகொண்டு, களிக்கின்றது
இங்கு என்று கொலோ ?" (பெரிய திருமொழி, 1736)

என்றவாறு கண் நிறைந்த திருக்கண்ணபுரம், திருக்கடிகை, மனம் மிகுந்து குளிர்ந்த தாமரைகள் சூழும் தலைச் சங்காட்டில் மேற்குத் திசையில் வானவர்களுக்கு முழுமதியாய், உதிக்கின்ற செங் கதிராய் இருக்கும் எம் பெருமானை இவ் இடத்தில் கண்கள் முற்றூட்டாகக் களிப்பது எப்போதோ! என்று பெருமாளின் சிறப்புக்களில் உள்ளம் திளைத்து அவரின் தரிசனம் காண ஏங்குகின்றார் திருமங்கையாழ்வார்.

மேலும் பெரிய திருமடலில்,

“மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை
நல் நீர் தலைச்சங்க நாள் மதியை
நான் வணங்கும்” (பெரி.திருமடல், 2783)

என்ற பாடலில் திருநாங்கூரில் மணிமாடக் கோயில் எனக்கு மணாளனை, நீர் நிலைகள் சூழும் திருத்தலைச் சங்காட்டு அழகன் எனக்கு திருவருளையும் தன் திருமார்பையும் காண்பித்து அருள் புரிய வேண்டும் என்று உள்ளம் உருகுகின்றார்.

6. திருச்சிறுபுலியூர் அருமா கடலமுதன்

வியாக்கிரபாதரிஷி வைகுந்த பதவி அடைய வேண்டுமென சிவபெருமான் சலசயனப் பெருமாளை நோக்கித் தவம் செய்ய வேண்டும் என ஆணையிட்டார். பாதரிஷியும் தன் கைவிரல், நகக்கண்கள், கைகள், கால்கள் புலியைப் போன்றிருக்க வேண்டிக் கொண்டார். இதனால் புலிவடிவம் கலந்து உருவெடுத்த பாதரிஷி, தவம் புரிந்து எம்பெருமானின் சல சயனக் கோலத்தைக் கண்டு மிகழ்ந்தார். இதன் காரணமாய்த்தான் இத்தலத்திற்குச் சிறுபுலியூர் என்ற பெயர் ஏற்பட்டது. அதுவே மரப்புபடி, திருச்சிறுபுலியூர் எனப் பெயர் பெற்றது.

இத்தலத்தில் உள்ள எம்பெருமான் மிகச்சிறிய உருவம் கொண்டவர் என்பதை அறிந்த திருமங்கையாழ்வார் மிகவும் மனம் வருந்தினார். ஆழ்வாரின் மனவருத்தத்தை உணர்ந்த பெருமாள் உம் மனக்குறை தீர்ந்திட எம் விஸ்பரூப சேவையைத் திருக்கண்ண மங்கையில் காண்பாயாக என்று உரைத்தருளினார்.

“முழுநீலமும், மலர் ஆம்பலும்;
அரவிந்தமும் விரவிக்
கழிநீரோடு மடவார், அவர் கண், வாய்
முகம் மலரும்
செழு நீர் வயல் தழுவும் சிறு
புலியூர்ச் சலசயனம்
தொழும் நீர்மை – அது உடையர் அடி
தொழுவார் துயர் இலரே” (பெரி., திரு., 1633)

என்ற பாசுரத்தில், கருநெய்தலும், அரக்காம்பலும், தாமரையும், செங்கழு நீரும் அங்குள்ள பெண்களின் கண், உதடு, முகம் போலவும் விளங்கும். நீர் வயல்கள், சூழும் சிறுபுலியூரில் சலசயன எம்பெருமானைத் தொழுவதையே இயல்பாக உள்ளவர்கள் பெருமானின் திருவடிகளையே பற்றுவர் துன்பம் எப்போதும் அடையவே அடையார் என்ற பாடலின் மூலம் பெருமானின் திருவடிகளை பற்றுமாறு நம்மை ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார்.

7. அணி அழுந்தூர் நின்ற அஞ்சனக் குன்றம் (திருவழுந்தூர்)

வானத்தில் ஓடிய தேரானது பூமியில் வீழ்ந்து அழுந்தியதால் தேரழுந்தூர் ஆனது. அதுவே திருவழுந்தூர் ஆனது. அதன் பின்னர் இத்தலம் பெயர் மருவி தேரெழுந்தூர் என்று

அழைக்கப்பட்டு வருகிறது. இத்தலத்து மூலவரான தேவாதி ராஜன் நின்ற கோலத்தில் கிழக்கு முகம் நோக்கி சேவை தருகின்றார். இத்தலத்துத் தாயார் செங்கமல வல்லித் தாயார் ஆவார். உற்சவமூர்த்தி ஆமருவியப்பன். உற்சவரான ஆமருவியப்பன் பெயருக்கேற்றபடி பசுவின் கன்றுடன் தம் இரு பிராட்டியார்களுடன் சேவை தருகின்றார்.

திருவழுந்தூர் என்ற திவ்விய தேசத்தையும் அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அஞ்சனக் குன்றத்தையும் திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டிலுமே தம் திருப்பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

“குன்றால் மாரி தடுத்தவனை,
குல வேழம் அன்று
பொன்றாமை, அதனுக்கு அருள் செய்த
போர் ஏற்றை,
அன்று ஆவின் நறுநெய் அமர்ந்து உண்ட
அணி அழுந்தூர்
நின்றானை – அடியேன் கண்டு
கொண்டு, நிறைந்தேனே” (பெரி., திரு., 1601)

என்ற பாசுரத்தில் மலையை ஏந்திக் கலைமழையைத் தடுத்தவனைச் சிறந்த கசேந்திராழ்வான் அழியாதவாறு அருள் செய்தவனை போர் செருக்குடையவனை, வெண்ணெய் நெய்யை உகந்து அமுது செய்தவனை, அழகிய திருவழுந்தூரில் இருப்பவனை அடியேன் கண்டு அகமகிழ்வு பெற்றேன் என்று கூறுகின்றார்.

“திரு வாழ் மார்வன் – தன்னைத் திசை,
மண், நீர், எரி, முதலா
உரு ஆய் நின்றவனை, ஒலி
சேரும் மாருதத்தை;
அரு ஆய் நின்றவனை; தென்
அழுந்தையில் மன்னி நின்ற
கரு ஆர் கற்பகத்தை – கண்டு
கொண்டு களித்தேனே” (பெரி., திரு., 1604)

என்ற பாசுரத்தில், திருமகள் மார்புடையவனை, திசைகள், மண், நீர், தீ, காற்று இவற்றின் உருப் பெற்றவனை, ஒலி வாய்ந்த காற்று முதலான ஐந்து பூதங்களுக்கும் உள்ளுயிராய் இருப்பவனை, அழகிய திருவழுந்தூரில் எழுந்தவனை எல்லாம் தரும் கற்பகம் போன்றவனை நான் கண்டு களித்தேன் என்று எம் பெருமானின் சிறப்புகளை திருமங்கையாழ்வார் ஓதுகின்றார்.

கண்ணனைக் கடவுளாகக் கொண்ட இத்தலத்தில்தான் கம்பர் பிறந்தார். ஸ்ரீராமரின் காதையான இராமாயணத்தை கம்பர் எழுதினார். கோயிலுக்கு தென்மேற்கில் சற்று தொலைவில் கம்பர் வாழ்ந்த கம்பன் மேடு உள்ளது.

8. திருவெள்ளக் குளத்து அண்ணன்

பன்னிரு ஆழ்வார்களில் இரண்டு திவ்ய தேசங்களின் உள்ள பெருமாள்களைத்தான் திருமங்கையாழ்வார் அண்ணன் என்று அழைத்துப் பாடியுள்ளார். ஒன்று திருப்பதியில் உள்ள பெருமாளை இவர், 'அண்ணா' என்று அழைத்து பாடியுள்ளார். அந்தத் தலத்திற்கு முன்பாகவே இந்த ஆலயத்தில் உள்ள பெருமானை திருமங்கையாழ்வார் அண்ணன் என்று அழைத்துள்ளார். அதன் காரணமாக இங்குள்ள பெருமாள் ஏழுமலையானுக்கு அண்ணனாகி விடுகின்றார். எனவே தான் இங்குள்ள ஸ்ரீனிவாச பெருமாளின் திருநாமம் அண்ணன் பெருமாள் என்று போற்றப்படுகிறது. அவரின் திருத்தலம் அமைந்த இடம் என்பதால் இந்த ஊரின் பெயர் அண்ணன் கோயில் என்று அழைக்கப் படுகிறது.

வடநாட்டுத் திருப்பதிகளில் திருவேங்கடத்திற்கு எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சோழ நாட்டுத் திருப்பதிகளில் இத்திருவெள்ளக் குளத்திற்கு உண்டு என்பதை ஆசிரியர் திருமங்கையாழ்வார் பாடலில் மூலம் உணர்த்துகின்றார். இவர் ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் "துன்பங்களை களைவாயோ" என்று ஓதுகின்றார். ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் திருமங்கையாழ்வார் பாடலின் வாயிலாக பெருமானின் சிறப்புக்களை எண்ணி வியக்கின்றார்.

"கண் ஆர் கடல்போல் திருமேனி கரியாய்;
நண்ணார் முனை வென்றி கொள்வார்
மன்னும் நாங்கூர்த்
திண் ஆர் மதிள் சூர் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா! அடியேன் இடரைக் களையாமே" (பெரி., திரு., 1308, ப.403)

என்றவாறு, கடல்போல் கறுத்த கண்ணுக்கு இனிய திருமேனியனே! பகைவர் போர்க்களத்தில் வெற்றி கொள்ள வல்லவர் வாழ்கின்றதும், திண்ணிய மதில்கள் சூழ்ந்த திருநாங்கூர்த் திருவெள்ளக் குளத்தில் வாழ் அண்ணலே! அடியேன் துயரங்களைக் களைவாய்! என்று துயரைக் களையுமாறு மனம் உருகுகின்றார் திருமங்கையாழ்வார் என்று ஆசிரியர் வாயிலாக அறிய முடிகின்றது.

இவற்றை எல்லாம் சிந்திந்த வண்ணம் ஆசிரியர் இத்திருக்கோயிலை அடைந்து திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் சந்நிதியில் மிடற்றொலி கொண்டு ஓதி உள்ளங் கரைகின்றார்.

எம்பெருமானின் திருநாமங்கள் கண்ணன், நாராயணன். தாயார் பூவார் திருமகள். நாச்சியார் கிழக்கே திருமுக மண்டபம் கொண்டு நின்று திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். இத்தலத்தில் ஆசிரியருக்கு திருவேங்கடமுடையானைச் சேவிப்பது போன்ற அநுபவம் ஏற்படுகின்றது என்று அவர் மனத்து உணர்வை வெளிப்படுத்துகின்றார். இத்தலம் திருநாங்கூர்த் திருப்பதிகளில் பத்தாவது ஆகும். சீகாழி இருப்பூர்த்தி நிலையத்திலிருந்து தென்கிழக்கில் சுமார் பத்துக் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஆசிரியர் ஒவ்வொரு திருத்தலத்திற்கு உரிய வழிமுறைகளைக் கூறிக் கொண்டே அத்தலத்திற்குச் சென்று தரிசிக்குமாறு ஆற்றுப்படுத்துகின்றார்.

9. திருநாங்கூர் புருடோத்தமன்

இத்திருத்தலம் அண்ணன் கோயிலிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், சீகாழி இருப்பூர்தி நிலையத்தினின்றும், தென்கிழக்குத் திசையில் சுமார் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. திருநாங்கூரின் வளத்தைப் பற்றிக் கூறுமிடத்தில் தில்லை மூவாயிரம் நாங்கை நாலாயிரம் என்ற வழக்கு உண்டல்லவா! தில்லையில் மூவாயிர தீட்சிதர்கள் இன்று இராவிடினும் தீட்சிதர்கள் கூட்டம் இருக்கின்றது. நாங்கையில் நாலாயிரம் வைணவர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனா இன்று அத்திபூத்த மாதிரி ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்கள் உள்ளன. அவர்களும் வறுமையில் வாடிமிகவும் மெலிந்துள்ளனர் என்பது ஆசிரியரின் கூற்று (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–2, ப.121).

அருள் என்னும் கொடையைத் தனது அடியார்களுக்கு வாரி வாரி வழங்குவதால் இத்தலம் திருவண் புருடோத்தமம் என்ற பெயர் பெற்றது. அயோத்தியில் உறையும் புருஷோத்மரே ஸ்ரீ ராமன் என்ற பெயரில் உறைவதால் இத்தலத்திற்கு வண்புருடோத்தமம் என்ற காரணப் பெயர் உண்டாயிற்று.

“கம்ப மா கடல் அடைத்து, இலங்கைக்கு மன்
கதிர்முடி – அவை பத்தும்
அம்பினால் அறுத்து, அரசு அவன் தம்பிக்கு
அளித்தவன் உறை கோயில்
செம் பலா நிரை, சென்பகம், மாதவி,
சூதகம் வாழைகள் சூழ்
வம்பும் உலா கமுகு ஓங்கிய
நாங்கூர் – வண்புருடோத்தமே” **(பெரி., திரு., 1258, ப.389)**

என்றவாறு நடுக்கம் தரும் அலைகடலில் அணையைக் கட்டி, இலங்கை இராவணின் ஒளிவிடுகின்ற பத்துத் தலைகளையும் அம்பாலே அறுத்து, அவன் தம்பி விபீடணுக்கு அவ் அரசை அளித்த இராமன் வாழுமிடம், பலா, செண்பகம், குருக்கத்தி, வாழை மரங்களும் சூழ்ந்துள்ள மணம் வீசுகின்ற கமுக மரங்கள் உயர்ந்திருப்பதாய நாங்கூர் வண்புருடோத்தமம்.

சக்கரத்தில் ஆவேசித்துத் தன்னைக் கொல்லக் காத்திருந்த சகடாசுரனை அச்சுக்கரத்தை உந்தித் தள்ளி வானுலகிற்கு அனுப்பிய கோமான். பாணாசுரனுக்குத் துணையாக வந்த உருத்திரனை அவன் சேனைகளோடு சுற்றத்தாரோடும் தோற்றோடச் செய்து வாணனின் ஆயிரந்தோள்களையும் துணித்தொழித்த பெருமான். இங்ஙனம் வண்புருடோத்தமனின் சிறப்புகளை ஆழ்வார் அநுபவித்த நிலையை ஆசிரியர் நாமும் அனுபவிக்குமாறு எடுத்து இயம்புகின்றார்.

இங்குள்ள புருடோத்தமன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். தாயாரின் திருநாமம் புருடோத்தம நாயகி. ஆசிரியர் ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உள்ளங்கரைகின்றார். நம்மையும் அப்பாசுரங்களில் மனத்தை ஈடுபடச் செய்கின்றார்.

10. நாங்கூர் வைகுந்த நாதன் (வைகுந்த விண்ணகரம்)

டாக்டர் ந.சுப்புரெட்டியார் வைகுந்த விண்ணகரத்திற்கு வந்ததும் வைகுந்தமாகிய பரமபரத்தின் நினைவும், வைகுந்தத்தில் இருப்பது போன்ற எண்ணங்களும் அலைமோதுகின்றவனாம். இத்திருத்தலம் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. எம்பெருமான் வைகுந்தல் எழுந்தருளியிருப்பது போலவே இத்திருத்தலத்திலும் வீற்றிருந்த திருக்கோலமாகச் சேவை சாதித்தலால் இத்திருத்தலம் வைகுந்த விண்ணகர என்ற திருநாமம் பெற்றது என்று அறிகின்றோம்.

இத்திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் மட்டிலும் ஒரே ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார். இந்தப் பாசுரங்களில் ஆசிரியர் ஆழங்கால்படுகின்றார். ஒவ்வொரு பாசுரத்தின் பிற்பகுதியில் தலவருணனை அமைகின்றது.

“சலங்கொண்ட இரணியனது அகல் மார்வம்
கீண்டு; தடங்கடலைக் கடைந்து அமுதம்
கொண்டு உகந்த காளை,
நலம்கொண்ட கரு முகில்போல் திருமேனி
அம்மான் நாள்தோறும் மகிழ்ந்து, இனிது
மருவி, உறை கோயில்
சலம்கொண்டு மலர் சொரியும் மல்லிகை, ஒண்
செருந்தி, செண்பகங்கள் மணம் நாறும்
வண் பொழிலினூடே,
வலம்கொண்டு கயல் ஓடி விளையாடும்
நாங்கூர் வைகுந்த விண்ணகரம்
வணங்கு மட நெஞ்சமே” (பெரி., திரு., 1228, ப.379)

என்றவாறு, அமிழ்தம் எடுத்து மகிழ்ந்த காளை போன்றவன், கரிய முகிலைப் போன்ற திருமேனியன், என் தந்தை மகிழ்ந்து இருக்கும் இடம்; நீர் கொண்டு மல்லிகை, செருந்தி, சண்பகம் மணம் வீசும் பொழில்களின் ஊடே கயல் மீன்கள் வல இடமாக ஓடி விளையாடித் திளைக்கும் நாங்கூர் வைகுந்த விண்ணகரம் ஆகும். நெஞ்சமே! அங்குச் சென்று வணங்குவாய். இவ்வாறு ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியில் தலவருணனை அமைந்து எம்பெருமானை வணங்குமாறு நெஞ்சை ஆற்றுப்படுத்துகின்றார்.

இங்குக் கோயில் கொண்டிருக்கும் எம் பெருமானின் பெருமை பேசப் பெறுகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தீமனத்தையுடைய இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்மன்; தடங்கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்த காளை; முகில் வண்ணன். உலகமெல்லாம் பிரளயப் பெருங்கடலில் மூழ்கி அழிந்து போகாமல் அவை யாவற்றையும் தம் திருவயிற்றில் அடக்கிக் காத்தருளியவன். அழகிய பெண் உருவங்கொண்டு நஞ்சு தீட்டிய முலையுடன் வந்த பூதனை பேய் வடிவத்துடன் மாயும்படியாக அவளது உயிரை உண்டவன். இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன். சுகடா சூரனைச் சாடியவன், வானவர்களும், மாமுனிவர்களும் ஒருங்குகூடி சிறந்த மலர்களைக் கொண்டு அருச்சிக்கப் பெற்ற எம்பெருமான். சங்கம், தண்டு,

சக்கரம் முதலிய திவ்யாயுதங்களை ஏந்திய தாமரைக் கண் நெடிய பிரான் அமர்ந்த நிலையில் காட்சி தருபவன்.

இவ்வாறு சிறப்புடைய வைகுந்தநாதனுக்குத் தாமரைக்கண் நெடிய பிரான் என்ற மற்றொரு திருநாமமும் உண்டு. தாயாரின் திருநாமம் வைகுந்தவல்லி என்பதாகும். இங்ஙனம் எம்பெருமானின் சிறப்புகளை திருமங்கையாழ்வாரின் பாசுரங்களின் வாயிலாக நினைத்து அப்பாசுரங்களை ஓதி மகிழ்கின்றார் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார்.

11. நாங்கூர் நந்தா விளக்கு (திருமணி மாடக்கோயில்)

இத்தலம் மணிமாடக் கோயில் அமைப்பில் இருப்பதால் மணிமாடக்கோயில் என்ற பெயர் பெற்றது. ஸ்ரீமன் நாராயணன் சிவபெருமானுக்கு நேரில் காட்சி தந்து பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கினார் என்பது ஐதீகம். எம்பெருமான் பிரணவ ஞான ஒளியாக அணையாத நந்தா விளக்காக இத்தலத்தில் நாராயணன் என்ற பெயரில் உள்ளார்.

திருமங்கையாழ்வார் எம்பெருமான் பெருமையால் ஆழங்கால்படுவதை ந.சுப்புரெட்டியார் நினைத்து "மணிமாடக்கோயில் வணங்கு என் மனனே" என்று ஆழ்வாரைப் பின்பற்றி ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக நம் மனத்தை ஆற்றுப்படுத்துகின்றார். இத்தலத்து எம்பெருமானை 'நந்தாவிளக்கே' என்று குறிப்பிட்டமையால் எம்பெருமானின் திருநாமமும், நந்தா விளக்கு என்று வழங்கலாயிற்று. "சுயம்பிரகாசமான ஞானத்தை ஸ்வரூபமாக உடையவனே!" என்பது இதன் பொருளாகும்.

இத்திருக்கோயிலில் சந்நிதி பண்ணியிருப்பவன் ஆதிமூலமே என்று கூவி அழைத்த முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடின கசேந்திரன் என்ற யானையின் துயர் துடைத்தவன். யானையின் துயர் தீர்த்த எம்பெருமானுக்கு அடியவர்களின் விரோதிகளைக் களைந்தொழிந்தால் அம்மகிழ்ச்சிக்கும் போக்குவீடாகப் பெரிய பிராட்டி வெகுமானம் பண்ணுகின்றாள். முன்னொரு காலத்தில் கருடப் பறவையின் மீது ஏறிக்கொண்டு எழுந்தருளி மாலி, சுமாலி முதலிய அரக்கர்கள் எட்டுத்திசைகளிலும் சிதறியோடவும் பலர் மாண்டொழியவும், கடல்கீழே இலங்கையை அழித்த பெருமான் போன்ற செய்திகளைப் பாசுரங்கள் காட்டுகின்றன.

யமுனையின் ஒரு மடுவிலிருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் நச்சுத் தீயால் கொதிப்பித்துக் கொடுமை புரிந்து வந்த காளியன் என்ற நாகத்தின் கொழுப்பை அடக்கி அதன் தலைமேல் நாட்டியமாடிய பெருமான். சுடர் ஆழியையும் ஒண்சங்கையும் தாங்கி நிற்பவன் என்ற சிறப்புகளைப் பெற்ற நந்தா விளக்கு பெருமாள் என்ற சிறப்புப் பெயர் திருமங்கையாழ்வாரால் சூட்ட பெற்றதாகும். தாயாரின் திருநாம் புண்டரீகவல்லி. இக்கோயிலின் உற்சவர் குள்ளமாயும் மிக அமைதியான தோற்றத்துடன் இருக்கின்றார்.

அழகிய மாடமாளிகை வீடுகள் நிறைந்த தலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் காரணம் பற்றி இத்தலத்திற்கு, 'திருமணி மாடக்கோயில்' என்ற பெயர் ஏற்பட்டது. ஆண்டுதோறும் தை அமாவாசையன்று நாங்கூரைச் சேர்ந்த பதினொரு திருக்கோயில் எம்பெருமான்களும் தங்கக் கருட வாகனங்கள் மீது காலையில் எழுந்தருளி மாலை வரையிலும் இத்திருத்தலத்தில் தங்குவார்கள். இதற்கென இத்திருக்கோயிலில் வரிசையாகத் தனித்தனி மண்டபங்கள் உள்ளன.

எல்லோரும் இரவில் கருடசேவை தருகின்றனர். திருமங்கையாழ்வார் அன்னவாகனத்தின் மீது எழுந்தருளுவார். இவ்வாறு திருக்கோயிலின் பெருமையையும் ஆசிரியர் இயம்புகின்றார்.

12. திருத்தெற்றியம் பலத்துச் செங்கண்மால்

இத்திருத்தலம் சீகாழி இருப்பூர்தி நிலையத்தினின்றும் கீழ்த்திசையில் சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்திருத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். எம்பெருமானிடம் ஆழ்வார் எவ்வாறெல்லாம் ஆழங்கால் படுகின்றார் என்பதை ஆசிரியர் பெருமானின் சிறப்புரை வாயிலாக அறியமுடிகின்றது.

முன்னொருகால் நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் புரிவதற்குக் கன்யாசுல்கமாக வைக்கப் பெற்றிருந்த ஏழு காளைகளை அடக்கி அப்பிராட்டியை மணம் புரிந்தவன். இராமன் என்ற ஒரு சிறு பயல் பூமியை எல்லாம் ஆள்பவனாக நினைத்து அகங்காரப்படுகின்றான். அதை அறிந்தும் அவனைத் தண்டியாமல் பொறுத்திருப்பவன் அரக்கர்கட்குத் தலைவனாவனோ! என்று கிளர்ந்தெழுந்த இராவணனது மலைபோன்ற இருபது தலைகளையும் ஒரே சமயத்தில் அறுத்தொழித்த தனி வீரன் மாணி நிலைக்கு உரிய கோலத்துடன் வாமன உருவங்கொண்டு மாவலியின் யாகபூமிக்குச் சென்று பூமிதானம் பெற்ற பெருமான்.

"சிலம்பின் இடைச்சிறு பரல்போல், பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்ப, திரு ஆகாரம்
குலுங்க, நில–மடந்தை–தனை இடந்து புல்கிக்
கோட்டிடை வைத்தருளிய
எம் கோமான் கண்டீர்!
இலங்கிய நால் மறை அனைத்தும், அங்கும் ஆறும்,
ஏழ் இசையும், கேள்விகளும்
எண் திக்கு எங்கும்
சிலம்பிய நல் பெருஞ் செல்வம் திகழும்
நாங்கூர்த் திருத்தெற்றியம்பலத்து என்
செங்கண் மாலே" **(பெரி., திரு., 4.4:8)**

என்ற பாசுரத்தில், காலில் பூண்ட சிலம்புகளிலிட்ட சிறிய பருக்கை போல் பெரிய மேருமலையான பெருமான் குளம்பிலே ஒலி செய்ய, திருமார்பில் பிராட்டி அமருமிடம் குலுங்க, நிலத்தைக் குத்தியெடுத்தி நிலமகளைத் தழுவித் தன் தந்தத்தின் மேல் வைத்துக் கொண்ட வராகப் பெருமான் தான், நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், ஏழிசைகள் மலியப் பெறுவதால் எட்டுத் திசைகளிலும் ஒலிக்கும் அளவற்ற செல்வம் விளங்கும் திருநாங்கூர்த் திருத்தெற்றியம்பலத்துச் செங்கண்மால் இங்க அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருப்பவன் என்று ஆழ்வார் பாடுவதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆழ்வார் பாசுரங்கள் பத்தையும் அவன் சந்நிதியில் பாடிச் சேவித்து மனம் உருகி நம்மையும் அவனிடத்தில் சேருமாறு உள்ளம் கரைகின்றார். இத்தலத்தில் உள்ள எம்பெருமான் தன்னிடம்

உள்ள சிவ அம்சங்களை ஆடும் அம்பலமாக்கி, அசையாலிங்கம் போல் தானும் அசையாமல் பள்ளிகொண்டுள்ளான் என்ற செய்தி அறியலாகின்றது.

13. செம்பொன் செய்கோயில் பேரருளாளன்

எம்பெருமானது பெருமையை சௌலப்பியம், சௌசீல்யம், வாத்சல்யம், சுவாமித்தவம் முதலிய அளவற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டு அறியப்பெறும்.

இவற்றுள் சௌலப்பியம் என்பது, எளியனாயிருக்கும் இருப்பு, சௌசீல்யம் என்பது உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கை. வாத்சல்யம் என்பது கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. சுவாமித்துவம் என்பது உடையனாயிருக்கும் இருப்பு. இப்படிச் சிறப்பு வாய்ந்த செம்பொன் செய்கோயில் பேரருளாளன் சந்நிதி சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கீழ்திசையில் சுமார் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இத்திருப்பதியை மங்களா சாசனம் செய்துள்ள திருமங்கையாழ்வார் பாசுரங்களிலும் 'நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய் கோயில்'' என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார்.

இத்திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார், "பேரருளாளன்" என்று திருநாமம் சூட்டுகின்றார். இங்கு எழுந்தருளியிருக்கும் பிறப்பலிப் பல்பிறவி எம்பெருமான் மூப்பின்றி என்றும் இளையவனாயிருப்பவன். எக்காலத்தும் நிலை பெற்றிருப்பவன் ஏழிசைகளிலும் உண்டாகும் சுவையே வடிவு கொண்டாற் போன்றவன். மறைகளில் கூறப்பெறுபவன் தேவாதி தேவன். பஞ்ச பூதங்கள். இருசுடன், பூமியிலுள்ள உயிர்கள், உயிரற்ற பொருள்கள் இவற்றிற்கு அந்தர்யாமியாயிருப்பவன். கடல் நிறவண்ணன் சாதுக்களை நலியும் அரக்கர்களை அழிப்பதற்காகத் தாய்போல் கருணை காட்டும் சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்தவன். திருவேங்கட மலையில் சேவை சாதிக்கும் வேங்கட கிருஷ்ணன். இத்தகைய எம்பெருமானை வணங்கி "அல்லல் தீர்ந்தேன்" என்கின்றார் ஆழ்வார்.

காஞ்சிபுரத்தில் வாழ்ந்த காஸ்யபன் என்ற அந்தணரின் மூத்த புதல்வன் முகுந்தன் என்பவன் தனது குடும்ப வறுமையைப் போக்கிட இத்தலத்திற்கு வந்தான். எம்பெருமானால் உபதேசிக்கப்பட்ட அட்சரத்தை மூன்றே நாட்களில் முப்பத்திரண்டாயிரும் முறை உருச் செய்தான். அதன்பேரில் எம்பெருமான் பேரருளினால் அளவற்ற செல்வத்தைப் பெற்றுச் சென்றான் என்ற சிறப்பும் இத்திருத்தலத்திற்கு உண்டு.

14. நாங்கூர் குடமாடும் கூத்தன் (அரிய மேய விண்ணகரம்)

'அரி' என்ற சொல்லுக்குப் பாவங்களைப் போக்குபவன் என்பது அர்த்தம். இத்தலத்தில் உறையும் (குடமாடு கூத்தன்) இத்தலத்தை விரும்பி ஏற்றதால், அரிய மேய விண்ணகரம் எனப் பெயர் பெற்றது. உதங்க முனிவர் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இத்தலத்து எம்பெருமாள் கோபாலகிருஷ்ணனாகச் சேவை புரிகிறார்.

கண்ணன் மிக விரும்பிய கூத்துகளில் ஒன்றான 'குடமாடு கூத்தினை' மையமாகக் கொண்டு இப்பெருமானுக்கு 'குடமாடு கூத்தன்' என்ற திருநாமம் ஏற்பட்டது. இத்திருப்பதி

திருமணி மாடக் கோயிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இத்திருத் தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் ஒருவரே மங்களா சாசனம் செய்துள்ளார்.

மலர்மகளும், மண்மகளும் இருபுறமும் இணைந்திருக்க பெருமான் அங்கிருக்கின்றான். அடியவர்கள் கொடிய பாவங்கள் ஓடிப்போக, ஏழுலகங்களிலுமுள்ளவர் பற்றி வணங்க, தேவர்களும் பொருந்தி துதி செய்யும், இவ் இட அந்தணர் வாழும் இடம். வெற்றி கொள்ளு நரகாசுரன் திறல் அழிய வீறுடைய ஆழியை ஏந்தி, தேவர்கட்கு மலையை மத்தாக்கிக் கடலைக் கடைந்து அமுதத்தை வழங்கியவன். சிறந்த மணி போன்றவன் ஆரா அமுதன். தேவர்கள், ஏழுலகங்கள், ஏழு கடல்கள் உண்டவன். இடையர் கண்டு மகிழப் பெருத்த மந்தகமும் மதமும் உடைய யானையின் கொம்பை முறித்துக் கஞ்சனை அழித்தவன். பிரகலாதனைக் காக்க நரமடங்கல் வடிவைக் கொண்டு, இரணியனை இரு பிளவாகப் பிளந்து, அவன் மகனுக்கு அருள் செய்தவன். வாள் விழியும், மலர்க் கூந்தலும் உடைய சீதையை மீட்க இராவணனின் பத்துத் தலைகளும், இருபது கைகளும் உதிர்ந்து போமாறு திண்ணியதான வில்லை வளைத்த ஒப்பற்றவன். இத்தகையை பெருமை வாய்ந்த பெருமான்தான் அரியமேய விண்ணகரத்தில் எழுந்தருளியிருப்பவன் என்பது ஆழ்வார் பாசுரத்தின் கருத்தாகும்.

தாயாரின் திருநாமம் அமிர்த கடவல்லி. திருமங்கையாழ்வார் கூறும்படி அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சமே என்று தன் நெஞ்சிற்கு உபதேசம் செய்கின்றார் ஆசிரியர். இத்துடன் ஆசிரியர் திவ்ய கவியின் திருப்பாடலையும் ஓதுகின்றார். நம்மையும் திவ்ய கவிப்பாடலை ஓதுமாறு அறிவுறுத்துகின்றார்.

15. வயலாளி மணவாளன் (திருவாலி)

திருநாங்கூர் திருப்பதிகளில் இத்திருத்தலமும் ஒன்று. இங்குள்ள திருவாலி, திருநகரி ஆகிய இரண்டும் ஒன்றாக கருதப்படுகின்றன. திருவாலியில் உள்ள மூலவர் லட்சுமி நரசிம்மர் வீற்றிருந்த கோலத்தில் சேவை தருகின்றார். மேற்குத் திசை நோக்கியபடி மூலவர் இருந்திருக்கின்றார். இவரை வயலாளி மணவாளன் என்று அழைக்கின்றோம். இவர் நிரஞ்சம பிரஜாபதிக்கும், திருமங்கை ஆழ்வாருக்கும் பிரதியட்சம் ஆனவர். இக்கோயிலில் உள்ள உற்சவர் திருவாலி நகராளன், தாயார் அமிர்த கடவல்லி ஆவார். இக்கோயிலின் விமானம் அஷ்டாகர விமானம் ஆகும். இத்திருக்கோயில் திருநாங்கூரில் இருந்து ஒன்பது கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருமங்கையாழ்வார் தாம் பிறந்த கள்ளர் குடிக்கேற்ப இளமையில் ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர். சோழ அரசனின் சேனாதிபதியாகவும், அவனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகவும் இருந்து திருமங்கை நாட்டை ஆண்டவர். கொற்றவனுக்குக் கொடியவருடன் கொடும்போர் நேருங் காலங்களில் படைகளுடன் முன்சென்று பகை வென்றவராதலின் இவருக்குப் பரகாலன் என்ற திருநாமும் உண்டு. எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கணம் செய்த தலமாதல் பற்றி இத்தலம் திருவாலி என்ற திருநாமத்தால் வழங்கி வருகின்றது. திருநகரியிலும் திருவாலியிலும் திருமங்கையாழ்வாருக்கு முக்கியத்துவம் உண்டு. ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று நடைபெறும், 'வேடுபறி உற்சவம்' பெரும் புகழ் பெற்றது. வேடனாக நின்று வழிப்பறி செய்து அதனால் பெற்ற செல்வத்தைக் கொண்டு பாகவதர்கட்கு ததியாராதனம் செய்ததை

நினைவூட்டும் வண்ணம் நடைபெறும் திருவிழா இது. திருநகரியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேதராசபுரம் என்னும் ஊரிலுள்ள ஒரு பெரிய மைதானத்தில் இத்திருவிழா நடைபெறுகின்றது. இத்தலத்து எம்பெருமானை திருமங்கையாழ்வாரும், குலசேகரவாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளார்.

குலசேகராழ்வார் அழகிய மணவாளன் பால் பித்தனாக இருக்கின்றார். தன்னுடைய பெருமாள் திருமொழியின் ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியில் நான் பித்தனாகிவிட்டேன், பித்தனாய் இருப்பேன், வைத்தியம் பிடித்தவனாய் இருக்கின்றேன் என்று முடிக்கின்றார்.

16. திருத்தேவனார் தொகை தெய்வநாயகன்

திருப்பாற்கடலில் தோன்றிய திருமகளை, எம் பெருமான் இத்தலத்தில் மணம் புரிந்தார். எம்பெருமானின் திருமணத்தைக் காண்பதற்காகத் தேவர்கள் தொகையாகவும், கூட்ட கூட்டமாக வந்ததினாலும் இத்தலம் திருத்தேவனார்த்தொகை என்று பெயர் பெற்றது. திருமணம் ஆகாதவர்கள், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் ஆகியோர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் தடைப்பட்ட திருமணமும், குழந்தைப் பேறில்லாதவர்களுக்குக் குழந்தை பாக்கியமும் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

“சரணமாகும் தனதாள் அடைந்
தார்க்கு எல்லாம்
மரணமானால் வைகுந்தம்
கொடுக்கும் பிரான்” (திருவாய் மொழி, 9.10:5)

என்றவாறு, எம்பெருமானைச் சரணம் அடைந்தவர்கள் யாவரும் இவ்வுடல் முடியும்வரை பொறுத்திருக்க வேண்டும் என்பதையும், அதன்பிறகு சஞ்சித கருமங்களைத் தீயினில் தூசாக்கி வீடு பேற்றினை நல்குவான் இறைவன் என்பதையும் ஆழ்வார் வலியுறுத்துகின்றார்.

இத்திருக்கோயில் எம்பெருமானின் திருநாமம் தெய்வநாயகப் பெருமாள் என்பது உற்சவரின் திருநாமம் மாதவப் பெருமாள், தாயார் கடல் மகள் நாச்சியார். இங்கு எம்பெருமானும், தாயாரும் சிறிய உருவத்தைக் கொண்டு திகழ்கின்றனர். மூலவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார்.

இந்திரன், இமையவர், முனிவர்கள், நான்முகன், கதிரவன், சந்திரன் இவர்கட்குத் திருவருள் பாலித்தவன் இந்த எம்பெருமான். பிரளயாலத்தில் ஆகாயம், கடல்கள், தீவுகள் குலவரைகள் இவற்றையெல்லாம் திருவமுது செய்து உய்யக் கொண்ட பிரான் பாலகனாய் ஏழுலகத்தையும் உண்டு ஆலிலையில் களைப்பாறியவன். இரணியாசுரனைக் கிழித்தழிக்கும் நரசிம்மனாக எழுந்தருளியவன் திருத்தேவனார்த் தொகையில் எழுந்தருளியிருப்பவனே என்று பாசுரங்களில் தெளிய வைக்கின்றார் ஆழ்வார்.

இத்திருக்கோயில் எழிலார்ந்த சோலைகள் சூழ்ந்த சூழ்நிலையில் அமைந்துள்ளது. திருமங்கையாழ்வாரும் இதனைப் பொழில் திருத்தேவனார் தொகை, தேனாரும் மலர்பொழில் சூழ்திருத்தேவனார் தொகை, சேடேறு பொழில் தழுவு திருத்தேவனார் தொகை, சீராரும் மலர்ப்

பொழில் சூழ் திருத்தேவனார் தொகை என்று குறிப்பிடுவர். இவற்றை எல்லாம் ஆசிரியர் சிந்தித்த வண்ணம் திவ்ய கவின் திருப்பாடலுடன் ஆழ்வாரின் பாசுரங்களையும் ஓதி உள்ளம் கரைகின்றார்.

17. திருக்கூடலூர் வையம் காத்த பெருமாள் (ஆடுதுறைப் பெருமாள்)

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகளில் இரண்டு திருப்பதிகள் திருக்கூடலூர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

முதலாவது திருப்பதி, பாண்டி நாட்டில் திருக்கூடல் எனப்படும் மதுரை, இரண்டாவது திருப்பதி சோழ நாட்டில் உள்ள திருக்கூடலூராகும். அடுத்த திருக்கூடலூராகக் கருதப்படுவது தஞ்சையை அடுத்துள்ள அய்யம்பேட்டையில் உள்ளது.

திருக்கோயிலின் மூலவரான வையம் காத்த பெருமாள் நின்ற கோலம் கொண்டு கிழக்கு முகமாக சேவை சாதித்தருளுகின்றார். தாயார் மத்மாகினி என்னும் புஷ்பவல்லி ஆவாள். உற்சவ மூர்த்தியான ஜெகத்ரட்சகன் என்ற பெயருக்கு ஏற்றவாறு தனது கரத்தில் செங்கோல் ஏந்திக் காணப்படுகிறார். இத்திருக்கோயிலின் புஷ்கரணியாக சங்கர தீர்த்தம் விளங்குகிறது. இக்கோயில் விமானம் சூத்சத்வ விமான அம்சத்துடன் விளங்குகின்ற தன்மையை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

பெருமானின் சிறப்பை ஆழ்வார்கள் வாயிலாகக் கூறுகின்றார். அடியார்கள் துதிக்கும் படியாகத் தன்னுடைய கோலத் திருமேனி சூரிய மண்டலத்தையும் போய்த் தொட வளர்ந்து அண்டமெங்கும் பரவி நின்ற உத்தமன். தக்கன் வேள்வியை அழித்த சங்கரன் சாபத்தைத் தீர்த்த பெருமாள். திருநீர் மலையிலெழுந்தருளியுள்ள பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான். ஆற்றுப் பெருக்குப் போல் பெருகா நின்றுள்ள காதலைக் கொண்ட ஆழ்வாரின் இதயம் உருகும்படியாக உட்புகுந்த பெருமான். இத்தகைய எம்பெருமான் தான் திருக்கூடலூரில் எழுந்தருளியிருப்பவன். இவ்வளவு சிறப்புப் பெற்ற வையம் காத்த பெருமாளைத் திருக்கோயிலில் நுழைந்து கண்ணார கண்டு களிக்கின்றார் ஆசிரியர். ஆழ்வார் பாசுரங்களை ஓதி உளங்கரைகின்றார்.

18. திருமணிக்கூடத்து நாயகன்

மணிக்கூடம் போன்ற அமைப்பில் இத்தலம் கட்டப்பட்டிருப்பதால் திருமணிக்கூடம் என்ற பெயர் ஏற்பட்டது. இத்தலத்து மூலவர் வரதராஜ பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு முகப் பார்த்து சேவை தருகிறார். மூலவரை மணிக்கூட நாயக என்றும் அழைக்கின்றோம். இவர் சந்திரனுக்கும், கருடனுக்கும் பிரதியட்சம் ஆனவர். தாயார் திருமாமகள் நாச்சியர் ஆவார். பூமிப் பிராட்டியாரும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். பெரிய பிராட்டியை ஸ்ரீதேவி என்றும் அழைக்கின்றனர்.

சபிக்கப்பட்ட சந்திரனுக்குச் சிவபெருமான் தம் தலையில் அடைக்கலம் அளித்தது போல் எம்பெருமானும் சந்திரனுக்குப் பாவ விமோசனமாக அடைக்கலம் அளித்திருப்பதால், இத்தலத்தில் உள்ள புஷ்கரணியை "சந்திர புஷ்கரணி" என்று அழைக்கின்றனர். இத்தலம் நம்மாழ்வாரை நினைவு கூர்வது போன்று புளியந்தோப்பினுள் அமைந்துள்ளது சிறப்பான ஒன்றாகும்.

சீகாழியில் இருந்து எட்டு கிலோமீட்டர் தூரத்தில் திருமணிக்கூடம் பெரிய தோப்புக்குள் உள்ளது. இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கசேந்திரனின் துயரைத் தொலைத்தருளினவன். கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து கோநிரையைக் காத்தருளிய கோமான். மீன் வாமனன், அன்னம், வராகம், நரசிம்மம், ஹயக்ரீவன் என்ற அவதாரங்களை எடுத்தவன். அண்டமும் சூரியனும் சந்திரனும் மற்றுமுள்ள பொருள்களும் தானாகவே இருக்கப்பெற்றவன் என்பதை,

"பாவமும், அறமும், வீடும், இன்பமும்,
துன்பம் – தானும்,
கோவமும், அருளும், அல்லாக் குணங்களும்
ஆய எந்தை –
மூவரில் எங்கள் மூர்த்தி இவன் என முனிவரோடு
தேவர் வந்து இறைஞ்சு நாங்கூர்த்
திருமணிக் கூடத்தானே" **(பெரி., திரு., 1296. ப.400)**

என்ற பாசுரத்தின்வழி அறியலாம். பாவம், புண்ணிய, வீடு, இன்பம், துன்பம், கோபம், அருள் இவைபோல் மற்ற குணங் கொண்டவன் பரமன். மாயோன், சிவன் மூவரில் முதல்வனாகிய மாயோனே பெரியோன் என்று முனிவர்களும், தேவர்களும் வந்து வாழ்த்தும் நாங்கூர்த் திருமேனிக் கூடத்தான் என்ற சிறப்புகளை எல்லாம் பெற்றவன் இத்திருத்தலத்து எம்பெருமான். திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் சந்நிதியில் ஓதி உளங்கரைகின்றார் ஆசிரியர். இதனைப் படிக்கும் நாமும் மனநிறைவு பெற்ற நிலையில் இத் திருக்கோயிலுக்குச் செல்ல மனம் தூண்டுகின்றது.

19. காவளம்பாடிக் கண்ணன்

'காவளம்' என்றால், 'பூம்பொழில்' என்பது பொருள்படும். 'கா' என்றால் 'சோலை' மேற்கொண்ட விளக்கங்களில், சோலைவளம் மிக்க தலமானதால், காவளம்பாடி என்ற பெயர் பெற்றது. திருக்காவளம்பாடி திருக்கோயிலின் மூலவரான கோபாலகிருஷ்ணன் நின்ற கோலம் கொண்டு கிழக்கு முகமாகச் சேவை தந்தருளுகின்றார். இவருக்கு இராஜகோபாலன் என்ற பெயரும் உண்டு. சேனை முதலியார், உருத்திரன் ஆகியோருக்கு இப்பெருமான் பிரதியட்சம் ஆனவர். தாயார் செங்கமல நாச்சியார் ஆவார். இத்திருக் கோயிலின் புஷ்கரணியாக தடமலர் பொய்கை விளங்குகின்றது. இங்குள்ள விமானம் சுயம்புவாகத் தோன்றிய விமானமாகும்.

இத்திருக்கோயிலில் பத்துப் பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். திருக்காவளம்பாடி என்னும் இத்திவ்ய சேத்திரம் நாகை மாவட்டம் சீர்காழியில் இருந்து சுமார் 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

முதலையால் கவ்வப் பெற்று ஆயிரம் திருநாமங்களை அநுசந்தித்த கஜேந்திராழ்வானின் இடர் களைந்த எம்பெருமான் அநுசந்திக்கப் பெறுகின்றான். இராமனாக வந்து வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு மகுடம் சூட்டியவன். கண்ணனாக வந்து காளியன் என்ற நாகத்தின் மீது பல்வேறு நர்த்தனங்களைச் செய்தவன்.

இப்படி சிறப்புப் பெற்ற எம்பெருமானே காவளம்பாடித் திருக்கோயிலில் சேவை சாதிப்பவன் என்று ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் ஆசிரியர் திருக்கோயிலில் ஆழ்வார் பாசுரங்களை நின்று ஓதி உளங்கரைகின்றார். 'காவளம் பாடிமேய கண்ணனே, களைகண் நீயே' என்று ஆழ்வார் வாக்கிலேயே ஆசிரியரும் இறைஞ்சுகின்றார்.

20. பார்த்தன்பள்ளிச் செங்கண்மால்

எம்பெருமான், மழைக் கடவுளான வருணனுக்கும், அரிச்சுனனுக்கும், 'தாமரையாள் கேள்வனாக', நின்ற திருக்கோலத்தில் சேவை சாதித்ததாக மரபு. குறிப்பாக பார்த்தனான அரச்சுனனுக்குச் சேவை சாதித்ததின் நினைவாக இத்தலம், 'பார்த்தன் பள்ளி' என்று பெயர் ஏற்பட்டது. இத்தலத்தின் மூலவர் தாமரையாள் கேள்வன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

உற்சவராக பார்த்தசாரதி உள்ளார். மூலவர், உற்சவர் ஆகிய இருவருமே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்ற மூன்று தேவிமார்களுடன் காட்சியளிக்கின்றனர். இத்தலத்தில் 'கோலவல்லிராமன்' என்ற மற்றொரு உற்சவ மூர்த்தியும் உண்டு. தாமரை நாயகி தாயாராக உள்ளார். தீர்த்தம் கங்கா தீர்த்தம். இதனை கட்ச புஷ்கரணி என்றும், சங்க சரஸ் என்றும் அழைப்பது வழக்கம். விமானம் நாராயண விமானமாகும்.

பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய சிவபெருமானும், வருணனும் எம்பெருமானை வழிபட்ட இத்தலத்தில் ஸ்ரீ நாராயணர் கோலவல்லி ராமன் என்ற பெயரில் ஐம்படையுள்ள இராமனாக சேவை தருகின்றார். திருமங்கை ஆழ்வார் இத்தலத்தில் பத்து பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

'திருப்பார்த்தன் பள்ளி' என்ற இத்தலமும் திருநாங்கூர் தலத்தைச் சார்ந்தது ஆகும். சீர்காழியில் இருந்து பதினோரு கிலோமீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. பெரிய திருமொழியில் ஆழ்வார் எம்பெருமானை 118 பதிகங்களால் அநுபவித்து இனியராகின்றார். இவற்றுள் ஆழ்வார் தாமான தன்மையில் பேசியவை 98 பதிகங்கள். பெண் பாவனையில் பேசியவை 20 பதிகங்கள். இவற்றுள் தாய் பாவனையில் பேசியவை ஏழு பதிகங்கள். மகள் பாவனையில் பேசியவை பதிமூன்று பதிகங்கள். தோழி பாவனையில் பேசியவை இவ்வாழ்வாரிடம் ஒன்று கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பார்த்தன் பள்ளியில் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ள பாசுரங்கள் அனைத்தும் தாய்ப் பாசுரமாகச் செல்லுகின்றது. பரகாலநாயகியைப் பெற்றெடுத்த திருத்தாயார் பார்த்தன் பள்ளிப் பெருமாளிடத்தில் தன் மகள் காதல் கொண்டு இருக்கும் நிலையை வெளிப்படுத்துகின்றாள். அப்பெருமானை நினைந்து வாய்வெருவிக் கூறும் படிகளை ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றார். அர்ச்சாவதார நிலையில் இருக்கும்

பார்த்தன்பள்ளில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை வழிபடுமாறு தன் நெஞ்சிற்கு ஆற்றுப்படுத்துகின்றார் ஆசிரியர்.

21. அணி அரங்கத்துஅரவணைப் பள்ளியான்

இராமானுஜ ஸ்வாமிகள் குருவான பெரியநம்பி பட்டார், வடக்கு திருவீதி பிள்ளை, பிள்ளை லோகாச்சாரியார் ஆகியோர் பிறந்த திருத்தலம் ஸ்ரீரங்கம் ஆகும். அதுமட்டுமல்லாது தொண்டரடிப் பொடியாழ்வார், இராமானுஜர், குலசேகர ஆழ்வார், சூடிக்கொடுத்த ஆண்டாள், துலுக்க நாச்சியார் ஆகியோர் பரம பதத்தை அடைந்ததும் இத்தலத்தில்தான்.

மூலவரான ஸ்ரீரங்கநாதர் பூஜங்க சயனத்தில் கிடந்த கோலமாகத் தென்திசை நோக்கிச் சேவை தருகின்றார். இவருக்கு அழகிய மணவாளப் பெருமாள், நம் பெருமாள், பெரிய பெருமாள் என்ற பிற பெயர்களும் உண்டு. மேலும் ரவிதர்மன், விபீஷணன், சந்திரன், தர்மவர்மா ஆகியோருக்கு பிரதியட்சம் ஆனவர் தாயார் ஸ்ரீரங்கநாயகி ஆவார்.

இத்துடன் பெரியாழ்வார், ஆண்டாள், கண்ணபிரான், மணவாள முனிவர், ஆழ்வார்கள், நாதமுனிகள், ஆளவந்தார், அமிர்தகலச கருடன், திருவரங்க பெருமாளரையர், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், சக்கரத்தாழ்வார், ஸ்ரீ ரங்க நாச்சியார், மேட்டு அழகிய சிங்கர், வேதாந்த தேசிகர், தானே ஆன திருமேனி, பெரிய கருடன், நம்மாழ்வார், தன்வந்திரி ஆகியோருக்கும் தனித்தனியாக சந்நிதிகள் உள்ளன.

இந்த ஞானப்பேரூரில் கிடந்த கோலத்துடன் திகழும் பெரியபெருமாளை அடியிற் கண்டவாறு ஆழ்வார்கள் பாசுரங்களிட்டுப் பரவியுள்ளனர்.

1. பொய்கையாழ்வார் – 1
2. பூதத்தாழ்வார் – 4
3. பேயாழ்வார் – 1
4. திருமழிசையாழ்வார் – 14
5. திருப்பாணாழ்வார் – 10
6. குலசேகராழ்வார் – 31
7. பெரியாழ்வார் – 35
8. ஆண்டாள் – 10
9. தொண்டரடிப் பொடியாழ்வார் – 55
10. திருமங்கையாழ்வார் – 72
11. நம்மாழ்வார் – 12

ஆகமொத்தம் 245

மதுர கவியாழ்வார் மட்டிலும் தமது ஆசாரியாராகிய நம்மாழ்வாரைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீரங்கநாதன் அருட்கோலம்

இத்தலத்தில் ரங்கநாதர் ஆதிசேஷனை பாம்பு அணையாகக் கொண்டு சூரியன் மறையும் மேற்கு திசையில் தன் தலை இருக்குமாறும், தென்றல் வீசிடும் தென் திசையில் இருக்கும் இலங்கையை நோக்கியபடி குபேரன் இருக்கும் இடமான வடதிசையையும் திருமகளும் தன்பின்புறமாக இருப்பதையும் உணர்த்திடும் நிலையில் வைத்து தனது வலது கரத்தை புஜங்க சயனமாக தலையில் வைத்து இடது கரத்தைத் தன் பாதங்களை நோக்கியபடி வைத்துக் கிடந்த கோல சேவையைத் தந்தருள்கின்றார்.

காலப்போக்கில் ஸ்ரீரங்கநாதர் கோவிலின் அரங்கவிமானமும், ஸ்ரீரங்கநாதரும் காவிரிக்குள் புதையுண்டு போனதாயும் இவ்விடத்திற்கு வேட்டையாட வந்த சோழமன்னர் ஒருவரின் காதில் இந்த விஷயத்தை கிளி ஒன்று ரகசியமாகக் கூறியதாயும் அது கேட்ட சோழ மன்னன் அரங்க விமானத்தையும், ஸ்ரீரங்க நாதரையும் வெளியில் கொண்டு வந்து பின் கோவிலை நிர்மாணித்ததாயும் தனக்கு ரகசியமாக அரங்கநாதர் மற்றும் அரங்க விமானம் புதையுண்ட தகவலைக் கூறிய கிளி நினைவாக மண்டபம் ஒன்றை கட்டியதாகவும் ஒரு வரலாற்றில் கூறப்படுகிறது.

கம்பர் பெருமான் இக்கோவிலில் உள்ள மேட்டு அழகிய சிங்கர் சந்நிதியின் எதிராக அமைந்துள்ள நாலுகால் மண்டபத்தில் தாம் இயற்றிய கம்ப இராமாயணத்தை அரங்கேற்றம் செய்ததாகவும், இரண்யவதைப் படலம் எதில் சேர்க்கப்பட்டு இருப்பதை அங்குக் கூடியிருந்தோர் ஆட்சபணை செய்தபோது “ஆட்சேபம் செய்திடக் கூடாது, யாம் ஏற்றுக் கொண்டோம்” எனக் கோபுரத்தில் இருந்த நரசிம்மர் கர்ஜனை செய்தார் என்றும் வான பரம்பரை கதை ஒன்று கூறப்பட்டு வருகின்றது.

‘பெரிய கோயில்’ என்று அழைக்கப்படும் ஸ்ரீ அரங்கநாதரின் விமானம் தங்கத் தகட்டினால் வேயப்பட்டதாகும். இத்தலத்தைச் சுற்றிலும் ஏழு மதில்கள் உள்ளன. ஏழு உலகங்களும் ஏழு மதில்களாக உட்பிரகாரங்களாகச் சித்தரிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். ஏழாவது மதிலின் நீளம் 3072 அடி, அகலம் 2521 அடி ஆகும். ஏழு மதில்கள் முறையே சித்திரைத் திருவீதி (7), திருவிக்கிரமன் திருவீதி (6), அகளங்கன் திருவீதி (5), ஆலிநாடன் திருவீதி (4), குலசேகரன் திருவீதி (3), இராச மகேந்திரன் சோழனது திருவீதி (2), அரங்கநாதனின் திருச்சந்நிதி சுற்று (1) என்றவாறு அமைந்திருக்கின்றது. எட்டாவது பிரகாரம் ‘அடையவளைந்தான் வீதி’ என்று வழங்கப் பெறுகின்றது. இது ஏழு பிரகாரங்களையும் அதன் உள் உள்ள சந்நிதிகளையும் ஆடைபோல் வளைத்திருக்கின்றது. சுற்றியுள்ள மதிலின் உயரம் 20 அடி 8 அங்குலம், மேல்பாகம் 6 அடி அகலமுள்ளது.

முதலாழ்வார்களில் பொய்கையாழ்வார் திருவரங்கத்தைப் பற்றி பெரும் பக்தியுடன் குறிப்பிடுகின்றார்.

“ஒன்றும் மறந்தறியேன், ஓத நீர்
வண்ணனை நான்;
இன்று மறப்பனோ, ஏழைகள் ? அன்று,

கருட அரங்கத்துள் கிடந்து

கைதொழுதேன், கண்டேன் –

திருவரங்கம் மேயான் திசை" **(முதல் திருவந்தாதி, 2087)**

என்றவாறு கருவில் இருந்தபோது திருவரங்கனின் அருளாலே அவனை நான் உணர்ந்தேன். கடல் நிறப்பெருமானைப் பற்றி ஒன்றும் மறக்கேன். அறியாதவர்களே! இன்று நான் மறப்பேனோ! என்று இறைவன் தன் கருவுலக வாழ்விலேயே தன்னைப் பக்தனாக்கி விட்டான் என்று கருதுகின்றார். பெரியாழ்வாரின் ஒரே மகள் ஆண்டாள், அழகிய மணவாளர் மீது தான் கொண்ட காதலின் திறத்தை,

"மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்

வாழகில்லேன் கண்டாய்" **(நாச்சியார் திருமொழி, 168)**

என்று புலப்படுத்துகின்றார்.

சைவ சமயத்தைச் சார்ந்த நந்தனாருக்கு முக்தியளித்த சிதம்பரத்தைப் போலவே திருவரங்கம் திருப்பாணாழ்வாருக்கு முக்தி அளித்தது. யாழையே தெய்வமாகப் போற்றி வந்த பாணர்குல விளக்காகிய திருப்பாணாழ்வார் அந்த இசையாகவும் இசையின் பயனாகவும் இருக்கும் தெய்வத்தைத் திருவரங்க பெருமானாகக் கண்டார். இசைப்புலமையுடன் இயற்றமிழ்ப் புலமையும் உடைய இவர் அமலனாதிபிரான் என்ற பத்தே பாசுரங்களைக் கொண்ட சிறு பிரபந்தத்தை இயற்றியுள்ளார். இதில்,

"கொண்டல் வண்ணனைக்

கோவலனாய் வெண்ணெய்

உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை

அண்டர்கோன் அணி – அரங்கன் என் அமுதினைக்

கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே" **(அமலனாதி பிரான், 10)**

என்றவாறு, கார்முகிலின் வண்ணனை, ஆயர்பாடிக் கண்ணாய் வந்து கள்ளத்தில் வெண்ணெய் உண்டவனை, என் உள்ளம் கவர் கள்வனை உலகின் முதல்வனை அழகிய திருவரங்கத்து உள்ள ஆரா அமுதனைக் கண்ட கண்கள் மற்ற எவற்றையும் கண்டு காமுற்று மகிழாது என்ற பாசுரப் பகுதி அரங்க நகர் அப்பன் மீது இவ்வாழ்வார் கொண்டுள்ள ஆராக்காதலை வெளிப்படுத்துகின்றது.

இந்தக் கிடந்தத் திருகோலத்தின் முன் நின்ற திருக்கோலத்தில் செப்புச் சிலை வடிவில் அழகிய மணவாளன் இரண்டு துணைவியாருடன் தங்க மஞ்சத்தில் காட்சி தருகின்றார். திருவரங்கத்தின் பெருமையை நான்முகன் ஒருவனால் தான் கூறமுடியும் என்ற சிந்தனையைக் கொண்ட திவ்ய கவியின் பாசுரத்தை ஓதி உள்ளம் கரைகின்றார் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார்.

"ஆராத அருளமுதம் பொழிந்த கோயில்;

அப்புயத்தோன் அயோத்தி மன்னர்க்கு அளித்த கோயில்"

என்ற வேதாந்த தேசகரின் பாசுரத்தை ஓதிய வண்ணம் மனம் மகிழ் கொள்கிறார்.

இக்கோயில் உள்ள புஷ்கரணிகள் சந்திர புஷ்கரணி, காவிரி, கொள்ளிடம், வேதச் சருங்கம் ஆகியவை ஆகும். பிரணவ வாக்குறுதி அம்சத்துடன் விமானம் விளங்குகின்றது. ஸ்ரீரங்கம் புகைவண்டி நிலையத்தில் இருந்து ஒன்றேகால் கிலோமீட்டர் தொலைவில் ஸ்ரீரங்கம் கோயில் உள்ளது. கோயில் என்றாலே ஸ்ரீரங்கம் கோவிலைத்தான் குறித்திடும் அளவுக்கு சிறப்புடையதாகும் என்று ஆசிரியர் ஸ்ரீரங்கத்தின் சிறப்புகளையும் ஆழ்வார்கள் எம்பெருமானின் பால் கொண்டிருந்த தீராத காதலையும் மிகச்சிறப்பாக எடுத்தியம்பியுள்ளார்.

22. உறையூர் அழகிய மணவாளன் (திருக்கோழியூர்)

இத்தலத்தில் யானையைக் கோழி வென்றதினால் இத்தலம், 'திரு' என்னும் அடைமொழியுடன் சேர்ந்து திருக்கோழியூர் என்று அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள மூலவர் அழகிய மணவாளபெருமாள் நின்ற கோலத்தில் பிரயோகச் சக்கரத்துடன் வடக்கு முகம் நோக்கியவாறு சேவை தருகின்றார்.

தாயாரின் பெயர் கமலவல்லி நாச்சியார் ஆகும். 'உறையூர்வல்லி' என்று அழைக்கப்படுகின்றார். நாச்சியார் திருமணத்திற்கான கோலத்துடன் வடக்கு முகம் நோக்கியபடி சேவை தருகின்றார். பங்கு உத்திரத்திற்கு முதல் நாளன்று எம்பெருமானுக்கும், நாச்சியாருக்கும் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றது.

திருப்பாணாழ்வாருக்கு இக்கோயிலில் தனிச் சந்நிதி உள்ளது. ஏனெனில் திருப்பாணாழ்வார் அவதரித்த திருத்தலம் என்பதாகும். ஸ்ரீரங்கத்து உற்சவரே இங்குள்ள உறையூர் வல்லியின் திருக்கல்யாண வைபவத்தில் அழகிய மணவாளனாக வந்து திருமணம் செய்து கொண்டதால் ஸ்ரீரங்கத்து உற்சவரே இத்தலத்து உற்சவ பெருமானாகவும் விளங்கி வருகின்றார். எம்பெருமான் கிடந்தும், நின்றும் இருந்தும் என்ற மூன்று கோலங்களில் சேவை தந்தருகின்றார். அதே போன்று பெரிய பிராட்டியார் திருநின்றவூரில் நின்ற கோலத்தில் சேவையையும் இத்தலத்தில் இருந்த, கிடந்த என இரு கோலங்களையும் ஒரே சேவையாகி உறைந்து விளங்கும் சேவையாகத் தந்தருளுகின்றார்.

இங்கு ஒரு பாசுரத்தால் திருமங்கையாழ்வாரும், ஒரு பாசுரத்தால் குலசேகரத்தாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். உறையூரிலுள்ள இக்கோவில் 'நாச்சியார் கோயில்' என்றே பொது மக்களால் வழங்கப்பெறுகின்றது. திருச்சிக்கோட்டை என்ற நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது.

23. கரம்பனூர் உத்தமன் (உத்தமர் கோயில்)

திருச்சிக்கும் – ஸ்ரீரங்கத்திற்கும் இடையே திருக்கரம்பனூர் என்ற தலம் உள்ளது. இத்தலத்து மூலவரான புருஷோத்தமர் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக சேவை தருகின்றார். கிழக்கு முகம் நோக்கிய இவர் சனகர், சநாதனர், சனந்தனர், சனக்குமாரர் ஆகிய நால்வருக்கும் கதம்ப முனிவர், உபரிசரவஸீ திருமங்கையாழ்வார் ஆகியோருக்கு பிரத்யட்சம் ஆனவர்.

தாயார் பூர்வா தேவியான பூரணவல்லி ஆவார். சைவம், வைணவம் கலந்த கதம்பமாக இத்தலம் இருந்ததினால் கதம்பசேத்திரம் என்ற பெயரும் உண்டு. உத்தமர் என்ற பெயரால்

பகவானும், பிச்சாடனர் எனற் பெயரால் சிவனும் இத்தலத்தில் அழைக்கப்படுகின்றனர். சாபம் காரணமாகத் தனக்கென சந்நிதி இல்லாத நான்முகனுக்கும் இத்தலத்தில் சந்நிதி உள்ளது.

இத்திருக்கோயிலின் புஷ்கரணியாகக் கதம்ப தீர்த்தம் விளங்குகிறது. இங்குள்ள விமானம் உத்யோக விமானம் ஆகும். இத்திருக்கோயில் ஒரு பாசுரத்தால் திருமங்கையாழ்வார் மங்காள சாசனம் செய்துள்ளார். இத்திவ்ய சேத்திரம் திருச்சிக்கும் ஸ்ரீரங்கத்திற்கும் இடையே அமைந்துள்ளது. திருவரங்கப் பெருமானை மங்களா சாசனம் செய்யும்போது திருபேர்நகர், திருக்குறுங்குடி, திருத்தண்கால் எம்பெருமான்களுடன் கரம்பனூர் உத்தமனையும் சேர்த்து மங்களாசாசனம் செய்கின்றார்.

"பேரானை, குறுங்குடி எம்
பெருமானை, திருத்தண்கால்
ஊரானை, கரம்பனூர் உத்தமனை,
முத்து இலங்கு
கார் ஆர் திண் கடல் ஏழும், மலை ஏழ்
இவ் உலகு ஏழ் உண்டு
ஆராது என்று இருந்தாளைக் கண்டது
தென் அரங்கத்தே" (பெரி., திரு., 5.6:2)

என்ற பாசுரத்தில் திருப்பேரூர் பெருமான், திருக்குறுங்குடித் தலைவன், திருத்தண்காவில் வாழ்பவன். திருக்கரம்பனூர் நற்குணன்; பின்னும் முத்துடை ஏழு கருங்கடல்களை, ஏழு மலைகளை, உலகை அமுது செய்தும் நிறை பெறாமல் ஊன்றியவனைக் கண்டது தென்னரங்கத்தே என்ற பாசுரத்தின் வாயிலாகக் கரம்பனூர் பெருமானை ஆசிரியர் இயம்புகின்றார். கதம்ப முனிவர் பரம்பிரம்மத்தைக் காண இங்கு நெடுங்காலம் தவம் புரிந்தார். சிவபெருமானும், நாராயணனும் முனிவருக்கு விசுவரூப தரிசனம் அருளினர். ஆகவே, இத்திருத்தலம், 'கதம்பவனம்' என்ற பெயர் பெற்றது. திவ்ய கவியும் தம் பாசுரத்தில் கரம்பனூரில் எழுந்தருளியிருக்கும் "புருடோத்தமன் திருநாமத்தைப் பலதரம் கூறுவாயாக" என்று தம் நெஞ்சிற்கு உபதேசம் செய்கின்றார்.

24. திருவெள்ளறை அஞ்சன வண்ணன்

வெண்மை நிறங்கொண்ட பாறைகளை இத்தலம் கொண்டு இருப்பதாலும், 'திரு' என்னும் அடைமொழியுடன் திருவெள்ளறை எனப்பெயர் பெற்றது. வெள்ளை நிறமுடைய குன்றின்மீது இத்திருக்கோயில் உள்ளதால் 'வெள்ளறை' என்றும் கூறப்படுகின்றது. இக்கோயிலைச் சுற்றி உயர்ந்த மதிலும், மதிலுக்குள் ஏழு தீர்த்தங்களும் உள்ளன.

மூலவரான புண்டரீகாவூர் நீர்மலையாக நின்ற கோலத்துடன் சேவை தருகின்றார். இத்தலத்தில் மூலகருவறைக்குச் செல்ல இரு வழிகள் உள்ளன. அவை உத்தராயண வாசல், தட்சணாய வாசல் எனப்படும். தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உத்தராயண வாசல் வழியாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை தட்சணாய வாசல் வழியாகவும் சென்று எம்பெருமனை சேவிக்கலாம்.

இத்திருத்தலத்தில் பெருமாள் சூரியநாராயணராக உலக ஜீவன்களுக்கு ஒளி வழங்கிட உலகினைச் சுற்றி வருகின்றார். புண்டரீகாஷனாகிய எம்பெருமானும் பூமிப் பிராட்டியார், பெரிய பிராட்டியார், சூரியன், சந்திரன், ஆதிசேஷன் ஆகியோர் மனித உருக்கொண்டு சேவை செய்ததாக இங்குள்ள சந்நிதியின் வரலாறு தெரிவிக்கின்றது. இங்குள்ள பெருமா மண்டபத்தில் உள்ள தூணின் முன்பாக நின்று ஓசை எழுப்பினால், அவ்வோசை சுழன்று எதிரொலித்திடும். இம்மண்டபத்தில்தான் பிரபஞ்ச சேவை நடைபெற்றதாகவும் ஆசிரியர் வாயிலாக அறியமுடிகின்றது.

இத்திருக்கோயிலின் புஷ்கரணிகளாகத் திவ்ய தீர்த்தம், கந்தட்சர புஷ்கரணி, சக்கரதீர்த்தம், குசதீர்த்தம், புஷ்கல தீர்த்தம், வராஹ மணிகர்ணிகா தீர்த்தம், பத்ம தீர்த்தம் ஆகியவை உள்ளன. ஸ்ரீரங்கத்தில் இருந்து இத்தலத்திற்குப் பேருந்து வசதி உண்டு. இத்திருக் கோயிலில் 13 பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும், பதினோரு பாசுரங்களால் பெரியாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வாரின் பாசுரங்களின் முன்னிரண்டு அடிகளில் தமது வேண்டுகோளும், பின்னரண்டடிகளில் ஊர்ச்சூழலும் குறிப்பிடப்படுகின்றன.

"ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று,
அகல் – இடம் முழு தினையும்
பாங்கினால் கொண்ட பரம! – நின் பணிந்து
எழுவேன், எனக்கு அருள் புரியே–
ஓங்கு பிண்டியின் செம் மலர் ஏறி வண்டு
உழிதர, மா ஏறித்
தீம் குயில் மிழற்றும் படப்பைத் திரு
வெள்ளறை நின்றானே" (பெரி., திரு., 1376)

என்றவாறு, ஓங்கிய அசோக மரத்தின் சிவந்த மலர்களில் வண்டுகள் திரிவதைக் கண்டு இனிய குரலை உடைய குயில்கள், மாமரங்களில் இனிதாகக் கூவவும், பல்வகைக் கொடித் தோட்டங்கள் வாய்ந்த திருவெள்ளறையில் இருப்பவனே! மாவலி வேள்விச் சாலையில் இரந்து பரந்த நிலம் முழுவதும் கொடை பெற்றவனே! உன்னைப் பணிய வேண்டுமென்று விரும்பும் எனக்கு அருள் புரிவாய் என்று தம் பாசுரத்தில் வேண்டுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

பெரியாழ்வார் திருவெள்ளறையில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் குழந்தைக் கண்ணனாகப் பாவித்து யசோதைப் பிராட்டி அக்குழந்தையை நீராட்டிக் குழல்வாரிப் பூச்சூட்டின பின்பு அவனுக்குப் பிறர் கண்ணெச்சில் வாராதபடி காப்பிடக் கருதியவள், இவனை அந்தி வேளையில் காப்பிட்ட படியை ஆழ்வாரும் அநுபவிக்க எண்ணி தம்மை அப்பிராட்டியாகப் பாவித்து அவள் பேச்சாலே இவனைக் காப்பிட அழைத்து இனியவராகின்றார்.

"கண்ணில் மணல்கொடு தூவிக்
காலினால் பாய்ந்தனை என்று என்று
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு
இவர் ஆர் ? – முறைப்படுகின்றனர்;

கண்ணனே ! வெள்ளறை நின்றாய் !

கண்டாரொடே தீமை செய்வாய் !

வண்ணமே வேலையது ஒப்பாய் !

வள்ளலே ! காப்பிட வாராய;ய்” (பெரி., திருப்பல்லாண்டு, 195)

என்றவாறு, கண்ணனே ! திருவெள்ளறையில் நின்றருளியவ ! கண்டவரோடு தீம்பு செய்பவ ! கருநீல கடல் நிறம் பெற்றவ ! வாழ்வளிக்கும் வள்ளலே ! அருமையான பிள்ளைகள் விளையாட வந்திருக்க நீ மணலை அவர்கள் கண்ணில் தூவி விட்டு, மேலும் காலினாலும் உதைத்தாய், தீராத விளையாட்டுகளைச் செய்கிறாய் என்று பலமுறை சொல்லி, நீ செய்யும் தீம்பை முறையிட்டு நின்றார்கள். ஆதலால் அங்கே போவதை விட்டுக் காப்பு இட்டுக் கொள்ள வருக என்று வேண்டுகின்றார் ஆழ்வார்.

25. அன்பில் திருவடி அழகிய நம்பி

உலகங்கள் அனைத்தையும் பிரம்மதேவன் படைத்தருளினார். பாவ விமோசனத்திற்கான மாபெரும் இதிகாச காவியமான இராமாயணத்தை வால்மீகி முனிவர் படைத்தார். இவர்கள் இரண்டு பேருமே தங்கள் படைப்புகளில் எம்பெருமானின் திருவடிவம் மற்றும் கல்யாண குணங்களை அடிப்படையாகக் கொண்டே படைத்திட்டனர்.

இவர்கள் இருவருமே அன்பின் பின்னணியில் தான், தத்தம் தொழில்களை செவ்வனே செய்தனர். அதன் காரணமாய் இத்தலம், அன்பில் என்ற பெயரினைப் பெற்றது. படைப்பாளர் களாகிய இவ்விருவரின் பார்வைக்கு எம்பெருமானும், தாயாரும் அழகு உள்ளவர்களாக, வடிவழகிய நம்பியாகவும் அழகிய வல்லி நாச்சியாராகவும் உருவெடுத்து இத்தலத்தில் சேவை தந்திருக்கின்றனர்.

இத்திருக்கோயின் மூலவரான வடிவழகிய நம்பி கிடந்த கோலம் கொண்டு கிழக்கு முகமாக புஜங்க சயனமாக சேவை சாதித்தருளுகின்றார். இப்பெருமாள் பிரமனுக்கும், வால்மீகி முனிவருக்கும் பிரதியட்சம் ஆனவர். அழகிய வல்லி நாச்சியார் தாயார் ஆவார்.

மண்கே புஷ்கரணியும், கொள்ளிடம் ஆறும் இத்தலத்தில் புஷ்கரணிகளாக விளங்குகின்றன. இங்கிருக்கும் விமானம் தாரக விமானமாகும். இத்திருக்கோயிலில் ஒரு பாசுரத்தால் திருமழிசை ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருச்சி – விழுப்புரம் இரயில் மார்க்கத்தில் இலால்குடிக்கு எட்டு கிலோமீட்டர் தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ளது. திருமழிசையார்,

“நாகத்து அணைக்குடந்தை, வெஃகா,

திரு எவ்வுள்;

நாகத்து அணை அரங்கம், பேர்,

அன்பில்; நாகத்து

அணைப்பாற்கடல் கிடக்கும், ஆதி நெடுமால்

அணைப்பார் கருத்தன் ஆவான்” (நான்., திருவந்., 36)

என்ற பாசுரத்தில் அன்பர்கள் நெஞ்சில் புகுவதற்காகவே திருக்குடந்தை திருவெஃகா, திருவெள்ளுர், திருவரங்கம், திருப்போர் நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய ஏழு தலங்களில் நாகத்தணையிலே கிடந்தருள்வது அன்பருடைய இதயத்தில் புகுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதேயாகும் என்கிறார் ந.சுப்புரெட்டியார்(சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–1, ப.170).

எம்பெருமானுக்கு மெய்யடியாருடைய இதயத் தாமரையில் வாழ்வதே பெருவிருப்பமாகும். இதற்காகவே சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு திவ்ய தேசங்களில் தங்கியுள்ளான் என்பதை திருமழிசையார் பாசுரத்தின் வாயிலாக உணர முடிகின்றது.

26. திருப்பேர் கிடக்கும் திரு நாரணன்

தன் அடியார்களின் இதயத்தை விட்டும், இத்தலத்தை விட்டும், ஒரு போதும் இடம் பெயர்ந்து சென்றிட மாட்டேன் என்று கூறிய எம்பெருமான் என்றைக்கும் இங்கு இருந்திட்ட காரணத்தால் திருப்பேர் நகர் என்று பெயர் பெற்றது. இத்தலத்தில் இருந்துதான் நம்மாழ்வார் சடகோப சுவாமிகள் பரமபதம் அடைந்தார் என்பது வரலாறு. இத்தலத்தில் திருமங்கை ஆழ்வாரால் பத்தொன்பது பாசுரங்களாலும், நம்மாழ்வாரால் பதினோரு பாசுரங்களாலும், மங்களா சாசனம பாடப்பட்டுள்ளது.

திருப்பேர் நகர் என்றும், கோவிலடி என்றும் அழைகப்படும் இத்திவ்ய சேத்திரம் அன்பில் என்னும் ஊரிலிருந்து கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் சுமார் நான்கு கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்குள்ள மூலவர் அப்பக் குடத்தான் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக மேற்கு திசையில் சேவை தருகின்றார். இவருக்கு அப்பாலா ரெங்கநாதன் என்ற பெயரும் உண்டு. இவர் உபமன்யுவுக்கும், பராசருக்கும் பிரதியட்சம் ஆனவர். தாயார் இந்திரதேவி, இவரை கமலவல்லி என்றும் அழைப்பர். இத்திருத்தலத்து எம்பெருமானை திருமழிசையார் 1 – பாசுரம், நம்மாழ்வார் 11– பாசுரங்கள், பெரியாழ்வார் 3 பாசுரங்கள், திருமங்கையாழ்வார் – 22 பாசுரங்கள் ஆகிய நான்கு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

எம்பெருமானை ஆழ்வார் அனுபவிக்கும் விதம் அற்புதமானது, திருவாழி, திருச்சங்குகளைக் கையில் உடையவன்; காளமாமுகில் வண்ணன்; தன்னுடைய சிறப்பியல்புகளையெல்லாம் தன் அடியார்கட்குக் காட்டிக் கொடுப்பவன்; தன் திருவடிகளைப் பணிபவர்கட்கு அடிமைத் தன்மையை அருள்பவன்; திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையவன். இத்தகைய எம்பெருமான் தன் இதய கமலத்தில் இடைவிடாது வீற்றிருப்பன் என்று ஆசிரியர் பெருமான் சிறப்பை எடுத்துரைக்கின்றார். நம்மாழ்வார் திருப்பேர் நகர் எம்பெருமானை ஆரா அமுதாய் அநுபவிக்கும் திறனை ஆசிரியர் கூறும் விதம் நெஞ்சம் களிப்படையச் செய்கின்றது.

“திருமாலிருஞ் சோலை
மலை என்றேன், என்ன
திருமால் வந்து என் நெஞ்சு
நிறையப் புகுந்தான்” (திருவாய்மொழி, 10.8)

என்ற இப்பாசுரத்தில் எம்பெருமான் தம் நெஞ்சில் புகுந்தபடியை எடுத்துக்கூறி வியக்கின்றார் ஆழ்வார். இத்திருத்தல எம்பெருமான் அடியார் ஒருவருக்கு அவர் விரும்பிய கண்ணனின் சிறு குழந்தை விளையாட்டுகளுடன் சேவை தந்ததாக வரலாறு. யார் ஒருவர் அப்பக் குடத்தானை இத்திருத்தலத்தில் வழிபடுகின்றனரோ அவர் வீடுபேறு அடைவது உறுதி என்று நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடுகின்றனர். "கூடுவர் நீள் விசும்பே" என்று திருமங்கை மன்னனும், "ஆள்வது சூழ்பொன் விசும்பே" என்று நம்மாழ்வாரும் தத்தம் பாசுரங்களில் கூறியிருக்கின்றார் என்பதை ஆசிரியர் வாயிலாக அறிய முடிகின்றது.

27. திருத்தஞ்சை எம்பெருமான்

பிரம்மாண்டபுராணத்தில் கூறப்பட்டுள்ள செய்தி கிருதியுகத்தில் ஒரு சமயம் மது என்னும் அரக்கன் ஆட்சி புரிந்து வந்தான். இவனுக்கு தஞ்சகன், கஜமுகன், தண்டகன் என்ற மூன்று மகன்கள் பிறந்தனர். இம்மூவரும் சிவனைக் குறித்துப் பெரும் தவமியற்றினர். அவர்கள் வேண்டும் வரங்களையெல்லாம் சிவன் கொடுத்தார். வரங்களைப் பெற்ற அரக்கர்கள் இந்திரன் முதலான தேவர்கள், முனிவர்கள் ஆகியோரைக் கொடுமைப்படுத்தி வந்தனர். கொடுமை தாளாத தேவர்கள் சென்று எம்பெருமானிடம் முறையிட்டனர். தேவர், முனிவர்களைக் காப்பாற்றும் பொருட்டு மூவரையும் மாய்த்தார். அதன் பின்னர் பராசரர், மார்க்கண்டேயர் ஆகியோருக்கு மூன்று தலங்களை உருவாக்கிச் சேவை செய்து வந்தனராம். மூன்று தலங்களிலும் நேரடியாக சேவை சாத்தித்ததால் இம்மூன்று திருக்கோயில்களும் ஒரே திவ்ய தேசமாகக் கருதப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் நம்மாழ்வார் ஒரு பாசுரத்தாலும், பூதத்தாழ்வார் ஒரு பாசுரத்தாலும், திருமங்கையாழ்வார் மூன்று பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர். தஞ்சை இரயில் நிலையத்தில் இருந்து நான்கு கி.மீ. தூரத்தில் உள்ள வெண்ணாற்றங்கரையில் இத்தலம் உள்ளது. திருமங்கையாவாரின் திருமந்திரத்தை பேசும்போது,

"எம்பிரான், எந்தை, என்னுடைச் சுற்றம்,
எனக்கு அரசு, என்னுடைய வாழ்நாள்,
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி,
அவர் உயிர் செருத்தஎம் அண்ணல்;
வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்" **(பெரியதிருமொழி, 953)**

என்ற பாசுரத்தில் முதலாவதான தஞ்சை மாமணிக் கோயிலைக் குறிப்பிடுவர். அடியார்களே! எனக்குப் பல உதவிகளைச் செய்தவனும், எனக்குத் தந்தையும் அனைத்து உறவானவனும், எனக்கு உயிராயிருப்பவனும் அம்புகளால் அரக்கர்களை அழித்தவனும், எம் அண்ணலே அவன் சோலைகள், பெரிய மதில்கள் ஆகியவை கொண்ட தஞ்சை மாமணிக் கோயிலையே வணங்கிப் பயன் பெறும்படி நான் திருமந்திரமாம் நாராயண நாமத்தைக் கண்டு கொண்டேன் என்கின்றார்.

மூலவர் நரசிம்மர் ஆவார். வீற்றிருந்த கோலத்துடன் சேவை தருகின்றார். தாயார் தஞ்சை நாயகி ஆவார். இங்குள்ள தீர்த்தம் சூரிய புஷ்கரணி, ஸ்ரீ இராமதீர்த்தம் ஆகும். இக்கோயில் கோபுர விமானம் வேதசுந்தர விமானம் ஆகும். இத்திருக்கோயிலை அடுத்ததாக உள்ளது மணிக் குன்றப் பெருமாள் சந்நிதி. இங்குள்ள பெருமான் 'மணிக்குன்றப் பெருமாள்' என்ற திருநாமம் பெற்றவர். தாயார் அம்புயவல்லி. மூன்று கோயிலும் உள்ள உற்சவர் சீமன் நாராயணன் என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுகின்றார்.

28. திருக்கண்டியூர் கமலநாதன்

இத்தலத்து இராஜகோபுரம் மூன்று அடுக்குகளுடன் காணப்படுகிறது. இத்தலத்தின் முன்பாக இருக்கும் பத்ம தீர்த்ததைப் பலி தீர்த்தம் என்றழைக்கின்றனர். கோயிலின் மேல்புறமாகக் கபால தீர்த்தம் உள்ளது. சக்கரத்தாழ்வார் மற்றும் இலக்குமி நரசிம்மர் ஆகிய இருவரும் முன் பின்னாக ஒரு சந்நிதியில் காட்சி தருகிறார்கள்.

நரசிம்மர் பின்புறமாக அவரின் பக்கத்தில் இருப்பதினால் சக்கரதாழ்வாரை மட்டுமே சேவிக்க முடியும். இத்திருத்தலம் கமல சேத்திரம் என்றழைக்கப்படுவதைப் போன்று கமல புஷ்கரணி இத்திருத்தலத்தின் புஷ்கரணியாக விளங்குகிறது. கமல விமான அம்சத்துடன் நாயகன் நாயகியாக கமல நாதனும், கமல நாயகியும் இருப்பதனால் பஞ்ச சமய அமைப்பு உள்ளது. மேலும் மும்மூர்த்திகளும் தொடர்பு உள்ள தலமாகியதால் திருமூர்த்தி சேத்திரம் எனவும் அழைக்கப் படுகின்றது.

இத்திருத்தலத்தை திருமங்கையாழ்வார் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

"பிண்டி ஆர் மண்டை ஏந்தி
பிறர்மனை திரிதந்து உண்ணும்
முண்டியான் சாபம் தீர்த்த
ஒருவன் ஊர் உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க்கு உய்யல் ஆமே ?" (திருக்குறுந்தாண்டகம், 2050)

என்பது பாசுரம். இதில் உணவு பெறத் தலையோட்டைக் கையிலே ஏந்தி, அயலார் வீடுகளில் திரிந்து, இரந்து உண்ணும் தவக்கோலம் கொள்ளும் சிவனின் சாவிப்பைத் தீர்த்த ஒப்பற்ற ஒருவன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள்: திருக்கண்டியூர், திருவரங்கம், திருமெய்யம், திருக்கச்சி, திருப்பேர், திருக்கடன்மல்லை என்றுள்ளனவாம். அவன் "உகக்கும் திருப்பதிகளில் மண்டியவர்கள் உய்வதல்லது அல்லாதார் உய்ய வழியில்லை" என்கின்றனர் ஆழ்வார்கள் என்பதை ஆசிரியர் வாயிலாக அறிகின்றோம். இந்நிலையில் திவ்ய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர அதனையும் ஓதி உள்ளங் கரைகின்றார் ஆசிரியர். சிவனது சாபத்தைக் கண்டனம் செய்தது

போலச் சேவை சாதித்த இடமாதலால் இத்திருத்தலம் திருக்கண்டியூர் என்று திருநாமம் பெற்றுள்ளது.

29. திருக்குடந்தை ஆராவமுதன்

திருக்குடந்தை எனப்படும் கும்பகோணம் ஆராவமுதப் பெருமாள் கோவிலுக்கு திருமங்கையாழ்வரே தேர் ஒன்று செய்து கொடுத்தாக வரலாறு. அது சித்திரைத் தேர் என்றழைக்கப்படுகிறது. இத்தேர் தென்னிந்தியாவில் உள்ள தேர்களிலேயே மிகப் பெரியதாகும். இத்தேரினை மங்களா சாசனம் செய்வது போலவே திருவெழு கூற்றிருக்கை என்னும் பிரபந்தம் இயற்றினார். இத்திருக்குடந்தை நகரின் நடுவே அமைந்திருப்பது சாரங்கபாணிப் பெருமாள் திருக்கோயில். இதில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் ஆரா அமுதன். இப்பெருமான் மீது நம்மாழ்வார் பாடியுள்ள 'ஆரா அமுதே' என தொடங்கும் திருவாய்மொழியே, 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் பக்திப் பனுவல் கிடைப்பதற்கு ஒரு திறவு கோலாக இருந்தது.

இத்திருக்கோயில் கும்கோணத்திலுள்ள எல்லாக் கோயில்களையும் விடப் பெரியது. கோபுரமும் மிகப் பெரியதாக உள்ளது. பெருமாள் சந்நிதியும் முன் மண்டபங்களும் ஓர் இரதம் போல் அமைக்கப் பெற்றுள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் இருக்கின்றன.

இங்கு எம்பெருமான் சார்ங்கபாணி என்ற திருநாமத்துடன் அரங்கநாதனைப் போலவே இவரும் கிடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். திருக்கோயின் பின்புறமுள்ள பெற்றாமரைத் திருக்குளம் ஹேம புஷ்கரணி என்றும் இலக்குமி பொறாமரையில் பால கோமள வல்லியாக அவதரித்தமையால் பொற்றாமைக் குளம் என்றும் திருநாமம் பெற்று வழங்குகின்றது.

இத்தலத்து எம்பெருமானைப் பூதத்தார், பேயார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார் என்ற ஏழு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளார். திருமழிசையாழ்வார் இத்திருத்தலத்திற்கு எழுந்தருளி ஆராவமுதனைச் சேவித்திருக்கின்றனர். பெருமாள் வாய் திறந்து ஒரு சொல் பேசாமலும், கைகோலி அணைத்தருளாமலும் அயர்ந்து கண்வளரக் காண்கின்றார். ஆழ்வார் ஏதோ அளவற்ற சிரமத்தால் ஆழ்ந்து உறங்குவதாகக் கருதி,

"நடந்த கால்கள் நொந்தவோ ?
நடுங்க ஞாலம் ஏனமாய்
கிடந்த மெய்கு லுங்கவோ ?
விலங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால்ப ரந்தகா
விரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெழுந் திருந்து
பேசு வாழி கேசனே" (திருசந்த விருத்தம், 812)

என்று பாடுகின்றார். ஆழ்வார் எம்பெருமானை பின்வருமாறு வினவுகின்றார். காட்டில் நடந்ததால் கால்கள் நொந்ததோ ? ஏனமாய்த் தோன்றி உலகெடுத்ததால் உடலும் நொந்ததோ ?

மலைகளையும் காடுகளையும் கடந்து வரும் காவிரிக் கரையிலே திருக்குடந்தையில் முடியரசனே! நீ களைத்து அறிதுயில் கொண்டனை போலும் என்று வினவுகின்றார்.

திருமங்கையாழ்வார் திருக்குடந்தை எம்பெருமானைத் தான் கண்டு களித்த மகிழ்ச்சியில் பின்வரும் பாசுரம் இயற்றுகின்றார்.

"பேரானை, குடநதைப் பெருமானை
இலங்கு ஒளி சேர்
வார் ஆர் வனமுலையாள் மலர் –
மங்கை நாயகனை
ஆரா இன் அமுதை, தென் அழுந்தையில்
மன்னி நின்ற
கார் ஆர் கரு முகிலைக் கண்டு
கொண்டு, களித்தேனே"   (பெரி., திரு., 1606)

இதில் திருப்பேர் நகரானை, திருக்குடந்தைப் பெருமானை ஒளிவிளங்கும் அழகிய மலர்மகள் மணாளனை ஆராவமுதனை, திருவழுந்தூரில் இருக்கும் கறுத்த மழை முகில் போல் இருப்பவனை நான் கண்டு களித்தேன் என்று ஆனந்தம் களிப்பதாக ஆசிரியர் கூறுகின்றார்.

30. திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்

ஒப்பிலியப்பன் சந்நிதி கும்பகோணத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. எம்பெருமானைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார் பெருமக்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார் இந்த எம்பெருமானை 'விண்ணகருள் பொன்மலை' என்று உருவகிக்கின்றார். திருமொழியில் சம்சாரத்தில் தமக்கு உண்டான வெறுப்பையும் விண்ணகரப்பனிடம் தமக்கு உள்ள விருப்பையும் அவனது திருவுள்ளத்தில் படும்படி ஒரு முறைக்கு ஒன்பது முறை விண்ணப்பிக்கின்றார்.

பாற்கடலை கடையப் பெற்றபொழுது அதில் தோன்றிய நஞ்சினை அரனுக்கு உண்ணக் கொடுத்தாய்; புறவமுதாகிய உப்புச் சாற்றினை உம்பர்கட்களித்தாய்; "சீதக்கடலுள் அமுது" அன்ன பிராட்டியாகிய உள்ளமுதினை நீ ஏற்றுக் கொண்டாள். கரிய திருமேனியை உடையாய். உன் திருமேனியில் சிவனுக்கு வலப்புறத்தில் இடமளித்தாய். திரிபுரம் எரித்தபோது அவனுக்கு அழல்நிற அம்பானாய் பிரளய காலத்தில் இரு சுடர்களையும் பல்வேறு உலகங்களையும், அவற்றிலுள்ள பிராணிகளையும் நின் திருவயிற்றில் வைத்துப் பாலகனாய் ஓர் ஆலிலையால் திருக்கண் வளர்ந்தாய். ஒலிகட்கெல்லாம் மூல காரணமான அகரமாய் இருக்கின்றாய். பிரணவத்தின் பொருளாகத் திகழ்கின்றாய். உன்னைச் சேவிப்பதாகிய ஒரு பேற்றினை எனக்கு அருள் செய்வாயேல், அடியேன் 'இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான் வேண்டேன்' என்று பேசுகின்றார். நம்மாழ்வார் திருவிண்ணகரப்பனை,

"என் அப்பன் எனக்கு ஆய், இகுள் ஆய்,
என்னைப் பெற்றவள் ஆய்,
பொன் அப்பன், மணி அப்பன், முத்து

அப்பன், என் அப்பனும் ஆய்,
மின்னப் பொன் மதிள்சூழ்
திருவிண்ணகர் சேர்ந்த அப்பன்,
தன் ஒப்பார்இல் அப்பன், தந்தணன் – தன்
தாள் நிழலே" (திருவாய்மொழி, 3481)

என்ற பாசுரத்தில் எம்பெருமான் எனக்குத் தந்தையாகயும், தாயாயும், செவிலித் தாயாயும் உள்ளவன். தங்கத்தைப் போல் மணியைப்போல முத்தைப்போல் உள்ளான் என் அப்பன். நல்ல ஒளி பொருந்திய மதிள்களால் சூழ்ந்த திருவிண்ணகர் உள்ளான். அவனுக்கு ஒப்பானவர் யாரும் இல்லை. அவன் திருவடி நிழலை எனக்குத் தந்துள்ளான் என்று பெருமிதப் படுகின்றனார்.

நம்மாழ்வார் இப்பாசுரத்தில் குறிப்பிடும் தன் ஒப்பார் இல் அப்பன் 'தான் சுருங்கிய முறையில் ஒப்பிலியப்பன் தல மான்மியப்படி உப்பில்லா உணவைத் திருவமுது செய்பவனாதலால் உப்பிலியப்பன்' என்றும் வழங்கப் பெறுகின்றான். இப்பாசுரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன், திருவிண்ணகரப்பன் என்ற ஐந்து வடிவங்களுடன் ஆழ்வாருக்குக் காட்சி அளித்ததாகத் தெரிகின்றது. இத்திருக்கோயிலின் புஷ்கரணிகளாக அஹோர புஷ்கரணியும், ஆர்த்தி புஷ்கரணியும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் சுத்தானந்த விமானம் அம்சம் கொண்டதாகும். தல விருட்சமாக துளசி உள்ளது.

31. நந்திபுரத்து விண்ணகரத்து நாதன்

இத்தலம் கும்பகோணத்தில் இருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நந்தி புரத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் மட்டிலுமே பத்து பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

"தீது அறு நிலத்தொடு, எரி, காலினொடு,
நீர், கெழு விசும்பும் அவை ஆய்,
மாசு அறு மனத்தினொடு உறக்கமொடு
இறக்கை அவை ஆய பெருமான்,
தாய் செற உளைந்து, தயிர் உண்டு, குடம் ஆடு
தட மார்வர், தகை சேர்
நாதன் உறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் –
நண்ணு மனமே!" (பெரி., திரு., 1438)

என்ற பாசுரம் முதல் பாசுரமாகத் தொடங்கி மங்களா சாசனம் செய்துள்ளார். 'நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரமே' ஆகும். நந்திதேவர்க்குக் காட்சி தந்த நகரமாதல் பற்றி நந்திபுரம் விண்ணகரம் என்ற திருநாமம் பெற்றதாகவும் உரைப்பர். இப்பாசுரத்தில் இறுதியடியிலுள்ள 'நாதன் உறைகின்ற நகர்' என்ற சொல்றொடரால் இத்திருப்பதி, 'நாதன் கோயில்' என்ற திருப்பெயரால் பெருவழக்காக அறியப்பெறுகின்றது. பாசுரங்கள் தோறும் நந்திபுர விண்ணகரத்தை நாடுமாறு மனத்தை ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார்.

இத்தகைய எழிலார்ந்த திருத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் நாதன் ஐம்பெரும் பூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன். எல்லாத் சேதநர்களின் எண்ணங்கட்கும் ஊக்கம் தருபவன். கண்ணனாகத் திருவவதரித்த காலத்து தயிர் பால் நெய் முதலியவற்றைக் களவு செய்து உண்டவன். அக் குற்றத்திற்காக யசோதைப் பிராட்டியால் கட்டுண்டவன். குடக்கூத்தாடிய பெருமான், பாலனாய் உலகேழும் தனது திருமேனியளவில் ஒடுங்கும்படி வியத்தகு முறையில் திருவமுது செய்தவன். இவ்வாறு உண்ட உலகங்களைப் படைப்புக் காலத்தில் வெளிப்படுத்தியவன். அசுரர்களைக் கொன்று குவித்து வெற்றி கொண்ட பெருமான். திருவாழி, திரிசங்கு, கதை, வாள், வில் ஆகிய ஐந்து ஆயுதங்களைத் திருக்கையில் ஏந்தியவன். தம்பியுடனும், துணைவியுடனும் வெம்பி எரி கானகத்தில் உலாவித் திரிந்த காகுத்தன். தியானத்திற்குத் தகுந்த மூர்த்தியாக நந்திபுர விண்ணகரத்தில் திருக்கோயில் கொண்டநாதன். இங்ஙனம் எம்பெருமானுடைய பெருமைகளைப் பேசிய ஆழ்வார் தம் மனத்தை நோக்கி, "நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று ஒரு பலமுறை ஆசிரியர் எடுத்து இயல்புகின்றார் (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–1, ப.89).

விண்ணகரப் பெருமாள் என்றும், சகந்நாதன் என்றும், நாதப் பெருமாள் என்றும் திருநாமங்களுடன் வழங்கப்பெறுகின்ற இத்திருத்தலத்து எம்பெருமான் மேற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். தாயாரின் திருநாமம் சண்பகவல்லி என்பது, இவரையும் சேவித்து இவரது திருவருளைப் பெறுகின்றார் ஆசிரியர். இந்நிலையில் திவ்ய கவியின் திருப்பாசுரமும், நினைவிற்கு வர, அதனையும் ஓதி உள்ளங்கரைகின்றார் ஆசிரியர்.

32. திருநறையூர் நின்ற நம்பி

திருநறையூர் என்ற திவ்யதேசம் கும்பகோணத்தில் இருந்து சுமார் ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருநறையூர் தலம் திருமங்கையாழ்வாரின் சிற்றின்பம், வீரம், பக்தி, பேரின்பம் ஆகிய நான்கும் கூடிய வாழ்க்கையில் அதிகத் தொடர்புடையதாகும். அடியாரின் வளர்ப்பு மகள் குமுதவல்லியின் பேரழகில் மயங்கிய திருமங்கையார் அவளை மணம் புரிந்திடச் சென்றபோது,

எம்பிரானின் பன்னிரண்டு நாமங்களையும், பஞ்ச சம்காரமாக முத்திராதானம் பெற்ற பக்தன் ஒருவனே என்னை மணம் புரிந்திட வரவேண்டும் என்று நிபந்தனை ஒன்றினை குமுதவல்லி வைத்தாள்.

அந்த நிபந்தனை எந்த ஒரு இராஜகுல வம்சத்து மன்னராலும் ஏற்கக் கூடாததாக இருந்தது. ஓராண்டு காலத்திற்குத் தினந்தோறும் ஆயிரத்தெட்டு வைணவர்களுக்குத் திருவமுது படைத்து அவர்களின் பாதம்பட்ட தீர்த்தத்தைப் பருகி மீதியான எச்சிலை மட்டுமே உணவாக உட்கொண்ட பின்னரே, திருமங்கையார் தன்னை மணம் செய்து கொள்ள முடியும் என்பதே அதற்கான விளக்கம். இத்தகைய கடுமையான நிபந்தனையை ஒரு பெண் தனக்கு விதித்த போதும், அதைத் தட்டிக் கழிக்காமல் அவள் மீது கொண்ட காதலால், காதலித்த நங்கையின் வேண்டுகோளைக் குறைவின்றிச் சிற்றின்ப சாகரத்தில் திருமங்கையார் திளைத்தார்.

அதன் பின்னர் பக்தி வயப்பட்டுப் பேரின்ப நிலைக்குள் அவர் பிரவேசித்தார் என்பது வரலாறு. ஸ்ரீவரங்கநாதப் பெருமாள் திருமங்கையாரின் கவித்துவத்தைக் கண்டு மயங்கி, 'திருமங்கையே! நீ மதில் பகுதியினை நறைலூரில் கட்டு, 'மடலை அரங்கத்தில் பாடு" என ஆணையிட எவருக்குமே அடங்காத குணம் கொண்ட திருமங்கை ஸ்ரீரங்க நாதரின் ஆணையும் மீறி ஸ்ரீரங்கத்தில் மதிலைக்கட்டி நறையூரில் ஒரு மடலுக்கு இருமடலாகப்பாடி நறையூர் நம்பியை தம் பக்தியால் நெகிழ வைத்த பெருமை திருமங்கை ஆழ்வாருக்கு உண்டு.

திருநறையூர் நம்பிக்கு மற்ற மூலவர்கள் போல் நான்கு கரம் இல்லாமல் இரு கரங்கள் மட்டுமே உள்ளன. நினைத்தவை நினைத்தபடி சித்தரிக்கக்கூடிய அருள் நிறைந்த சித்திஸ்வரன் கோயிலும் இவ்வூரில் உள்ளது. இத்ருக்கோயிலின் புஷ்கரணிகளாக மணிமுத்தாறு புஷ்கரணி சர்வ தர்ஷண தீர்த்தம், ப்ரத்யும்ண தீர்த்தம், அனிருத்த தீர்த்தம், ஸாம்பதீர்த்தம் போன்றவை உள்ளன. இங்குள்ள விமானம் ஸ்ரீநிவாச விமானமாகும். இத்திருக் கோயிலில் நூற்றிப்பத்து பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

நறையூர் நம்பியின் பெருமைகளைப் பற்றி பேசும்போது ஆழ்வாரின் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. எம்பெருமானின் திருமேனியைப் பற்றி கூறுமிடத்து,

"பவ்வநீர் உடை ஆடை ஆகச் சுற்றி
பார் அகலம் திருவடியா, பவளம் மெய்யா,
செவ்விமா திரம் எட்டும் தோளா, அண்டம்
திருமுடியா நின்றான்" (பெரிய திருமொழி, 1500)

என்றவாறு எம்பெருமானுக்குக் கடல் திருவரையில் உடுக்கும் ஆடையாகின்றது. நிலப்பரப்பெல்லாம் திருவடியாகின்றது. வாயு மண்டலம் முழுவதும் திருமேனியாகின்றது. திசைகள் எட்டும் திருத் தோள்களாகின்றன. அண்ட கடாகம் திருவ பிஷேகமாகின்றது என்று உலக வடிவமாக இருக்கும் நிலையை உருவகத்தாலே அநுபவிக்கின்றார் ஆழ்வார் எனச் சுட்டிக்காட்டுகின்றார் ந.சுப்புரெட்டியார் (சோழநாட்டுத் திருப்பதிகள், பாகம்–1, ப.50).

33. திருச்சேற்றை எம்பெருமான்

இத்திருத்தலம் கும்பகோணத்திலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. கோயிலுக்கு முன்புறத்தில் ஒரு பெரிய தெப்பக்குளம். இது சார புஷ்கரணி என்று வழங்கப் பெறுகின்றது. திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்தலத்து எம்பெருமானை மங்களா சாசனம் செய்துள்ளார்.

'திருச்சேறையும் அவ்விடத்து எம்பெருமானையும் பணிகின்ற பாகவதர்களே எனக்கு உத்தேசயர்' என்று கூறித் திருச்சேறையிடத்தும் அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானிடத்தும் பக்தி பெருக்கை வெளியிடுகின்றார்.

"கண்சோர, வெம் குருதி வந்து இழிய,
வெம் தழல்போல் கூந்த லாளை
மண் சேர முலை உண்ட மா மதலாய்!
வானவர் – தம் கோவே! என்று,

விண்சேரும் இளந் திங்கள் அகடு உரிஞ்சு மணி
மாடம் மல்கு செல்வத்
தண் சேறை எம்பெருமான் தாள் தொழுவார்
காண்மின் – என்தலை மேலாரே” **(பெரி., திரு., 1578)**

என்றவாறு “கண்கள் சுழன்று சோரவும், வெப்பக் குருதி வெள்ளம் வெளிப்படவும், தீத்தழல் போல் சிவந்த கூந்தலுடைய பூதனை விழும் வானவர் தலைவனே! என்று வானில் திரியும் இளம்பிறை வயிற்றைத் தொடும் மணிமாளிகைகள், செல்வம் வாய்ந்ததுமாய்த் திருச்சேறை எம்பெருமானைத் தொழுவார். தம் திருவடிகளைத் தலைமேல் ஏற்பேன் என்று தன் பக்தி நிலையை ஆழ்வார் காட்டுகின்றார்.

இத்தலத்து எம்பெருமான் பெரியபிராட்டியாரைத் திருமார்பில் வைத்துக் கொண்டிருப்பவன் கன்றினால் விளவெறிந்தவன். இவனே திருச்சேறையில் நித்தியவாசம் செய்பவன். இவன் திருவடிகளைச் சேவிப்பவர்கள் ஒரு நொடிப்பொழுதும் என் நெஞ்சை விட்டு நீங்கார் என்ற பாசுரத்தை ஓதியும் ஆசிரியர் உள்ளம் கரைகின்றார்.

பெருமானின் சிறப்பைக் கூறுமிடத்து “தேர்வீரனான இராவணனுடைய இலங்கை மாநகரைப் பொடிபடுத்தின பெருவீரனே! என்று சொல்லித் திருச்சேறை எம்பெருமானுடைய பல பல திருநாமங்களை வாயாரப் பாடும் பெருமையுடையார் எவரோ அவரை ஒரு நாளும் பிரியேன். பிரகலாதாழ்வானைக் காத்தருள வேண்டி நரசிங்க மூர்த்தியாத் தூணில் தோன்றி இரணியனின் மிடுக்கைப் பொடித்த எம்பெருமானுக்கே அடிமையாயிருப்பனேயன்றி சமணர் பௌத்தர் முதலானவர்களுடைய திரளில் சேரக் கடவனல்லேன். பாகவதர்களைச் சேவிக்கப் பெற்றதனால் தமக்குண்டான எல்லை கடந்த மகிழ்ச்சிப் பெருக்கைப் பேசி, வஞ்ச நெஞ்சனான எனக்கு இப்படிப்பட்ட மகிழ்ச்சியை அநுபவிக்கும்படியான பேறு எங்ஙனம் வாய்த்ததோ? தெரியவில்லையே! என்று வியப்பெய்துகின்றார் ஆழ்வார் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

“திருச்சேறை எம்பெருமானைச் சேவிக்கச் செல்பவர்கள் வேறு மலர்களைத் தேட வேண்டா, இத் திருமொழிப் பாசுரங்களை அநுசந்நிதித்தாலே பூவிட்டதற்கும் மேலாக எம்பெருமானின் திருவுள்ளம் உசுக்கும்” என்று ஆழ்வாரே சொல்லியுள்ளதை எண்ணி வியம்பெய்துகின்றார் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார்.

34. வெள்ளியங்குடிக் கோலவில் இராமன்

சுக்கிரனான ‘வெள்ளி’யால், வழிபட்ட தலம் என்பதினால் ‘திரு வெள்ளியங்குடி’ எனப் பெயர் பெற்றது. இத்தலத்து மூலவர் கோமளவல்லி ராமர் கிடந்த கோலத்துடன் கிழக்கு முகம் நோக்கி சேவை தருகின்றார். பிரம்மா, இந்திரன், மயன், மார்க்கண்டேயர், பராசுரர், சுக்கிரன், பூமாதேவி ஆகியோருக்கு இத்தலத்துப் பெருமாள் பிரதியட்சம் ஆனவர்.

இத்தலத்து தாயார் மரகதவல்லித் தாயார் ஆவார். உற்சவமூர்த்தி, சிருங்கா ரசுந்தரன் என்று அழைக்கப்படுகின்றார். இத்தலத்து விருட்சமாக வாழைமரம் விளங்குகிறது. இத்தலத்தின் புஷ்கரணிகளாக சுக்கர தீர்த்தம், பராசர தீர்த்தம், சந்திர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் ஆகியவை

விளங்குகின்றன. இங்குள்ள விமானம் புஷ்கலா வர்த்த விமானமாகும். இத்திருக்கோயில் பத்து பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களா சாசனங்கள் செய்துள்ளார்.

பரத்துவ நிலை, வியூக நிலை, விபவ நிலைகளிலுள்ள எம்பெருமானே அர்ச்சை நிலையில் திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியுள்ளார் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம் என்பது ஆசிரியர் வாயிலாக அறிகிறோம். இத்திருக்கோயிலைப் பற்றி பேசும் ஆழ்வார்,

"முடி உடை அமரர்க்கு இடர் செய்யும் அசுரர் –
தம் பெருமானை, அன்று, அரி ஆய்,
மடியிடை வைத்து மார்வம் முன் கீண்ட
மாயனார் மன்னிய கோயில் –
படியிடை மாடத்து, அடியிடைத் தூணில்
பதித்த பல் மணிகளின் ஒளியால்
விடி பகல், இரவு என்று, அறிவு – அரிது ஆய
திருவெள்ளியங்குடி அதுவே" (பெரி., திரு., 1345)

என்ற பாசுரத்தில் முடிசூடிய தேவர்களுக்குத் துன்பம் இழைத்த அசுரர்களுக்கு அரசனாகிய இரணியனை, ஆளரியாகத் தோன்றி தன் மடியிலே வைத்து, அவன் மார்பைக் கிழித்து எறிந்த மாயோன் உறையும் இடம். சீரமைந்த மாடங்களில் நட்டுள்ள கம்பங்களில் பதித்த பலவகையான மணிகளின் ஒளியால் விடியில் பகல், இரவு என்று அறியாதவாறுள்ள திருவெள்ளியங்குடியாகும் என்று அதன் சிறப்பைக் கூறுகின்றார். பிருகு முனிவர் நீண்டகாலம் தவம் புரிந்து எம்பெருமானைக் கண்டு பேரின்பம் எய்தினமையால் 'பார்க்கவபுரி' என்றும் இத்தலம் வழங்கப் பெறுகின்றது.

35. புள்ளம் பூதங்குடிப் புனிதன்

புள்ளம் பூதங்குடி என்ற இத்திருத்தலம் மயிலாடுதுறை – திருச்சி இருப்பூர்திப் பாதையில் சுவாமி மலை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. திருமங்கையாழ்வார் ஒருவரே இத்தலத்து எம்பெருமானை மங்களா சாசனம் செய்துள்ளார். இந்த ஆழ்வார் பாசுரத்தில் முற்பகுதியில் எம்பெருமானைப் புகழ்கின்றார்.

"துன்னி, மண்ணும் விண் நாடும்,
தோன்றாது இருள் ஆய் முடிய நாள்,
அன்னம் ஆகி, அரு மறைகள்
அருளிச் செய்த அமலன் இடம்" (பெரி., திரு., 1356)

மண்ணிலும் வானிலும் அறிவின்மையாகிய இருளே அடர்ந்து சூழ்ந்திருந்த காலத்திலே அன்னவடிவுடன் அரிய தேவங்களை அருளிச் செய்த புனிதன் வாழிடம். மேலும் இப்பெருமானின் சிறப்பு கூறுமிடத்து, வாமன உருவத்துடன் சென்று மாவலியை வஞ்சித்து எல்லாவுலகங்களையும் சுவாதீனப்படுத்திக் கொண்டவன். கஜேந்திரன் துன்பம் தவிர்த்த புனிதன். குதிரை வடிவத்துடன் வந்து கேசி என்னும் அசுரனின் வாயைக் கீண்டவன். கோவர்த்தன மலையால் இந்திரனின் கல்மாரியைப் பழுதாக்கினவன். இராவணின் இருபது தோள்களையும், அறுத்தொழித்த

வல்வில்லையுடைய இராமன். உருத்திரனைப் புறமுதுகிட்டோடச் செய்து வாணனின் ஆயிரந் தோள்களை அறுத்தெறிந்த பெருமான். இத்தனை அரிய செயல்களை ஆற்றின எம்பெருமானே திருப்புள்ளம் பூதங்குடியில் கோயில் கொண்டிருப்பவன். இத்தலத்து எம்பெருமானின் திருநாமம் வல் வில்லி இராமன் என்பது திருமங்கையாழ்வார் இட்ட திருநாமம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். தாயார் பொற்றாமரையாள் என்ற திருநாமம் கொண்டவர். மூலவராகிய இராமன் கையில் திருவாழி திருச்சங்குகளுடன் காட்சி தருவது எங்கும் காணாத காட்சியாகும். அன்னையையும் அப்பனையும் திருமொழிப் பாசுரங்களால் மிடற்றொலி கொண்டு ஓதி உள்ளங்கரைகின்றார் ஆசிரியர். இத்தலத்தில் இருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருவவதரித்த மண்டங்குடி என்ற ஊர் உள்ளது.

36. ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயன்

இத்திருத்தலம் கும்பகோணத்திலிருந்து சுவாமி மலை வழியாகச் செல்லும் பேருந்து சாலையில் எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இத்திருத்தலம் புள்ளம் பூதங்குடியினின்றும் ஒரு கி.மீ. தொலைவிலுள்ளது. திருமங்கையாழ்வார் மட்டிலும் இத்திருத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார்.

“முன்னவனை, மூழிக்களத்து விளக்கினை,
அன்னவனை, ஆதனூர் ஆண்டு
அளக்கும் ஐயனை,
நென்னலை, இன்றினை,
நாளையை – நீர்மலைமேல்” (பெரி., திருமடல், 2781)

எம்பெருமானின் திருநாமம் ஆண்டு அளக்கும் ஐயன். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு கிடந்த திருக்கோலத்தில் மரக்காலைத் தலையின்கீழ் வைத்துக் கொண்டு சேவை சாதிக்கின்றான். இது கால தத்துவத்தைத் தன் ஆட்சியில் கொண்டுள்ளான் என்பதனைக் குறிப்பிடுகின்றது. தாயார் அரங்கநாயகியார் என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுகின்றார். திருமங்கையாழ்வாருக்கும் காமதேனுவுக்கும் இங்கு எம்பெருமான் காட்சி தந்ததாக வரலாறு. திருமங்கை யாழ்வாரின் திருமேனி எம்பெருமான் தங்கியுள்ள கருவறையில் இருப்பது இத்திருத்தலத்தின் சிறப்பாகும். காமதேனுவுக்குச் சேவை சாதித்தது பற்றி இத்திருத்தலம் ஆ+தன்+ஊர் =ஆதனூர் என்ற திருநாமம் பெற்றதாகச் சொல்வர் என்பது ஆசிரியரின் கருத்து.

37. ஆற்றங்கரை கடக்கும் கண்ணன் (கவித்தலம்)

வானர இனமான ஆஞ்சநேயருக்கும், யானையாகப் பிறந்து பக்தியால் ஆழ்வாரின் அந்தஸ்தைப் பெற்ற கஜேந்திரனுக்கும் தன் கிடந்த கோல புஜங்க சயனத்தில் எம்பெருமான் சேவை தந்த தலம் கவித்தலம் எனப்படும். ஆதிமூலப் பெருமானாகிய ஸ்ரீநாராயணர் இத்தலத்தில் ஆஞ்சநேயருக்கும், யானைக்கும் கிடந்த கோல சேவையை அருளியிருக்கிறார். கபியான

குரங்கிற்குக் கிடந்த கோல சேவை கிடைத்தபடியால் இத்தலம் கபித்தலம் என்று பெயர் பெற்றது என்பர்.

இத்திருப்பதி எம்பெருமானைத் திருமழிசையாழ்வார் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

"கூற்றமும் சாரா; கொடுவினையும் சாரா; தீ
மாற்றமும் சாரா; வகையறிந்தேன் – ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல் கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்து எமக்கு" (திருவந்தாதி, நான்முகன், 2431)

என்ற பாசுரத்தில், "நான்முகன் முதலிய தேவர்களுக்கு அடையத் தக்கவனாய் திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருள்பவனே திருக்கபித்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ளான். இப்பெருமானே பண்டொருகால் பாரதப்போரில் தேர்த்தட்டில் நின்று பார்த்தனைப் பொருளாகக் கொண்டு அனைவருக்கும் உய்யும் பொருளான சரம சுலோகத்தை அருளிச் செய்தனன். இந்தத் தத்துவ பொருள் நெஞ்சில் பதிந்திருப்பதனால் இனி நான் எமபயம் அணுகாமலும் தீய விஷயங்கள் அணுகமாலும் இருக்கத் தக்க உபாயத்தை அறிந்தவனானேன் என்கிறார் ஆழ்வார் என்பதை உணர்த்துகின்றார் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார்.

38. திருக்கண்ணங்குடிக் கண்ணன்

மகரிசிகளால் கட்டப்பட்ட நிலையில் கண்ணபெருமான் குடிகொண்ட தலமானதினால், திருக்கண்ணங்குடி என்று பெயரை இத்தலம் பெற்றது. திருக்கண்ணங்குடி திருவாரூர் – நாகப்பட்டினம் இருப்பூர்திப் பாதையில் கீழ்வேலூர் இருப்பூர்தி நிலையத்தருகில் உள்ளது.

கண்ணன் கோயில் கொண்டிருப்பதால் 'கண்ணன் குடி' என்ற திருநாமம் பெற்றது. வடமொழியில் இது 'கிருஷ்ணாரண்ய ஷேத்திரம்' என்று வழங்குகின்றது. தமிழ்நாட்டின் ஐந்து கண்ணன் கோயில்களில் இதுவும் ஒன்று. திருமங்கையாழ்வார் மட்டிலும் இத்தலத்து எம்பெருமானைப் பத்து பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார். இத்திருக்கோயிலில் சேவை சாதிக்கும் எம்பெருமான் திருப்பாற்கடலில் பாம்பனையில் பள்ளி கொண்டிருக்கும் வியூக மூர்த்தியே திருக்கண்ணங்குடியில் அர்ச்சாவதார வடிவத்துடன் எழுந்தருளியுள்ளான்.

"வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளர வின் அணை மேனி
சங்கமார் அங்கை தடமலர் உந்திச்
சாம மா மேனி என் தலைவன்" (பெரி., திரு., 1748)

என்பது ஆழ்வார் திருவுள்ளம். கஜேந்திரன் என்ற யானை அரசு முதலையால் பிடிக்கப் பெற்று வருந்திய போது அம்முதலை துண்டாக அறும்படி திருவாழிப் படையை ஏவி, அந்த யானை சூட்ட நினைந்த தாமரைப் பூவை ஏற்றுக் கொண்டவன். எம்பெருமானின் இச்சந்நிதியில் ஆழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் பாடி உள்ளம் கரைகின்றார் ந.சுப்புரெட்டியார்.

39. நாகை அழகியார்

பிரம்மாண்டபுராணத்தின் 'உத்தர காண்டத்தில்' பத்து அத்தியாயங்களில் இத்தலம் பேசப்படுகிறது. இத்தலம் இருக்கும் பகுதிகளைப் புராண காலத்தில், 'சௌந்தர்ய ஆரண்யம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தலத்திற்கு வந்த திருமங்கையாழ்வார் நாகை அழகியாரின் அழகிலே நெஞ்சைப் பறிகொடுத்துத் தம் ஆண்தன்மையை இழந்து பெண்மை நிலை எய்திப் பரகால நாயகியாகின்றார். இத்திருக்கோயிலில் நீலமேகப் பெருமாள் கையில் கதையுடன் நின்ற திருக்கோலத்தில், கிழக்கே திருமுகம் நோக்கி சேவை சாதிக்கின்றார்.

சௌந்தர்ய ராஜன் உற்சவராக விளங்கி வருகிறார். இத்திருக்கோயில் சௌந்தர நாராயண ஷேத்திரம் என வழங்கப் பெறுகின்றது. இங்கு எம்பெருமான் மூன்று நிலைகளில் காட்சி தருகின்றார். சயனத் திருக்கோலத்தில் அரங்கநாதரும், இருந்த திருக்கோலத்தில் கோவிந்தராசரும், நின்ற திருக்கோலத்தில் சௌந்தரிய ராசனும் சேவை சாதிக்கின்றனர். நாகை அழகியாரின் விமானத்திற்கு ஐந்து கலசங்கள் உள்ளன. இது எங்கும் காணப்பெறாதது. திருமால் துருவனுக்குக் கருடன் மீது அமர்ந்து சேவை சாதித்தது இத்திருத்தலத்தில்தான். திருத்தாயாரின் உற்சவ மூர்த்தி கஜலட்சுமியாக அமைந்துள்ளது.

திருநாகையில் பெரிய கோபுரம் நாகை அழகியாரின் இராசகோபுரம் தான். இதனைத் தவிர பதினைந்து விமானங்கள் உள்ளன. அரங்கநாதர், கோவிந்தராசர், பச்சை வண்ணர், பவள வண்ணர், வரதராசர், இராமர், சீநிவாசர், வைகுந்த நாதர், ஆண்டாள், ஆஞ்சனேயர், ஆழ்வார்கள் இவர்கட்குத் தனித்தனி, சிறுகோயில்கள் இத்திருக்கோயிலினுள் அமைந்துள்ளன. பெரிய திருவடிக்கும் தனிக்கோயில் உண்டு. இவர் இருந்த திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். இத்திருத்தலத் மற்றோர் அரியகாட்சி அட்டபுய நரசிம்ம சுவாமியின் சேவை. இவற்றையெல்லாம் சேவித்துக் கொண்டு இராகோபுரத்தருகில் ஆழ்வாரின் திருப்பாசுரங்களை மிடற்றொலி கொண்டு சேவிக்கின்றார் ஆசிரியர்.

40. கண மங்கைக் கற்பகம்

இவ்வுலக வாழ்வில் பிறப்பெடுத்த எவரானாலும் இத்தலத்தில் தங்கி ஓர் இரவு இருந்தாலே அவர்தம் இறப்பின்போது நிச்சயம் பரமபதம் அடைந்திடுவர் என்னும் நம்பிக்கை நிலவி வருகிறது. இத்திருத்தலத்தில் மூலவரான பக்தவச்சல பெருமாள் நின்ற கோலத்துடன் கிழக்கு முகம் நோக்கியபடி சேவை தருகின்றார். தாயார் அபிஷேக வல்லி ஆவார்.

இத்திருத்தலத்தில் உள்ள விமானம், மண்டபம், பத்ரி வனம், புனித தீர்த்தமான காவிரி ஆறு, தல அமைப்பு, நகரம், புஷ்கரணி ஆகிய ஏழும் சிறப்பைக் கடந்த அமிர்த மயமான அம்சத்துடன் இருப்பதனால் 'சப்தாமிர்த சேத்திரம்' என இத்தலம் அழைக்கப்படுகின்றது. இத்தலத்துப் பெருமாளான பத்ராவதிப் பெருமாள் மிகப் பெரிய திருமேனியை உடையவராக உள்ளார். இத்தலத்தில் உள்ள கருடன் தனிச் சந்நிதி கொண்டு பெருமாளை நோக்கி கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கின்றார்.

திருநின்றவூரும், திருக்கண்ண மங்கையும், திருமகள், திருகண்ணனின் மங்கை என்ற பெயரின் அடிப்படையில் பெரிய பிராட்டியாரின் திருநாமத்தைப் பெற்றுள்ளன. இத்திருக்கோயிலின் புஷ்கரணியாக தர்சரு புஷ்கரணி விளங்குகிறது. இத்திருக் கோயிலில்

பதினான்கு பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருச்சேறையில் இருந்து இருப்பத்தைந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பெரிய திருமடலில் ஆழ்வார் 'கண மங்கைக் கற்பகம்' என்ற திருநாமமிட்டு இனியராகின்றார்.

"ஏற்றினை, இமயத்துள் எம் ஈசனை
இம்மையை, மறுமைக்கு மருந்தினை,
ஆற்றலை, அண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐயனை, கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை, குரு மா மணிக் குன்றினை,
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை
காற்றினை, புனலை – சென்று நாடி
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே" (பெரி., திரு., 1642)

என்றவாறு அரியேறு போன்றவனை, இமயத்துள் வாழ்கின்ற ஈசனை, இவ் உலக வாழ்க்கைக்கு உரியவனை, அவ் உலக வாழ்க்கைக்கு மருந்தானவனை, பேராற்றல் உடையவனை, அண்டத்துக்கு அப்பால் வாழ்பவனைக் கையில் நேமி ஏந்திய பகைக்குக் காலனை நீலமணிக் குன்றினை, திருநின்ற ஊரில் நின்ற முத்து ஒத்தவனைக் காற்றாய் புனலாய்ப் பொலிபவனை திருக்கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன் என்ற ஆழ்வார் தம் பாசுரத்தில் பாடி இன்புறுகின்றார்.

41. கச்சிக்கார்மேனி அருளாளர்

இந்தக் கோவிலில் வரதராஜ பெருமாள் மூலவராக உள்ளவர். அபயகரம் கொண்டு நின்ற கோலத்தில் சேவை புரிந்து வருகிறார். தாயார் பெருந்தேவி ஆவாள். ஒரு சமயம் பிரம்மதேவன் அத்திகிரியை உத்திரவேதியாக வைத்து அசுவமேத யாகம் செய்தார். அப்போது யாகத்தில் இருந்து தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் எழுந்தருளி பிரம்மதேவனுக்கு வரம் அளித்தமையால் வரதராஜன் என்ற பெயர் பெற்றார்.

இத்திருக்கோயிலில் முதன்முதலாக யோக நரசிம்மரே பிரதிஷ்டை செய்யப்பட்டது. நூறுகால் மண்டபத்திற்கு வடக்கில் உள்ளது சேஷதீர்த்தம். இப்பகுதியில்தான் ஒருசமயம் ஆதிசேஷன் பகவானை எண்ணித்தவம் புரிந்துள்ளார். தவம் புரிந்த இடத்தின் நடுவில் நீராழி மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் அடிப்பகுதியில் மாடம் ஒன்று உள்ளது. அம்மாடத்தில் அத்தி மரத்தால் செய்யப்பட்ட அத்தி வரதபெருமாள் ஜலசயனத்தில் உள்ளார்.

நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த சேஷ தீர்த்தத்தில் உள்ள நீரினை முற்றிலுமாக வெளியேற்றுவர். அதன்பின்னர் அத்திருக்கோயிலுக்கு கொண்டு வந்து மாடத்தில் வைத்து மண்டல பூஜை செய்து விட்டு, மீண்டும் மாடத்தில் வைத்து சேஷ தீர்த்தத்தில் நீரை நிரப்பி விடுவார்கள். இத்திருக்கோயிலின் விமானம் புண்ணியகோடி விமானம் ஆகும்.

நீண்டு உயர்ந்த தூண்களும், அழகிய கோபுரமும், நான்குகால் மண்டபமும், திருமஞ்சன மண்டபமும், மகா மண்டபமும், மகா மரியாதை வாசலும் இத்திருக்கோயிலுக்கு மிகுந்த சிறப்பை

அளிக்கின்றன. இங்குள்ள நூல்கால் மண்டபத்தில் நான்கு புறமும் வெகு நுட்பத்துடன் வடிக்கப்பெற்ற கல் சங்கிலிகள் தொங்குகின்றன.

இந்தப் பெருமாளுக்கு "அத்திகிரி" என்ற திருநாமம் உண்டு. இத்தலத்தில் திக்கு யானைகள் வந்து எம்பெருமானை ஆராதித்தமையினால் அத்திகிரி என்று திருநாமம் ஏற்பட்டதாகக் கூறுவர் ஒரு சாரர். இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவம் செய்து மலைவடிம் கொண்டு எம்பெருமானைத் தாங்கிக் கொண்டிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டதாகப் பிறிதொரு சாரார் மொழிவர். இந்த அத்திகிரி அருள்முகிலைப் பூதத்தாழ்வார்,

"என்னெஞ்சம் மேயான் என் சென்னியான் தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் – முன்னம் சேய்
ஊழியான் ஊழி பெயர்ந்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூ ரான்" (இரண்டாம் திருவந்தாதி, 2276)

என்ற பாசுரத்தில் பெருமானின் சிறப்புக் கூறுகின்றார்.

இரணியனின் திண்ணிய மார்பைக் கிழித்தவனும், நீலமணியனும் ஊழிக்காலத்தில் அனைத்துமாக இருந்தவனும், உலகத்தார் போற்றப்படுவானாய்த் திருப்பாற்கடலில் இருப்பவனும், திருவத்தியூரில் உள்ள எம்பெருமான் என் நெஞ்சிலும் தலையிலும் எழுந்தருளியிருக்கிறான் என்று கூறுகின்றார்.

42. சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (திருவெஃகா)

திருவெஃகா மிகப்பழமையான திருக்கோயில். இத்திருக்கோயில் எம்பெருமானைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்ற ஐந்து ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர். கணிகண்ணன் பொருட்டுத் திருமழிசையார் சொன்ன வண்ணம் செய்த பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்ற பேரார்வம் ஏற்படுகின்றது. பெருமாள் அன்பர்களின் தமிழுக்கு வசமாகிப் பின்சென்ற வரலாறு தமிழகத்தின் இதயத்தையே கொள்ளைக் கொண்ட வியப்பை எண்ணி உள்ளம் பூரிக்கிறோம்.

பொய்கையாழ்வார் இத்திருவெஃகாவில் தான் அவதரித்தார். 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள் மேற்கு நோக்கி திருமுக மண்டலங்கொண்டு புயங்க சயனமாகப் பள்ளி கொண்டிருக்கிறார் தாயார் கோமளவள்ளி நாச்சியார் ஆவார். இத்தலத் திருக்குளத்தில் அவதரித்த பொய்கையாழ்வார்,

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் – நான் கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்" (முதல் திருவந்தாதி, 2158)

என்ற பாசுரத்தில், திருவேங்கடதில் நின்றான், வைகுண்டத்தில் இருந்தான், வெஃகாவில் கிடந்தான், மலர்கள் அடர்ந்த அகழிகளையுடைய இனிய அழகிய திருக்கோவலூரில் நடந்தான். இந்த நான்கிடத்தும் உள்ளஞ் சென்றால் நமது துன்பம் கெடும் என்கிறார்.

எம்பெருமானின் மற்றொரு சிறப்பை பேயாழ்வாரின் பாசுரத்தின் வாயிலாக ஆசிரியர் உரைக்கின்றார்.

"இசைந்த அரவமும் வெற்பும் கடலும்
பசைந்தங் கமுது படுப்ப – அசைந்து
கடந்த வருத்தமோ ? கச்சி வெஃகாவில்
கிடந்து இருந்து நின்றதும் அங்கு" **(மூன்றாம் திருவந்தாதி, 2345)**

வாசுகி பாம்பையும், மந்தர மலையையும் கடலையும் பொருத்தி அந்தக் கடலிலே அமுதம் உண்டாகுமாறு கடைந்ததனால் உண்டான களைப்பினாலோ, பெருமான் காஞ்சிப்புரத் திருவெஃகாவில் துயின்றும், திருப்பாடகத்தில் வீற்றிருந்தும், திருவூரகத்தில் நின்று கொண்டும், இருக்கின்ற செங்கண்மாலையை மலர்களைக் கொண்டு வணங்கினால் நம் தீவினைகள் அகன்றோடிப் போய்விடும் என்று திருவெஃகாவின் சிறப்பைக் கூறுகின்றார் (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.199).

43. திருவட்டபுயகரத்து எம்மான்

வைணவ தத்துவப்படி எம்பெருமானுக்கு உருவம் உண்டு. அது திவ்ய மங்கள விக்கிரகம் என்று வழங்கப்பெறும் எம்பெருமானைக் காட்டிலும் அவனுடைய திவ்யாயுதங்கட்குக் கருணை அதிகம். காக்கை வடிவமாக வந்த அசுரனைத் துரத்திச் சென்ற இராமபாணம் அவனை அப்பொழுதே அழிக்கவில்லை. இதற்கு, "இவன் எம்பெருமானைச் சரண்புக்கு உய்யட்டும்" என்னும் அதனுடைய கருணையே காரம் என்று கூறப்படுகின்றது.

பகவான் ஆதிகேசவப் பெருமான் தனது எட்டுக்கரங்களில் ஆயுதங்களை ஏந்தி 'அஷ்டபுஜங்களுடன்' நிற்கும் கோலம். நரசிம்மரைக் கொல்லவே அந்த தோற்றத்தில் வந்தார். இத்திருக்கோயில் மூலவரான ஆதிகேசவப் பெருமாள் மேற்கு முகமாக நின்ற கோலத்தில் சேவை புரிகின்றார். இப்பகவான் கஜேந்திரன் என்னும் யானைக்கு மோட்சத்தை அளித்தமையால், 'கஜேந்திர வரதன்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். தாயார் பத்மாகனி எனப் போற்றப்படும் அலர்மேல் மங்கை ஆவாள். இத்திருக் கோயிலை தொண்டைமான் சக்ரவர்த்தி எழுப்பியதாக கல்வெட்டுகள் மூலமாகவும், சரித்திரச் சான்றுகள் வாயிலாகவும் தெரிய வருகின்றது. கஜேந்திர புஷ்கரணியே இத்திருக்கோயிலின் புஷ்கரணியாக விளங்குகின்றது.

கனிக்கண்ணன், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பிரம்மா ஆகியோருக்கு இப்பகவான் பிரதிட்சயம் ஆனவர். தாயார் கோமள வல்லி நாச்சியார் ஆவார். திருமங்கை ஆழ்வார் ஆறு பாசுரங்களாலும், நம்மாழ்வார் ஒரு பாசுரத்தாலும், திருமழிசை ஆழ்வார் மூன்று பாசுரங்களாலும், பொய்கையாழ்வார் நான்கு பாசுரங்களாலும இத்திருக்கோயிலில் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

காஞ்சியிலுள்ள இத்தலம் அத்திகிரி வரதராஜ பெருமாள் கோயிலுக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இக்கோயிலின் புஷ்கரணியில்தான் பொய்கை ஆழ்வார் பொற்றாமரையில் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் பெருமானின் சிறப்புகளைக் கூறுகின்றார்.

"அகலகில்லேன் இறையும் என்று

அலர்மேல் மங்கை உறை மார்பா!

நிகர் இல் புகழாய்! உலகம் மூன்று

உடையாய்! என்னை ஆள்வானே!

நிகர் இல் அமரர், முனிக் கணங்கள்

விரும்பும் திருவேங்கடத்தானே!

புகழ் ஒன்று இல்லா அடியேன் உன்

அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" (திருவாய்மொழி, 3559)

என்கிறார். அதாவது கணநேரமும் பிரிந்திருக்கேன் என்று கூறும் திருப்பாற் கடல் பிறந்த மலர்மகள் வாழும மார்பையுடையவனே! ஒப்பற்ற புகழ் உடையவனே! மூன்று உலகங்களையும் உண்டாக்கிக் காப்பாற்றி வருபவனே! என்னை ஆள்கின்றவனே! ஈடற்ற வானவர் முனிவர் ஆசைப்பட்டு வழிபடும் திருவேங்கட மலையில் உள்ளவனே! உன்னையன்றி வேறு புகழலற்ற நான் உன் திருவடிக்கீழ் பொருந்திச் சரணம் புகுகிறேன். நீயே அடைக்கலம் தந்து அருள் காட்ட வேண்டும் என்று ஆசிரியர் வாயிலாக இயம்பப்படுகின்றது.

44. உலகளந்த பெருமாள் கோயில்

இந்த உலகளந்த பெருமாள் கோயில் பெரிய காஞ்சியில் நான்கு இராஜ வீதிகள் சூழ ஊரின் நடுவே அமைந்துள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இத்திருக்கோயில். இதன் கீழ்த்திசையில் வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலும், மேற்குப்புறமாகக் காமாட்சி அம்மன் திருக்கோயிலும் அமைந்துள்ளன. உலகளந்த பெருமாள் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் மூன்று சந்நிதிகள் உள்ளன. இவையும் ஆழ்வார்களால் மங்களா சாசனம் பெற்றவை.

பூதத்தாழ்வார் இப்பெருமானின் சிறப்பைக் கூறுமிடத்து,

"அடிமூன்றில் இவ்வுலகம் அன்று அளந்தாய் போலும்

அடிமூன்று இரந்து அவனி கொண்டாய்; படிநின்ற

நீர் ஓத மேனி நெடுமாலே நின் அடியை

யார் ஓத வல்லார் அறிந்து" (இரண்டாம் திருவந்தாதி, 2186)

என்று சிறப்பித்துக் கூறுகின்றார். உலகில் ஒரு கருங்கடல் போல் நின்ற நெடுமாலே; முன் மூன்று அடி மண் வேண்டிக் கொண்டாய், இரண்டடியால் உலகம் முழுவதும் அளந்தாய். மூன்று அடியால் நிலத்தைக் கொண்டாயோ? இல்லை. உன் திருவடிப் பெருமையை அறிந்து ஆர் சொல்லக்கூடும் என்றும் வினவுகின்றார்.

உலகளந்த பெருமாள் கோயில் மிகப்பழமையான பெருமையுடையது. ஆயினும் கவர்ச்சிகரமான சித்திர வேலைபாடுகளும் அற்புதமான சிற்பக்கலை நுட்பங்களும் அமைந்த திருக்கோயில் அன்று இது என்றாலும், கருவறைக்கு மேலுள்ள விமானம் மிகவும் கவர்ச்சி கரமானது என்றே கூறவேண்டும்.

திருநீரகம் திருத்தலம் காஞ்சி உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் வடக்குப்பிரகாரத்தில் அமைந்துள்ளது. இந்த சந்நிதியில் மூலவர் இல்லை. உற்சவ மூர்த்தியான

'ஜகதீஸ்வரர்' நின்ற கோலத்தில் சேவை சாதித்தருளுகின்றார். தாயாரின் திருநாமம் நிலமங்கை வல்லி.

எவ்விதம் ஒரு நீர்த்துறையில் உயர்வு தாழ்வு இன்றி மக்கள் நீராடுகிறார்களோ, அதுபோலவே அருளாகிய நீர்த்துறையில் பக்தியுடன் வழிபடும் அனைவரும் எம்பெருமானால் சரிசமமாக நடத்தப்படுவார்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திருநீரகப் பெருமாள் ஜெகதீஸ்வரராக நின்ற கோலத்தில் நிலமங்கைவல்லித் தாயாருடன் அருள்காட்சி தந்தருளுகின்றார். இத்தலத்தை திருமங்கையாழ்வார் "நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்! " என்ற சொல்லால் மங்களா சாசனம் செய்துள்ளார் (தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.61).

45. திருக்காரகம்

இத்திருக்கோயிலின் மூலவர் கருணாகரப் பெருமாள். தென் திசையில் நின்ற கோலத்தில் சேவை தந்தருளுகிறார். தாயார் பத்மாமணி நாச்சியார். கடலில் உள்ள உப்பு நீர் கருமேகமாகிக் குளிர்ந்த பின் மழையாகப் பொழிந்து இப்பூவுலகினை வளமையாக்குகின்றது. மழை பொழியாவிட்டால் பூமி வறட்சியாகி, உலகில் உயிர்கள் யாவும் துன்பத்திற்குள்ளாகி விடும். அதுபோல் கார்மேக வண்ணத்தைத் தன்நிறமாகக் கொண்ட பகவானது அருள் கிடைக்காது போனால் உலகம் விரைவில் அழிந்து விடும். அவ்வாறு உலகம் அழியாதிருக்க கருணாகரப் பெருமாள், தம் தேவி பத்மாமணி நாச்சியாருடன் நின்ற கோலத்தில் சேவை புரிந்து வருகிறார். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக அக்ராய தீர்த்தம் விளங்குகிறது.

இங்கு திருமங்கையாழ்வார், மங்களா சாசனம் ஒரு பாசுரத்தின் மூலம் செய்துள்ளார். கோபுர விமானம் வாமன விமானமாகும். இவ்விமானம் மிக அழகாகக் காட்சியளிக்கிறது. அதனால் பத்மாமணி நாச்சியார், ரமாமணி நாச்சியார் என்னும் சிறப்புப் பெயரும் நாச்சியாருக்கு உண்டு. திருக்காரகம் என்னும் இத்திவ்ய தேசம் செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ளது. இத்தலமானது திரு ஊரகத்தின் பிரகாரத்திலேயே உள்ளது.

"எத்தனையும் வான் மறந்த காலத்தும்
பைங் கூழ்கள்
மைத்து எழுந்த மா முகிலே பார்த்திருக்கும்
மற்று அவைபோல்
மெய்த் துயர் வீட்டாவிடினும்
வித்துவக் கோட்டு அம்மா! என்
சித்தம் மிக உன்பாலே
வைப்பன் அடியேனே" (பெருமாள் திருமொழி, 694)

என்றவாறு வித்துவக்கோட்டம்மா! விசும்பினின்றும் மழை பொய்ப்பினும் பசும் பயிர்கள் கருமுகிலையே பார்த்திருக்கும் பயிர்களைப் போல் துன்பங்களை நீ போக்க விட்டாலும் நான் என் மனத்தை உன்னிடத்திலேயே மிகவும் செலுத்துவேன் என்றும் வேறு புகலிடம் இல்லாதவர்களால் எதிர்பார்க்கப் பெறுபவனாக இருப்பான் என்று குலசேகர ஆழ்வார் தம் பாசுரத்தில் குறிப்பிடுகிறார்.

46. திருக்கார்வானம்

திரு ஊரகக் கோயில் பிரகாரத்தில் உள்ள இத்திருக் கோயிலின் மூலவர் கள்வர் ஆவார். தாயார் கமலவல்லி ஆவாள். இப்பூவுலகில் உள்ள நீரும், அந்நீரினைப் பொழிகின்ற கார்மேகமும் நானே என்ற உயர் தத்துவமாய் விளங்கியவர் எம்பெருமான். அக் கார்மேகங்கள் தவழுகின்ற வானமும் நானே என்று பொருள்படும் வகையில் மேற்கு முகம் நோக்கியவராகத் திருக்கார்வானக் கள்வராக நின்ற கோலம் கொண்டு கமலவல்லித் தாயாருடன் நின்ற கோலத்தில் சேவை தருகின்றார்.

இக்கோயிலின் தீர்த்தம் கௌரீ தடாகம் ஆகும். கோபுர விமானம் புஷ்கல விமானம் ஆகும். இங்கு ஒரு பாசுரத்தால் திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் தனது பாசுரத்தில்,

“நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத் திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரத்தாய்! கார்வனத்து உள்ளாய்! கள்வா!
காமரு பூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே!”

(திருநெடுந் தாண்டகம், 2059)

என்றவாறு மங்களா சாசனம் செய்துள்ளார். இதில் திருநீரகத்தில் வாழ்பவனே! உயர்ந்த திரு வேங்கட மலையின் உச்சியில் இருப்பவனே! திரு நிலாத் திங்கள் துண்டம் ஊரில் உறைபவனே! திருவூரகத்தில் நின்றவனே! திருவெஃகாவில் துயில்பவனே! நினைப்பார் நெஞ்சில் நிலைப்பவனே! உலகத்தார் ஏத்தும் திருகாரகத்தானே! திருக்கார் வானத்தில் உள்ளவனே! உள்ளங்கவர் கள்வனே! காவிரியின் தென்கரைத் திருப்பேர் நகரானே! என் நெஞ்சில் நிறைந்தவனே! உனது திருவடிகளையே நான் தொழுகின்றேன் என்றவாறு மங்களா சாசனம் செய்துள்ளதாக ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார். மேலும் “ஞான்கனி” போன்ற பரம போக்கியனான உன்னை ஞானியர் உட்கொள்ளக் கருதா நிற்க. நீ வேறொரு பொருளை போக்கியமாக நினைத்து உட்கொள்ளுவது என்னே?” என்ற ஆழ்வாரின் குறிப்பையும் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் எடுத்து இயம்புகின்றார்.

47. திரு ஊரகம்

இந்தப் புண்ணியத்தலம் காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் மூலவராக உள்ளார். உலகினை அளந்திடும் வண்ணம் நடந்த கோலம் கொண்டு மேற்கு நோக்கியவாறு சேவை சாதிக்கின்றார். தாயார் அமிர்தவல்லி ஆவார். திருஊரகம் என்னும் இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சேஷ தீர்த்தமும், நாக தீர்த்தமும் விளங்குகின்றன.

திருக்கோயிலின் விமானம் சாரஸ்ரீ கர விமானமாகும். ஆனால் இப்புஷ்கரணிகளும், விமானமும் தற்போது இல்லாத நிலை. இத்திருக்கோயிலில் உள்ள அனைத்துச் சித்திரங்களும், சிற்பங்களும் சிறப்பான கலைநயத்துடன் அனைவரின் மனதைக் கவர்வதாக உள்ளது.

திருமங்கை ஆழ்வார் நான்கு பாசுரங்களாலும், திருமழிசை ஆழ்வார் இரண்டு பாசுரங்களாலும் இக்கோயிலில் மங்களா சாசனம் செய்துள்ளனர். நம்மாழ்வார் திரிவிக்கிர வடிவில் உள்ள திருவுருவத்தை இவ்வளவு உயரமான திருமேனியை எந்த திவ்ய தேசத்திலும் இல்லை. தீவட்டி வைத்துக் கொண்டுதான் திருமார்பு, திருமுகம், திருஅபிடேகம் முதலியவற்றைக் காண்டல் வேண்டும் எனக் குறிப்பிடுவதை,

"நின்ற ஆறும் இருந்த ஆறும்
கிடந்த ஆறும் நினைப்பு அரியன்,
ஒன்று அலா உருவு ஆய், அருவு ஆய்
நின் மாயங்கள்
நின்று நின்று நினைக்கின்றேன்" (திருவாய்மொழி, 3445)

என்ற பாசுரம் உணர்த்துகின்றது. ஊழிக் காலத்தில் உலகை உண்டு காப்பாற்றிய ஒளிச்சுடரே! நீ நின்றபடியும், இருந்தபடியும், படுத்தபடியும் ஆகிய மூன்றும் நினைக்க ஒண்ணாதவை என்று மாவலியை அடக்குவதற்கு எம்பெருமான் திரிவிக்கிரமனாக வளர்ந்த நிலையை மனக்கண்ணால் கண்டு இங்ஙனம் கூறியதாக கொள்ளலாம் என்று ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் இயம்புகின்றார். திருமழிசையாழ்வாரின்,

"நன்றி ருந்து யோக நீதி
நண்ணு வார்கள் சிந்தையுள்
சென்றி ருந்து தீ வினைகள்
தீர்த்த தேவ தேவனே
குன்றி ருந்த மாட நீடு
பாடகத்தும் ஊரகத்தும்
நின்றி ருந்து வெஃகணைக்
கிடந்த தென்ன நீர்மையே" (திருசந்த விருத்தம், 814)

என்ற பாசுரத்தில் யோக நிலையில் நெறியில் சிறந்தவர் தம் உள்ளத்தில் புகுந்து தீவினைகளைத் தீர்த்தவனே! நீ குன்று போல் உயர்ந்த மாடமாளிகைகள் சூழ்ந்த திருப்பாடகத்தும் ஊரகத்தும் திருவெஃகாவிலும் இருப்பது அருமை என்ன தன்மையதோ? என்ற உள்ளம் கரைய ஓதுகின்றார் ஆழ்வார் என்று ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் கூறித் தாமும் பாசுரங்களை ஓதி உள்ளங்கரைகின்றார்.

48. வைகுண்டப் பெருமாள் (திருப்பரமேச்சுர விண்ணகரம்)

இக்கோயிலின் மூலவராகிய பரமபதநாதர் வீற்றிருந்த கோலத்தில் மேற்கு திசையை நோக்கியபடி சேவை தருகின்றார். தாயார் வைகுந்த வல்லி ஆவாள். தாயாருக்கென்று தனிச் சந்நிதி உள்ளது. இத்திருக்கோயிலின் விமானம் அஷ்டாங்க விமான அமைப்பில் மூன்று அடுக்குகளுடன் காணப்படுகிறது. மேலடுக்கில் பகவான் நின்ற கோலம் கொண்டும், மத்திய

அடுக்கில் பெரிய பிராட்டியுடனும், பூமா தேவியுடனும் கிடந்த கோலம் கொண்டும், சேவை சாதித்தருளுகின்றார். ஆனால் இம்மூன்று அடுக்குகளிலும் இறைவனுக்கு நித்ய பூசைகள் ஏதும் நடைபெறுவதில்லை.

ஐரம்ம தீர்த்தம், விரநா தீர்த்தம் அகியவை இக் கோயிலின் தீர்த்தங்களாக இருக்கின்றன. இங்கு திருமங்கையாழ்வார் பத்து பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

"திருப்பரமேச்சுர விண்ணகரம்" எனப் போற்றப்படும் வைகுந்த பெருமாள் கோயில் காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்காக ராஜவீதி அருகே அமைந்துள்ளது.

"சொல்லு, வன்சொல், பொருள் தான் அவை ஆய்,
சுவை, ஊறு, ஒலி, நாற்றமும்,
தோற்றமும் ஆய்
நல் அரன் நாரணன் நான்முகனுக்கு
இடம்–தான்–தடம் சூழ்ந்த அழகு ஆய கச்சி,
பல்லவன், வில்லவன் என்று உலகில்
பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல்
பல்லவன், மல்லையர் – கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் – அதுவே" (பெரிய திருமொழி, 1128)

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தில், இறைவன் அரிய சொல்லும் பொருளுமாகி தானேயாகி சுவை, ஊறு, ஒலி, மணம், வடிவம் ஆகித் தீமை அழிக்கும் சிவன், படைக்கும் பிரமன், காக்கும் நாராயணனாகித் தடாகங்கள் சூழ்ந்த அழகிய கச்சி நகரத்திலே பரமேச்சுர விண்ணகரில் இருக்கிறான். இது பல்லவன், வில்லவன் என்றும், இந்நிலம் ஆண்ட வேந்தர்கள் பலரால் வணங்கப்படும். மல்லையர்கோன் பல்லவர் பணிந்த நகரமாகும் என்று தனது பாசுரத்தில் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகின்றார். முகில் அடர்ந்த பெரிய வானும், கடல்களும், இரு சுடர்களும், நிலமும், மலைகளும் தன் உந்திக் கமலத்தில் தோன்ற தாமரைக் கண்ணன், தாடகங்களாலும் உயர் மதிள்களாலும் சூழ்ந்த கச்சி நகரிலே உள்ள பரமேச்சுர விண்ணகரத்துள்ளான் என்று பெருமானின் சிறப்புகளை ஆழ்வார் வாயிலாக ந.சுப்புரெட்டியார் எடுத்து இயம்புகின்றார்.

49. காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும் (திருப்பாடகம்)

தென்னகத்தில் திருக்கோயில்கள் நிரம்பிய நகரங்கள் இரண்டு. ஒன்று காஞ்சிபுரம், மற்றொன்று திருக்குடந்தை. இந்த இரண்டு நகரங்களையும் "கோயில் நகரங்கள்" என்று வழங்கலாம். பண்டைய தமிழ் இலக்கியங்களில் இந்நகரம் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சிபுரி, கச்சி முதலிய பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. பழைய கல்வெட்டுகளில் 'கச்சிப்பேடு' என்று வழங்கப் பெறுவதையே 'காஞ்சி' என்று கருதுகின்றனர். காஞ்சியில் பதினெட்டு திவ்ய தேசங்கள் உள்ளனவாக வைணவர்களிடையே வழங்கும் பேச்சு ஒன்று உண்டு. ஆயினும், ஆழ்வார்களால் மங்களா சாசனம் பெற்ற திவ்ய தேசங்கள் பதினான்கு மட்டுமே உள்ளன.

இத்திருக் கோயிலின் மூலவர் 'பாண்டவதூதர்' கிழக்குத் திசையை நோக்கியவாறு சேவை சாதித் தருளுகின்றார். இதன் தீர்த்தம் மதீஸ்ய தீர்த்தம் ஆகும். பத்ர விமான அமைப்புடன் கோபுர விமானம் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு அருகே திருப்பாடகம் என்னும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீகண்ணபிரான் பாண்டவர்களின் தூதுவராக அஸ்தினாபுரம் சென்றார். தூதுவர் என்றும் பாராது அவரைப் படுகொலை செய்திட கௌரவர்கள் திட்டமிட்டனர். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டுக் கௌரவர்கள் போலியான அரியணை ஒன்றினைத் தயாரித்துப் படுகுழி ஒன்றின் மீது வைத்திருந்தனர்.

கௌரவர்களின் வஞ்சகத்தை உணர்ந்த ஸ்ரீகண்ணபிரான் விஷ்வரூபம் கொண்டருளினர். இவ்விஷயத்தை வைசம்பாயனர் கூறக்கேட்ட ஜனமே ஜயன் பக்தி உணர்வால் பூரித்துப் போனார். காஞ்சிக்கு வந்த பாண்டவ தூதரின் விசுவரூப தரிசனம் வேண்டி அசுவமேதயாகம் செய்தார். அந்த மகாயாகம் பூர்த்தியாகும்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவ தூதராக விசுவரூபம் கொண்டு சேவை தந்ததாக வரலாறு மூலம் அறிய முடிகிறது. இறைவனின் பெரிய திருமேனியை,

"அரவநீள் கொடியோன் அவையுள் ஆ சனத்தை
அஞ்சிடாதே இட அதற்கு
பெரிய மேனி அண்டம் ஊ டுறுவ
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன்" (பெரி., திரு., 1775)

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். அரவக் கொடியுடைய துரியோதனன், தன் அவையில் பொய்யாசனத்தை அஞ்சாமல் இடும்போது, அதற்கேற்ப வளர்ந்த பெரிய அண்டத்தில் ஊடுவரத் திசைளெல்லாம் தன் உருவிலே அடங்க வளர்ந்த கண்ணன் உரையுமிடம் என்று திருமங்கையாழ்வார் தன் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

50. திருநிலாத்துண்டம்

பெரிய காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் மிகவும் சிறிய சந்நிதியாக அமைந்துள்ளது. இத்தலத்து மூலவர் நிலாத் திங்கள் துண்டத்தான். இவன் நின்ற கோலத்தில் மேற்கு திசையை நோக்கியபடி சேவை புரிகின்றார். தாயாரின் பெயரும் நிலாத் திங்கள் துண்டத்தாள் என்பதே ஆகும்.

"நீரூரும் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணாய்!
நிலாத் திங்கள் துண்டத்தாய் நின்னைத் தேடி
ஓரூரும் ஓரியாமே ஒற்றித் தெங்கும்
உலகமெலாம் திரிதந்து நின்னைக் காண்பான்
தேரூரும் நெடுவீதி பற்றி நின்றேன்" (அப்பர் பெருமானின் திருப்பாடல்)

என்ற அப்பர் பெருமானின் திருப்பாடலை ஓதுவார், 'நிலாத் திங்கள் துண்டத்தான்' சிவபெருமானே என்று நினைப்பது இயல்பு ஆகும் என்பது ஆசிரியரின் கருத்து. ஆனால் அவர்கள் ஏகாம்பர நாதர் கோயிலுக்கு வந்த பின்னர் தம் எண்ணத்தைக் கட்டாயமாக மாற்றிக் கொண்டு இங்குள்ள எம்பெருமான் நிலாத் திங்கள் துண்டத்தான் என்ற திருநாமத்தைக் கொண்டவர் என்று அறிவர்.

ஏழுதலை நாகத்தைக் குடையாகக் கொண்டு மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இந்த எம் பெருமானைத் திருமங்கையாழ்வார் மட்டிலும் மூன்று சொற்கள் அடங்கிய "நிலாத்திங்கள் துண்டத்தாய்" என்ற ஒரே ஒரு தொடரால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

சைவ, வைணவ ஒருமைப்பாட்டிற்கு உதாரணமாக விளங்கும் இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சந்திர தீர்த்தம் விளங்குகிறது. இத்திருக்கோயிலின் விமானம் சூரிய விமானமாகும். பெரிய காஞ்சிபுரம், ஏகாம்பரமேஸ்வர் திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் மிகவும் சிறிய சந்நிதியாக திரு நிலாத் திங்கள் துண்டம் விளங்குகின்றது.

51. திருக்கள்வனூர்

இத்திருக்கோயிலின் மூலவர் ஆதிவராகப் பெருமாள் ஆகும். மேற்கு திசையை நோக்கியவாறு நின்ற கோலத்தில் சேவை அருள் தருகின்றார். இங்கும் சைவ சிவாச்சாரியார் தான் மூலவருக்குப் பூசைகள் செய்து வருகிறார். தாயார் அஞ்சலை வல் நாச்சியார் ஆவார். ஆதிகேசவப் பெருமாளின் சந்நிதி காமாட்சி கோயிலின் அர்த்த மண்டப நுழைவு வாசலின் இடப்புற மாடத்தில் அமைந்துள்ளது.

தாயாரோ ஆதிவராக மூலவர் சந்நிதியிருக்கும் மாடத்தின் பக்கத்தில் அமைந்துள்ளது. இத்திருக் கோயிலின் தீர்த்தம் புஷ்கரணி ஆகும். விமானமானது வாமன விமான அம்சம் கொண்டது. திருக்கள்வனூர் என்று போற்றப்படும் இப்புண்ணிய சேத்திரம் காஞ்சி ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயத்தினுள் அம்மன் சந்நிதிக்கு வலது புறமாக உள்ளது. வேறு ஆழ்வார்கட்கும் இந்த எம்பெருமான் கிட்டவில்லை. திருநகரியில் திருப்புளியாழ்வாரின் கீழிலிருந்து கொண்டு மானசீகமாக மங்களா சாசனம் செய்த நம்மாழ்வாரையும் அவர் பாசுரங்களில் அகப்படாது ஏமாற்றி விட்ட 'கள்வன்' இந்த எம்பெருமான். பிறர் அறியாதபடி காரியஞ்செய்பவனைக் கள்வன் என்று கூறுவது உலக வழக்கு என்று ஆசிரியர் எடுத்து இயம்புகின்றார் (தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.88).

52. திருவேளுக்கை

இத்திருக்கோயிலின் மூலவர் அழகிய சிங்கர். இவர் நின்ற கோலத்தில், கிழக்கு திசையை நோக்கி அருள் பாவித்து வருகிறார். இவருக்கு நரசிம்மர், முகுந்த நாயகர் என்ற வேறு பெயர்களும் உண்டு. தாயார் வேளுக்கை வல்லி என்ற அமிர்தவல்லித் தாயார் ஆவார். இக்கோயிலில் பெருமாள், தாயார், கருட பகவான் ஆகியோருக்குத் தனித்தனி சந்நிதிகள் உண்டு. திருமங்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

"மன்னும் மதிள்கச்சி
வேளுக்கை ஆளரியை" (பெரிய திருமடல், 2779)

என்று திருமங்கையாழ்வார் தனது பாசுரத்தில் குறிப்பிடுகின்றார். பேயாழ்வார் இத்திருப்பதியோடு வேறு சில திருப்பதிகளையும் சேர்த்துப் பேசி இனியராகின்றார்.

"விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை – மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு" (மூன்றாம் திருவந்தாதி, 2343)

என்ற பாசுரத்தில் உள்ளங்கையாலே நீரேற்றான் நீர்மையுடன் தங்குமிடங்கள், திருவிண்ணகர், வெஃகா, திருவேங்கடம், உலகின் நகரமாம் திருவேளுக்கை. மண்ணில் சிறந்த திருக்குடநதை, தேன் சோலைத் திருவரங்கம், தெற்கில் உள்ள திருக்கோட்டியூர் ஆகியன என்று இயம்புகின்றார். 'மண்ணகரம் மாமாடம் வேளுக்கை' என்ற இந்த ஆழ்வாரின் திருவாக்கையொட்டியே திருமங்கையாழ்வார் 'மன்னு மதிள்கச்சி வேளுக்கை' என்றனர் போலும். என்பெருமானது திருவடிகளில் ஆட்படாதவர்கள் ஆபத்துக் காலத்தில் ஒரு துணையுமின்றி அழிய வேண்டிவரும் என்று பேருண்மையை ஆசிரியர் ஆழ்வாரின் வாயிலாக உணர்த்துகின்றார்.

53. திருத்தண்கா

இத்திவ்ய தேசம் சின்னகாஞ்சிபுரத்தில் தூப்புல் என்ற பகுதியில் உள்ளது. இந்தத் தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். வேதாந்த தேசிகர் அவதரித்த இடமும் இதுவே. காஞ்சியில் ஒரு சமயம் பிரம்மதேவர் அசுவமேத யாகம் நடத்திய போது, அசுரர்களின் தூண்டுதலின் பேரில் சரஸ்வதி யாகத்தை அழித்திட எண்ணினான். இதனால் அசுரர் துணையுடன் யாகம் நடைபெறாதிருக்க எங்கும் இருளை உண்டாக்கினான். இது கண்ட பகவான் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி இருளைப் போக்கிடச் செய்தார். யாகம் முறையாக நடந்திடவும் அருள் செய்தார் என்று ஆலய வரலாறு கூறுகிறது.

தீப ஒளிவெள்ளமாகத் தோன்றிய பகவானுக்குத் துணையாக தாயார் பராசக்தியின் அம்சமான மரதகவல்லி காட்சியளிக்கின்றாள். திருத்தண்கா திருக்கோயில் மூலவர் தீபப்பிரகாசர் நின்ற கோலத்தில் மேற்கு திசையை நோக்கியபடி சேவை தந்தருளுகின்றார். இவருக்கு திவ்யப் பிரகாசர் என்னும் 'விளக்கொளிப் பெருமாள்' என்னும் பிற பெயர்களும் உண்டு. இதன் தீர்த்தம் சரஸ்வதி தீர்த்தம் ஆகும். கோபுரத்து விமானமானது ஸ்ரீ கரவிமானம் அம்சம் கொண்டுள்ளது.

54. திருப்பவள வண்ணம்

இத்திருக் கோயிலின் மூலவரான பவள வண்ணன் நின்ற கோலத்தில் மேற்கு நோக்கி சேவை தந்தருளுகிறார். தாயார் பவளவல்லி ஆவாள். தாயாருக்கு எனத் தனிச் சந்நிதி உள்ளது. மூலவரான பவள வண்ணன் பார்வதி தேவிக்கும், அஸ்வினி என்னும் தேவதைக்கும் பிரதியட்சம் ஆனவர் என்று கூறப்படுகிறது. இறைவன் பளவவண்ணன் சந்நிதிக்கு எதிர்புறமாக, சிறிது தூரத்தில் பச்சை வண்ணப் பெருமாள் சந்நிதி உள்ளது. பவள வண்ணப் பெருமாளை தரிசித்துச் செல்பவர்கள் பச்சை வண்ணப் பெருமானையும் தரிசித்து விட்டுத்தான் செல்வார்கள்.

இச் சந்நிதியில் உள்ள மூலவரான பச்சை வண்ணப் பெருமாள் ஆதிசேஷன் மீதாக இருந்த கோலம் கொண்டு சேவை சாதித்து அருளுகின்றார். காஞ்சியிலுள்ள திவ்ய தலமான பவள

வண்ணன் திருக்கோயிலின் விமானம் பிரவாள விமானமாகும். இத்திருக் கோயிலில் ஒரு பாசுரத்தால் திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் குறிப்பிடும் "கச்சிப் பவள வண்ணா!" என்ற சொற்றொடரைத் தவிர ஆழ்வார் பாசுரங்களில் இந்த எம்பெருமானைப் பற்றி வேறு குறிப்புகள் இல்லை. ஆழ்வார் பாசுரத்தில்,

"வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சியூராய்! பேராய்!
கொங்குத் தார் வளங் கொன்றை அலங்கல்
மார்வன் குலவரையன் மடப் பாவை
இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனி வரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்கு உற்றாய் ? எம் பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே" (திருநெடுந்தாண்டகம், 2060)

என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பாசுரத்தில் 'பவள வண்ணா' என்பதற்குப் 'பவளம் போல் விரும்பத்தக்கதான வடிவு படைத்தவனே' என்பதே பொருளாகத் தோன்றுகிறது. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலும் இப்படித்தான் காணப்படுகின்றது என்று ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்புக் காட்டுகின்றார்.

55. திருப்புட்குழி

இந்தத் திவ்ய தேசம் காஞ்சியிலிருந்து தென் மேற்குத் திசையில் சுமார் ஏழு கல் தொலைவிலுள்ளது. நெடுஞ்சாலையில் இறங்கி உட்புறமாகவுள்ள குறுக்குச் சாலையின் வழியாக நான்கு கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று இத்திருப்பதியை அடைதல் வேண்டும். பெரிய உடையார் என்று வழங்கப்பெறும் சடாயு சீதாப்பிராட்டியை இராவணன் கவர்ந்து சென்றபொழுது அவனை வழிமறித்து அவனுடன் கடும்போர் விளைத்தபொழுது இராவணன் சங்கரன் அளித்த வாளால் அவருடைய சிறகுகளை வெட்டி, வீழ்த்தி அவனைக் குற்றுயிராக விட்டுச் சென்றான் என்னும், சீதையைத் தேடிவந்த இராமலக்குமணர்கள் சடாயுவைக் கண்டனர் என்றும் அவர்களிடம் அவர் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற செய்தியை அறிவித்தவுடன் அவருடைய உயிர் திருமேனியிலிருந்து பிரிந்தது என்றும், அதன்பின்னர் அவர்கள் பெரியவுடையாரின் திருமேனியை ஒரு குழியிலிட்டுத் தகனம் செய்து ஈமக்கடன்களை முறைப்படி செய்தனர் என்றும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. சடாயுவைத் தகனம் செய்த கோலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல் பற்றி இத்தலம், 'திருப்புட்குழி' என்று பெயர் பெற்றது என்பர்.

திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டிலுமே இந்த எம்பெருமானை தாய்ப்பாசுரமாக வைத்து மங்களா சாசனம் செய்துள்ளார்.

"பொன்னை, மரகதத்தை, புட்குழிஎம்
போர் ஏற்றை" (பெரிய திருமடல், 2773)

என்று பெரிய திருமடலில் குறிப்பிடுகின்றார். இத்திருக் கோயிலின் தீர்த்தம் இராமன் சடாயுவுக்கு தர்ப்பணம் செய்து உண்டாக்கிய தீர்த்தமான ஜடாயு தீர்த்தம் ஆகும். இங்குள்ள விமானம் வீரகோபுர விமான அம்சத்துடன் விளங்குகிறது. உடையவர் இராமானுஜரும், மணவாள முனிவரும் இக்கோயில் பலமுறை மங்களாசாசனம் செய்துள்ளார். காஞ்சிபுரத்தில் இருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் பாலுசெட்டி சத்திரம், சென்னை–வேலூர் மார்க்கத்தில் உள்ளது. இவ்வூருக்கு இடது புறமாகச் சென்றால் சிறிது தூரத்தில் திருப்புட்குழி என்ற இத்தலம் உள்ளது (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.61).

56. திருக்கடிகை அக்காரக்கனி

'சோளிங்கபுரம்' என்று அழைக்கப்பெறும் திருக்கடிகை அக்காரக்கனியில் மலைமீது ஓர் பெரிய கோயிலும், ஊருக்குள் ஓர் கோயிலும் உள்ளன. பெரிய மலையான கடிகாசலத்தில் மூலவராக யோக நரசிம்மர் சேவை தந்தருளுகின்றார். தாயாரான அமிர்தவல்லி நாச்சியார் தனிச் சந்நிதியை கொண்டு அருள்பாலிக்கின்றார். ஊருக்குள் இருக்கும் கோயிலில் மூலவர் இல்லை. உற்சவ மூர்த்தியாக பக்தவச்சல பெருமாள் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கின்றார். இங்குள்ள சிறுமலையில் யோக நிலையில் நான்கு கரங்கள் கொண்டு ஆஞ்சநேயர் சங்கு, சக்கரத்துடன் விளங்குகிறார்.

இங்கு ஆதிகேசவப் பெருமாள், ஆண்டாள், கருடவாகன வரதராஜர் மற்றும் ஆழ்வார்களுக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. இந்தக்கோயிலில் உள்ள தீர்த்தங்கள் அம்ருத தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், அனுமந்த தீர்த்தம் ஆகியவை ஆகும். இத்திருக்கோயிலின் விமானம், 'சிம்ஹகோஷ்டாக்ருதி' எனப்படும். இத்திருக்கோயில் பேயாழ்வார் ஒரு பாசுரத்தாலும், திருமங்கையாழ்வார் மூன்று பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளனர். சோளிங்கர் என்னும் இத்திவ்ய சேத்திரம் திருத்தணியில் இருந்து சித்தூர் செல்லும் சாலையில் முப்பத்திரண்டாவது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

எம்பெருமான் அடியார்களின் பொருட்டு எடுத்த அவதாரங்களுள் நரசிம்மாவதாரம் பார்ப்பவர்களின் உள்ளங்களிலும் அச்சத்தை விளைவிக்கவல்லது. மனித உடலும் சிங்க முகமும் கொண்ட உருவமாதலின் அவ்வுருவம் கண்டவரையெல்லாம் அஞ்சும்படி செய்கின்றது. இந்த அவதாரம் 'பரம்பொருள்' எங்கும் உளன்' என்ற தத்துவத்தை விளக்கி நிற்கின்றது.

"எங்கும் உளன் கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து,
இங்கு இல்லையால் என்று இரணியன்
தூண் புடைப்ப,
அங்கு அப்பொழுதே அவன் வியத்
தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை
ஆகாயும் சீர்மைத்தே" (திருவாய்மொழி, 3096)

என்பது நம்மாழ்வாரின் பாசுரம்.

இத்தலத்து எம்பெருமான், எப்பொழுதும் மாலை அலங்காரத்துடன் இருப்பவன். கம்பீரமான உருவத்தின் கண்களிலே சாந்தம் நிலவும் தன்மையன் இதனால் தான் ஆழ்வாரும், 'தக்கான்' என்றும், அனுபவிப்பவர்கட்கு அவன் வெல்லம் போல் இனிப்புள்ள கனியாக விளங்குகின்றான் என்றும் இத்தலத்து எம்பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். யோக நிலையிலுள்ள அஞ்சனை மைந்தனை இத்தலத்தைத் தவிர பிற இடங்களில் காண்டல் அரிது என்று பெருமானின் சிறப்புகளை ஆழ்வாரின் பாசுரங்களின் வாயிலாக பேராசிரியர் அழகாக எடுத்து இயம்புகின்றார்.

57. எவ்வுள் கிடக்கும் பெருமலை

சாலிஹோத்திர முனிவரிடம் அதிதியாக வந்த எம்பெருமான் 'தான் உறங்கிட எவ்வுள்' என வினவியதினால் இத்தலம் 'திரு எவ்வுள்' என்றழைக்கப்படலாயிற்று. இத்திருக்கோயில் மூலவரான வீரராகவப் பெருமாள் புஜங்க சயனக் கோலத்தில் தன் வலது கரத்தை சாலிஹோத்திர முனிவருடைய சிரசின்மீது வைத்துள்ளார்.

அதேநிலையில் பிரம்மாவுக்கு பரமாத்ம சொரூபத்தையும் வேதங்களையும் சாட்சியாகக் காட்டி உபதேசிப்பதோடு, இடது கையில் ஞான முத்திரையைக் காட்டி சேவை தருகின்றார். உயிர்களுக்கு ஞானத்தை நல்கிடும் வீரராகவன் பக்தர்களுடைய பிணிகளையும் போக்கிடுவதால் 'வைத்ய வீரராகவன்' என்று அழைக்கப்படுகின்றார். தருமசேனரின் மகளாக வசுமதி என்ற பெயருடன் தாயார் பிறந்த வளர்ந்தபோது எம்பெருமான் இங்கு வந்து தாயாரை மணந்து கொண்டதாகவும் தலபுராணம் கூறுகின்றது. தாயார் வசுமதி என்ற கனகவல்லி நாச்சியாருக்கு இங்கு தனியாகச் சந்நிதி உண்டு.

திருமங்கையாழ்வார் பதினோரு பாசுரங்களாலும் திருமழிசை ஆழ்வார் ஒரு பாசுரத்தாலும மங்களா சாசனம் செய்துள்ளனர். திருஎவ்வுள் என்னும் திவ்ய தலம், சென்னை–அரக்கோணம் புகை வண்டிப் பாதையில் உள்ள திருவள்ளூரில் இருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருமழிசையாழ்வார் பாசுரத்தில்,

"நாகத்து அணைக் குடந்தை, வெஃகா
திரு எவ்வுள்;
நாகத்து அணை அரங்கம், பேர்,
அன்பில், நாகத்து
அணைப் பாற்கடல் கிடக்கும்; ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன் ஆவான்" (நான்முகன் திருவந்தாதி, 2417)

எனப் பாடப்பட்டுள்ளது. திருக்குடந்தை, திருவெஃகா, திருவெவ்வுள்ளூர், திருவரங்கம், திருப்பேர் நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய இடங்களில் அரவணை மீது கிடந்தருள்வது அன்பர்களுடைய இதயத்தில் புகுவதற்காகவே என்று காரணம் கற்பிக்கின்றார் ஆழ்வார். எப்பொழுதும் எம்பெருமானுடன் அணைந்தேயிருக்க வேண்டுமென்று ஆசையுடையவர்கள் 'அணைப்பார்' எனப்படுவார்கள் (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.96).

58. நின்றவூர் நித்திலம்

தின்னனூர் என்பதுதான் திருநின்றவூர் எனப்பெயர் பெற்றது. காஞ்சியைச் சேர்ந்தது. இப்பகுதியை இராஜசிம்மன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அப்போது அம்மன்னன் காஞ்சியில் கைலாசநாதர் என்னும் கோயிலைக் கட்டிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சைவ அடியாராக விளங்கி வந்த பூசலார் தம் மனத்தினுள் எம்பெருமானுக்கு கோயில் கட்டி வந்தார். அக்கோயிலைச் சிவபிரானைக் கொண்டு திறக்க வைத்தார். இவ்விதம் மனதில் கோயில் கட்டிய பூசலாரும், காளத்திவாணரும் வாழ்ந்த திருத்தலமே திருநின்றவூர் எனப்படும்.

இத்தலத்தில் எம்பெருமான் பத்தராஜப் பெருமாள் பெரிய பிராட்டி, பூமாதேவி ஆகியோருடன் நின்ற கோலத்தில் சேவை தருகின்றார். திருநின்றவூர் என்னும் இத்திவ்ய சேத்திரத்தில் உள்ள பெருமாள் கோயிலின் மூலவர் பக்தவச்சல பெருமாள். இவர் கிழக்கு முகமாக நின்று சேவை செய்து வருகிறார். இப்பெருமாள் வருண பகவானுக்குக் கட்சி கொடுத்தவர். இப்பெருமாள் பத்ராவிப் பெருமாள் என்றும் போற்றப்படுகின்றார். இத்திருக் கோயிலின் தீர்த்தம் வருண புஷ்கரணி என விளங்குகிறது. இங்குள்ள விமானம் உத்பல விமானமாகும். திருமங்கையாழ்வார் திருபாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

திருநின்றவூர் என்னும் இந்த திவ்ய சேத்திரம் சென்னை—அரக்கோணம் இரயில் மார்க்கத்தில் அமைந்துள்ளது. திருமங்கையாழ்வார் இப்பெருமானின் சிறப்பை நேரடியாகப் பாடாமல் திருக்கடல் மல்லையைப் பாடும்பொழுது "நின்றவூர் நித்திலத்தை" என்று குறிப்பிடுகின்றார். அந்தப் பாசுரத்தில்,

"பூண்டு அவத்தம், பிறர்க்கு அடைந்து தொண்டு
பட்டு, பொய்ந்நூலை மெய்ந்நூல் என்று
என்றும் ஓதி,
மாண்டு அவத்தம் போகாதே வம்மின்; எந்தை;
என் வணங்கப்படுவானை;
கணங்கள் ஏத்தும்
நீண்ட வத்தை; கரு முகிலை; எம்மான் – தன்னை;
நின்றவூர் நித்திலத்தை; தொத்து
ஆர்சோலைக்
காண்டவத்தைக் கனல் எரிவாய்ப்
பெய்வித்தானைக் கண்டது நான் –
கடல்மல்லைத் தலசயனத்தே" (திருமங்கையாழ்வார், பெரியதிருமொழி, 1089)

என்று பாடுவதை ந.சுப்புரெட்டியார் சுட்டிக்காட்டுகின்றார். நின்றவூரில் இருப்பவனும், கண்ண மங்கையில் எழுந்தருளியிருப்பவனும், ஐம்பெரும் பூதங்கட்கும் அந்தர்யாமியாக இருப்பவனும் ஒருவனே என்ற தத்துவத்தை இப்பாசுரத்தில் பதிவுசெய்கின்றார் ஆழ்வார் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

59. அல்லிக்கேணி அச்சுதன்

சென்னை மாநகரத்தில் உள்ள வங்கக் கடலுக்கு முன் ‘அல்லி மலர்களால்’ சூழப்பட்ட ‘கேணி’ பார்த்தசாரதி கோயிலில் உள்ளது. அப்பெயரை நினைவாகக் கொண்டு ‘அல்லிக் கேணி’ என்ற பெயர் வழங்கலாயிற்று. தெய்வத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு ‘திரு’ என்ற வார்த்தை சேர்த்து ‘திருவல்லிக் கேணி’ என்று பெயர் பெற்றது. இத்தலத்தைப் ‘பஞ்ச வீரத்தலம்’ என்றும் அழைப்பர். பார்த்தசாரதி கோயில் வியாசரால் பிரதிட்டை செய்யப்பட்ட கோயிலாகும்.

இத் திருக்கோயிலில்தான் பகவான், தனது மனைவி, மூத்தவள், இளையவள் புதல்வன், பேரர் என்று மூன்று தலைமுறையினருடன் சேவை தந்தருள்வது தனிச்சிறப்பாகும். மகா பாரதப் போருக்கும், இத்தலத்திற்கும் ஒரு ஒப்பந்தம் உண்டு. அதாவது மகாபாரதப் போருக்கு முன்பாக கௌரவர்களின் மூத்தவனான துரியோதனனுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதில்லை என்ற வாக்கினை கண்ணன் அளித்திருந்தார்.

வாக்கிற்கிணங்க வலக்கரத்தில் சக்ராயுதத்தை ஏந்தாமல் சங்கிணை ஏந்தியுள்ளார். பகவான் பார்த்தசாரதி என்னும் திருநாமத்திற்கேற்ப முறுக்கு மீசையுடன் சேவை தந்தருள்கிறார். அவரது திருமுகத்தில் பல விழுப்புண்கள் உள்ளன. இந்தப் புண்கள் யாவும் பாரதப் போரில் அர்ச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்தபோது ஏற்பட்டவை ஆகும் என்பர்.

இங்குக் காணப்படுகின்ற ஐந்து சந்நிதிகளிலும் உள்ள மூலவர்கள் ஐவரும் மங்களா சாசனம் பெற்றிருப்பதால் இத்தலத்திற்கு ‘பஞ்ச மூர்த்தி தலம்’ எனவும் போற்றப்படுகின்றது. பகவானைப் போற்றி திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களாலும், பேயாழ்வார் ஒரு பாசுரத்தாலும், திருமழிசை ஆழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

பார்த்தசாரதி கோயிலில் உள்ள அல்லிக்கேணி இத்திருப்பதியின் தீர்த்தமாகும். இப் புஷ்கரணியில் இந்திர தீர்த்தம், கோம தீர்த்தம், மீன தீர்த்தம், அக்னி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்கள் இருந்துள்ளன. திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதி பாசுரத்தில் பின்வருமாறு இறைவனைப் பாடுகின்றார்.

“தாளாமல் உலகம் அளந்த அசைவே கொல்,
வாளா கிடந்தருளும் வாயதிறவான் – நீளோதம்
வந்து அலைக்கும் மாயிலை மாவல்லிக் கேணியான்,
ஐந்தலை வாய் நாகத்தனை” (நான்முகன் திருவந்தாதி, 2416)

என்று மங்களா சாசனம் செய்துள்ளார். பல்வேறு சமயங்களிலும் உழன்று திரிந்து அலுத்துப்போன உள்ளம் இங்கே ஓய்வுபெறுவதற்காக வந்து இறைவனை நோக்கி, “நீயும் உலகமெல்லாம் திரிந்து, அலுத்து, ஓய்வு பெறுவதற்காகத்தான் இந்தக் கடற்கரையில் வாய்திறவாமல் படுத்துக் கின்றாயோ ?” என்று விடுக்கும் வினாவில் ஆழ்வாரின் கடல் போன்ற பக்திப்பெருக்கு வெளிப்படுவதைக் கண்டு உள்ளம் மகிழ்கின்றோம். இந்த ஐந்து பெருமான்களையும் சேவித்துக் கொண்டு பக்திப் பெருக்குக் கரைபுரண்டோடும் நிலையில் பெரிய திருமொழிப் பாசுரங்களை மீண்டும் ஒரு முறை மனமுருக ஓதிப் பக்திப் பெருக்கில் பேராசிரியர் திளைத்து நம்மையும் அழைக்கின்றார். திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டருளிய எம்பெருமானின் சிறப்பைப்

பக்தியுடன் கூறக் கூற அது நம் பிறவிப்பிணிக்கு சிறந்த மருந்தாகும் என்பது திண்ணம் (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.117).

60. நீர்மலை நீர்வண்ணன்

எம்பெருமான் கோயில் கொண்டுள்ள திவ்ய தேசங்களில் திருவரங்கம், திருக்கோட்டியூர், திருமலை என்னும் சிலவற்றைப் பார்க்கும்போது, 'அணிதிகழும் சோலை அணி நீர்மலை' என்று சிறப்பித்து இந்தத் திவ்ய தேசத்தை ஆழ்வார் குறிப்பிடுகின்றனர். 'எழில் கொழிக்கும் சோலைகளையுடையதாய் இவ்வுலகினுக்கு ஆபரணம் போன்றதாய் இருப்பது 'திருநீர்மலை' என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். மேலும் திருவரங்கம், திருவேங்கடம், திருக்கோட்டியூர் ஆகிய திவ்ய தேசங்களைப் போலவே, திருநீர்மலையும் மிகப் பழமையான திருப்பதி என்பது ஆழ்வாரின் வாக்கு.

மலைமேல் இருக்கும் கோயிலாகவும், மலை அடிவாரக் கோயிலாகவும், கோயிலைச் சுற்றிலும் நீர் நிறைந்துள்ளதாக காட்சியளிபதால், 'திருநீர்மலை' என்று பெயர் பெற்றது. இத்தலத்தில் நான்கு கோலங்களில் பெருமாள் சேவை தந்தருளுகின்றார். மலைமீது உள்ள கோயில் கிடந்த கோலத்துடன் அரங்கநாதனாகவும், இருந்த கோலமாக நரசிம்மராகவும், நடந்த கோலமாக திருவிக்ரமனாகவும், மலை அடிவாரக் கோயிலில் ஸ்ரீராமராகவும் சேவை தருகின்றார். இராமபிரானுடன் சீதாப்பிராட்டியார், பரதன், இலக்குவன், சத்ருக்கனன், சுக்ரீவன், அனுமன் ஆகியோரும் சேவை தருகின்றனர். மூலவர் கிழக்கு முகமாக நின்ற கோலத்துடன் சேவை தருகின்றார்.

இத்திருக்கோயில் திருமங்கை ஆழ்வாரால் இருபது பாசுரங்களாலும், பூதத்தாழ்வாரால் இருபது பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்யப்பட்டுள்ளது. இத்திருக் கோயிலின் தீர்த்தமாக 'மணிகர்னிகா' தீர்த்தம் விளங்குகின்றது. ஆழ்வார்கள் காலத்தில் இம்மலையைச் சுற்றி அழகான சோலைகள் அமைந்திருந்தன என்பது அறியலாகின்றது. 'அணி திகழுடம் சோலை அணி நீர் மலை' என்பது பூதத்தாழ்வாரின் வாக்கு. அரண் போல் நீர் சூழ்ந்த இடத்தில் அமைந்திருப்பதால் தான் 'நீர் மலை' என்ற காரணப் பெயர் பெற்று, 'திரு' என்ற அடைமொழியுடன் 'திரு நீர் மலை' என்று இம்மலை வழங்கி வருகின்றது போலும் என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார் (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.133).

திருமங்கையாழ்வார் ஒவ்வொரு பாசுரத்திலும் இம்மலையினை 'மா மலை' என்றே குறிப்பிடுகின்றார்.

"அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர்
மங்கையோடு அன்பளவி அவுணர்க்கு
என்றாலும் இரக்கமி லாதவனுக்கு
உறையும் இட மாவது இரும்பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தார்க்கு

இடம்மா மலையாவது நீர் மலையே" (பெரி., திரு., 1078)

என்ற பாசுரத்தில் கடைசி அடியில் பெருமாள் வாழிடம் திருநீர் மலையாகும் என்று குறிப்பிட்டுள்ளதாக ஆசிரியர் கூறுகின்றார். ஒவ்வொரு பாசுரத்தின் இறுதி அடியில் திருநீர் மலை பெருமான் வாழும் இருப்பிடம் என்று கூறப்பட்டுள்ளது.

61. திருஇட எந்தை எம்பெருமான்

"சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்ற கொள்கையில் ஊற்றமுடைய ஆழ்வார்கள் எம்பெருமானின் அநுபவத்தைப் பலவிதமாகப் பெறுவர். அவர்களிடம் ஞானம் மீதூர்ந்து நிற்கும்பொழுது எம் பெருமானின் திருநாமங்களைச் சொல்லியனுபவிப்பர். அவனுடைய திவ்ய மங்கள வடிவழகை வருணித்து அனுபவிப்பர். அவ்விடங்களில் ஆதாரம் மிக்க பாகவதர்களின் பெருமைகளைப் பகிர்ந்து அனுபவிப்பர். ஆழ்வார்கள் நாயகி நிலையில் இருந்து பேசும் பொழுது தாய் சொல்லுவது போலவும், தலைமகள் சொல்லுவது போலவும் பாசுரங்கள் அமையும். இங்ஙனம் பாசுரங்கள் பலவிதமாக வெளிவந்தாலும் பாசுரங்களைப் பகர்வது ஆழ்வார்களாகும்.

'திருவிடந்தை' என்னும் இப்புண்ணிய சேத்திரத்தில் மூலவராக லட்சுமி வராக மூர்த்தி கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் உள்ளார். தாயார் கோமளவல்லி நாச்சியார் ஆவார். உற்சவ மூர்த்தி நித்ய கல்யாண பெருமாளாகவும், தாயார் அகிலவல்லி நாச்சியாராகவும் போற்றப் படுகின்றார்கள். இத்திருக்கோயிலில் ஆண்டாள், அரங்கநாதர், அரங்க நாயகி என ஒவ்வொருவருக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள பெருமாளுக்கு நாள்தோறும் திருமணம் நடைபெறுவதால் 'நித்திய கல்யாணப் பெருமாள்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றார்.

கல்யாணப் பெருமாள் திருக்கோயிலின் தீர்த்தமாகக் கல்யாண தீர்த்தமும், வராக தீர்த்தமும் விளகுகின்றன. திருமங்கை ஆழ்வார் பதின்மூன்று பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார். இத்திருக்கோயிலில் உள்ள விமானம் கல்யாண விமானம் ஆகும். பழமையான இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகள் பிற்காலத்துச் சோழ மன்னர்கள் காலத்தில் வடிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

62. கடல்மல்லைக் கிடக்கும் கரும்பு (மகாபலி புரம்)

மாமல்லன் நரசிம்மவர்ம பல்லவன், அவனது தந்தை மகேந்திர வர்மன் என இருவரால் கலைநயத்துடன் கூடிய சிற்பங்கள் நிறைந்த குடைவரைக் கோயில்களால் உருவாக்கப் பட்டதுதான் மகாபலிபுரம்.

மாமல்லன் நரசிம்ம பல்லவனைப் போற்றும் வகையில் இப்புண்ணிய சேத்திரம் மாமல்லபுரம் என்று போற்றப்படுகின்றது. இங்குதான் பூதத்தாழ்வார் அவதரித்தார். இத்திருத்தலத்தில்தான் ஜலசயனம் பெருமாள் மூலவராக புஜங்க சயன கோலத்தில் கிழக்கு நோக்கியவாறு சேவை தந்தருளுளிகின்றார்.

மலையடிவாரத்திருக் கோயில், கடற்கரைகோயில், ஊரில் உள்ள திருக்கோயில் என்று இம்மூன்று கோயில்களிலும் மூலவர்களாக பெருமாளே சேவை தருகின்றார். கலங்கரை

விளக்கத்திற்கு அடுத்ததாக மேற்கு திசையில் உள்ள குடைவரைக் கோயில் ஒன்றில் பெருமாளே வராக மூர்த்தியாக சேவை தந்து கொண்டு இருக்கின்றார்.

இப்புண்ணிய சேத்திரம் சென்னையில் இருந்து அறுபத்துநான்கு கி.மீ. தூரத்தில் மகாபலிபுரம் அருகில் உள்ளது. இது இந்திய சுற்றலாத் தலங்களில் ஒன்றான தலம் ஆகும். மாமல்லபுரத்தில் எம்பெருமான் கொண்டுள்ள திருக்கோலம் 'தலசயனம்' என்று வழங்குவர்.

"படநாகத்து அணைக்கிடந்து, அன்று
அவணர் – கோனைப் பட வெகுண்டு; மருது
இடைபோய், பழன வேலித்
தடம் ஆர்ந்த கடல்மலைலைத் தலசயனத்துத்
தாமரைக்கண் துயில் அமர்ந்த
தலைவன் – தன்னைக்
கடம் ஆரும் கருங் களிறு வல்லான் வெல் போர்க்
கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்
திடம் ஆக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார்
தீவினையை முதல் அரிய வல்லார் தாமே" (பெரிய திருமொழி, 1097)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் பாடி மகிழ்கின்றார். மாமல்லபுரம் தமிழருடைய நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றது. தமிழகத்தில் சிற்பக் கலை வளர்த்த பேரரசர்களில் தலையாய மாமல்லனின் புகழ் எல்லாம் இந்தக் கடல் மல்லையில் கற்பாறையில் இழைக்கப் பெற்ற கவின் உருவங்களில் அடங்கிக் கிடக்கின்றன என்று பேராசிரியர் மாமல்லபுரத்து சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றார் (ந.சுப்புரெட்டியார், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ப.159).

63. திரு அயிந்திரபுரத்து தெய்வ நாயகன்

ஆஹீந்தன் என்னும் அனந்த ஆழ்வாரும், ஆதிசேடனும் வழிபட்ட சேத்திரம் என்பதினால் திருவந்திபுரம் என்னும் திருப்பெயரைப் பெற்றது. இத்திருக்கோயிலுக்கு அருகாமையில், 'ஔஷத கிரி' என்ற மருந்து மலை உள்ளது. இத்திருக்கோயிலின் மூலவரான தெய்வ நாயகர் கிழக்கு முகமாக நின்ற கோலம் கொண்டு சேவை சாத்தித்தருளுகின்றார். தாயார் ஹேமாம் புஜவல்லி ஆவார். உற்சவமூர்த்தி தேவநாதன், தாச சத்யன் என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். உற்சவத் தாயார் வைகுந்த நாயகி ஆவார்.

திருமங்கையாழ்வாரும், மணவாள மாமுனிகளும் இக்கோயிலில் மங்களா சாசனம் செய்துள்ளனர். இத்திருக் கோயிலின் தீர்த்தம் சந்திர தீர்த்தம். திருவந்திபுரம் என்னும் இத்திவ்ய சேத்திரம் கடலூரில் உள்ளது. திருப்பாதிரிப் புலியூர் இரயில் நிலையத்தின் அருகே ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இப்புண்ணிய சேத்திரம் உள்ளது.

திருமங்கையாழ்வார் திருவயிந்திபுரத்தின் பெருமையை,

"ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று,
அகல் இடம் அளந்து, ஆயர்
பூங் கொடிக்கு இன விடை பொருதவன் இடம் –

பொன் மலர் திகழ் வேங்கை,

கோங்கு, செண்பகக் கொம்பினில் குதிகொடு

குரக்கினம் இரைத்து ஓடி

தேன் கலந்த தண் பலங்கனி நுகர்தரு

திருவயிந்தி புரமே" (பெரிய திருமொழி, 1152)

என்று பாசுரத்தில் குறிப்பிடுகின்றார். மாவலியின் வேள்விச் சாலையில் சென்று, மூவடி மண் கேட்டு அங்கே பெருநிலம் அளந்து கொண்டு; பின்பு இடையர் குலத்தில் பிறந்த பூங்கொடி நப்பின்னைப் பெறுவதற்கு ஏழு எருதுகளையும் எதிரிட்டு முடித்தான். இவன் உறையுமிடம், 'வேங்கை, கோங்கு, செண்பகக்கிளைகளில் குதித்து, ஆரவாரத்துடன் குரங்குகள் தேன் பருகும். பலாவினை உண்ணும் திருவயிந்திபுரம் ஆகும் என்கின்றார் ஆசிரியர்.

64 . திருக்கோவலூர்த் தீங்கரும்பு

நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதன்முதலாகப் பாடப்பெற்ற புண்ணியத்தலம் திருக்கோயிலூர் ஆகும். இங்குள்ள கோயிலின் மூலவரான திரிவிக்ரமர் நின்ற கோலத்திலும், நடந்த கோலத்திலும், உலகளந்த கோலத்திலுமே திருவடியை உயரே தூக்கியவாறு சேவை புரிகின்றார். எம்பெருமானின் வலது கையில் இருக்க வேண்டிய சக்ராயுதம் இடது கையிலும், இடது கையில் இருக்க வேண்டிய சங்கு வலது கையிலும் என மாறி மாறி இருக்கின்றன. இங்குள்ள மூலவரான திரிவிக்ரமர் மகாபலிச் சக்ரவர்த்தி, மிருகண்டு முனிவர், சௌனகர், காஸ்யபர், காலவ முனிவர், இந்திரன், பிரம்மா ஆகியோருக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

எம்பெருமானின் திருவடிகளில் ஒன்று மகாபலிச் சக்கரவர்த்தி தலைமீதும், மற்றொன்று விண்ணுலகை நோக்கியும், மீதமுள்ள ஓரடி நிலம் எங்கே என்று வலது கையின் சுட்டுவிரல் மகாபலியிடம் கேட்பது போல் நீட்டிய நிலையில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலில் பொய்கை யாழ்வார் இரு பாசுரங்களாலும், திருமங்கையாழ்வார் பதினெட்டு பாசுரங்களாலும் பூதத்தாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர். இம்மூன்று ஆழ்வார்களும் திருக்கோயிலூரில்தான் ஒன்றாக சந்தித்தனர். இதே இடத்தில் தான் பரமபதமும் அடைந்தனர். இக்கோயிலின் விமானம் ஸ்ரீகர விமானமாகும். இங்கு ஓடும் தென் பெண்ணையாறே இத்தலத்துத் தீர்த்தமாக விளங்குகிறது. விழுப்புரம், காட்பாடி இரயில் மார்க்கத்தில் திருக்கோவலூர் இரயில் நிலையத்தின் அருகே இப்புண்ணிய சேத்திரம் உள்ளது.

பெரும்பாலும் துர்க்கையின் சிலை திருமால் ஆலயங்களில் காணப்படுவது இல்லை. ஆனால் இங்குத் துர்க்கை காவல் புரிவதைத் திருமங்கையாழ்வாரே தமது பாசுரங்களில் குறிப்பிடுகின்றார்.

"வியன்கலை எண்தோளினாள் விளக்கு செல்வச்

செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்

திருக்கோவ லூர்" (பெரிய திருமொழி, 1143)

என்ற பெரிய திருமொழிப் பாசுரப் பகுதியாலும்,

"கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட விந்தம் மேய

கடிபொழில் சூழ் நெடுமறுகில் கமல வேலி

பொற்புடைய மலையரையன் பணிய நின்ற

பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே”

(திருநெடுந் தாண்டகம், 2058)

என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரப் பகுதியாலும் இதனை அறியலாம்.

65. திருக்கோட்டியூர் எந்தை

பிரம்மாண்டபுராணத்தில் இத்தலம் கதம்ப முனிவரின் ஆசிரமமாக இருந்துள்ளது. அறவழியை நாடாதவர்கள் இப்பகுதியில் நுழைந்தால் உயிரிழக்க நேரிடும் என்று அஞ்சி வாழ்ந்து வந்தனர். திருக்கோஷ்டியூர் என்பது திருக்கு+ஒட்டியூர் என்றும் அதனைப் பிரித்துப் பார்த்தால் திருக்கு என்றால் ‘பாவம்’ என்பது அர்த்தம் ஆகும். அக்காலம் அரக்கன் இரணியன் போன்றவர்களின் கொடுமைகளுக்கு ஆளாகிய ரிசிகளும், முனிவர்களும், தேவர்களும் கூட்டமாக வந்து கதம்ப வனத்தில் கூடிய காரணத்தால் திரு என்ற அடைமொழியுடன் கோஷ்டியூரானது அதுவே திருக்கோஷ்டியூரானது.

கதம்ப வனப் பகுதியில் நுழையும் ஒருவர் இம்மையிலும் மறுமையிலும் செய்த பாவங்கள் அனைத்தும் ஓடிவிடும் என்ற காரணத்தாலும், திருக்கோஷ்டியூர் எனப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். தஞ்சைக் கோபுரத்தின் நிழல் எப்போதும் தரையில் விழுவதில்லை. அதுபோல இங்குள்ள விமானத்தின் நிழலும் தரையில் விழுவதில்லை. மூலைக்கு இரண்டாக நான்கு மூலைகளிலும் எட்டு விமானங்கள் அமைந்திருத்தலினால் இஃது அட்டாங்க விமானம் எனப் பெயர் பெற்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருப்பாற்கடல் நாதன். இவர் சமயத் திருக் கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவர் தேவர்களின் நடுவிலிருந்ததால் ‘ஸ்தித நாராயணன்’ என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுவர். ஐந்து தலை அநந்தன் மீது சயனிந்திருப்பதால் இவரைப் பெரியாழ்வார் ‘உரக மெல்லணையான்’ என்று மங்களா சாசனம் செய்கின்றார்.

“உரக மெல் அணையான் கையில் உறை

சங்கம போல் மட அன்னங்கள்

நிரைகணம் பரந்து ஏறும் செங்

கமல வயற் திருக்கோட்டியூர்

நரக நாசனை நாவிற் கொண்டு அழை–

யாத மானிட சாதியர்

பருகு நீரும் உடுக்குங் கூறையும்

பாவம் செய்தன தாம கொலோ!” (திருப்பல்லாண்டு, 363)

என்ற பாசுரத்தில் பாம்பினை மெல்லிய படுக்கையாகக் கொண்ட எம்பெருமான் கையில் உள்ள சங்கைப் போன்ற, வெண் அன்னங்கள் திரள்களாக வாழ்கின்ற செந்தாமரை நிறைந்த வயல் சூழ்ந்த திருக்கோட்டியூரில் உள்ளவனை, எம்பெருமானைத் தம்முடைய நாவினால்

திருபெயர்களைக் கொண்டு அழையாத மானிடப் பிறவியர். பருகும் நீரும் உடுக்கும் உடைகளும் அவர்களோடு தொடர்பு பட்டதால் பாவத்தைச் செய்தனவோ என்று பெரியாழ்வாரின் பாசுரத்தை பேராசிரியர் அழகாக நயம்பட எடுத்துரைக்கின்றார்.

திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில் இங்குள்ள பெருமானின் பெருமையை இயம்புகின்றார்.

“காவலன், இலங்கைக்கு இறை கலங்க,
சரம் செல உய்த்து மற்று அவன்
ஏ வலம் தவிர்த்தான்; என்னை
ஆளுடை எம் பிரான்” **(பெரிய திருமொழி, 1843)**

என்ற பாசுரத்தில், இலங்கைக்கு வேந்தனான இராவணன் முடியும் படி அம்புகளை எய்து மேலும் அரக்கன் அம்பு எய்யும் திறனை அழித்தவனாய், ‘என்னை அடிமையாகக் கொண்ட என் அண்ணல்’ இந்த திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவன் என்று குறிப்பிடுகின்றார். சங்க நூலாகிய நற்றிணையில் 21ஆம் பாடலைப் பாடிய புலவர் கோட்டியூர் நல்லாந்தையார் என்பவர் இவ்வூரைச் சார்ந்தவரே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. இக்கல்வெட்டுகளினால் இக்கோயில் கி.பி.பத்தாம் நூற்றாண்டிலேயே புகழ்மிக்கோங்கி இருந்தது என்பதையும் பேராசிரியரின் இத்திருத்தலக் கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது (ந.சுப்புரெட்டியார், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.2).

66. திருமெய்யத்து இன்னமுதம்

இத்தலம் இருக்கும் சிறிய மலைப்பகுதி ‘மெய்யம்’ என்று அழைக்கப்படுகிறது. எம்பெருமான் இங்குக் கோயில் கொண்ட காரணத்தால் ‘திரு’ என்ற அடைமொழியையும் சேர்த்து, ‘திரு மெய்யம்’ என்ற பெயர் பெற்றது. இத்தலத்து மூலவரான சத்ய கிரிநாதன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிச் சேவை தருகின்றார். இவருக்கு ‘சத்திய மூர்த்தி’ என்ற வேறு பெயரும் உண்டு. தாயார் உய்ய வந்த நாச்சியார் தனிக்கோயில் சந்நிதி உண்டு. உற்சவரை மெய்யப்பன் என்று அழைக்கின்றனர்.

புதுக்கோட்டைக்குத் தெற்காக இருபத்தோராவது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆழ்வார் பெருமக்கள் எம்பெருமானைப் பலவகையாக அனுபவித்து மகிழ்வர் என்றும் அவை அவனுடைய திருநாமங்களைச் சொல்லியனுபவித்தில், அவனுடைய திருக்குணங்களில் ஆழங்கால்பட்டு அனுபவித்தல், அவனுடைய திருமேனி அழகினை வருணித்து அனுபவித்தல் என்று பலவகையாக விரியும்,

“கடல் ஏறு நீள் வோலைக் காண்டவத்தைத்
தீ முட்டி,
விட்டானை, மெய்யம் அமர்ந்த பெருமானை,
வண் துவரை,
நட்டானை நாடி; நறையூரில் கண்டேனே” **(பெரிய திருமொழி, 1524)**

என்ற இப்பாசுரத்தில் திருமங்கையாழ்வார் காவல் மிகுந்து பரந்த பொழிலையுடைய காண்டவனத்தைத் தீ எரிக்குமாறு ஒப்பியவனைத் திருமெய்யத்தில் உறையும் பெருமானைத் தேன் அடர்ந்த கற்பக மரத்தை, சத்யபாமைக்காகத் துவாரகையில் நட்டவனைத் தேடித் திரிந்து திருநறையூரில் கண்டேனே என்று குறிப்பிடுவதாகப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கூறுகின்றார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.21).

67. திருப்புல்லாணி எம் பெருமான்

இராவணனால் கடத்திச் செல்லப்பட்ட சீதையை இலங்கையிலுள்ள அசோகவனத்தில் வைத்திருந்தான். அவளை மீட்டுவர விபிஷணரின் ஆலோசனைப்படிக் கடலைக் கடப்பதற்காக வழியமைத்துத்தர வர்ணனை வேண்டித் தர்ப்பப்புல்லைக் கீழே பரப்பி அதன்மீது 7 நாட்கள் ஸ்ரீராமன் படுத்திருந்ததினால் 'தர்ப்பசயனம்' என்று வடமொழியில் அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் தமிழில் புல்லனை என்றும், அதற்கான அடைமொழியையும் சேர்த்து 'திருப்புல்லாணி' என்ற பெயர் பெற்றது. இத்திருக்கோயிலின் மூலவரான கல்யாண ஜெகந்நாதன் நின்ற கோலத்துடன் கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். சக்கரவர்த்தித் திருமகள் என்ற பெயரில் இராமன் தர்ப்பையின் மீது தர்ப்ப சயனமாகக் கிழக்கு திசை நோக்கி சேவை தருகின்றார்.

இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சக்கர தீர்த்தம், வேதம தீர்த்தம், ரத்னா கரசமுத்திரம் ஆகியன உள்ளன. இத்தலத்து விருட்சமாக அரச மரம் விளங்குகிறது. இங்குள்ள விமானம் கல்யாண விமானமாகும். இத்திருக்கோயிலில் இருபத்தோரு பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். திருப்புல்லாணி இராமநாதபுரம் மாவட்டம் கீழ்க்கரைக்குச் செல்லும் வழியில் உள்ளது.

இத்திருத்தலத்தில் புல்லர் முதலான முனிபுங்கவர்கள் சகந்நாதனைச் சரண் அடைந்து பரமபதம் பெற்றதாகப் புராண வரலாறு கூறுகின்றது. கடல்கடவுளும், சக்கரவர்த்தித் திருமகளை சரண் அடைந்து அவனது கருணைக்குப் பாத்திரமானதும், இத்திருத்தலத்தில்தான் ஆதலால் இத் திவ்ய தேசத்தில் சரணாகதி தத்துவத்தை அனுட்டிக்கின்றவர்கள் இம்மை மறுமைப் பயன்கள் எல்லாவற்றையும் எளிதில் பெறுவர் என்பது நம்பிக்கை.

திருப்புல்லாணியில் திருமங்கையாழ்வார் பரகாலநாயகி வடிவத்தில் இறைவனின் பெருமையைக் கூறுகின்றார். கண்ணனின் ஒரு வீரச்செயலை நினைந்து பேசுகின்றாள். குவலாய பீடம் போன்ற அசுரர்களை வேரோடு தொலைத்துத் தன் திருமேனியை அன்பர்கட்குக் காட்டி அவர்களைப் பூர்ணாநுபவம் பெறச் செய்த எம்பெருமான் நம் திறத்தில் அருள் செய்த அழகு என்னே ? என்கிறாள். மேலும் பெருத்த இரணியனுடைய மார்பை அழகான நகங்களாலே கிழித்த தலைவன் நமக்கு அருள் செய்தவன் இலங்கை நடுங்க வில்லாலே அம்புகளை எய்த தீரன் எம்பெருமான் என்று முற்புறத்துக் கூறுவதாக பேராசிரியர் இயம்புகின்றார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.36).

இத்திருத்தலத்தில் இரவில் எம்பெருமானுக்குப் படைக்கப் பெறும் திருக்கண்ணமுது அதாவது பால்பாயாசம் மிக்க சுவையுடையது. பகலில் எம்பெருமானைச் சேவிக்க வரும் அடியார்கள் நினைவாக அர்ச்சகரைக் கேட்டால் அவரும் இதற்காகவே எடுத்து வைத்திருக்கும்

திருக்கண்ணமுதினைத் தருவார் சுவைத்து மகிழலாம் என்று ஆசிரியர் எடுத்து இயம்புகின்றார். இத்தலத்து எம்பெருமான் இராமபிரானுக்கு வில் ஒன்றை அளித்தான் என்பது புராண வரலாறு. அது காரணமாக இந்த எம்பெருமானுக்குத் தெய்வச்சிலையார், திவ்ய சரபன் என்ற பெயர்கள் நிலைத்து விட்டன என்றும் கூறுவர்.

68. மதுரைக் கூடல் அழகர்

பண்டைக் காலத்தில் நம்நாட்டில் தமிழுக்கும நாகரிகப் பண்பிற்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தது. பெரியாழ்வார் காலத்துப் பாண்டிய அரசனை ஸ்ரீவல்லபதேவன் என்று வைணவ ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதை அறிகின்றோம். இந்த அரசனை 'கோநெடுமாறன்' என்று குறிப்பிடுவார் பெரியாழ்வார். இந்தப் பாண்டியனைப் பராந்தகன் நெடுஞ்சடையனின் தந்தையாகிய மாறவர்மன் என்று கருதுவர் பேராசிரியர் மு.இராகவய்யங்கார்(பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.53).

இத்திருத்தலத்தின் மூலவர் கூடலழகர். வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு நோக்கியபடி சேவை தருகின்றார். சௌஜர், பிருகுமுனிவர் ஆகியோருக்கு இவர் பிரதியட்சம் ஆனவர். இத்தலத்தின் தாயார் மதுரவல்லி நாச்சியார். இவருக்குத் தனிக்கோயில் சந்நிதி உண்டு. இத்தாயாரை வருணவல்லி, மரகதவல்லி, வரகுணவல்லி என்ற பெயர்களிலும் அழைக்கின்றனர்.

இத்தலத்தில் எம்பெருமான் மூன்று அடுக்குகளில் இருந்த, கிடந்த, நின்ற கோலங்களில் சேவை தந்தருளுகின்றார். முதல் அடுக்கில் வீற்றிருந்த கோலத்தில் வலது கரத்துடன் கூடல் அழகர் என்ற பெயரில் சேவை தருகின்றார். இரண்டாவது அடுக்கில் அந்தர வானத்து எம்பிரான் என்ற பெயரில் கிடந்த கோலத்திலும், மூன்றாவது மேல்தளத்தில் சூரியநாராயணன் என்ற பெயரில் நின்ற கோலத்திலும் சேவை தருகின்றார். இக்கோயிலில் சிவன் தலங்களில் உள்ளது போன்று நவக்கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சக்கர தீர்த்தம், ஹேம புஷ்கரணி, கிருதமாலாநதி, வைகையாறு ஆகியவை விளங்குகின்றன. இங்குள்ள விமானம் அஷ்டாங்க விமானமாகும். இத்திருக்கோயிலில் ஒரு பாசுரத்தால் ஆண்டாளும், ஒரு பாசுரத்தால் திருமங்கையாழ்வாரும், மங்களா சாசனம் செய்துள்ளனர். "கோழியும் கூடலும்" (பெரி., திரு., 9:2:5) என்ற ஒரே சொற்றொடரால் மங்களா சாசனம் செய்துள்ளார். இங்குக் 'கூடல்' என்பது திவ்ய தேசம், 'கோழி' என்பது உறையூரிலுள்ள திவ்ய தேசம் சோழநாட்டைச் சார்ந்தது.

மதுரை மாநகர் பெரியாழ்வாரின் பாமலை பெற்றது. அந்தப் பாமாலைதான் 'திருப்பல்லாண்டு' என்ற பிரபந்தம் அஃது கூடலகர் விசயமாக ஏற்பட்டதாகப் பெரியோர் பணிப்பர். பண்டைய இலக்கியக் கருவூலத்தில் ஏதாவது இத்திருக்கோயில் பற்றிய குறிப்புகள் உள்ளன எனில் அது சிலப்பதிகாரத்தில் வையை நெடுமாலைப் பற்றிய ஒரு குறிப்பாகும். 'துன்பமாலையில்' மாதரி என்னும் ஆயர் முதுமகள் ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் வையையாற்றின் கரையிடத்துள்ள நெடுமாலைப் பூசிப்பதற்கு சென்றாள் என்ற செய்தியை,

"ஆயர் முதுமகள் ஆடிய காயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்

நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்

தூவித் துறைப்படியப் போயினாள்" (சிலம்., துன்பமாலை, அடி (1–5)

என்ற அடிகளால் எடுத்துரைக்கின்றார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். 'வையை நெடுமால்' என்பதற்குச் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் 'ஸ்ரீ இருந்தவள முடையார்' என்று விளக்குவர். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் 'வையை நெடுமால்' என்ற தொடருக்கு 'அந்தரவானத்து எம்பெருமான்' என்று உரை எழுதுவர். இதன் விளக்கமும் கூடல் அழகர் பற்றியதே என்று கொள்ளல் தகும்.

69. திருமோகூர்க் காளமேகம்

எம்பெருமானை அடைவதற்குச் சாத்தியோபாயம் சித்தோபாயம் என்ற இரண்டு வித உபாயங்கள் வைணவ சாத்திரங்களில் பேசப் பெறுகின்றன. 'சாத்தியோபாயம்' என்பது நம்மால் செய்யப்பெறும் உபாயம். பக்தி பிரபக்திகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். சித்தோபாயம் என்பது நம்மால் செய்யப்பெற வேண்டியதாயன்றி முன்பே உள்ள உபாயம் இது சர்வேசுவரனைக் குறிப்பது. 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' (திருவா., சிவபு., அடி–18) என்ற மணிவாசப் பெருமான் கூறியதும் இது பற்றியதேயாகும்.

'மோகன சேத்திரம்' என்று போற்றப்படும் இத்தலத்தைப் பற்றி பிரம்மாண்ட புராணம், மாத்ஸ்ய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மஹாவிஷ்ணு திருப்பாற்கடலைக் கடைந்த வரலாறு இங்கு பேசப்படுகின்றது.

இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வாரும், ஒரு பாசுரத்தால் திருமங்கையாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

"சீராரும் மாலிருஞ் சோலை திருமோகூர்" (சிறிய திருமடல், கண்ணன்–74)

என்பது சிறிய திருமடல், நம்மாழ்வார் ஒரு திருவாய் மொழியால் மங்களா சாசனம் செய்துள்ளார். மருத நிலப்பகுதியைச் சார்ந்த இவ்வூர் நீர்வளமும், நிலவளமிக்கதாகத் திகழ்கின்றது. பெரியாழ்வாரின் திருவரங்கப் பாசுரப்பகுதி ஒன்றில்,

"உரம்பெற்ற மலர்க்கமலம் உலகு அளந்த
சேவடி போல் உயர்ந்து காட்ட
வரம்பு உற்ற கதிர்செந்நெல் தாள் சாய்த்துத்
தலைவணங்கும் தண் அரங்கமே" (பெரியாழ்., திரு., 4:9:8)

என்று விஷ்ணுவையே எப்போதும் தம் சித்தத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பெரியாழ்வாருக்கு விண்ணவும் ஓங்கியிருக்கும் தாமரையைக் காணும்போதெல்லாம் எம்பெருமானின் உலகளந்த சேவடியைச் சேவித்தாற்போல இருக்கும் என்பர். எம்பெருமானின் வெற்றிச் செயல்களிலும், வீரச் செயல்களிலும் ஆசிரியர் ஆழங்கால் படுகின்றார்(பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.70).

70. திருமாலிருஞ்சோலை வள்ளல் (அழகர் கோயில்)

வைணவர்கள் எம்பெருமானைக் 'கருணாநிதி' என்றும் 'கருணைக் கடல்' என்றும் போற்றி மகிழ்வார்கள். இத்தகைய எம்பெருமான் ஒரு காரணமும் பற்றாமல் ஆன்மாக்கள் மீது காட்டும்

கருணையை ஆழ்வார் பெருமக்கள் தம் பாசுரங்களில் சொல்லிச் சொல்லி அனுபவித்து மகிழ்ந்துள்ளனர். எம்பெருமானும் ஆன்மாக்களின் பிறவிகள்தோறும் அவர்கள் அறியாது செய்யும் சிறுசிறு செயல்களையும் அறிந்து செய்யும் பெரிய செயல்களாகக் கற்பித்துக் கொண்டும், தானே அவற்றை ஒன்றைப் பத்தாக்கி நடத்திக் கொண்டு போவான் என்று கூறுவர் பிள்ளை லோகாச்சாரியார். அழகர் கோயில்' என்று வழங்கும் திருமாலிருஞ்சோலை என்ற திவ்ய தேசத்தை நம்மாழ்வாரின் பாசுரத்தில்,

"திருமாலிருஞ் சோலை

மலை என்றேன்; என்ன,

திருமால்வந் தென்னெஞ்சு

நிறையப் புகுந்தான்" (திருவாய்., 10.8:1)

என்று கூறுகின்றார். எம்பெருமானுக்கு 'நீர் வண்ணன்' என்றொரு திருநாமம் உண்டு. மிகச்சிறு துவாரம் இருப்பினும் நீர் உள்ளே புகுந்து நிறைந்து விடுவதைப் போலவே நீர் வண்ணனான எம்பெருமானும் ஆழ்வார் மனத்துள் புகுவதற்குத் திருமாலிருஞ் சோலை மலை என்று நினையாது சொன்ன மாத்திரமே அவருள் புகுவதற்குரிய சிறிய துவாரமாக அமைந்து விட்ட அதிசயத்தை நினைந்து போற்றுகின்றார் ந.சுப்புரெட்டியார்.

இத்திருக் கோயிலில் பதினோரு பாசுரங்களால் ஆண்டாளும், இருபத்து நான்கு பாசுரங்களால் பெரியாழ்வாரும், மூன்று பாசுரங்களால் பூதத்தாழ்வாரும், முப்பதி மூன்று பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும் முப்பத்தாறு பாசுரங்களால் நம்மாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருமாலிஞ்சோலை என்னும் இத் திவ்ய தேசம் மதுரையிலிருந்து சுமார் பத்தொன்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

கந்தபுராணம், இம்மலையை 'முத்தி நடுபேரழகர் திருமலை' என்று சிறப்பித்துள்ளது என்பதனையும் அறிந்து மகிழ்கின்றோம். இவருடைய திருமேனியின் அழகை நம்மாழ்வாரின் பாசுரம் வெளிப்படுத்துகின்றது.

"முடிச்சோதி யாய்உனது

முகச்சோதி மலர்ந்தது வோ ?

அடிச் சோதி நீநின்ற

தாமரையாய் அலர்ந்தது வோ ?

படிச்சோதி ஆடையொடும்

பல்கலனாய் நன்பைம் பொன்

கடிசோதி கலந்தது வோ

திருமாலே! கட்டுரையே" (திருவாய்., 3.1:1)

என்று பாடுகின்றார். பூதத்தாழ்வாரின் திருப்பாசுரத்தில்,

" பணிந்தேன் திருமேனி

பைங்கமலம் கையால்

அணிந்தேன் உன் சேவடி மேல்

அன்பாய் – துணிந்தேன்

புரிந்தேத்தி உன்னை

புகடலிடம் பார்த் தாங்கே

இருந்தேத்தி வாழும்

இனிது" (இரண்டாம் திருவந்., 65)

என்று குறிப்பிடுகின்றார். அழகரின் திருக்கோயிலை மதுரையை ஆண்ட மலையத்துவச பாண்டியன் கட்டுவித்ததாக வரலாறு கூறுகின்றது. இன்று அழகர் 'கள்ளழகர்' என்ற பெயருடன் திகழ்கின்றார். இத்திருக்கோயிலின் விமானத்திற்குப் பொன் வேய்ந்தவன் சடவர்மன் சுந்தரபாண்டியன் ஆவார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.91).

71. வில்லிபுத்தூர் வேயர் பயந்த விளக்கு

பெரியாழ்வாரும், ஆண்டாளும் பிறந்த ஊர் ஸ்ரீவில்லிப்புத்தூர். இந்த ஊர் விருது நகர் – தென்காசி இருப்பூர்தி வழியில் உள்ளது. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் பிறந்த பெரியாழ்வார், விஷ்ணுசித்தர் என்ற இயற்பெயருடன் வாழ்ந்து வந்தார். இவர் தன் சொந்த நிலத்தில் 'நந்தவனம்' ஒன்றினை அமைத்து ஸ்ரீவில்லிபுத்தூர் ரங்கமன்னருக்கு மலர்மாலை சாற்றி வழிபட்டு வந்தார். ஒரு நாள் நந்தனவனத்தைச் சுற்றி மலர்களைப் பறித்து வரும்போது மலர்ச் செடியின் அருகில் பூமாதேவியின் அம்சத்துடன் பெண் குழந்தை ஒன்றிருப்பதைக் கண்டார். அக்குழந்தையினைத் தூக்கிக் கொஞ்சி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்து ஆண்டாள் எனப் பெயரிட்டார். பெரியாழ்வார் சம்மதிக்கவே, பெருமாளுக்கென மாலையை தயார் செய்தார் ஆண்டாள். அம்மாலையைப் பெருமாளுக்குச் சூடுவதற்கு முன்பு தான் கழுத்தில் அம்மாலையை சூடி அழகு பார்த்த பின்னரே பெருமாளுக்குச் சூட, அம்மலர் மாலையை அனுப்பி வைப்பாள். இதனால் இவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று சிறப்புப் பெயரையும் பெற்ற வரலாற்றுச் சிறப்பு இத்தலத்திற்குரியது. இத்திருக்கோயிலில் ஒரு பாசுரத்தால் பெரியாழ்வாரும், ஒரு பாசுரத்தால் ஆண்டாளும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

எம்பெருமானைப் பற்றிய நினைவே ஒரு நாள் திருச்சங்காழ்வானிடம் பேசத் தூண்டுகின்றது.

"கற்பூரம் நாறுமோ ? கமலப் பூ நாறுமோ ?

திருப்பவளச் செவ்வாய்த்தான் தித்தித் திருக்குமோ ?

மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விடுப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே ? (நாச்சி., திரு., 7:1)

என்று அவனிடம் பேசுகின்றார் ஆண்டாள். இங்ஙனம் தன் மகள் வாய் வெருவுவதைக் கண்ட விஷ்ணு சித்தர் மிகவும் கவலை அடைகின்றார். ஆழ்வார் கனவில் திருவரங்கச் செல்வன் தோன்றித் தாமே கோதையாரைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லுகின்றார். அழகிய மணவாளனும் பெரிய திருவடியின் மீது எழுந்தருளியிருக்கும் கோதையைத் திருமணம் செய்து

கொள்ளுகின்றான். இத்தெய்வத் திருமுணம் பங்குனி உத்தரத்தன்று மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

இந்த ஊரைப் பற்றிப் பாடிய பாசுரங்கள் இரண்டுதான். கண்ணனாகிய குழந்தையைத் தாய்ப்பால் உண்ணாத நிலையிலிருந்து அழைக்கும் பெரியாழ்வார்,

"மின்அனைய நுண்இடையார்
விரிகுழல்மேல் நுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிது அமர்ந்தாய்! உன்னைக் கண்டார்
என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப் பெற்ற வயிறுடையாள்
என்னும் வார்த்தை எய்துவித்த
இருடிகேசா! முலை உணாயே" (பெரியாழ்., திரு., 2.2:6)

என்று பாடுகின்றார். அவருடைய அருமைத் திருமகள் ஆண்டாளோ காதலி நிலையிலிருந்து கொண்டு கண்ணனைத் தன்னிடம் வருமாறு குயிலைக் கூவும்படி வேண்டுகின்றாள்.

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூருறை வான்றன்
பொன்னடி காண்பதோ ராசையி னால்என்
பொருகயற் கண்ணினை துஞ்சா
இன்னடி சிலோடு பாலமு தூட்டி
எடுத்த என்கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!
உலகளந் தான்வரக் கூவாய்" (நாச்., திரு., 5:5)

என்பது பாசுரம். இந்த இரண்டு பாசுரங்களிலும் வில்லிப் புத்தூரின் இயற்கைச் சூழ்நிலை காட்டப் பெற்றுள்ளது. இந்த இருவரைத் தவிர ஏனைய ஆழ்வார்கள் வில்லிபுத்தூர் எம்பெருமானைப் பற்றி மங்களா சாசனம் செய்ததாக அறியக் கூடவில்லை என்பது பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கருத்தாகும் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.116).

72. திருத்தண்காலூர் அப்பன்

'தங்கால்' என்ற மலையில் திருமகள் என்ற ஸ்ரீதேவி, தங்கித் தவம் செய்த காரணத்தினால் இத்தலம் 'திருத்தங்கால்' என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இத்தலத்து மூலவர் நின்ற நாராயணன் நின்ற கோலத்தில் கிழக்கு முகம் நோக்கி சேவை தருகின்றார். தாயார் செங்கமலத் தாயார் ஆவாள். இவள் தனிக்கோயில் நாச்சியராகத் திகழ்கின்றாள். இவளுக்கு அமிர்தநாயகி, அன்னநாயகி, ஆனந்தநாயகி, ஜாம்பவதி என்ற பிறபெயர்களும் உண்டு.

இத்தலம் மலைமீது இருப்பதாலும், இம்மலை மீது முருகப் பெருமானும் உள்ளதாலும், 'திருத்தண்கால்' என்று பெயர் பெற்றது எனக் கூறப்படுகிறது. செங்கமலத் தாயாருக்கு மட்டுமே தினந்தோறும் தாயார் சந்நிதியில் எண்ணெய்க் காப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலின் தீர்த்தம் பாபவிநாச தீர்த்தமாக விளங்குகிறது. இங்குள்ள விமானம தேவசந்திர விமானமாகும். இத்திருக் கோயிலில் நான்கு பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும், ஒரு பாசுரத்தால் பூதத்தாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். இத்திவ்ய சேத்திரம் விருதுநகர் – தென்காசி இரயில் நிலைய மார்க்கத்தில் திருத்தண்கால் இரயில் நிலையத்திற்கு அருகே உள்ளது.

"தமருள்ளும் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை – தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக் கிடம்" (இரண்., திருவந்., 70)

என்பது பூதத்தாழ்வார் பாசுரம். இதில் அன்பருடைய நெஞ்சம், தஞ்சை மாமணிக் கோயில், திருவரங்கம், திருத்தண்கால், திருமலை, திருப்பாற்கடல், மாமல்லபுரம், திருக்கோவலூர், திருக்குடந்தை என்னுமிடங்கள் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடங்களாகக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இவை 108 திருப்பதிகளில் மற்றுமுள்ளவற்றிருக்கும் உபலட்சணம். இவற்றைவிட அன்பருடைய நெஞ்சகமே மிகவும் உவப்பாக இருக்கும் என்பதைன் குறிப்பிடவே 'தமருள்ளும்' என முற்படக் கூறப்பெற்றது என்பது பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கூற்று (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.133).

73. ஆழ்வார் திருநகரி ஆதிநாதப் பெருமாள்

உலகைப் படைத்திடும் கடவுளான பிரம்மனைத் தான் படைத்திடுவதற்கு முன்பாகவே பொழுநை ஆற்றின் கரையில் பெருமாளே குடிகொண்டதினாலும், தான் குடிகொண்ட கோயிலையே ஆதிகோயிலாகக் கொண்டு தவமியற்றித் தன்னை வழிபட்டு நின்ற பிரம்மனுக்கு குருவாய் நின்று உபசேதம் செய்ததினாலும் இத்திருத்தலம் 'குருகூர்' என்ற பெயரைப் பெற்றது. இத்தலம் திருக்குருகூர் என்றும், ஆழ்வார் திருநகரி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலின் மூலவரான ஆதிநாதப் பெருமாள் நின்ற கோலம் கொண்டு கிழக்கு முகமாக சேவை தந்தருளுகிறார். பொலிந்து நின்ற பிரான், ஆதிபிரான் என்ற பிறபெயர்களும் இப்பெருமாளுக்கு உண்டு. இத்தலத்தில் ஆதிநாத வல்லி, குருகூர் வல்லி என இரு தாயார்கள் தனித்தனி சந்நிதிகளைக் கொண்டுள்ளனர். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக தாமிரபரணியாறு விளங்குகிறது. தலவிருட்சம் புளியமரம் ஆகும். இங்குள்ள விமானம் கோவிந்த விமானம் ஆகும்.

இத்திருக்கோயிலில் பதினொரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளனர். இவ்வூரைப் பற்றி நம்மாழ்வார் தம் திருவாய்மொழி பாசுரங்களில் அழகாக குறிப்பிட்டுள்ளார் என்பதை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

"மலிந்து செந்நெல் கவரி வீசும திருக்குருகூர்" (திருவாய், 4.10:5)
"சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு திருக்குருகூர்" (திருவாய், 4.10:6)

"கொக்கு அலர் தடம் தாழை வேலித் திருக்குருகூர்" (திருவாய், 4.10:8)

"வளங்கொள் தண்பனை சூழ்ந்து அழகு ஆய திருக்குருக்கூர்"(திருவாய், 4.10:9)

"குன்றம் போல் மணிமாட நீடு திருக்குருகூர்" (திருவாய், 4.10:11)

"மாடமாளிகை சூழ்ந்து அழகு ஆய திருக்குருகூர்" (திருவாய், 4.10:2)

"மாமதிள் சூழ்ந்து அழகாய திருக்குருகூர்" (திருவாய், 4.10:3)

என்பது நம்மாழ்வாரின் திருவாக்குகள் ஆகும். ஆண்டவனைவிட அடியாரே மிகவும் பெருமை பெற்றவர் என்பது வைணவ சித்தாந்தம். மற்றைய ஆழ்வார்கள் யாவரும் எம்பெருமானைப் பாட மதுர கவியாழ்வார் மட்டிலும் நம்மாழ்வாரையே, "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பாசுரத்தின் வாயிலாகப் பாடுகின்றார்.

கம்ப நாடனுக்கு நம்மாழ்வாரிடம் மிக்க ஈடுபாடு உண்டு. இராமகாதை பாடுவதற்கு முன் நம்மாழ்வாரின் திருவடிகளை நினைந்து வணங்கியிருப்பதையும், அஷ்டப்பிரபந்தம் பாடியருளிய திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் நம்மாழ்வார் துதியைக் கப்பாக அமைத்திருப்பதையும் நோக்க வேண்டும். "சடகோபர் அந்தாதி" என்ற ஒரு பிரபந்தத்தையே நம்மாழ்வார் மீது பாடியுள்ளார். இங்ஙனம் நம்மாழ்வாரின் பாசுரங்களின் வாயிலாகத் திருக்குருகூர் நம்பியின் சிறப்புக்களைப் பேராசிரியர் நேர்த்தியாக எடுத்துரைத்துள்ளார்.

74. திருக்கோளுர் வைத்த மாநிதி

இந்த உலகில் ஒருவன் ஒரு பொருளின் மீது பற்று வைத்திருந்து, அப்பற்றும் அளவற்றதுமாக இருந்தால், அப்பற்று அப்பொருளுடன் நின்று விடாமல், அதனோடு சம்பந்தம் பெற்ற பொருள்களிலும், பெருகிச் செல்லும். அதுபோல எம்பெருமானுடைய பாதுகைகளில் நாம் ஆதாரம் வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வதும், அவற்றைத் தலைமீது அணிந்து கொள்வதும், அவற்றை நீராட்டிய தீர்த்தத்தைப் பருகுவதும் செய்கின்றோம். இதற்குக் காரணம் நாம் எம்பெருமானிடம் கொண்டுள்ள அளவற்ற பக்தி ஆகும் என்பது பேராசிரியர் வாக்கு. நம்மாழ்வாரும்,

"நேர்பட்ட நிறைமு வுலக்கும்
நாயகன்தன் அடிமை
நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர்
தொண்டன் சடகோபன்" (திருமால், 8.9:11)

என்று தன்னை சொல்லிக் கொண்டிருப்பதையும் இங்கு ஒப்பிட்டு நோக்கலாம். இத்தலத்து மூலவரான வைத்த மாநிதிப் பெருமாள் நவநிதிகளைக் காத்து வருவதின் காரணத்தினால் எம் பெருமான் வைத்த மாநிதிப் பெருமாள் என்ற திருநாமத்தைப் பெற்றார். இத்தலத்தில் தான் மதுரகவி ஆழ்வார் அவதரித்தார்.

இத்திருக்கோயிலில் பன்னிரண்டு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருக்கோளுர் என்றும் திவ்ய சேத்திரம் நெல்லை மாவட்டம், ஆழ்வார் திரு நகரியில் இருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஆழ்வார் நவதிருப்பதிகளில் திருக்கோளுர் தலமும் ஒன்றாகும்.

75. திருப்பேரெயில் மகரநெடுங் குழைக்காதன்

திருமாலுக்கு அடிமை செய்தலை வைணவ சமயத்தின் முடிந்த முடியான குறிக்கோள் பொருளாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள்,

"எற்றைக்கும் ஏழ் ஏழ்
பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்
உனக்கேநாம் ஆன்செய்வோம்" (திருப்பாவை, 29)

என்பது சூடிக்கொடுத்த சுடர்கொடியின் திருவாக்கினால் இதனை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். எம்பெருமானிடம் ஈடுபட்டு அவனுக்குத் தொண்டு புரிதலே பிறவியின் பயனாகக் கருதுகின்றார் கோதைப் பெருமாட்டி. எத்தனை பிறவிகள் எடுப்பினும் பிறவியின் பயன் கைங்கரியம் புரிதலேயாகும் என்பது அன்னையாரின் முடிந்த முடிபாகும்.

இத்தலத்தின் மூலவர் மகர நெடுங்குழைக் காதன் வீற்றிருந்த கோலத்தில் கிழக்குத் திசை நோக்கி சேவை தருகின்றார். இத்தலத்தில் குழைக்காது வல்லி நாச்சியார், திருப்பேரை நாச்சியார் என இரண்டு தாயார்களுக்குத் தனித்தனியாக சந்நிதிகள் உள்ளன. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சுக்கிர புஷ்கரணி, சங்கு தீர்த்தம் ஆகியவை விளங்குகின்றன. இங்குள்ள விமானம் பத்திர விமானம் ஆகும். இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வா மங்களா சாசனம் செய்துள்ளார். ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒறாக விளங்குவது திருப்பேரை. ஆழ்வார் திருநகரியில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

பெண்மை நிலையிலிருந்து கொண்டு ஆழ்வார்கள் எம்பெருமானை அனுபவிக்கும் பொழுது அவர்கள் தாய், தோழி, மகள் என்று இம்மூவரில் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர் என்றும், இவற்றிற்குத் தத்துவம் உண்டு என்றும் ஆசிரியர் விளக்கியுள்ளார். பராங்குச நாயகிக்குத் 'திருப்பேரெயில் எம்பெருமானைக் கிட்டியே தீர்வேன்' என்றும் ஆற்றாமை பிறக்கின்றது.

ஆழ்வார் நாயகி எம்பெருமானை உருவெளித் தோற்றத்தில் காண்கின்றாள். ஆகவே, காலம் நீட்டியாது அவனைத் தான் காணுமாறு செய்யும்படி வேண்டுகின்றாள்.

"காலம் பெற என்னைக் காட்டு மின்கள்
காதல் கடலின் மிகப் பெரிதால்
நீல முகில்வண்ணத் தெம்பெ ருமான்
நிற்குமுன் னேவந்துஎன் கைக்கும் எய்தான்" (திருவாய், 7.3:6)

இத்திருப்பதியைப் பற்றிய திவ்ய கவியின் பாசுரத்தையும் பேராசிரியர் ஓதி உள்ளம் கரைகின்றார்.

76. சீவைகுந்தத்துத் தேவன்

"சரணமா கும்தன தாளடைந் தார்க்கெல்லாம்
மரணமா னால்வைகுந் தம்கொடுக் கும்பிரான்" (திருவாய், 9.10:5)

தவம் செய்து மனம் தூய்மை அடைந்து 'யான்' என்ற அகப்பற்றையும் 'எனது' என்ற புறப்பற்றையும் போக்கி, மெய்யுணர்வு பெற்ற பெரியோர்களைச் சஞ்சித வினை நெடுங்காது அழிந்துபடும், அங்ஙனம் மெய்யுணர்வு பெற்ற பெரியோர்கள், தெரிந்து தமக்கென எவ்வினைகளையும் செய்யார்கள்.

இத்திருக் கோயிலின் மூலவரான ஸ்ரீவைகுந்த நாதர், நின்ற கோலத்துடன் கிழக்கு முகமாக சேவை தந்தருளுகின்றார். இவருக்கு கள்ளபிரான், பால்பாண்டியன் என்ற பிற பெயர்களும் உண்டு. இங்கு வைகுந்தவல்லி, பூதேவி என இரு தாயார்கள் தனித்தனி சந்நிகளைக் கொண்டுள்ளனர். இத்திருக்கோயிலின் கோபுரம் நூற்றுப்பத்து அடி உயரமும், மதில் ஐநூறு அடி நீளமும், முன்னூற்று தொண்ணூற்று ஆறு அடி அகலமும் கொண்டதாகும். கோரவல்லி நாச்சியார் பூமாதேவி ஆவார். இத்திருக் கோயிலின் தீர்த்தமாக பிறகு தீர்த்தமும், தாமிர பரணி ஆறும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் சந்திர விமானம் ஆகும். இத்திருக்கோயில் இரண்டு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

மற்றொரு பாசுரத்தை ஆசிரியர் மிடற்றொலிக் கொண்டு வைகுந்தநாதரையே வணங்குகின்றார்.

"புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்துவை குந்தத்துள் நின்று
தெளிந்தஎன் சிந்தை அகங்கழியாதே
என்னையாள் வாயெனக் கருளி
நளிர்ந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூத் தாடிநின்று ஆர்ப்ப
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனிவாய்
சிவப்பே நீர் காணவா ராயே" (திருவாய், 9.2:4)

என்பது பாசுரம். சீவைகுந்தத்தலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆண்டிற்கு இரண்டுமுறை சூரியன் வழிபாடு செய்கின்றான் என்பது வரலாறு. சித்திரைத் திங்கள் ஆறாம் நாளும், ஐப்பசித் திங்கள் ஆறாம் நாளும் இளங்கதிரவனின் கிரணங்கள் கோபுரவாயில், மண்டபங்கள் இவற்றையெல்லாம் கடந்து வந்து எம்பெருமானின் திருமேனியில் பரவி பொன்னிறமாக்குகின்றான். இத்தகைய ஒரு சிறப்பு இத்திருத்தலத்தைத் தடவி வேறிடங்களில் இல்லை என்பதையும் அறிகின்றோம். குமரகுருபர அடிகள் பிறந்தருளியதும் இத்திருத்தலத்தில்தான். இப்பெரியார் பெயரால் திருப்பனந்தாள் காசி மடத்தின் பேருதவியால் நீண்ட நாட்களாக ஒரு உயர்நிலைப்பள்ளி நடைபெற்று வருகின்றது என்று ஆசிரியர் எடுத்து இயம்புகின்றார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.**201**).

77. வரகுண மங்கை விசயாசனர்

உலகப் பொருள்களில் இன்பம் பல்வேறு பொருள்களால் உண்டாகும். நம்மாழ்வாருக்கு எம்பெருமானை நினைக்க, நினைக்க, இன்பம் எல்லாம் ஒன்று சேர்ந்தாற்போல் இன்பம் உண்டாயிற்று.

“தேனும் பாலும் கன்னலும்

அமுதும் ஆகித் தித்திப்ப

யானும் எம்பி ரானையே

ஏத்தினேன் யான் உய்வானே” (திருவாய், 4.3:10)

என்ற பாசுரப் பகுதியில் தேன், பால், சருக்கரை, அமுதம் ஆகியவற்றின் இன்பமும் எம்பெருமானை நினைத்தலால் தனக்கு உண்டாவதாகக் கூறகின்றார் ஆழ்வார். அப்படி இன்பம் உண்டாவதால்தான், தான் எப்பொழுதும் எம்பெருமானை ஏத்துவதாகச் செப்புகின்றார். “யான் உய்வான் ஏத்தினேன்” என்ற தொடர் இதனைக் காட்டுகின்றது.

இத்திருக் கோயிலின் மூலவரான விஜயாசனப் பெருமாள் வீற்றிருந்த கோலத்துடன் கிழக்கு முகமாக சேவை தந்தருளுகின்றார். இவர் உரோமரிஷி, அக்னி தேவன், சத்தியவான் ஆகியோருக்கும் வழிபாடு உண்டு. இத்தலத்துத் தாயார் வரகுணவல்லி ஆவாள். இவள் வரகுண மங்கை என்றும் போற்றப்படுகிறாள்.

இத்திருக்கோயிலில் தீர்த்தமாக அக்னி தீர்த்தம், தேவ புஷ்கரணி ஆகியவை உள்ளன. ‘திருவரகுண மங்கை’ என்னும் இத்திவ்ய சேத்திரம் ஆழ்வார் நவதிருப்பதிகளில் ஒன்றாகும். நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சுமார் இரண்டரை கிலேபமீட்டர் தூரத்தில் உள்ளது இத்தலம் நத்தம் என்றும் வழங்கப்படுகிறது. இத்திருக் கோயிலில் ஒரு பாசுரத்தால் நம்மாழ்வாரும், மணவாள முனிகளும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

“புளிங்குடிக் கிடந்து, வரகுண மங்கை

இருந்து, வைகுந்தத்துள் நின்று;

தெளிந்த என் சிந்தையகம் கழியாதே,

என்னை ஆள்வாய் – எனக்கு அருளி,

நளிர்ந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப,

நாங்கள் கூத்து ஆடி நின்று ஆர்ப்ப,

பளிங்கு நீர் முகிலின் பவளம்போல் கனிவாய்

சிவப்ப, நீர் காண வாராயே” (திருவாய், 6.7:1)

நம்மாழ்வாரின் திருவாய் மொழி பாசுரத்தை இத்திருப்பதியில் ஓதி உள்ளம் கரைகின்றார் பேராசிரியர்.

78. திருக்குளந்தை மாயக்கூத்தன்

இத்தலத்திற்கு திருக்குளந்தை என்ற பெயர் இருந்தாலும், ‘பெருங்குளம்’ என்ற பெயரும் உண்டு. இத்தலத்தில் மிகப்பெரிய ஏரி போன்று குளம் அமைந்திருப்பதன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இத்தலத்து மூலவரான ஸ்ரீநிவாசன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியபடி காட்சி தருகின்றார். அலமேலு மங்கை, திருக்குளந்தை வல்லி என்று இரு தாயார்கள் உள்ளனர். நம்மாழ்வார் ஒரு பாசுரத்தால் இக்கோயிலில் மங்களா சாசன செய்துள்ளார்.

ஆழ்வார் நவ திருப்பதிகளுள் ஒன்றான திருக்குளத்தை ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து வடகிழக்காகப் பத்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

"கூடச்சென்றேன் – இனி என் கொடுக்கேன் ?
கோல்வளை, நெஞ்சக் தொடக்கம் எல்லாம்
பாடு அற்று ஒழிய இழந்து, வைகல்
பல்வளையார்முன் பரிசு அழிந்தேன் –
மாடக்கொடி மதிள் தென் குளந்தை
வண் குடபால் நின்ற மாயக் கூத்தன்
ஆடல் பறவை உயர்ந்த வெல் போர்
ஆழி வலவனை ஆதரித்தே" (திருவாய், 4.3:10)

என்ற இப்பாசுரத்தை நம்மாழ்வார் திருவாய்மொழியில் மகள் பாசுரமாகப் பாடுகின்றார். பேராசிரியர் இப்பாசுரத்தை திருக்குளந்தையில் மிடற்றொலி கொண்டு ஓதி உள்ளங்கரைகின்றார். ஆழ்வார் பெருமக்கள் பெருமானின் சிறப்புகளைக் கூறுமிடத்து பேராசிரியர் ஆழங்கால்பட்டு எண்ணி வியக்கின்றார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.217).

79. திருப்புளியங்குடிக் காய்சின வேந்தன்

திருக்குருகூர் ஆதிநாதன் ஆலயத்தில் திருப்புளிய மரத்தின் கீழ் அமர்ந்த நம்மாழ்வார். இத்தலத்திலுள்ள திருப்புளியங்குடி பெருமாளைப் பற்றி அதிகபட்சமாக 12 பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ள காரணத்தால், திருப்புளியாழ்வாரின் நினைவு கூறும் வண்ணம் இத்தலத்திற்குத் திருப்புளியங்குடி என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்திருக்கோயிலின் மூலவரான காய்சின வேந்தன் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக கிழக்கு நோக்கியபடி சேவை தருகின்றார். தாயாராக மலர் மகள் நாச்சியார், பூமாதேவி ஆகியோா உள்ளனர்.

'பைத்தியக் காரனைச் சுற்றி பத்துப்பேர்; பணக்காரனைச் சுற்றிப் பத்துப்பேர்' என்பது உலகியலைப் பளிங்குபோல் காட்டும் ஒரு பழமொழி. இதனை ஆழ்வார்,

"பொருள்கை யுண்டாய்ச் செல்லக்
கானில் போற்றியென் றேற்றெழுவர்
இருள்கொள் துன்பத் தின்மை
காணில் என்னேஎன் பாருமில்லை" (திருவாய், 9.1:2)

என்று பாசுர அமைக்கின்றார் என்பது பேராசிரியரின் கருத்து. இதனையெல்லாம் நன்கு உணர்ந்த ஆழ்வார் எம்பெருமானே உண்மையான பந்து என்று அறுதியிட்டு அவனையே சார நினைக்கின்றார் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.225).

80. தொலைவில்லி மங்கலத் தாமரைக் கண்ணன்

தொலைவிலி மங்கலத்தை இரட்டைத் திருப்பதி என்றும் வழங்குவர். அடுத்தடுத்து இரண்டு கோயில்கள் இருப்பதால் இஃது இங்ஙனம் கூறப் பெறுகின்றது. இத்தலத்து இரு கோயில்களும் மனித நடமாட்டம் அதிகம் இல்லாத வனப்பகுதியில் உள்ளன.

முதல் கோயில் தாமிர பரணி ஆற்றின் கரையில் உள்ளது. இக்கோயிலின் மூலவர் ஸ்ரீனிவாசன், நின்ற திருக்கோலத்துடன் கிழக்கு திசை நோக்கி சேவை தருகின்றார். உடன் பெரிய பிராட்டியாரும், பூமாதேவியும் உள்ளனர். இரண்டாவது கோயில் தாமிர பரணி ஆற்றில் இருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால் கரையில் உள்ளது. இக்கோயிலின் மூலவர் 'அரவிந்த லோசணன்' ஆவார். இவருக்கு செந்தாமரைக் கண்ணன் என்ற பெயரும் உண்டு. இத்தலத்து தாயார் கருத்தடங்கண்ணி ஆவார்.

இத்தலத்தில் துலாம் என்று சொல்லப்படும் தராசும், வில்லும் சாபவிமோசனம் பெற்றதாகும். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக வருண தீர்த்தமும் தாமிர பரணியும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் குமுத விமானமாகும். இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்கள் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். ஆழ்வார் திருநகர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ளது.

இத்திருத்தலத்து எம்பெருமானை நாயகி நிலையில் இருந்து கொண்டு பேசிய ஆழ்வாரின் பாசுரங்கள் தோழிப் பாசுரங்களாக அமைந்துள்ளது. ஆழ்வார் பகவத் விஷயத்தில் ஈடுபட்டிருக்கும் பெருமையை வேறு சில பாகவதர்கள் எடுத்துரைப்பதாக இருப்பது இதன் உள்ளுறைப் பொருளாகும்.

பராங்குச நாயகி, தொலைவில்லி மங்கலத்து எம்பெருமானை சேவித்த நாள்தொட்டு அவனுடைய பேரழகில் ஈடுபட்டு அவன் திருமேனி அழகினையே வாய்வெருவுகின்றாள் என்று பேராசிரியர் பராங்குச நாயகியின் நிலையை அழகாக எடுத்துரைத்துள்ளார். நாம் உறவினர்களாக நினைத்திருக்கும் அனைவரும் போலி உறவினர்களே எனவும், எம்பெருமான் ஒருவனே உண்மையான உறவினன் எனவும் கூறப்பெறும் மெய்ப்பொருள் உண்மையை ஆழ்வாரின் திருக்கடைக் காப்புப் பாசுரத்தில் குறிப்பிடுவதைச் சிந்திக்க வேண்டும் என்பது பேராசிரியர் கருத்து (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.240).

"சிந்தை யாலும் சொல் லாலும் செங்கையி
னாலும் தேவபி ரானையே
தந்தை தாயென் றடைந்த வண்குரு
கூரவர்சட கோபன் சொல்
முந்தை யாயிரத்துள்" (திருவாய், 6.5:11)

என்ற இத்திவ்ய தேசத்தில் இறைவனுடைய "பாந்தவ குணம்" விளங்குகிறது என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்தாகும்.

81. வானமாமாலைத் தோத்தாத்திரி நாதன்

இத்தலத்து மூலவர் தோத்தாத்திரி நாதன் ஆவார். அவர் வீற்றிருந்த கோலத்தில் சேவை தருகின்றார். இத்தலத்து தாயார்களாக பெரிய பிராட்டி, ஸ்ரீவர மங்கை நாச்சியார், பூமாதேவி

ஆகிய மூவரும் உள்ளனர். பெரிய பிராட்டியாரும், பூமாதேவியும் மூலவரோடு உள்ளனர். அத்துடன் இந்த மூன்று தாயார்களுக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. முன்பு இத்தலத்தில் நான்கு ஏரிகள் இருந்துள்ளன. அதனால்தான் நான்குநேரி என்று பெயர் பெற்றுள்ளது. காலப்போக்கில் மூன்று ஏரிகள் மறைந்து ஒரு ஏரிமட்டும் உள்ளது. இத்தலம் தாமாகத் தோன்றிய எட்டு சுயம்புத் தலங்களில் ஒன்று.

இத்திருக் கோயிலின் தீர்த்தமாக இந்திர தீர்த்தமும், சேற்றுத் தாமரை தீர்த்தமும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் நந்த வர்த்தன விமானமாகும். இத்திருக் கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திருச்சிரீவர மங்கை என்னும் இத்திவ்ய சேத்திரம் தற்போது நாங்குனேரி என்று அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி, திருவெறுங்குடி பேருந்து மார்க்கத்தில் உள்ள நாங்குநேரியில் இறங்கி இத்திருத்தலத்திற்குச் சென்று வரலாம். எம்பெருமான் தனக்கு முகம் காட்டாமையால்,

"நோற்ற நோன்பிலேன் நுண்ணறி விலேன்
ஆகிலும் இனி யுன்னைவிட்டு, ஒன்றும்
ஆற்றுகிற் கின்றிலேன் அரவிணை அம்மானே" (திருவாய், 5.7:1)

என்று ஆழ்வார் பாடுகின்றார். இந்தச் சந்நிதியில் எம்பெருமானின் "பாலனாய் ஏழுலகுண்ட செயலிலும்" (திருவாய், 5:7:7), கொக்கின் வடிவாய் வந்த பகாசுரனை அவன் வாயைப் பிளந்து அவனை முடித்த செயலும் (திருவாய் 5:7:9), அசுர ஆவேசகம் கொண்ட ஏழு எருதுகளை அடர்த்து நட்பின் இணையை மணந்த செயலிலும் ஆழ்வார் ஆழங்கால் பட்டு அனுபவிக்கின்றார் என்பது பேராசிரியர் கருத்து.

82. குறுங்குடிக் குழக நம்பி

இத்திருத்தலம் வாமன சேத்திரம் எனப்படும். பெருமான் எழுந்த வாமன அவதாரத்துடன் தொடர்பு கொண்ட காரணத்தால் 'திருக்குறங்குடி' என்ற பெயர் பெற்றது. வாமன மூர்த்தியுடன் இத்தலம் பெற்ற தொடர்பின் காரணமாக வாமனரின் சிறிய உருவத்தை நினைவுறுத்தும் வண்ணம் குறுங்குடி என்ற பெயர் உருவானது என்றும் கூறுவர்.

இத்தலத்து மூலவர் வாமனர் நின்ற கோலத்தில் கிழக்கு திசையை நோக்கியவாறு சேவை தருகின்றார். இத்தலத்தின் தாயாரின் பெயர் குறுங்குடிவல்லி நாச்சியார் ஆகும். இரண்டு தனித்தனியான சந்நிதிகளில் பெரிய பிராட்டியாரும், பூமாதேவியாரும் உள்ளனர். நின்ற கோலம், இருந்த கோலம், கிடந்த கோலம் ஆகிய மூன்று கோலங்களில் சேவை செய்கிறார்.

பிராட்டியார்கள் இரு தனித்தனிச் சந்நிதானங்கள் கொண்டிருந்தாலும் பிராட்டியார்களின் உற்சவர்கள் குறுங்குடி நம்பியோடு ஒரே ஆசனத்தில் அமர்ந்து இருப்பதால் நாச்சியார்களுக்கு அவர்களின் சந்நிதிகளில் பூசை நடைபெறுவது இல்லை. மூலவரான நின்ற நம்பி உட்புறம் சிலை வடிவமாகவும், வெளிப்புறத்தில் சுதை வடிவுடனும் அமைந்துள்ளார்.

இத்திருக்கோயிலில் ஒரு பாசுரத்தால் பெரியாழ்வாரும், இருப்பதைந்து பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும், பதின்மூன்று பாசுரங்களால் நம்மாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். வைணவ சமயத்தில் அடிப்படையாக அனைவரும் அறிந்து கொள்ளவேண்டிய சில

மரபுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, 'அர்த்தபஞ்சக ஞானம்' ஆகும். இறைவன் இயல்பு, உயிரின் இயல்பு, உயிர் இறைவனை அடையாவாறு உள்ள தடையின் இயல்பு, அத்தடையினை நீக்கி உயிர் இறைவனை அடைவதற்குரிய உபாயத்தின் இயல்பு, உயிர் இறைவனை அடைந்து பெரும்பயன் ஆகிய பொருள்களையும் ஒவ்வொருவரும் ஒருதலையாக உணர்தல் வேண்டும் என விதித்துள்ளனர் வைணவ ஆசிரியர்கள் என்பது பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கூற்று.

உலகப் பற்றற்றுத் தன்னலம் சிறிதுமில்லாத சமயச் சான்றோர்கள் தாம் புரியும் ஒவ்வொரு செயலையும் இறைவனே செய்விக்கின்றான் என்று கருதுகின்றனர். அன்றியும், அவர்கள் தமக்குத்துன்பம் ஏதேனும் நிகழ்ந்தால் அதற்குக் காரணம் தம் பாவம், தம் அறியாமை என்றும், நன்மை நிகழ்ந்தால் அதற்குக் காரணம் இறைவன் அருள் என்றும் கருதுதலும் அவர்களிடம் இயல்பாகக் காண்கின்றோம்.

நம்மாழ்வார் தாம் பாடும் பாசுரங்கள் அனைத்தையும் இறைவனே தன்னுள்ளிருந்து கொண்டு பாடுவிக்கின்றான் என்னும் கருத்தை உரைக்கின்றார்.

"என் சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன்" (திருவாய், 7.9:2)

என்ற ஆழ்வார் திருவாக்கினாலேயே இதனை அறிகின்றோம். இதனால்தான் ஆழ்வாரின் அருளிச் செயல்கள் 'தமிழ் மறை' என்றும் போற்றப்படுகின்றன. குறுங்குடி ஒரு சிறிய ஊர் தான். மலையையொட்டிய பகுதியாதலின் இவ்வூர் நல்ல குளிர் சோலைகள் நிரம்பியிருக்கின்றன. "தென் நன்சோலைத் திருக் குறுங்குடி" (திருவாய், 5:1:2), "தேன் கொள் சோலைத் திருக்குறுங்குடி" (திருவாய், 5:5:4), "சோலைசூழ் தண் திருக்குறுங்குடி" (திருவாய், 5:5:6) என்பது நம்மாழ்வார் வாக்காகும்.

திருவாலித் திருநகரியில் திருவவதரித்து அடியார்க்கு எளியனாய் இறைவன் எழுந்தருளியிருக்கும் பல திவ்ய தேசங்கள் எல்லாம் சென்று அந்த பெருமான்களைச் சேவித்து மங்களா சாசனம் செய்து பரவிய திருமங்கைமன்னன் இங்கு வந்து தம் இறுதி நாட்களைக் கழித்துத் திருநாட்டுக்கு எழுந்தருளிய செய்தியையும் பேராசிரியரின் நூலிலிருந்து அறியலாம் (பாண்டி நாட்டுத் திருப்பதிகள், ப.272).

83. திருவண்பரிசாரம்

இத்தலத்தில் பெருமானின் திருநாமம் 'திருவாழ்மார்பன்' என்பது இத்தலத்திற்கு 'திருவண்பரிசாரம்' என்ற பெயர் வந்தது. தாயார் கமலவல்லி நாச்சியார் ஆவார். இத்தலத்தில் தான் நம்மாழ்வாரின் தாயார் உடையநங்கை பிறந்தார். இவர் திருக்கூரைச் சேர்ந்த 'காரி' என்ற விஷ்ணு பக்தரை மணம் புரிந்து கொண்டார். இத்தலத்து மூலவர் திருக்குளப்பன் திருவருளால் உடைய நங்கையின் கருவில் உருவான நம்மாழ்வார் திருக்குருகூரில் உள்ள புளியமரப் பொந்திற்குள் குழந்தையாக உள்ளது. அக்குழந்தை தவழ்ந்து சென்று பத்மாசன யோகத்தில் யோகமுத்திரையுடன் மதுரகவி ஆழ்வாருக்குத் திருவாய் மொழியினை உபதேசித்து வந்தார்.

நாகர்கோயிலை அடுத்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. இந்நிலவுலகத்தில் எம்பெருமானின் நிலையையும் எண்ணிப் பார்க்கின்றார் ஆழ்வார். எம்பெருமான் ஒருவரையும் ஆளாக வைத்துக் கொள்ளவில்லை. தாமே திருவாழியையும் திருச்சங்கையும சுமக்கின்றார். திருவாழியும் திருச்சங்கும் பகைவர்கட்கே ஆயுதங்களாக இருப்பவை. பகவதநுபவத்தில் ஆழங்கால்பட்டவர்கட்கு அவை ஆபரணங்களாகவே இருப்பவை. ஒருக்கால் திருவாழியும் திருச்சங்கும எம்பெருமானுக்கு நிரூபகங்கள் என்று வைத்துக் கொண்டாலும், வில்லையும் வாளையும் சுமப்பதற்கு இளைய பெருமாளைப் போல் ஒருவர் இல்லையே என்று ஏங்குகிறார் ஆழ்வார்.

“வருவார் செல்வார் வண்பரி
சாரத்து இருந்தஎன்
திருவாழ் மார்வற்கு என்திறம்
சொல்லார் செய்வது என் ?
உருவார் சக்கரம் சங்கு சுமந்(து)
இங்கு உம்மோடு
ஒருபாடு உழல்வான் ஓர் அடி
யானும் உளன் என்றே” (திருவாய், 8.3:7)

என்பது பாசுரம். இதில் ‘பெரிய பிராட்டியார்’ வாழும் இடம் எனப் பொருள்படும். ‘ஶ்ரீநிவாசன்’ என்ற வடமொழிப் பெயர் ‘திருவாழ் மார்பன்’ என்ற அழகிய தமிழ்ப் பெயராக மாறிக் கிடக்கின்றது. மக்கள் திருநகரியிலிருந்து திருவண்பரிசாரம் செல்கிறார்கள், வருகிறார்கள், இப்படி வருவாரும் போவாருமாய் இருக்க, என்னைப் பற்றி அங்குள்ள எம்பெருமானிடம் கூற ஒருவரும் இல்லையா ? அழகான சங்கு, சக்கரம் தாங்கி நீர் உலகைக் காக்கத் திரிகையில், உம்முடன் பணிசெய்ய அடியவன் ஒருவனும் உள்ளான், என்று என்னைப் பற்றி சொல்ல மாட்டார்கள் போலும்! என்று ஆழ்வார் ஏங்குகின்றார்.

இந்தத் திருக்கோயிலில் நம்மாழ்வாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. இத்திருப்பதியில் தீர்த்தம் வழங்கும் வழக்கமும் உண்டு. திருத்துழாயும் சந்தனமும் வழங்குகின்றனர். இத்திருப்பதி எம்பெருமானின் திவ்ய மங்கள விக்கிரகத்தின் அழகில் ஈடுபட்டு விட்டால், அத்திருக்கோயிலை விட்டுத் திரும்ப மனம் வருவதில்லை என்று எம்பெருமானை மனமாரச் சேவித்த நிலையில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நம்மையும் எம்பெருமானை சேவிக்கத் தூண்டுகின்றார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.2).

84. திருவாட்டாற்று எம்பெருமான்

இத்திருக்கோயிலின் மூலவரான ஆதிகேசவப் பெருமாள் கிடந்த கோலம் கொண்டு மேற்கு முகமாக சேவை தந்தருளுகின்றார். தாயார் மரகதவல்லி நாச்சியார் ஆவார். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக கடல்வாய்த் தீர்த்தம், இராம தீர்த்தம், வட்டாறு ஆகியவை உள்ளன.

இங்குள்ள விமானம் அஷ்டாங்க விமானமாகும். இத்திருக் கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். நாகர்கோயிலை அடுத்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த 'தொடுவட்டி' என்ற இடத்திற்குப் பக்கத்தில் திருவட்டாறு தலம் உள்ளது.

"இருள் தருமா ஞாலத்துள்
இனிப்பிறவி யான்வேண்டேன்;
மருள் ஒழிநீ மடநெஞ்சே!
வாட்டாற்றான் அடி வணங்கே" (திருவாய், 10.6:1)

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் தம்மை விண்ணாட்டிற்குக் கொண்டு போகவே எம் பெருமான் காத்திருக்கின்றானாதலின், 'அவன் வழியே செல்லப் பார்' என்று தன் நெஞ்சிற்குக் குறிப்பிடுகின்றார். உகந்தருளின நிலங்களிலேயே அவன் வந்து நிற்பது தம்மைக் கொண்டு போவதற்காகவே என்பது அவர் கருத்து.

அன்றியும் திருவாட்டாறு எம்பெருமான் இவருக்கு வீட்டுலகம் தருவதற்கு விரைகின்றான். இதனை,

"வாட்டாற்றான் வந்து இன்று
விண்ணுலகம் தருவானாய்
விரைகின்றான்" (திருவாய், 10:6:3)

என்று ஆழ்வாரே சொல்லுகின்றார். பரமபதத்தில் எம் பெருமானுடைய திருக்குணங்கள் பகல் விளக்குப்போல் ஒளியற்றும் ஒளிகுன்றியும் காணப்பெறும். இந்த உலகில் அக்குணங்கள் இருட்டறையில் விளக்கு போல் ஒளிர்வதால் வளம் மண்ணுலகில் மிக்கதாயிற்று என்று குறிப்பிடுகின்றார். ஆசிரியர் ஆழ்வார் அருளிய திருவாய்மொழியைப் பாடி அனுபவித்த நிலையில் நம்மையும் ஆற்றுப்படுத்துகின்றார்.

85. அனந்தபுரத்து அண்ணலார்

புராண காலத்தில் இத்தலம் இருக்கும் பகுதிகள் 'அனந்தங்காடு' என்று அழைக்கப்பட்டு வந்தது. இத்தலத்து மூலவர் அனந்த பத்மநாபன். கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். தாயார் ஸ்ரீஹரிலட்சுமி ஆவார். இத்தலத்து கோயிலைப் போன்றே மூலவரும் பெரிய உருவினைக் கொண்டவர். இத்தலத்தில் பள்ளி கொண்ட எம்பெருமானை மூன்று வாயில்கள் வழியே திருமுகம், திருவுந்தி, திருவடிகள் ஆகியவற்றை சேவித்திடும் நிலையில் மூலவரின் கர்ப்பக்கிரகம் அமைந்துள்ளது. இத்திருக் கோயிலின் தீர்த்தமாக வராக தீர்த்தம், மத்ஸய தீர்த்தம், பத்ம தீர்த்தம் ஆகியவை உள்ளன. இங்குள்ள விமானம் ஹேமகூட விமானமாகும்.

இந்த அழகிய திருப்பதியை நம்மாழ்வார் மட்டுமே மங்களா சாசனம் செய்துள்ளார். திருவனந்தபுரம் என்ற திவ்ய தேசம் சாதாரணமானதன்று. அது 'அயர்வறும் அமரர்களும்' வந்து அடிமை செய்யும் இடமாதலின் திருநாட்டைக் காட்டிலும் ஏற்றம் பெற்றதாகும். அமரர்களின் தலைவரான சேனை முதலியார் வந்து வழிபடுதலால் அவருடன் நித்திய சூரிகளும் வந்து

அந்தரங்கமான பணிவிடை செய்கின்றனர். ஆகவே 'நாமும் அங்கு சென்று கைங்கரியர்களாக வேண்டும்' என்று ஆசிரியரின் கருத்து.

"அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதி
சேர் அனந்தபுரத்து
அமரர் – கோன் அர்ச்சிக்கின்று; அங்கு அகப் பணி
செய்வர் விண்ணோர்;
நமர்களோ! சொல்லக் கேள்மின்; நாமும் போய்
நணுக வேண்டும் –
குமரனார் தாதை துன்பம்
துடைத்த கோவிந்தனாரே" (திருவாய், 9.2:1)

என்ற பாசுரத்தில் கோவிந்தன், முருகனின் தந்தை சிவனது துன்பத்தை நீக்கிய தெய்வம். தேவர்கள் என்று பெயர் கொண்டு திரிகின்றவர்களுக்கும் தலைவன். இவனைத் திருவனந்தபுரத்தில் சேனை முதலியார் அர்ச்சனை செய்து வழிபடுகிறார். அடியவர்களே! கேளுங்கள். நாமும் வானவர்களுடன் சேர்ந்து பகவான் தொண்டில் ஈடுபடுவோம் என்கிறார் ஆழ்வார். இத்திருக்குகோயிலில் ஆண்டில் இரண்டு முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்று மீனத் திருநாள்; மார்ச் – ஏப்ரலில் நடைபெறுவது. மற்றொன்று, துலாத் திருநாள், அக்டோபர் – நவம்பரில் நடைபெறுவது. திருவிழாக்களின் இறுதி நாளன்று எம்பெருமான் பதுமநாபனை ஊர்வலமாக 'சங்கு முகம்' என்ற கடற்கரைகுக் கொண்டு செல்கின்றனர். பத்மநாபன் அங்குக் கடல் நீராடித் திருவோலக்கம் கொண்டு எண்ணற்ற மக்களுக்குச் சேவை சாதிக்கின்றனர். இங்ஙனம் எம்பெருமான் ஊர்வலமாகச் செல்வதை 'ஆராட்டு' என்று அப்பகுதி மக்கள் வழங்கி வருகின்றார். இவற்றைத் தவிர மார்த்தாண்ட மன்னரால் தொடங்கப் பெற்ற 'பத்ர தீபம்' என்ற திருவிழாவும் ஆண்டிற்கு இருமுறை நடைபெற்று வருகின்றது.

"அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்ற முதுமொழிக்கிணங்க இன்றும் கேரள நாட்டிலுள்ள திருக்கோயில்கள் மிகுந்த பக்தியுடன் பரிபாலிக்கப்பெற்று வருவதாக திருத்தலப் பயணம் மேற்கொண்ட ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.33).

86. திருவாறன் விளைத் திருக்குறளப்பன்

இத்தலத்து மூலவர் திருக்குறளப்பன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். தாயார் பத்மாசனி நாச்சியார் ஆவார். அர்ஜுனனால் வழிபாடு செய்யப்பட்ட தலம் இதுவாகும். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக வேதவிலாச சரசும், பம்பா நதியும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் வாமன விமானமாகும். இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

'ஆரம்ளா' என்று அழைக்கப்படும் திருவாளன் விளை என்பது இத்திவ்ய தலமாகும். கேரள மாநிலம் செங்கண்ணூரில் இருந்து ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. வைணவ தத்துவப்படி வைகுந்த நாதனாகிய நாராயணனே முழுமுதற் கடவுள். அவனே எல்லா

உலகங்களையும் படைத்தவன். ஒரு காலத்தில் பிரளயத்தில் அழியாமல் காப்பவனும், சில சமயம் தன் திருவயிற்றில் வைத்துப்புப்பவனும் அவனே. அவனே எல்லாம். இத்தகைய பெருமானை அடைய நம்மாழ்வார் துடித்து நின்றகின்றார்.

"எங்கு வந்து உறுகோ ? என்னை ஆள்வானே ?
ஏழ் உலகங்களும் நீயே;
அங்கு அவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே;
அவற்று – அவை கருமமும் நீயே;
பொங்கிய புறம்பால் பொருள் உளவேலும்
அவையுமோ நீ; இன்னே ஆனால்,
மங்கிய அறிவாம் நேர்ப்பமும் நீயே;
வான் புலன் இறந்ததும் நீயே !" **(திருவாய், 8.1:6)**

என்ற பாசுரத்தில் என்னை ஆள்கின்றவனே! ஏழுலுகங்களும் நீயாக இருக்கையில் நான் வந்து அடைய முடியுமோ ? இவ் உலகங்களிலே சிறிய தெய்வங்களும் நீயே, அத் தெய்வங்களின் படைத்தல், அழித்தல் ஆகிய செயல்களும் நீயே! காரியமாகிற தன்மை முழுதும் அழிந்து மிகவும் நுட்பமான நிலை அடைந்து, புலப்படாமல் பரந்து நின்ற சித்துக்களும் நீயே! கண் முதலிய உறுப்புகளுக்குப் புலப்படாததாயுள்ள முக்த ஆத்மாக்களும் நீயே, இவ்வாறு நீ இருக்கிற பொழுது நானாக உன்னை வந்து எங்ஙனம் கிட்டுவேன் ? என்கிறார் ஆழ்வார்.

87. திருச்செங்குன்றூர் அப்பன்

இத்தலத்து மூலவரான இமையவரப்பன் நின்ற கோலத்தில் மேற்கு திசையை நோக்கி சேவை தருகின்றார். இங்குள்ள மக்களால் இத்தலமே திருச்சிற்றாறு விஷ்ணு கோயில் என்று அழைக்கப்படுகின்றது. தாயார் செங்கமவல்லி ஆவார். பெருமாள் கோயில், விஷ்ணு கோயில் என்று வழக்கத்தில் இக்கோயில் அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் தீர்த்தமாக சங்க தீர்த்தமும், திருச்சிற்றாரும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் ஜெகஜோதி விமானமாகும். இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருச்செங்குன்னூர் என்ற இத்தலம் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் இரயில் மார்க்கத்தில் உள்ளது.

இங்குள்ள பெருமாள் நான்முகனுக்கு அந்தர்யாமியாக இருந்து படைப்புத் தொழிலை, நடத்தியும், தானான தன்மையில் காத்தலைப் புரிந்தும், உருத்திரனுக்கு அந்தர்யாமியாக இருந்து அழித்தல் தொழிலை மேற்கொண்டும் இருக்கும் எம்பெருமான் தனது அச்சத்தைப் போக்கித் தனக்குத் தாரகனாகவும் இருக்கின்றான் என்பது ஆழ்வாரது நம்பிக்கை. படைப்பு முதலான முத்தொழில்களையும் நடைபெறச் செய்பவன் என்ற கருத்து இன்னொரு பாசுரத்திலும் வற்புறுத்தப் பெறுகின்றது.

"படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
பரம்பரன் சிவபிரான் அவனே

இடைப்புக்கு ஓர் உருவும் ஒழிவில்லை அவனே

புகழ்வில்லை யாவையும் தானே !" (திருவாய், 8.4:9)

என்ற இப்பாசுரத்தில் ஆக்கல், அழித்தல், அளித்தல் இவையெல்லாம் தான் இட்ட வழக்காக இருப்பவன். எல்லாப் பொருள்களையும் உடலாகக் கொண்டு தான் ஆன்மாவாக இருப்பவன். இவை யாவும் புனைந்துரையன்று உண்மையே என்கின்றார் நம்மாழ்வார். இந்த உணர்ச்சிப் பெருக்கால் திளைத்த நிலையில் திவ்ய கவியின் பாசுரத்தையும் ஓதி உள்ளம் கரைகின்றார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்(மலைநாட்டுத் திருப்பதிகள், ப.71).

88. திருக்கடித்தானத்து உறை திருமால்

அற்புத நாராயணன் இத்தலத்து மூலவர். இவர் நின்ற கோலத்தில் கிழக்கு முகமாக சேவை தருகின்றார். இவருக்கு இன்னொரு பெயர் அமிர்த நாராயணன். தாயார் கற்பகவல்லி ஆவார். இத்தலத்தில் நரசிம்மர், ஸ்ரீ கிருஷ்ணர் ஆகியோருக்கு சந்நிதிகள் உள்ளன. இத்திருக் கோயிலின் தீர்த்தமாக பூமித் தீர்த்தம் விளங்குகிறது. இங்குள்ள விமானம் புண்ணயகோடி விமானமாகும்.

நம்மாழ்வார் இத்தலத்தில் பதினோரு பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார். இத்தலம் கேரள மாநிலம் திருவல்லாவில் இருந்து கோட்டயம் செல்லும் சாலையில் எட்டு கிலோமீட்டர் தொலைவில் செங்கணாஞ்சேரி சாலையில் உள்ளது. ஆழ்வார் காலத்தில் இந்தத் திருப்பதியில் வேதியர்கள் கூட்டம் மிக்கிருந்தது. அவர்கள் சதா நான்கு மறைகளையும் நிலை நின்று முழங்கும்படி செய்து வருவர். இதனை நினைவில் கொண்டே ஆழ்வாரும்,

"நற்புகழ் வேதியர் நான் மறை நின்று அதிர்

கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே" (திருவாய் மொழி, 8.6:10)

என்று பாடியுள்ளதாகக் கருதலாம்.

"மாயப் பிரான்என் வல்வினை மாய்ந்து அற,

நேயத்தி னால் நெஞ்சம் நாடு குடிகொண்டான்,

தேசத் (து) அமரர் திருக்கடித் தானத்தை,

வாசப் பொழில்மன்னு கோயில் கொண்டானே" (திருவாய், 8.6:4)

சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு என்றாற்போல், 'நெஞ்ச நாடு' என்று ஒரு நாட்டைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இடக்கை வலக்கை அறியாத பூமியில் உள்ளார். தொழுவதற்காக அவர்கட்கு முகங்கொடுத்திடும் எம்பெருமானின் நேர்மையைக் காண அவாக்கொண்டு நித்திய சூரிகளும் வந்து கிட்டுகின்ற திருப்பதியாகும் இது என்று ஆழ்வார் கூறுவதாக ஆசிரியர் தெளிவாக்குகின்றார். திருக்கடிதானத் தலத்தை நெஞ்சாலே நினைத்தால் போதும் என்று ஆழ்வாரின் கருத்தாக உள்ளது என்பது ஆசிரியரின் கூற்றாகச் சுட்டப்பட்டுள்ளது.

89. திருவல்ல வாழ் உறையும் கோனார்

கோலப்பன் இத்தலத்து மூலவர் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். இறைவனுக்குத் திருவாழ் மார்பன், ஸ்ரீ வல்லபன் என்ற பிற பெயர்களும் உண்டு. இத்தலத்துத் தாயார் செல்வத் திருக்கொழுந்து நாச்சியார் ஆவார். இத்தலத்து தீர்த்தமாக கண்டாகர்ண

தீர்த்தம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இங்குள்ள விமானம் சதுரங்க கோல விமானமாகும். கேரள மாநிலத்தில் திருவல்லா இரயில் வண்டி நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். இவ்வுலக வாழ்விற்குத் தொடக்கத் தளையாயிருப்பது மகளிரைத் தொடர்பாகவுள்ள சிற்றின்பம். அதைவிட்டு நீ உய்யும் வழியைத் தேடுவாயானால் 'வல்லவாழ் செல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!' என்று நெஞ்சிற்குப் பணிக்கின்றார் திருமங்கையாழ்வார். அடுத்து செல்வ நிலையாமையைப் பேசுகின்றார் ஆழ்வார். இவ்வுலகச் செல்வம் துயரை விளைவிப்பதன்றி மகிழ்ச்சி தருவதன்று என்பதை நீ எண்ணினாயாகில் திருவல்லவாழ் திருப்பதியில் பொருந்தப் பார்ப்பாயாக என்கின்றார் ஆழ்வார்.

நம்மாழ்வார் வாழ்ந்த காலத்தில் எண்ணற்ற அந்தணர்கள் திருவல்லவாழில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பாடுகின்ற சிறந்த வேதங்களின் ஒலி கடலில், அலைகள் முழங்குவனபோல் முழங்குகின்றன. உயர்ந்து எழும் ஓமப்புகையோ எங்கும் சூழ்ந்து கமழ்கின்றன. "நல்ல அந்தணர் வேள்விப் புகை, மைந்நலம் கொண்டுயர் விண் மறைக்கும் தண் திருவல்லவாழ்" என்பதனால் இதனை அறியலாம் என்று ஆசிரியர் தெளிவாக இயம்புகின்றார். திருமங்கையாழ்வார் பாசுரங்களையும் சந்நிதியில் அன்புருகப் பாடி உள்ளம் கரைகின்றார் ஆசிரியர் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.104).

90. திருவண் வண்டூர் தேவாதி தேவன்

நூற்று எட்டு திருத்தலங்களுள் மூன்று தலங்கள் மட்டுமே 'வண்' என்ற அடைமொழியோடு கூடியுள்ளன. அவை திருபங்கூர் திருப்பதிகளுள் ஒன்றான திருவண் புருடோத்தமம், இரண்டாவதாக கேரளாவில் உள்ள திருவண் பரிசாரம், மூன்றாவதாக திருவண் வண்டூர் ஆகியவை ஆகும். இத்தலத்தைப் பஞ்சமாண்டவர்களில் ஒருவரான நகுலன் வழிபாடு செய்துள்ளார். இத்தலத்திற்கு மூலவரான பாம்பனையப்பன் நின்ற கோலத்தில் மேற்கு திசை நோக்கி சேவை தருகின்றார். இவர் 'கமலநாதன்' என்றும் அழைக்கப்படுகிறார். தாயார் கமலவல்லி நாச்சியார் ஆவார்.

சிவபெருமானையும், விஷ்ணுவையும் ஒருசேர சேவிக்கும் மகா பாக்யத்தைப் பெற்றவர் சிரஞ்சீவியான மார்க்கண்டேயர் இத்தலத்திற்கு வந்து தவம் புரிந்ததோடு, கமலவல்லி நாச்சியார் சமேத பாம்பனையப்பன் கமல நாதரின் நின்ற கோல சேவையை தரிசனம் செய்தார். இத்தலத்தின் தீர்த்தமாக பாபநாச தீர்த்தமும், பம்பாநதியும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் வேதாலய விமானமாகும். இத்திருக் கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். கேரளாவில் செங்கண்ணூரில் இருந்து வடக்கே ஆறு கி.மீ. தொலைவில் உள்ளது திருவண் வண்டூர் தலம். நம்மாழ்வார் தாமான தன்மையை விட்டுப் பாராங்குச நாயகி நிலையை அடைந்து குருகினங்கள், கருநாரை, புள்ளினங்கள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, பூவை, வண்டினங்கள் இவற்றைத் தூது போகும்படி வேண்டுகிறார் என்பது ஆசிரியர் கருத்து.

91. திருப்புலியூர் மாயப் பிரான்

பண்டைய காலத்தில் இத்தலம் 'குட்டநாடு' என்று அழைக்கப்பட்டது. அப்பெயரினை இன்றைய காலத்தில் மருவி 'புலியூர்' என அழைக்கப்படுகின்றது. இத்தலத்தை, 'செழுநீர்வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர் தண்பனைக் குட்ட நாட்டுத் திருப்புலியூர்' என்று நம்மாழ்வார் மங்களா சாசனம் பெற்றுள்ளார்.

சோழ நாட்டில் 'திருப்புலியூர்' என்ற மற்றொரு திவ்ய தேசம் ஒன்றிருக்கிறது. அதனின்றும் இத்தலத்தை வேறுபடுத்திக் காட்டவே, குட்ட நாட்டுத் திருப்புலியூர் என்று மங்களா சாசனம் செய்ததாகச் சொல்வது வழக்கம். இத்தலத்து மூலவரான 'மாயப்பிரான்' நின்ற கோலத்துடன் கிழக்கு திசை நோக்கி சேவை தருகின்றார்.

தாயார் பொற்கொடி நாச்சியார். எம்பெருமானின் சந்நிதி மிகச்சிறியதாக இருப்பதோடு பழுதடைந்த நிலையிலும் காணப்படுகின்றது. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக பிரஜ்ஜாசரஸ், பூஞ்சுளை தீர்த்தம் ஆகியவை விளங்குகின்றன. இங்குள்ள விமானம் புருஷோத்தம விமானமாகும். இத்திருக் கோயிலில் ஒரு பாசுரத்தால் நம்மாழ்வாரும் ஒரு பாசுரத்தால் திருமங்கையாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருப்புலியூர் என்னும் திவ்ய சேத்திரம் கேரள மாநிலம் செங்கண்ணூரிலிருந்து மேற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

திருப்புலியூர் எம்பெருமான் மீதுள்ள பாசுரங்கள் 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற அகப்பொருள் துறையால் அமைந்துள்ளன. அதாவது தானும் தலை மகளும் இதுகாறும் அறத் தொடு பொருந்தவே நடந்திருப்பதாகத் தோழி காட்டி நிற்றலே ஆகும். திருப்புலியூர் எம்பெருமானின் பெருமையை நம்மாழ்வார் திருவாய்மொழியில் பின்வருமாறு கூறுகின்றார்,

"நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன்
தன் அடிமை
நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர்
தொண்டன் சடகோபன் சொல்
நேர்பட்ட தமிழ் – மாலை ஆயிரத்துள்
இவை பத்தும்
நேர்பட்டார் – அவர் நேர் பட்டார் – நெடு மாற்கு
அடிமை செய்யவே" (திருவாய் மொழி, 8.9:11)

என்ற பாசுரத்தில் நிறைந்த மூன்றுலகங்களுக்கும் தலைமை பெற்றவன் இறைவன் ஒருவனே. அவனுக்கு ஆட்பட்ட அடியார்களுக்கு அடியார்கள். அவர் அடியாளர்கள் ஆகஅவர்களுக்கும் தொண்டராக உள்ள சடகோபர், நேரிய தமிழில் ஆயிரம் திருப்பாசுரங்களில் எம் பெருமானைத் துதித்தவற்றுள் இப் பத்துப் பாசுரங்களைக் கற்க வல்லவர்கள் திருமாலுக்கு அடிமை செய்ய வாய்ப்புப் பெற்றவர்கள் ஆவார்கள் என்ற பெருமிதம் உணர்வையும் பெறுவோம் என்று ஆசிரியர் இயம்புகின்றார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.138).

92. திருக்காட்கரை அப்பன்

இத்திருக்கோயிலின் மூலவர் காட்கரையப்பன், நின்ற கோலத்துடன் தெற்கு முகமாக சேவை தந்தருளுகிறார். கபில முனிவருக்கு இப்பெருமாள் காட்சிகொடுத்தவர். வாமனரின் அம்சம் கொண்டவராக இப்பெருமான் திகழ்வதால் கேரள மக்கள் திருவோணத்தன்று பெரும் விழா எடுக்கின்றனர். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக கபில தீர்த்தம் விளங்குகிறது. இங்குள்ள விமானம் புஷ்கல விமானமாகும். இத்திருக் கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். கேரள மாநிலம் எர்ணாகுளத்திற்கு அருகே திருவாட்கரை திருத்தலம் உள்ளது. நம்மாழ்வார் திருக்காட்கரை மாயனின் அநந்த கல்யாண குணங்களை தம் பாசுரத்தின் வாயிலாக வடித்திருக்கும் விதம் தம் நெஞ்சையும் உருக்குவதாக உள்ளது என்று ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் அழகாகக் கூறிவுள்ளார்.

நம்மாழ்வார் இந்த எம் பெருமானின் ஆச்சரியமான பறிமாற்றங்களை நினைக்கும் பொழுது நெஞ்சு நீர்ப்பண்டமாகின்றது. கட்டுக் குலைந்து உருகுகின்றது. ஆன்மா தாங்கக் கூடிய அளவுக்கு மீறி ஆசையும் கரை புரண்டோடுகின்றது என்று நெஞ்சுருகின்றார்.

“உருகுமால் நெஞ்சம் உயிரின் பரமன்றி;
பெருகுமால் வேட்கையும்; என்
செய்கேன் தொண்டனேன் –
தெருவு எல்லாம் காவி கமழ் திருக்காட்கரை
மருவிய மாயன் – தன் மாயம் நினைதொறே ?” (திருவாய், 9.6:1)

என்ற பாசுரத்தில் எம்பெருமான் தாழ நின்று ஆழ்வாருடன் பரிமாறிய சீலகுணத்தினை நினைந்து கரைந்து உருகுகின்றார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.159).

93. திருமூழிக்களத்து விளக்கு

இத்தலத்திற்குத் திருமொழிக்களம் என்று இருந்த பெயரானது மன்னர் திருமூழிக் களமானது என்று கூறுவர். இத்தலத்து மூலவரான திருமூழிக் களத்தான் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். இவரை அப்பன் என்றும், ஸ்ரீ சக்தி நாதப் பெருமாள் என்றும் அழைக்கின்றனர். இவர் ஆரித மகரிஷிக்கு பிரதியட்சம் ஆனவர். தாயார் மதுரவேணி நாச்சியார் ஆவார். இத்தலத்தில் பகவதி அம்மனின் சந்நிதி ஒன்றுதான் உள்ளது. இத்தலத்துச் சந்நிதிக்கு அருகாமையில் ஆழ்வாய் நதி ஒடுகிறது. இத்தலத்தில் எம்பெருமானுக்குப் பூசை செய்யப்படும் போது வாத்தியங்கள் ஏதும் வாசிக்கப்படுவது இல்லை. இங்குள்ள விமானம் சௌந்தர்ய விமானமாகும். இத்திருக்கோயில் மூன்று பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். கேரள மாநிலம் ஆழ்வாய் நகரிக்கு அருகில் இத்தலம் உள்ளது.

திருமூழிக்களம் என்பது மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஏனைய மலைநாட்டுத் திருப்பதிகள் போலவே இதுவும் இயற்கை வனப்புக் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. திருமங்கையாழ்வார், “முனியே! திருமூழிகளத்து விளக்கே ?” என்றும், “மூழிக்களத்து விளக்கினை” என்றும் போற்றுவர் நம்மாழ்வாரும் “திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு” என்றும், “திருமூழிக்களத்து உறையும் ஒண் சுடரை” என்றும் பாடியுள்ளார். இரண்டு

ஆழ்வார்களும் இந்தத் தலத்து எம்பெருமானைச் "சுடர்ப்பொருளாகவே" அருளிச் செய்திருக்கின்றனர்.

நம்மாழ்வார் அப்பனின் சீல குணத்தில் ஈடுபட்டு அதில் ஆழங்கால் பட்டு அப்பெருமானை நேரில் காண ஆசைப் பட்டு பிராட்டியின் நிலையிலிருந்து பராங்குச நாயகியாக, நாரை, குருகு, கொக்கு ஆகிய பறவைகளை தூது விடுகின்றார். ஆழ்வார் நாயகி அன்னங்களைப் பார்த்துத் தூதுபோகுமாறு வேண்டுவதை,

"தகவு அன்று என்று உரையீர்கள்
தடம் புனல்வாய் இரை தேர்ந்து
மிக இன்பம் படமேவும்
மெல்நடைய அன்னங்காள்!
மிகமேனி மெலிவு எய்தி
மேகலையும் ஈடு அழிந்துஎன்
அகமேனி ஒழியாமே
திருமூழிக் களத்தார்க்கே" (திருவாய், 9.7:10)

என்ற பாசுரம் காட்டுகின்றது. 'தகவு அன்று என்று உரையீர்கள்' என்பது இதயத்தில் தைக்கும்படியான சொல் என்பது ஆழ்வார் நாயகியின் திருவுள்ளம். எம்பெருமானது பிரிவால் உடலும் மெலிந்து மேகலையும் தங்காதபடி சீர் குலைந்தது. இனி தன் 'அகமேனி' ஒழிவதற்கு முன் நிலையைத் தெரிவிக்குமாறு அன்னங்களை வேண்டுகின்றார். எல்லா ஆன்மாக்களுக்கும் எம் பெருமானுக்கு உடலாக இருப்பினும் தன் ஆன்மாவை, 'அகமேனி' என்று சிறப்பிக்கின்றார் ஆழ்வார். இங்ஙனம் ஆழ்வார் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பேசிய அனுபவத்தை எண்ணிய வண்ணம் "திருமூழிக்களத்தானே முதற்கடவுள்" என்ற எண்ணத்துடன் ஆசிரியர் மனநிறைவு பெற்று நம்மையும் சேவிக்க அழைக்கின்றார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.177).

94. திருவித்துவக் கோட்டு அம்மான்

சிதம்பரத்தில் உள்ள திருச்சித்திரக் கூடத்தைப் போன்ற இராஜாதிராஜா அம்சம் கொண்ட தலமாக விளங்கி வருவதுதான் திருவித்துவக் கோடாகும். இத்தலத்து மூலவரான உய்ய வந்த பெருமாள் நின்ற கோலத்தில் தென் திசை நோக்கி சேவை தருகின்றார். இத்தலத் தாயார் வித்துவக் கோடுவல்லி ஆவார். இவர் பத்மபூரணி நாச்சியார் என்றும் அழைக்கப்படுகின்றார். இத்தலத்து கோயிலில் நுழைந்ததும் எதிரில் சிவபெருமான் சந்நிதி உள்ளது.

108 திவ்ய தேசங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுள் மூவர் பேரில் மிகவும் ஈடுபட்டு மங்களா சாசனம் செய்துள்ளார் கோழிக்கோன் குலசேகரப் பெருமாள். திருவரங்கம் பெரிய கோயிலில் அரவணையில் பள்ளி கொண்டுள்ள அழகிய மணவாளன் பேரில் பாடியவை முதல் மூன்று திருமொழிகள். வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து நெடியோன் பேரில் அருளியது நான்காவது திருமொழி, மீன் நோக்கு நீள்வயல் சூழ் வித்துவக்கோட்டு அம்மான் மீது திருவாய் மலர்ந் தருளியது ஐந்தாவது திருமொழி. வித்துவக்கோடு என்ற திவ்ய தேசம் மலை நாட்டிலுள்ளது. இதனை 'திருமிற்றக் கோடு' என்று வழங்குவர் அப்பகுதி மக்கள்.

எம் பெருமானைத் தாயாகப் பாவித்து நாம் குழந்தை நிலைக்கு வந்து விடுகின்றோம் என்கின்றார் ஆசிரியர்.

"அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள் தன்
அருள் நினைந்தே அழுங்குழவி;
அதுவே போன்று இருந்தேனே" (பெரு., திரு. 5:1)

என்று முறையிடுகின்றோம். கோபத்தினால் ஒரு தாய் தான் பெற்ற குழவியை ஒரு சமயம் வெறுத்துத் தள்ளினாலும் தாயின் கருணையையே கருதிக் குழந்தை அழுது அழுது அவள் கருணைக்கும் பாத்திரமாகின்றது. "அழுதால் உன்னைப் பெறலாம்" என்றபடி அழுது அடி அடைந்த மணிவாசகரைப் போலவே கண்களில் நீர் மல்க அடியார்கள் நிற்கின்றார்கள். இந்நிலையில் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவு முறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்ற உணர்வுடன் ஆழ்ந்து நிற்கிறோம் என்கிறார் ஆசிரியர். (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.198).

95. நாவாய் உறையும் நாராண நம்பி

இத்தலத்து மூலவரான 'நாவாய் முகுந்தன்' நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை தருகின்றார். நாராயணன் என்ற பெயராலும் இவர் அழைக்கப்படுகின்றார். தாயார் மலர் மங்கை நாச்சியார் ஆவார். சிறு தேவி என்ற பெயராலும் அழைத்திருக்கின்றனர். பாரதப்புழை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது இத்தலம். எதிர்க்கரையில் சிவபெருமான் மற்றும் பிரம்மா ஆகியோருக்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. திருவாய் தலம் மும்மூர்த்திகளும் குடிகொண்டுள்ள தலமாக விளங்கும் சிறப்பான தலமாகும்.

கேரளாவில் உள்ள திருப்பதிகளுள் திருநாவாய் தலத்தில் மட்டுமே பெரிய பிராட்டியார் தனிக்கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக செங்கமல சரஸ் விளங்குகிறது. இங்குள்ள விமானம் வேத விமானாகும். இத்திருக்கோயிலில் பதினோரு பாசுரங்களால் நம்மாழ்வாரும், இரண்டு பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். கேரளாவில் உள்ள கள்ளிக்கோட்டை இரயில் மார்க்கத்தில் எடக்குளம் என்று அழைக்கப்படும் திருநாவாய் இரயில் நிலையத்தின் தெற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் பாரதப் புழை என்றும் ஆற்றின் கரையில் இத்தலம் உள்ளது.

திருமங்கையாழ்வார் நறையூர் நம்பியைப் பாடி அனுபவிக்கும் போது இந்தத் திவ்ய தேச எம்பெருமானையும் நினைவு கொள்கின்றார். நாவாய் உறையும் நம்பியையே நறையூர் நம்பியாகக் கண்டு களிக்கின்றார். அவர் கண்ட காட்சியை,

"தூவாய புள்ளூர்ந்து வந்து, துறைவேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானை,
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணானை
நாவாய் உளானை நறையூரில் கண்டேனே" (பெரிய திரு., 6.8:3)

என்ற பாசுரத்தில் பரமபரநாதன் திருநாவாயில் வந்து குடிகொண்டிருந்தான். அவனே திருநறையூரில் வந்து சேவை சாதிக்கின்றான் என்கிறார் ஆழ்வார் (மலைநாட்டுத் திருப்பதிகள், ப.215).

96. திருமலை திருப்பதி (வடநாட்டுத் திருப்பதிகள்)

தென் இந்தியாவின் முக்கிய திருத்தலங்களில் ஒன்றான திருப்பதி ஆந்தரா மாநிலத்தில் அமைந்துள்ளது. கீழ்திருப்பதி கோவில் திருமலை அடிவாரத்தில் ஊருக்குள் உள்ள கோவிலாகும். மூலவரான கோவிந்தராஜப் பெருமாள் புஜங்க சயமான கிடந்த கோலத்தில் கிழக்கு திசை நோக்கி சேவை தருகின்றார். தாயார் புண்டரீகவல்லி ஆவார்.

மலையின் மீதுள்ள கோவிலின் மூலவர் வேங்கடம் உடையான் ஆவார். இவரை வேங்கடாஜலபதி, பாலாஜி, ஸ்ரீநிவாசன், பிரபு போன்ற பிற பெயர்களாலும் அழைக்கின்றனர். இவர் நின்ற கோலம் கொண்டு கிழக்கு திசை நோக்கி சேவை தருகின்றார். இங்கு தீர்த்தத்தின் வடமேற்கு மூலையில் உள்ள ஆதிவராகர் தனிக் கோயில் சந்நிதானம் கொண்டுள்ளார். இவரை தரிசித்த பின்பே வேங்கடமுடையானை சென்று சேவிக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் உள்ளது. மலையடிவாரத்தில் உள்ள தனியான ஊர் திருச்சானூர் அலர்மேல் மங்காபுரம், இக்கோயிலிலன் தாயாராக அலர்மேல் மங்கை கிழக்கு நோக்கி தனித்து சேவை தருகின்றார். இவரை பத்மாவதி என்றும் அழைக்கின்றனர்.

திருப்பதி திருமலை வழிபாட்டிற்கு செல்பவர்கள் முதலில் கீழ்த்திருப்பதியில் உள்ள கிடந்த கோல கோவிந்தராஜரையும், தாயார் புண்டரீக வல்லியையும் சேவித்து பின் ஏழுமலைகளையும் தாண்டித் திருமலைக்கு சென்றிட வேண்டும். திருமலையிலுள்ள புஷ்கரணியின் வடமேற்கு மூலையிலுள்ள ஆதிவராகப் பெருமானை சேவித்த பிறகே திருவேங்கடமுடையனை சேவித்த அருள் பெற்றிடவேண்டும். பின் திருமலையில் இருந்து திருச்சானூர் சென்று அலர்மேல் மங்கையை சேவித்திட வேண்டும்.

இத்தலத்தில் ஆண்டாள் பதினாறு பாசுரங்களாலும், பெரியாழ்வார் ஏழு பாசுரங்களாலும், திருப்பாணாழ்வார் இரண்டு பாசுரங்களாலும், பூதந்தாழ்வார் ஒன்பது பாசுரங்களாலும், பொய்கையாழ்வார் பத்துப் பாசுரங்களாலும், திருமங்கையாழ்வார் அறுபத்தி இரண்டு பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்துள்ளார்.

திருவேங்கடத்தின் புகழ்

ஆழ்வார் பெருமக்களால் மங்களா சாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றாம் நூற்றாண்டில் தான் பெரும்புகழ் அடையத் தொடங்கியது. இராமநுசர் திருவேங்கடமுடையான் திருக்கோயிலின்பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயிலின் புகழை மிகவும் உயர்த்தி விட்டது. இன்று திருமலையில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் இராமாநுசர் வகுத்தவையே என்று, 'திருமலையொழுகு' என்ற நூலால் அறிகின்றோம்.

"சென்று சேர்தரு வேங்கடமாமலை,
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே" (திருவாய், 3.3:8)

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் வேங்கட மலையின் சிறப்பை கூறுகின்றது.

"திருமா லிருஞ்சோலை
மலை என்றேன்; என்னத்
திருமால் வந்த என்
நெஞ்சு நிறையப் புகுந்தான்" (திருவாய், 10.3:1)

என்ற பாசுரத்திலும் வேங்கடமலையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. திருவேங்கடமலை திருவரங்கத்தைக் காட்டிலும் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. பொய்கையாழ்வார்,

"வினைச்சுடரை நந்துவிக்கும்
வேங்கடமே வானோர்
மனச்சுடரைத் தூண்டும்
மலை" (திருவாய், 10.3:1)

என்று கூறித் தம் உள்ளத்தை அதில் ஈடுபடுத்துவர். பேயாழ்வாரோ பரம பதத்தோடும் பாற்கடலோடும் இம்மலையைச் சேர்த்துப் பேசுகின்றார்.

திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் திருமலையின் இயற்கை எழிலும் மலையின் உயர்ச்சியிலும் ஈடுபட்டாலும் அங்குத் திருக்கோயில் கொண்டுள்ள இறைவன்பால் தம் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் எம் பெருமானின் பெருமையைப் பலவாறு பேசி இனியவராகின்றார். எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்காகச் செய்த பல்வேறு நற்செயல்களை எடுத்துக் காட்டி அகமகிழ்கின்றனர்.

ஆழ்வார்களுள் தலைவராகக் கருதப்பெறும் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களில் திருவேங்கடத்தைப் பற்றி வரும் செய்திகள் மிக அற்புதமானவை. விசிட்டாத்வைதத் தத்துவத்தின் உயிர்நாடியாகவுள்ள சரணாகதியின் அருமையை உலகுக்கு உணர்த்தும் பெருமையை இங்கு அழகாக ஆழ்வார் எடுத்துரைக்கின்றார். திருமலையில் எழுந்தருளியிருக்கும எம்பெருமான் இந்த ஆழ்வாருக்குத் "தாள் பரப்பி மண்தாவிய ஈசனாகவும்" என் கண், பாசம் வைத்த பரஞ்சுடராகவும், வேதியர் முழுவேதத்து அமுதமாகவும் காட்சி அளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றான். இத்தகைய எம்பெருமானின் திருவடியில்,

"'அகல இல்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய் உலகம் மூன்று
உடையாய் என்னை ஆள்வோனே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல் ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" (திருவாய், 6.10:10)

என்று சரண்புகுகின்றார். வைணவ தத்தவமொழியில் 'சரணாகதியாக' இருப்பது இப்பாசுரம் சரணாகதியைக் குறிப்பதால் இத்திருவாய் மொழி முழுவதும் சரணாகதி சாரமாயிருக்கும் என்று

வைணவ ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுவார்கள் என்று ஏழுமலையின் சிறப்பு, வேங்கடத்தானின் சிறப்பு போன்றவற்றைப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நேரில் சென்று அனுபவித்து நம்மையும் செல்லுமாறும் வேங்கடத்தானை சரணாகதி அடையுமாறும் தூண்டுகின்றார் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.2).

97. சிங்கவேழ் குன்றுடை ஈசன் (அகோபிலம்)

அகோபிலத்தை நவநரசிம்ம வழிபாட்டுத்தலம் என்று கூறுகின்றனர். அடர்ந்த காடுகள், முட்கள் நிறைந்த மரங்கள், புதர்கள் அனைத்தும் நிறைந்த மலையடிவாரத்தில் அகோபிலம் உள்ளது. மேலும் மலை மீது உள்ள இடம் மேல் அகோபிலம் என்றும் அழைக்கப்படுகிறது. மலையைக் குடைந்து மலையிலேயே அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும். இக்கோயிலில் அகோபில நரசிம்மர், வராஹநரசிம்மர், மாலோல நரசிம்மர், யோகானந்த நரசிம்மர், பாவ நரசிம்மர், காரஞ்ச நரசிம்மர், சக்கரவட நரசிம்மர், பார்க்கவ நரசிம்மர், ஜீவாலா நரசிம்மர் என்று ஒன்பது வகை திருக்கோலம் கொண்டு எம்பெருமான் அருள் தருகின்றான்.

மலைஅடிவாரத்திலுள்ள கீழ் அகோபிலத்தில் மாலோல நரசிம்மரும், அட்சய தீர்த்தத்தின் அருகாமையில் பார்கவ நரசிம்மரும், மேல் அகோபிலத்திற்குச் செல்லும் வழியில் சக்கர வட நரசிம்மரும் மற்றும் யோகானந்த நரசிம்மரும் உள்ளனர். பாவநாசினி ஆற்றங்கரையின் தென்புறமாய் உள்ள மூன்று குகைகளில் உக்கிர நரசிம்மர், வராஹ நரசிம்மா, பிரகலாத நரசிம்மரும் கீழ் அகோபிலத்தில் இருந்து ஏழரை கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பாவ நரசிம்மரும் சேவை தருகின்றார்கள். சென்னையில் இருந்து மும்பை செல்லும் புகைவண்டி வழியில் ஆந்திராவில் உள் கடப்பா புகைவண்டி நிலையத்தில் இறங்கி அர்ல்கட்டா என்ற இடத்திற்கும், பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள அகோபிலதற்கு பேருந்துகள் மூலம் சென்றிடலாம்.

பாசுரங்கள் தோறும் நரசிம்மாவதாரப் பெருமையில் நம்மாழ்வார் ஆழங்கால் படுகின்றார். இரணியனை மாய்க்கும் பொருட்டும். அவன் பிரகலாதனைக் காத்து ஆட்கொள்ளும் பொருட்டும் நரசிங்கப் பெருமாள் அவதரித்தான் என்பதை நாம் அறிவோம்.

"எங்கும் உளன் கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன்
வீயத் தோன்றிய என்
சிங்க பிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தே" (திருவாய், 2.8:9)

என்று நம்மாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங்கால்படுகின்றார். பெரியாழ்வாரும்,

"அளந்திட்ட தூணை அவன்தட்ட, ஆங்கே
வளர்ந்திட்டு வாள்உருச் சிங்க உருவாய்" (பெரியாழ், திரு., 1.6:9)

என்று அந்த அவதாரத்தை அனுபவித்த மகிழ்வர். கம்பநாடானும்,

"நசைதிறந் திலங்கப் பொங்கி
நன்றுநன் றென்ன நக்கு
விசை திறந் துருமு வீழ்ந்த
தென்னவே தூணின் வென்றி
இசை திறந் துயர்ந்த கையால்
ஏற்றினன்; ஏற்ற லோடும்
திசை திறந் தண்டங் கீறி
சிரித்தது செங்கட் சீயம்" (கம்பன்., யுத்த., இரணி., 127)

என்று நரசிங்கப் பெருமான் தூணின்றும் வெளிப்போந்தன்மையைக் காட்டுவான். இத்தகைய பெருமான் திருக்கோயில் கொண்ட இடம் சிங்கவேழ் குன்றமாகும் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.22).

98. அயோத்தி நகர்க் கோமான்

அயோத்யா இடத்தின் மூலவர் சக்கவர்த்தி ஸ்ரீராமபிரான் ஆவார். இவரை ரகுநந்தன் என்றும் அழைப்பர். இவருக்கு இடப்புறத்தில் சீதாப்பிராட்டியார் அருள் பாவிக்கிறார். ஸ்ரீ இராமபிரான் தன் அவதார முடிவில் சகோதரர்கள் மூவருடன் சரயு நதியில் சங்கமம் செய்த இடமாகும்.

பாரத இதிகாசங்களுள் ஒன்றான இராம காதை என்று கூறப்படும் இராமாயணம் நடைபெற்றது அயோத்தியாவில்தான். மனிதகுல சமுதாயத்திற்காக வேதநெறியின் அடிப்படையில் ஒழுக்கத்தை நிலைநாட்டித் தவம் மற்றும் தியானங்களின் மூலம் மாபெரும் சக்திகளையும் ராஜபதவியையும் பெற்று, அராஜகம் செய்த இலங்கை அரசனை அழித்துத் தர்மத்தினை நிலைநாட்டி அமைதியை அனைவரிடத்திலும் இராமன் ஏற்படுத்தினார்.

ஒரே சொல், ஒரே இல், ஒரே வில் என்ற மூன்று அம்சங்களோடு எடுக்கப்பட்டது இராம அவதாரம் ஆகும். தற்போது சரயு நதிக்கரையில் புதிய இடமாக எழுப்பி இருக்கும் அம்மாஜி கோயில் தென் பாரத அமைப்பு முறையில் பழைய இடத்தில் உள்ளது. இராமபிரான் சந்நிதியில் தன் மனைவி சீதை மற்றும் தம்பிகள் மூவருடன் அனுமன் கருடன் உடன் அருள் தருகின்றார்.

இத்தலத்தை குலசேகர ஆழ்வார் நான்கு பாசுரங்களாலும், பெரியாழ்வார் ஆறு பாசுரங்களாலும், திருமங்கை ஆழ்வார் ஒரு பாசுரத்தாலும், தொண்டரடிப்பொடியாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர். வட இந்தியாவில் லக்னோவிற்கும், காசிக்கும் இடையில் அயோத்யா உள்ளது.

இராமனது கதையைக் கூறுவது இராமாயணம் என்றாலும், இராமகாதை சிறையிருந்தவளின் பெருமையைப் பரக்கப் பேசுகின்றது. நம்மாழ்வாரின்,

"தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்" (திருவாய், 4.8:5)

என்ற திருவாய் மொழித் தொடரே இங்ஙனம் இவர் அருளிச் செய்ததற்கு மூலம். பிராட்டியினுடைய பேரருளின் மிகுதியைத் தெளிவு படுத்துவதற்காகவே 'பிராட்டி' என்னாது 'சிறையிருந்தவள்' என்று

அருளிச் செய்கின்றர். குழவி கிணற்றிலே விழுந்தால் உடன் குதித் தெழும் தாயைப் போல, இவ்வுயிர்கள் விழுந்த பிறவிப் பெருங்கடலிலே தானும் ஒக்க வந்து பிறந்து இவர்கள் பட்டவற்றை எல்லாம் தானும் பட்டுக் காப்பாற்றுகையாலே, ஒரு காரணம் பற்றி வாராத தாயாகிற சம்பந்தத்தால் வந்த அளவற்ற அன்பு என்ற திருக்குணத்திற்கு இச்சிறையிருப்பு ஒரு விளக்கமாகும். திருவருள் புரிதலையே காரணமாகக் கொண்ட தாகையாலே இவளுக்குப் பேரொளியைத் தருகிறது இச் சிறையிருப்பு. அனுமனும் இவள் பெருமையை,

"விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்ப தொன்றும்
இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்" (கம்ப., சுந்தர., திருவடிதொழு., 62)

என்று 'தவம் செய்த தவமாம் தையலின்' பெருமையை எடுத்தோதுகின்றான்.

நாட்டுக்குத் திரும்ப அழைத்தவர எண்ணிய பரத நம்பிக்கு பாதுகைகளை அளித்தல், பரதாழ்வானுக்கு அடிசூடுகையாகின்ற அரசு ஈதல், கைகேயி சொற்கேட்டுத் தண்டகாரண்யம் அடைதல், சூர்ப்பணகையின் மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களும் போக்குதல், சேது கட்டுவித்தல், இராவணனைக் கொன்று அவன் தம்பிக்கு அரசு ஈதல், ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவர்க்குஇன் அருள் சுரந்து குகனைத் தோழமை கொள்ளல், சுக்ரீவன் வைதேகியைத் தேட நான்கு திசைகட்கும் ஆட்களைப் போக்குதல், வடமதுரை சாளக்கிராமம் துவரை என்ற திவ்ய தேசங்களுடன் அயோத்தியையும் சிந்தித்தல் ஆகியவற்றை நினைந்து உருகுகின்றார் பெரியாழ்வார். அரக்கர்கள் 'சூழமணி தூரம்' என்ற கூத்தை இராமபிரான் முன்னர் ஆடுவதாக அமைந்த பாசுரத்தில் 'அயோத்தி காவலன் தன் சிறுவனை' நினைந்து போற்றுகின்றார் திருமங்கை மன்னன்.

இம் மசூதிக்கு அருகில் சரயு நதிக் கரையில் தென்னிந்தியப் பாணியில் 'அம்மாஜி மந்திர்' என்ற ஒரு புதிய கோயில் கட்டப்பெற்றுள்ளது. இங்கு இராமன், பிராட்டி, தம்பியர், சிறிய திருவடி மகுடம் சூட்டிய கோலத்தில் காட்சி அளிக்கின்றான். இராமன் சரயு நதியில் மூழ்கித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின இடம் இதுதான் என்று சொல்லுகின்றனர்.

"அன்று சரா சரங்களை வைகுந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி அசுரன் தம்மை
வென்றிலங்கி மணிநெடுந் தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர் வரத்தன் தாமம் மேவி" (பெரு., திரு., 10:10)

என்ற குலசேகரப் பெருமாளின் திருமொழிப்பகுதி நம்மையும் மறந்து நாமும் முக்தராக வைகுந்தத்திற்குச் செல்லும் அனுபவத்தைப் பெறுவதாக உள்ளது என்பது ஆசிரியரின் கூற்று.

சரயு நதியில் மூழ்கினால் இருவினைகளும் கழன்று போகின்றன என்ற அனுபவத்தையும் ஆசிரியர் பெறுவதாகக் கூறுகின்றார் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.37).

99. நைமிசாரணியத்து எந்தை

முன்பொரு காலத்தில் மகரிஷிகள் தாங்கள் மனஅமைதியுடன் தவம் புரிந்திட புனிதமான இடத்தைக் காட்டி அருளுமாறு பிரம்ம தேவரை வேண்டினர். பிரம்மனோ உடனுக்குடன் ஒரு தர்ப்பப் புல்லை எடுத்து சக்கர வடிவமாக்கி மண்ணுலகில் அதனை ஒட்டுவர் ரிஷிகளிடம், 'ரிஷிகளே! இந்த தர்பைச் சக்கரம் உருண்டு போய் எங்கு நிற்கிறதோ அவ்விடமே தவம் செய்ய உகந்த புனித இடமாகும்' என்று அருளினார். இப்படி அருளிய சக்கரம் உருண்டு வெகு தொலைவு ஓடி நின்ற இடமே, 'நைமி சாரண்யம்' எனப்பட்டது. பத்ரிநாத் செல்லும் பக்தர்கள் நைமி சாரண்யம் வந்து எம்பெருமானை சேவித்துத் திரும்புகின்றனர். எம் பெருமான் தன்வடிவமாக நைமி சாரண்யத்தைக் கொண்டு அவரே காடு முழுமையும் என்ற பாவனையில் வியாப்பித்துள்ளார்.

இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சக்கர தீர்த்தம் கோமுகியாறு, நேமி விஸ்ராந்த தீர்த்தங்கள் என்ற பெயருடன் விளங்குகின்றன. இத்தலத்து விருட்சமாக தபோவனம் இங்குள்ளது. இங்குள்ள விமானம் ஸ்ரீஹரி விமானமாகும்.

இத்திருக்கோயிலில் மனிதனின் அனுபவ முத்திரைகளாகப் பத்து பாசுரங்களால் திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். திரு நைமி சாரண்யம் என்னும் இத்திவ்ய சேத்திரம் வடநாட்டில் உள்ள கொல்கத்தா நகரில் இருந்து டேராடுன் செல்லும் வழியில் உள்ளது. செய்ய வேண்டிய வினைகள் என்று விதிக்கப் பெற்றுள்ள நல்வினைகளைச் செய்யா தொழிதலும், செய்யலாகாதென்று விலக்கப் பெற்றுள்ள தீவினைகளைச் செய்தலும் ஆகிய இருவகைக் குற்றங்கள் சாத்திரங்களில் கூறப் பெற்றுள்ளன. இந்த இருவகைக் குற்றங்களும் தம்மிடம் நிறைந்திருப்பனவாகச் சொல்லிக் கொள்கின்றார் ஆழ்வார்.

"வால் நிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன்; அதனைப் பிழை எனக் கருதி
பேதையேன் பிறவிநோய் அறுப்பான்
ஏன் இலேன் இருந்தேன்! எண்ணினேன் எண்ணி
இளையவர் கல்வியின் திறத்தை
நாணினேன்" (பெரி., திரு., 1.6:1)

என்று சிந்திக்கத் தொடங்குகின்றார்(வடநாட்டுத் திருப்பதிகள், ப.46).

100. சாளக்கிராமத்து அடிகள்

இத்தலம் தானாகவே தோன்றியதால் 'சுயயம், வியக்தம்' என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. இத்தலத்தில் எம்பெருமான் நித்ய சாந்த்யமாக எந்நேரமும் எழுந்தருளி இருப்பதாக மரபு.

இத்தலத்து மூலவர் ஸ்ரீ மூர்த்தி நின்ற கோலத்தில் வடக்கு நோக்கி சேவை தருகின்றார். தாயார் ஸ்ரீதேவி நாச்சியார் ஆவார்.

இத்தலத்திற்குச் செல்லும் வழி கரடு முரடான மலைப் பாதையாக இருப்பதால் அடிக்கடி ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் எம்பெருமான் வழிபாடு தடைபட்டு வருகின்றது. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக சக்கர தீர்த்தம் கண்டகிநதி ஆகியவை விளங்குகின்றன. இங்குள்ள விமானம் கனக விமானம் ஆகும். 'திருச்சாளக் கிராமம்' என்னும் இத்திவ்ய தேசம் நேபாள நாட்டில் காட்மண்டு நகரத்திற்குத் தெற்கே தொண்ணூற்று ஆறு கிலோமீட்டர் தொலைவில் கண்டகி நதிக் கரையில் உள்ளது.

பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளனர். பல வடநாட்டுத் திருப்பதிகளின் பெயர்களைக் கூறும்போது சாளக் கிராமத்தையும் சுட்டுகின்றான் பெரியாழ்வார். இளம்பிராயத்தில் கண்ணன் செய்த சிறு குறும்புகளைப் பட்டியல் இட்டுக் காட்டும்போது,

"சாளக் கிராம் உடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து கின்றான்" **(பெரியாழ்., திரு., 4.7:9)**

என்று ஒரு இடைப்பெண் கறந்து அடுப்பேற வைத்திருந்த பாலைத் திருவமுது செய்ததை எடுத்துக்காட்டுகின்றார் பெரியாழ்வார் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.55).

101. பத்ரிநாதன் – நரநாராயணன்

எம்பெருமான் தனக்குத்தானே ஆசானாகவும், மாணவனாகவும் எழுந்தருளி அர்த்த பஞ்சக ஞானத்தை உலகுக்கு உணர்த்திய தலமே பத்ரிநாத் என்று அழைக்கப்படும் திருவத்ரியாச்ரம் என்ற தலமாகும்.

மாணவர்களின் மூலம்தான் குருவுக்குப் பேரும் புகழும் அமையும். இவ்விதம் மாணவர்கள் அமையவில்லையென்றால் குரு போதித்த கல்வி விழலுக்கு இறைத்த நீர் போன்றதாகி விடும். அதனால்தான் எம்பெருமான் தானே நாரயணனாகவும், நானாகவும், அண்ணன், தம்பியுமாகப் பிறந்தான். இவ்விதம் பிறந்ததில் நாராயணன் குருவாகவும், நரன் சீடனாகவும் மாறினர். அத்தோடு உலக ஞான வித்யாபீடத்தின் ஆசிரிய, மாணவ இலக்கணத்தைச் செயல் முறையில் நிருபித்தார். இத்தலத்து மூலவரான 'பத்ரி நாராயணர்' நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியபடி சேவை தருகின்றார். இத்தலத்து தாயார் அரவிந்தவல்லி ஆவார். இத்தலத்திலன் தீர்த்தம் தப்தகுண்டம் ஆகும். இத்தலத்து விமானம் தப்த காஞ்சன விமானம் ஆகும். இத்தலத்து விருட்சம் பத்ரி விருட்சமான இலந்தை மரம் ஆகும்.

இமயமலைப் பகுதியில் உள்ள 'திருவத்ரியாச்ரம்' என்ற இத்தலம் அரித்துவார், ரிஷிகேசம், திரிவேணி சங்கமம், கண்டம் கடிநகர், தேவப்பிரயாகை, திருப்பதி என்று அழைக்கப்படும் பகுதியாகும். வதரி நாராயணனைப் பெரியாழ்வார்,

"வடதிசை மதுரை சாளக்கிராமம்
வைகுந்தம் துவரை அயோத்தி
இடம் உடை வதரி இடவகை உடைய

எம்புரு டோத்தமன் இருக்கை”   (பெரியாழ் திரு., 4.7:9)

என்று கண்டம் திருப்பதி எம்பெருமானை மங்களா சாசனம் செய்யுங்கால் குறிப்பிடுவர்.

நரநாராயணன் உகந்தருளின இடம் வதரித் திருமலை. அதுவும் ஆழ்வாருக்கு உகப்பாகின்றது. “திரு வேங்கடமா மலை, ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே” (திருவாய், 3:3:8) என்று கூறிய நம்மாழ்வாரைப் பின்பற்றி இவரும் மலையையே சேவிக்கின்றார். பாசுரந்தோறும் “வதரி வணங்குதுமே, வதரி வணங்கிதுமே” என்று குறிப்பிடுகின்றார். வதரி இருக்கும் இமய மலைப்பகுதியோ, “கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை” (திருக்குறுந்., 19) என்னும் திருப்பதிகள் உடல் பாங்காக இருக்கும் பொழுது சென்று சேவிக்க வேண்டும் என்று ஆற்றுப் படுத்துகின்றார் ந. சுப்புரெட்டியாருக்கு இத்திருத்தலப் பயணம் என்றும் பெறாத மனநிறைவினைத் தந்திருக்கின்றது. பெறற்கரிய பெரும் பேற்றைப் பெற்றதாக எண்ணம் உண்டாயிருக்கின்றது. பரிபூர்ண பிரம்மானந்தம் பெற்ற களிப்பையும் நல்கியிருக்கின்றது என்ற மனநிலையில் முதுமையடையும் முன்னே சென்று வதரி நாராயணனை சேவியுங்கள் என்று அழகாக நம்மையும் சேவிக்கத் தூண்டுகின்றார் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.66).

102. கண்டம் கடிநகர் புருடோத்தமன் (தேவ பிரயாகை)

‘ப்ராயாக்’ என்றால் இரு நதிகள் சங்கமம் ஆகும் இடம் என்று அர்த்தம். அந்த வழியில் தேவப்பிரயாகையில் விஷ்ணு வேங்கையும், பாகீரதி நதியும் ஒன்றாக இணைந்து ஒரே கங்கையாகி ஓடுகிறது. நீலமேகப் பெருமாளும், இரு பிராட்டியார்களும், ஒரே பிராட்டியராகி, சங்கமித்த தலமும் இத்தலமே. மூலவர் நீலமேகப்பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு திசைநோக்கி சேவை தருகின்றார். ‘புருஷோத்தமன்’ என்ற மற்றொரு பெயரும் இவருக்குண்டு. ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்க நெறியோடு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தும் விதமாக அமைந்ததுதான் புருஷோத்தமன் அவதாரம்.

இத்தலத்தின் அருகில் பத்ரிநாராயணன், காலபைரவன், மகாதேவன், அனுமன் ஆகியோர் கோயில் கொண்டுள்ளனர். இத்தலத்தில் பிரம்மா, தசரதன், இராமன் ஆகியோர் தவம் புரிந்துள்ள புண்ணிய பூமியாக உள்ளது. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக மங்கள தீர்த்தம் ஆகும். இங்குள்ள விமானம் மங்களா விமானமாகும். இத்திருக்கோயில் ஒரு பாசுரத்தால் பெரியாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். இமயமலையில் பத்ரிநாத் தலத்திற்குச் செல்லும் வழியில் ரிஷிகேசத்தில் இருந்து எழுபத்திரண்டு கிலோமீட்டர் தொலைவில் இத்தலம் உள்ளது. பெரியாழ்வார்,

“மூன்றெழுத் ததனை மூன்றெழுத் ததனால்
மூனறெழுத் தாக்கி மூன்றெழுத்தை
ஏன்றுகொண் டிருப்பார்க்கு இரக்கம்நன் குடைய
எம்புரு டோத்தமன் இருக்கை;
மூன்றடி நிமிர்ந்து மூன்றினில் தோன்றி
மூன்றினில் மூன்றுரு ஆனான்
கான்தடம் பொழில்சூழ் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகமமே”   (பெரியாழ்., திரு., 4.7:10)

என்ற பாசுரத்தால் மங்களா சாசனம் செய்கின்றார். எம்பெருமானை பெரியாழ்வாரின் தேனூறும் திருமொழி பாசுரங்களை வாய்விட்டு ஓதி ஆனந்தம் பெற்றதாக ஆசிரியர் மனம் மகிழ்கின்றார்.(வடநாட்டுத் திருப்பதிகள், ப.79).

103. திருப்பிரிதி எம்பெருமான்

இத்திவ்ய தேசம் பதரிசாக்ரமம் என்றும் திருப்பதிக்குச் செல்லும் வழியில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரத்திலுள்ள இத்திருத்தலம் ஹரித்துவராத்திலிருந்து 200 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக இந்திர தீர்த்தம், மானசோரவர் ஏரி, கோவர்த்தன தீர்த்தம் ஆகியவை விளங்குகின்றன. இங்குள்ள விமானம் கோவர்த்தன விமானமாகும். இத்திவ்ய சேத்திரம் சோதிமட், நந்தப் பிரயாஜை என்னும் பிற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. இத்திருக்கோயிலின் மூலவரான பரமபுருசர் கிடந்த கோலம் கொண்டு கிழக்கு நோக்கி சேவை தந்தருளுகின்றார். தாயார் பரிமளவல்லி நாச்சியார் ஆவார்.

இத்திருக்கோயில் பத்து பாசுரங்களால் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். ஒரு திருமொழியில் இத்தலத்தை அனுபவித்து மகிழ்கின்றார்.

"கரைசெய் மாக்கடல் கிடந்தவன்
கணைகழல் அமரர்கள் தொழுது ஒத்த
அரைசெய் மேகலை அலர்மகள்
அவளோடும் அமர்ந்தநல் இமயத்து
வரைசெய் மாக்களிறு இளவெதிர்
வளர்முளை அளைமிகு தேன் தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக்கு
அருள்செய்யும் பிரிதிசென்று அடைநெஞ்சே" (பெரி., திரு., 1.2:5)

என்பது அப்பாசுரம். "திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள எம்பெருமான் பெரிய பிராட்டியாரோடு தேவர்கள் சேவித்துத் துதிக்கும்படியாக இமயமலையின்கண் உள்ள திருப்பிரிதியில் எழுந்தருளியுள்ளான். நெஞ்சே நீ அங்குச் செல்க" என்று தன் நெஞ்சிற்குக் கட்டளையிடுகின்றார் ஆழ்வார். "திருமால் எழுந்தருளியிருக்கும் திருப்பிரிதி என்னும் திருத்தலத்தைப் போய் அடைவாயாயின் உன் எல்லா விரோதிகளும் நீக்கி நற்கதி பெறுவது திண்ணம்" என்ற கருத்தைச் சிந்தனைக்கு எடுத்துரைக்கின்றார் ஆசிரியர் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.209).

104. வடமதுரை பிறந்த மாயன்

மதுரா என்றழைக்கப்படும் திரு வடமதுரையில் கோவர்த்தன நேசன் நின்ற கோலத்தில் கிழக்கு திசை நோக்கி அருள் தருகின்றார். முக்தித் தரும் நகரம் ஏழினுள் வடமதுரையும் ஒன்று, கண்ணன் அவதாரம் செய்த திருத்தலம் ஆகும். இங்கு தீர்த்தமாக இந்திர தீர்த்தம், யமுனை நதி தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம் ஆகியவை உள்ளன. இத்தலத்து விமானம் கோவர்த்தன விமானம் ஆகும். இத்தலத்தில் நம்மாழ்வார் பத்துப் பாசுரங்களாலும் ஆண்டாள் ஆறு பாசுரங்களாலும்

தொண்டரடிப் பொடியாழ்வார் ஒரு பாசுரத்தையும், பெரியாழ்வார் பதினாறு பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

மதுரா என்றழைக்கப்படும் திரு வடமதுரை டெல்லியில் இருந்து ஆக்ரா செல்லும் புகைவண்டி மார்க்கத்தில் உள்ளது. வடமதுரையில் பிறந்து, ஆயர்பாடியில் வளர்ந்து, வியக்கத்தக்க தனது செயல்களால் பெருமையுற்ற கிருஷ்ணனுக்கு ஒரு திருக்கோயிலை, துவாரகை சென்று மன்னனாக மகுடம் சூட்டிக் கொண்டு அரசோச்சியதன் நினைவாக ஒரு திருக்கோயிலை எழுப்பியுள்ளனர் வடமதுரை மக்கள். துவாரகை நாதர் திருக்கோயில் கிருஷ்ணன் தனியாகக் காட்சி தருகின்றான். தேவிமார்கள் அருகில் இல்லை. தேவிமார்கட்குத் தனிக்கோயிலும் இல்லை. திருப்பதியை அடுத்து அதிகச் செல்வம் கொழிப்பது இத்திருக்கோயிலே என்று சொல்லப்பெறுகின்றது.

நம்மாழ்வாரும் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த நிகழ்ச்சியை,

"உண்ண வானவர்கோனுக்கு ஆயர் ஒருமைப்படுத்த
அடிசில் உண்டதும்
வண்ண மால்வரையை எடுத்து மழைகாத்ததும்
....
எண்ணும் தோறும் என்நெஞ்சு எரிவாய்
மெழுகு ஒக்கும்" (திருவாய், 5.10:5)

என்ற பாசுரத்தில் ஆழங்கால்பட்டு அனல் வாய்ப்பட்ட மெழுகு போல் உருகுகின்றார். ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் கோவர்த்தனத்தைச் சேவித்து நந்திகிராமம், பர்சானா என்ற இடங்களையும் சேவிக்கின்றார். பல்வேறு வகைகளில் பக்தி அனுபவம் எய்தப்பெற்று கண்ணன் அவதார காலத்தில் இருப்பது போன்ற நினைவு ஆசிரியருக்கு ஏற்பட்டது என்று மனநிறைவுடன் கூறுகின்றார்.

105. பிருந்தாவனத்தில் கண்ணன்

பிருந்தாவனம் என்பதற்கு நெருஞ்சிக்காடு என்பது பொருள். கண்ணன் அவதரித்ததும் இவ்விடம். இந்நிலை மாறி வளம் கொழிக்கும் 'விரஜபூமி' (மேய்ச்சல் நிலம்) யாக மாறி விட்டது. வட இந்தியாவில் சத்திரப் பிரதேசத்திலுள்ள இந்த 'விரஜபூமி' 108 சதுரமைல் பரப்புடையது. இதில் பல புண்ணியத் தலங்களும் தீர்த்தங்களும் உள்ளன. விரஜபூமியில் கண்ணன் திருவடிபடாத இடமே இல்லை எனலாம். திருவாய்ப்பா (நந்த கோகுலம்), வடமதுரை (மதுரா) கோவர்த்தனம், இராதை அவதரித்த இராதாபர்காம் என்ற ஊர், கண்ணன் லீலைகள் புரிந்த பிருந்தாவனம் ஆகிய புனிதமான இடங்கள் யாவும் இந்த விரஜ பூமியிலுள்ளன.

கண்ணன் வளர்ந்த இடமான ஆயர்பாடியிலுள்ள நந்தகோபன் முதலான ஆயர்கள் கண்ணனுக்கு அங்கு அடிக்கடி நேரிட்ட பேரிடர்களை உற்பாதங்கள் எனக் கருதி, 'மகாவனம்' எனப்படும் அவ்விடத்தைவிட்டுக் கன்று காவி முதலிய எல்லாப் பொருட்களுடனும் பிருந்தாவனத்திற்குச் சென்று அங்கு குடியேறினர். நெஞ்சிக் காடாக இருந்த அவ்வனம் கண்ணன் திருவளால் பசுக்கள் முதலானவை பெருக்குவதற்கு ஏற்ப மிகச் செழிப்புற்றது. இங்குக்

கண்ணன் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டும் பல திருவிளையாடல்களைப் புரிந்து கொண்டும் காலம் போக்கினான்.

இளமைப் பருவத்துக் கண்ணனின் செயல்களில் ஆழ்வார்கள் ஆழங்கால்பட்டு அனுபவித்ததையும் காணமுடிகின்றது. மாடுகள் மேய்த்து வீடு திரும்பும் கண்ணன் தன்னை வகைவகையாக அணிசெய்து கொண்டும் குழலூதிக் கொண்டும் தன்னேராயிரம் தோழன்மாருடன் பெரிய திருவோலக்கமாகத் திரும்புகின்றான். கண்ணனின் கோலத்தைக் கண்ட ஆயர் பெண்கள் அவன் மீது காமமுற்ற வரலாற்றைப் பெரியாழ்வார், தம்மை அப்பெண்களாகப் பாவித்து பேசி இனியராகுகின்றார்.

"தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்
தண்ணுமை எக்கம மத்தளி தாழ் பீலி
குழல்களும் கீதமும் ஆகி எங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு" (பெரி., திரு., 2.4:5)

ஆயர் பெண்கள் சாளரங்கள்தோறும் சென்று கிட்டி ஊனையும் மறந்து நெஞ்சைக் கண்ணனிடம் பறிகொடுத்திருக்கின்றனர் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.110).

106. வண் துவராபதி மன்னன்

பரமபதத்திற்கு இத்தலம் துவாரமாக இருப்பதால் இத்தலம் துவாரகை என்று பெயர் பெற்றது. காலயவனன் என்ற அரக்கர்களிடமிருந்து யாதவர்களை மீட்பதற்காக மதுராவை விட்டு நீங்கியவர். கடல் நடுவே உருவாக்கப்பட்டதுதான் துவாரகை, துவாரகாதீசன், துவாரகா நாத்ஜி என்ற பெயர்களில் துவாரகையில் அழைக்கப்படுகிறார்.

இத்தலத்தின் மூலவர் கல்யாண நாராயணன் ஆவார். இவர் நின்ற கோலத்தில் மேற்கு திசையை நோக்கி சேவை தருகின்றார். இத்தலத்தில் கல்யாண நாச்சியார் என்ற இலட்சுமி ஸ்ரீதாயாராக உள்ளார். ஸ்ரீகிருஷ்ணர் மன்னராகவும், அவதார முடிவு எடுத்த தலமாகவும் இருந்தது துவாரகை. இத்திருக்கோயிலின் தீர்த்தமாக கோமதியானும், சமுத்திர சங்கமும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் ஹேமகூட விமானமாகும். இத்திருக்கோயிலில் இரண்டு பாசுரங்களாக திருமங்கையாழ்வாரும், ஐந்து பாசுரங்களால் ஆண்டாளும், ஒரு பாசுரத்தால் திருமழிசையாழ்வாரும், ஒரு பாசுரத்தால் நம்மாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

"சேயன் அணியன்
சிறியன் மகிப்பெரியன்
ஆயன் துவரைக் கோனாய்
நின்ற மாயன் அன்(று)
ஓதிய வர்க்கதனைக்
கல்லார் உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞானம்
இல்" (நான்., திருவந்., 71)

என்ற நான்முகன் திருவந்தாதி பாசுரத்தில் ஆழ்வார் பாடுகின்றார். பார்த்தசாரதி பாரதப்போர் நடந்த காலத்தில் பார்த்தனுக்கு உபதேசித்த சரம சுலோகத்தை–அந்த திருவாக்கைக் – கற்று உணர்ந்தவர்களே எம்பெருமானுக்கு அன்பர்களாவர்: கல்லாதவர்கள் பகைவர்களாவர் என்பதை இப்பாசுரம் எடுத்துரைக்கின்றது. இந்த மூர்த்தியைத் தான் திருமழிசையார் "துவாரகைக் கோணாய் நின்ற மாயன்" (திருவாய், 5:3:6) என்று குறிப்பிடுவர். பெரியாழ்வார்,

"பல்லாயி ரம்பெருந் தேவிமாரொடு
பௌவம் எறி துவரை
எல்லாரும் சூழச் சிங்கானத்தே
இருந்தான்" (பெரியாழ்., திரு., 4.1:6)

என்று போற்றிப் புகழ்கின்றார். இவற்றில் எல்லாம் நேரில் சென்று பார்த்து உள்ளம் கரைந்த ஆசிரியர் திவ்ய கவியின் திருபாசுரத்தையும் ஓதி உள்ளம் கரைந்து துவரை நாதனை வேண்டி நிற்கின்றார் ஆசிரியர் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.138).

107. ஆயர்பாடி அணிவிளக்கு

ஒருத்தியின் வயிற்றில் பிறந்து மற்றொருத்தியின் மடியில் மகனாக வளர்ந்தவன்தான் கண்ணன். அவன் தன் இளமைக் காலத்தில் வாழ்ந்த இடமே கோகுலம் எனப்படும் ஆயார்பாடி ஆகும். கண்ணனைப் பெற்ற தாய் 'தேவி' என்றாலும், வளர்த்த தாய் யசோதை. இரு தாயார்கள் கண்ணனுக்கு அமைந்தது போல், தனக்கு இணையான தேவியராக ருக்மணி, சத்யபாமா இருவரையும் பெற்றுள்ளார். இத்திருத்தலமான ஆயர்பாடியில் 'புராணகோயில்' என்ற ஒரு பெரியகோயில் உள்ளது. கோயில் வாசலில் யமுனாநதி ஓடுகிறது. ஒரு சிறிய மரத்தொட்டியில் மரத்தால் ஆன கிருஷ்ணர் சேவை தருகின்றார். இத்திருக்கோயிலின் தீர்த்தமாக யமுனை நதி உண்டு. இங்குள்ள விமானம் ஹேமகூட விமானமாகும்.

இத்திருக்கோயில் ஏழு பாசுரங்களால் திருமங்கையாழ்வாரும், பத்து பாசுரங்களால் பெரியாழ்வாரும், ஐந்து பாசுரங்களால் ஆண்டாளும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

ஆயர்பாடியை நினைக்கும் போதே கண்ணன் விளைத்த சிறுகுறும்புகளும் அதிமானுட சேட்டிதங்களும், அவனுக்குக் கம்சனால் விளைவிக்கப் பெற்ற பேரிடர்களும், அவற்றை அருள்தன்மையினால் அவன் வென்ற முறைகளும், இவற்றை ஆழ்வார்கள் மனத்தைக் கவர்ந்த நேர்த்தியும் பாசுரங்களில் பதிவாக்கப்பட்டுள்ள நிலை கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

நம்மாழ்வார் ஏனைய அவதாரங்களைவிடக் கிருஷ்ணாவதாரத்திலே அதிகமாக ஈடுபட்டவர். அதுவும் வெண்ணெய் களவாடி ஆய்ச்சியர் தாம்பினால் உரலினிடை கட்டப்பட்டுக் கிடந்த நிலையை,

"மத்துஉறு கடைவெண்ணெய் களவினில்
உரலிடை யாப்புண்டு
எத்திறம், உரலினோடு, இணைந்திருந்து
ஏங்கிய எளிவே" (திருவாய், 1.3:1)

என்று அநுசந்தித்து ஆறுமாதம் மோகித் திருந்தவராதலால் அந்தச் செயலை மதுர கவிகள், 'அன்னையாய் அத்தனாய் தன்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன் நம்பி' (பெரி., திரு., 2:10:5) என்று உறுதி கொண்டவரன்றோ இவர் ? திருமங்கையாழ்வாரும் இந்த நிகழ்ச்சியை,

"உறி ஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியாற் சென்றங்கு
உண்டானைக் கண்டு, ஆய்ச்சி உரலோடு
தறிஆர்ந்த கருங்களிறே போல நின்று – ஆர்க்க
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை" (பெரி., திரு., 2.10:5)

என்று அநுபவித்து மகிழ்கின்றார். பெரியாழ்வாரும இந்தச் சிறு சேவகத்தை நினைந்து,

"பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேல் ஏறி
தித்தித்த யானும் தடாவினில் வெண்ணையும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய அத்தன்" (பெரியாழ்., திரு., 1.10:8)

என்று பாடி அகம் மிக மகிழ்வர் (வடநாட்டுத் திருப்பதிகள், ப.147).

108. பாற்கடல் கிடக்கும் பதுமநாபன்

"பாலாழி நீ கிடக்கும்
பண்பையாம் கேட்டேயும்
காலாழம் நெஞ்சழியும்
கண் சுழலும் – நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்!
தொல்வினைஎம் பால்கடியும்
நீதியாய்! நிற்சார்ந்து
நின்று" (பெரி., திருவந்., 34)

என்று திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமானை அனுபவிக்கின்றார் நம்மாழ்வார். "நின்னை அடியேன் நேரில் கண்டதில்லை, நீ திருப்பாற்கடலில் கிடந்திருக்கும் திருக்கோலத்தைச் சாத்திரம் அறிந்த பெரியோர்களின் வாயிலாகக் கேட்ட அளவிலேயே, 'இப்படியும் ஓர் அழகு உண்டோ!' என்று ஈடுபட்டுக் கால்கள் நடைதளர்ந்து ஆழ்ந்து போகின்றன. நெஞ்சு நீர்ப்பண்டமாகக் கரைந்து அழிந்து போகின்றது. கண்கள் ஒரு பொருளையும் பார்த்து அறிய முடியாதபடி சுழலத் தொடங்குகின்றன" என்று கூறுகின்றார்.

மண்ணுலகில் இல்லாத திவ்ய தலமாகத் திருப்பாற்கடல் விளங்குகிறது. மானிடராய்ப் பிறப்பெடுத்திருக்கும் எவராலும் இங்கு சென்று பெருமாளைச் சேவித்திட இயலாது. திருப்பாற் கடலின் மூலவர் கிராப்திநாதன் ஆவார். இவருக்கு 'திருப்பாற்கடல் நாதன்' என்ற பெயரும் உண்டு. இத்தலத்து தாயார்கள் கடல் மகள் நாச்சியார் மற்றும் பூமாதேவி ஆகியோர் ஆவார்.

தன்னிடம் சரணாகதி அடைந்தோர்க்கும், பிறப்பும் இறப்பும் இல்லாத பரமபத வாழ்வை வழங்கித் தாமும் அவர்களுடன் பரமபதத்தில் வீற்றிருந்து பேரின்பங்களைத் துய்த்திடுகின்றான். இத்திருத்தலத்தின் தீர்த்தமாக அம்ருத தீர்த்தமும் திருப்பாற்கடலும் விளங்குகின்றன. இங்குள்ள விமானம் அஷ்டாங்க விமானமாகும்.

இத்திருத்தலம் வடதுருவத்திற்கும் அப்பால் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. மனிதர்களின் கண்களுக்கு எட்டாத இடம் இது. வடகடலைச் சேவித்தே மனநிறைவு பெற வேண்டியதுதான். சூக்கும உடலைக் கொண்டவர்தாம் இந்த இடத்திற்குச் சென்று அடைதல் முடியும். தேவர்கள், பண்டைய முனிவர்கள், யோகியர் இவர்களைப் போன்ற பிறர் இந்த இடத்திற்குச் செல்லுதல் கூடும். நான்முகன், தேவர்கள் இவர்களின் குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்ப்பதற்காகவே பரமபதநாதன் வியூக நிலையில் இங்கு எழுந்தருளியுள்ளான். அடியார்கள் பொருட்டு அவதாரங்களை எடுக்கும் இடமும் இதுதான். பெரியாழ்வார் இந்தத் திருபாற்கடல் எம்பெருமானை,

"அவரத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து" (பெரியாழ்., திரு., 5.2:10)

என்றும்,

"பனிக்கடலிற் பள்ளிக் கோனை
பழகவிட் டோடி வந்துஎன்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ" (பெரியாழ்., திரு., 5.4:9)

என்றும் பாடுகின்றார்.

இந்த ஆழ்வாரின் ஒரு மகளான திருமகளார்,

"பாற் கடலுள்
பையைத் துயினற
பரமன் அடிபாடி" (திருப்., 5)

என்று பேசுவர். இங்ஙனம் எம்பெருமான் மீது ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள திருத்தலங்களில் கால்பதித்து அவர்கள் பாடியுள் திருப்பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அனுபவித்துத் தன்னை இறைவனின் பாதத்தில் சரணாகதி செய்து கொள்கின்றார்.

வைகுண்டத்தைத் திருநாடு என்றும், பரமபதம் என்றும், 'நாம் பந்தம் இல்லாதோர் நாடு' என்றும், நத்திய விபூதி என்றும் வைணவப் பெருமக்கள் வழங்குவர். ஆழ்வார்கள் 'பெருநிலம்', 'பெருவிசும்பு', 'உம்பர் உலகு' , 'விண்ணகம்', 'நாரணன் உலகு', 'இன்பவீடு', 'அமரர் உலகம்', 'வானோர் கடிநகர்' என்றெல்லாம் ஆழ்வார் பாசுரங்களில் போற்றப்படுகின்றன.

எம்பெருமான் ஸ்ரீநாராயணனை வழிபடும் பக்தகோடிகள் இறுதியில் அடைந்திடும் முக்தி நிலையே பரதபதம் ஆகும். இப்பரமபதத்தை மனித உருவில் அடைந்திட முடியாது. பரமபதம் என்பது முக்தி பெற்ற ஜீவாத்மாக்கள், பரமாத்மாவான எம்பெருமானுடன் இணைந்து வாழும் நிரந்தரமான பேரின்ப நிலையே ஆகும். இறைவனை முப்பத்து நான்கு பாசுரங்களால் ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர். நல்வினை, தீவினை என இரு வினைகளைக் கடந்து எம்பெருமானின் திருவடிகளுக்குத் தம்மை அர்ப்பணம் செய்து சரணாகதி அடைந்தவர்கள்

மட்டுமே வீடுபேறும் சீவன் முக்தியும் அடைந்திட முடியும் என்பதை ஆழ்வார் பாசுரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன (வடநாட்டுத் திருப்பதிகள், ப.163).

தொகுப்புரை

ஆழ்வார் பெருமக்கள் தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடித் துதித்து உலக உயிர்கள் உய்யும்பொருட்டுத் திருத்தொண்டு புரிந்துள்ளனர். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வதில்தான் பேரின்பம் நிறைந்திருக்கின்றது என்பதை ஆழ்வார்களின் அற்புதமான வாழ்க்கை அனுபவங்கள் உணர்த்துகின்றன.

பல்வகைச் சமயங்களும் அறிவுறுத்தி நெறிப்படுத்தும் அடிப்படை நெறியாகிய பக்திநெறி தமிழர் நெறியாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த பாங்கு அறியத் தக்கது. பெரியோரிடத்தும், இறைவனிடத்தும் காட்டும் அன்பே பக்தி என்பதையும், அச் சொல்லின் பொருளாழத்தையும் பல்வேறு இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

எல்லையில்லாப் பேரின்பம் கொண்ட இறைப்பரம்பொருள் இவ்வுலகினை உய்விக்கப் பல்வேறு நிலைகளில் காட்சியளிக்கின்றது என்ற உண்மை ந.சுப்புரெட்டியாரின் பயண நூல்களின் வழியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இறைவனை அடைவதற்கு மனத்தூய்மையே செம்மையான நெறி என்பதையும், மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டாம் என்பதையும் ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் உணர்த்தியுள்ளனர்.

ஆழ்வார்கள், திருத்தலங்கள் தோறும் சென்றுபாடி அங்குறைகின்ற இறைவனின் திருஉருவைத் தனது உள்ளத் திரையில் நிலை நிறுத்திக் கொண்டவர். உள்ளத் திரையில் காட்சி தருகின்ற இறைவனைத் தனது உள்ளக் குடியிலும் நிலையாக உறையச் செய்வதற்கும், ஆழ்வாரின் அப்பேரின்பப் பேராவலுக்கு, அவர்தம் பழுதிலாத பக்தித்திறம் துணை செய்தது என அறிய முடிகின்றது. அவ்வகையில் நாளும் தன்பால் குறைவிலாத அன்பு பெருக்கும் ஆழ்வாரின் உள்ளத்தையே தனக்குரிய அருட்குடிலாக இறைவனும் அருள்புரிந்தான் என்னும் செய்தியைப் பாசுரங்களின் மூலம் உறுதிப் படுத்துகின்றனர்.

இறைவன் தனக்கு எளியவன் என்றும், தானே வந்து உள்ளத்துள் புகுந்தான் என்றும், தன்னை இமைப்பொழுதும் அவன் பிரியான் என்றும், ஆழ்வார் பாடிக்களிக்கின்ற நிலைகள், அவர்தம் அன்புக்கு இறைவன் ஆட்பட்ட அருந்திறத்தை ஆழ்வாரின் பாசுரங்கள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

இறைவனைத் தந்தையாகவும், காவலனாகவும், ஆள்பவனாகவும், தலைவனாகவும், தாங்குபவனாகவும் நினைந்து பாடியுள்ள அருள்நிலைகள், ஆழ்வார் இறைவனோடு பூண்ட அன்புறவுக்குச் சான்றுகளாக நின்று வழிகாட்வதை ந.சுப்புரெட்டியாரின் பயண நூல்கள் தெளிவாக்குகின்றன.

இறைவன் விரும்பி உலக உயிர்களைப் படைப்பதனால் அவனால் படைக்கப்பட்ட உயிர்களைப் பொறுத்தவரை பாரபட்சமில்லாத கருணையே இருக்கின்றது என்பதையும், உயிர்களின் வினைகளுக்கேற்பவே பரமபதநாதனின் திருவடி தரிசனம் கிடைக்கும் என்பதையும்

பெரியாழ்வார் தம் பாசுரங்களின் பதிவாக்கியுள்ளார். ஆழ்வாரின் அருளியல் விண்ணப்பங்கள் பழுதிலா பக்தி உள்ளத்திலிருந்து பிறந்த அருள்மொழிகளாகத் திகழ்கின்றன.

'வழிபடு நெறியைக் கட்டியருள்க' என்றும், 'பக்தி நெறியைத் தந்தருள்க' என்றும், அன்பு அகலாது அடிமைத்திறம் பூணுகின்ற பக்தி உணர்வை வழங்கி அருள்க என்றும் ஆழ்வார்கள் இறைவனைப் பணிவது அவர்தம் சரணாகதி நிலையிலான பக்தித் திறத்தை உணர்த்துகிறது.

ஆழ்வார்கள் பக்தி வேறு, பக்தியினால் அடையும் பயன் வேறு என்று கருதாமல் பக்தி செய்வதையே பயனாகக் கொண்டார்கள் என்பதையும், இத்தகைய பக்தியைச் 'சாத்திய பக்தி' என்பர். இவ்வகையில் இறைவனின் அருட்குணங்களில் தன்னைக் கரைத்துக் கொண்டு இரண்டறக் கலந்து நின்றவர்கள் என்றசெய்தி ந.சுப்புரெட்டியாரின் எழுத்தின்வழி அறியலாகின்றது.

இயல் – 4

புராண வரலாற்றுக் கூறுகளும் அகப்பொருள் மரபுகளும்

மனிதர்களுக்கு அறத்தையும், தர்மத்தையும் பற்றிப் போதிக்க முழுத்தகுதி பெற்றவன் எம்பெருமான். ஒவ்வொரு யுகத்திலும் தம்நிலையிலிருந்து இறங்கி வந்து அவதாரம் செய்து பல அருளிச் செயல்களைச் செய்தவன். தலபுராணங்கள் அக்காலத்தில் மக்களின் உள்ளங்களை மிகக் கவர்ந்திருந்தன. நாட்டுப் படலம், நகரப்படலம் என முதலில் அமையும் இயற்கையழகு பற்றியும் நிலவளம் முதலியன பற்றியும் அமைத்து, அந்தந்த நாடுகளையும், ஊர்களையும் சிறப்பித்தார்கள். கொடியவர்களும் அதிகாரச் செருக்கு மிகுந்தவர்களும் துன்பமுற்று மனம் திருந்திக் கோயில்களுக்கு வந்து வழிபட்டு மனம் திருந்தி நல்லவர்களாக மாறியதாகத் தலபுராணங்களும் கதைகளும் கூறுகின்றன. ந.சுப்புரெட்டியாரின் திருத்தலப் பயண அனுபவ நூல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள புராண வரலாற்றுக் கூறுகளையும், அகப்பொருள் மரபுகளையும் இவ்வியல் ஆராய்கின்றது.

புராண வரலாற்றுக் கூறுகள்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் திருப்பதிகளைச் சேவித்ததோடு மட்டுமல்லாமல் அங்குள்ள பெருமானின் திருத்தலம் சார்ந்த புராண வரலாறுகளையும் ஆய்ந்து தம் மனதை அதில் ஈடுபடுத்திப் பேரானந்தம் அடைந்து, கற்போரையும் அதில் ஈடுபடச் செய்துள்ளார். காழிச்சீராம விண்ணகரம் “தாடாளன் சந்நிதி” என்ற பெயருடன் வழங்குதலும் உண்டு. தனக்கு ஆயுள் மிகுதியுள்ளது என்ற அகங்காரம் கொண்டிருந்த நான்முகனின் செருக்கை உரோமசன்மரைக் கொண்டு அடக்கியவன். சிவனின் சாவத்தைத் தீர்த்தவன். உரோமசன்மரின் வரலாறு இதிகாச புராணங்களில் எங்கும் காணப்பெற்றிருப்பது, பலர் மூலம் பல வாறாகக் கேட்ட கதையைச் சுருக்கிக் கூறுவர். பிரதிவாதி பயங்கரம் அண்ணவகராசாரிய சுவாமிகள் உரோமசன்மர் உடல் முழுவதும் கரடிபோல் அடர்ந்த மயிர்களை உடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்டகாலம் வாழ்ந்து எம்பெருமானைச் சிந்தனை செய்ய விரும்பினார். ஒரு புண்ணிய நதிக்கரையில் தவம் செய்தார். பரந்தாமன் இவர் முன் சேவை சாதித்து இவர் விருப்பத்தைக் கேட்க முனிவர் இந்த உடம்புடன் எம்பெருமானைத் தொழுது விரும்புவதால் பல்லாயிரம் நான்முகனுக்குரிய ஆயுளைத் தந்தருள வேண்டினார். பரந்தாமனும் திருவுள்ளம் உவந்து, “மாமுனிவரே, நான்முகனுடைய ஆயுளை நீர் அறிவீர். ஒரு நான்முகன் காலம் சென்றால், உம்முடைய உடம்பினின்றும் ஒரு மயிர் இற்று விழக்கடவது. இப்படி ஒவ்வொரு நான்முகன் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்று, இனி உம்முடைய உடம்பில் ஒரு மயிரும் இல்லை என்று சொல்லத் தக்க நிலைமை நேரும் அளவும் நீர் வாழ்ந்திருக்கக் கடவீர்” என்று வரம் அருளினர் என்பது புராண வரலாறு.

ஆசிரியர் திருவழுந்தூர் என்ற ஊருக்கான புராண வரலாற்றைக் கூறுகின்றார். ஒரு சமயம் சேது நாட்டு அரசனான உபரிசரவசு இந்திரனை நோக்கித் தவமிருந்தார். தவம் முடிந்த பின் வான வீதியில் உருண்டு ஓடும் தேரினைப் பெற்று வானத்தில் சஞ்சரித்தார். அப்போது மகரிசிகள் புலால் உணவினை உண்ணக்கூடாது என்று வேதங்கள் கூறுவதாக விதிமுறைகள் கூறினர். இதனை

'உபரிசரவசு' மறுத்து மகரிசிகள் புலால் உண்ணலாம் என்று வாதாடினார். இதனால் முனிவர்கள் அவர் தேர் பூமியில் அழுந்தட்டும் என்று சாபமிட்டனர். அவர்கள் சாபம் இவ்வாறு பலித்தது. ஒரு சமயம் அவன் வான வீதியில் சென்றபொழுது இவ்வூர்த் திருமால் திருக்கோயிலுக்கு நேராக இவன் தேர் செல்ல நேர்ந்தது. இதனைச் சிறிதும் பொறுக்க முடியாத பெரிய திருவடியாகிய கருடன் தம் மந்திர ஆற்றலால் தேரைக் கீழே இழுத்துப் பூமியில் அழுந்த வைத்து விடுகின்றார். பின்னர் உபரிசரவசு எம்பெருமானை வணங்கி மன்னிப்புப் பெற்றுத் தேரோடு திரும்பியதாகப் புராண வரலாறு. தேர் அழுந்திய ஊராதல் பற்றி திரு அழுந்தூர் என்ற திருநாமம் பெற்றது என்று ஆசிரியர் இவ்வூரின் வரலாற்றை எடுத்துரைக்கின்றார் (சோழ நாட்டுத் திருப்பதிகள், ப.71).

அடுத்து ஆசிரியர் திருத்தேவானார் தொகை என்ற ஊரின் பெயர் ஏற்பட்ட காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பாற்கடல் கடைந்த போது வெளிவந்த திருமகளை இத்தலத்தில்தான் எம்பெருமான் திருமணம் புரிந்து கொண்டதாகவும், அத்திருக்கோலத்தில் இங்கு எழுந்தருளியுள்ளதாகவும் புராண வரலாற்றால் அறிகின்றோம். இந்தத் திருமணத்திற்குத் தேவர்கள் திரண்டு வந்தனர் என்றும், அங்ஙனம் இவர்கள் திரண்ட இடம் என்பது பற்றி இத்திருத்தலம் திருத்தேவனார் தொகை என்று திருநாமம் பெற்றது போலும் என்றும் அறிகின்றோம். தேவனார் என்பது தேவர்களையும், தொகை என்பது நெருங்கி, நின்ற இடத்தையும் குறிப்பனவாகக் கொள்ளலாம்" என்று குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர் ந.சுப்புரெட்டியார், திருவரங்கத்தின் சிறப்பு வரலாற்றுக் காலத்தையும் கடந்து நிற்கின்ற தன்மையை,

"இமயமலைச் சாரலில் கங்கை, சரஸ்வதி, யமுனை ஆகிய நதிகள் கன்னியர்களாக ஒரு சமயம் விளையாடிக் கொண்டு இருந்தபோது வானவெளியில் கந்தர்வன் ஒருவன் பறந்து வந்து கொண்டிருந்தான். அக்கந்தர்வன் நதிகளாகிய கன்னியர் மூவரும் இருந்த திசை நோக்கி தொழுதான். தொழுத கந்தர்வனைக் கண்ட கன்னியர் மூவரும் கந்தர்வன் தம்மில் யாரைத் தொழுதான் என்று வாதம் செய்தனர். இந்த விவாதத்திற்கு முடிவு இல்லாமல் போனது. இறுதியில் மூவரும் நாராயணிடம் முறையிட்டனர். நாராயணரின் திருவடியில், தான் பிறந்த காரணத்தால் தானே உயர்ந்தவள் என்று கங்கை வாதிட்டாள். அவள் சொல் கேட்ட நாராயணரும் கங்காவே உயர்ந்தவள் என்று ஒத்துக் கொண்டார்.

இது கேட்ட காவிரி எம்பெருமானை நோக்கிக் கடும்தவம் செய்தாள். அவளது தவத்தைக் கண்டு மகிழ்ந்த எம்பெருமான் காவரியின் தவத்தின் நோக்கம் பற்றி வினவ, கங்கையை விடப் புனிதமான தன்மையைத் தனக்கு அருளிட வேண்டினாள். காவிரி உள்ள இடத்தில் தான் சயனம் கொள்ளப் போவதாகவும், அது சமயத்தில் கங்கையை விடப் புனிதமானவளாகவும் நீ ஆவாய், மேலும், நீ என் கழுத்தில் உள்ள மாலையாகி அடைவாய் என்றார். தன் கூற்றின்படி கங்கையினும் புனிதமான காவிரியைத் தன் கழுத்தில் மாலையாகக் கொண்டு அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ளார். மேலும் நீ கங்கைக்கும் மேம்பட்டவள் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாடப் போகின்றார் என்று வரம் அளித்தராம்" என்று ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார்.

ஆசிரியர் திருத்தஞ்சையின் புராணக் கூற்றை எடுத்து இயம்புகின்றார். பூதவுடலுடன் வானுலகு ஏற முயன்ற திரிசங்குவின் வரலாற்றைக் கூறுகின்றார். வசிட்ட முனிவரின் சாபத்தால் சண்டாளனாகி விசுமாமுனிவரின் தவ வலிமையால் வானுலகு சென்ற திரிசங்கு அங்கிருந்து கீழே தள்ளப்படுகின்றான். முனிவரின் தவ வலிமையால், அந்தரத்தில் – திரிசங்கு சொர்க்கத்தில் நிறுத்தப் பெறுகின்றான். அவன் அங்குத் தவமியற்றிக் கொண்டிருப்பதாக வரலாறு. இதனை அறிந்த காட்டில் வசிக்கும் அக்காலத்து முனிவர்கள் பராசரமுனிவரிடம் வருகின்றனர். பச்சை மாமலை போல் மேனியனாய், பவளவாயக் கமலச் செங்கண்ணனாய், அச்சுதனாய், அமரர் ஏறாய்த் திகழும் பரமாத்மாவை, நீலமுகில் வண்ணனை, இப்பிறவியிலேயே கண்டுகளிக்க வேண்டுமென்ற தங்கள் அவாவைப் பராசர முனிவரிடம் வெளியிடுகின்றனர். பராசரருக்கும் அவ்வண்ணமே தோன்றியது. முனிக்கணங்களுடன் லோக வைகுந்த மாநகருக்குத் திருத்தலப் பயணமாகக் கிளம்புகின்றனர்.

தாங்கள் வரும் வழியிலுள்ள எல்லாப் புண்ணிய நதிகளிலும் நீராடி அங்கங்கே திருக்கோயில் கொண்டுள்ள எம்பெருமான்களை வழிப்பட்டுக் கொண்டு மணிமுத்தாறு நதித் தீர்த்தத்திற்கு வருகின்றனர். அங்குக் குடில் அமைத்துக் கொண்டு 'வம்புலாம் சோலை மாமணி வண்ணனைக்' கண்டு களித்து இன்புறுவாராயினர். பராசரமுனிவர் தம் தவ வலிமையால் விண்ணுலகத்திலிருந்து அமிர்தத்தைப் பெற்று மணிமுத்தா நதிநீரில் கலக்க அதுவே, 'அமிர்த சரஸ்' என்று திகழ்வதாயிற்று. இதனை விண்ணாறு என்றும் வழங்கினர். கங்கையிற் புனிதமான காவிரியின் கிளைகளில் ஒன்றானதும், என்றும் வற்றாத சீவநதியாகத் தஞ்சை வாழ் மக்களுக்குக் கடுங்கோடையிலும், 'தண்' என்றிருக்கும் நீரை வாரி வழங்கி வருகின்றதுமான நதியே விண்ணாறு. இதன் கரையில் பூலோக வைகுந்தமாகத் திகழ்வது, 'தஞ்சை மாமணிக்கோயில்' வானத்தில் திகழும் வைகுந்த மாநகரின் எல்லையில் பெருகி ஓடும் விரஜை என்னும் நதியை 'விண்ணாறு' என்று சாத்திரங்கள் சாற்றுகின்றன. அந்த விண்ணாற்றைக் கடந்தால் 'வைகுந்த மாமணிக் கோயிலை' அடைவோம் என்ற நான்மறைகள் நவில்கின்றன. "பூலோக விரஜை" என்ற இந்த விண்ணாற்றைக் கடந்தால் சௌந்தர்ய விமான நிழலில் தஞ்சைமாமணிக் கோயிலைக் காண்பது நம் கண் காணும் உண்மை என்பது வரலாறு ஆகும் என்று புராண வரலாற்றைத் தெளிவாக்குகின்றார் ஆசிரியர்.

ஆசிரியர் திருக்குடந்தை ஆராவமுதன் புராணவரலாற்றைப் பின்வருமாறு கூறுகின்றார். நான்முகனாகிய பிரம்மதேவர் கும்பம் ஒன்றினுள் அமுதத்தையும், வேதங்களுக்கான வித்துக்களையும் மேருமலையில் வைத்திருந்தார். பிரளயம் உண்டானபோது இந்தக் கும்பம் பிரளயத்தால் அடித்துச் செல்லப்பட்டது. அக்கும்பம் தென்திசை நோக்கி வந்தது. பிரளய வெள்ளம் வடிந்ததும் ஓரிடத்தில் அக்கும்பம் தங்கியது. தேவர்களின் வேண்டுதலுக்கு இணங்க அக்கும்பத்தைச் சிவன் ஓர் அம்பினால் எய்தி அதன் மூக்கினை உடைத்தார்.

மூக்குடைப்பட்ட கும்பத்தில் இருந்த அமுதம் இரு பிரிவுகளாகப் பிரிந்து தரையில் வடிந்தோடியது. ஒன்று மகாமகக் குளமாகவும், மற்றொன்று பொற்றாமரைக் குளமாகவும் மாறியது. உடைபட்ட கும்பமும், அமுதமும் ஒன்றாக இணைந்து லிங்க உருவம் பெற்றது. இந்த லிங்கத்

திருவுருவே கும்பேஸ்வரர் என அழைக்கப் படுகிறது. உடைபட்ட கும்பத்தின் மூக்கின் பெயரால் கும்பத்தின் கோணம் என பொருள்படும் வகையில் இத்திருத்தலம் கும்பகோணம் என்றழைக்கப்படுகிறது என்று காரண காரிய அப்படையிலான வரலாற்றைப் பதிவுசெய்துள்ளார் ந.சுப்புரெட்டியார்.

திருவிண்ணகர் ஒப்பிலியப்பன் புராணகூற்றை ஆசிரியர் வியக்கும் வண்ணம் அமைத்துள்ளார்,

தேவர்களும் – அசுரர்களும் இணைந்து திருப்பாற் கடலைக் கடைந்தனர். அச்சமயம் திருமால், லட்சுமியை மட்டும் தூக்கித் தனது மார்பில் தரித்துக் கொண்டார். இதனை அறிந்த 'துளசி' தன்னையும் மார்பில் சூட்டிக் கொள்ளுமாறு திருமாலிடம் வேண்டினாள், அதற்கு எம்பெருமான், 'துளசியே! நீ மார்க்கண்டேயர் தவம் செய்யும் வனத்தில் துளசிச்செடியாக வாழ்ந்து வந்தால் பக்தர்கள் உன்னை மாலையாகத் தொடுத்து என் மார்பில் அணிவிப்பார்கள்' என்று கூறியருளினார்.

பகவானின் அருள்படியே கும்பகோணத்திற்கு அடுத்திருக்கும் திருநாகேஸ்வர விண்ணகரில் துளசிச் செடியாக வாழ்ந்து எம்பெருமானின் இதயத்தில் இடம்பிடித்தாள். அதே போன்று பூமாதேவி, மார்க்கண்டேய முனிவரின் வளர்ப்பு மகளாக வளர்ந்து பெரியவளானாள்.

அப்பெண்ணை மணமுடிக்க முதியவரின் வேடத்தில் வந்த பெண் கேட்டார். பதறிப்போன மகரிசி, 'ஐயோ! இது என்னஅநியாயம், அதிக வயதானவர்க்கு இளம் வயதுப் பெண்ணை எப்படி மணம் முடித்துக் கொடுப்பது' என மறுத்தார். அதற்கு அந்த முதியவர், 'மகரிஷியே! உம் மகள் பூமாவை எமக்குத் திருமணம் முடித்த வைக்காவிடில், இக்கணமே இந்த இடத்திலே உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று பயமுறுத்தினார். திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்பது போல திகைப்புற்ற மகரிஷி, 'பகவானே, இந்த இக்கட்டிலிருந்து என்னையும், என் மகளையும் நீதான் காத்தருள வேண்டும்' என்று வேண்டியவாறே கண் மூடினார். சிறிது நேரத்தில் கண் திறந்து பார்த்தபோது, முதியவராக வந்தவர் சங்கு சக்கராயுதபாணியாக ஆனந்த சொரூபியாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

தன்னிடம் பெண்கேட்டு முதியவராக வந்தவர் இறைவனே என்று மனமகிழ்ந்த மகரிசி, தனது மகள் பூமாதேவியை மணமுடித்துக் கொடுக்க விரும்பினார். அதே நேரத்தில் மகளிடமும் ஒரு வார்த்தைக் கூறிச் சம்மதம் கேட்கலானார். மகள் பூமாதேவி, எல்லையற்ற பேரானந்தம் அடைந்து திருமணத்திற்குச் சம்மதித்தாள். இருப்பினும் மகரிசி, பகவானிடம் மூன்று வரங்களைக் கேட்கலானர். பகவான் இத்தலத்தில் உப்பில்லாது அமுது உண்ண வேண்டும். ஆனாலும் சுவையோடு இருந்திட வேண்டும். தம் மகள் பூமாதேவியுடன் இத்தலத்திலே வாசம் செய்திட வேண்டும். மகள் பெயரிலே இத்தலம் விளங்கிட வேண்டும் என்ற மூன்று நிபந்தனைகள் வைத்தார். பகவானும் மகரிசியின் மூன்று வரங்களுக்குக் கட்டுப்பட்டார். அன்று முதல் இத்திருத்தலத்தில் பெருமாளானவர் உப்பிலியப்பனாகத் தனக்கு உவமை இல்லாவராகக் காட்சி அளித்து வருகிறார்.

திருமோகூர்க் காளமேகம் என்ற திருப்பதியின் பெயர்க்காரணத்தை ஆசிரியர், "பாண்டிய நாட்டுத் திருத்தலப் பயணத்தில் விளக்குகின்றார். நம் நாட்டுப் பாமர மக்களும் சாத்திர உண்மைகளை அறிந்து கொள்வதற்குக் கருவூலம் போல் திகழ்பவை இதிகாசங்களும் புராணங்களுமாகும். திருமால் மோகினி அவதாரம் எடுத்த வரலாற்றை அழகாகப் பின்வருமாறு சுவைபடக் கூறுகின்றார். திருப்பாற்கடலைக் கடந்து அமுதம் எடுப்பதற்குத் தேவர்களும் அசுரர்களும் ஒன்று சேர்கின்றனர். அமுதம் வந்ததும் தேவர்கள் அசுரர்கட்குப் பங்கு கொடுக்க இசையவில்லை. அவர்கள் அமுத கலசத்தைத் தூக்கிக் கொண்டு ஓடத்தொடங்கின்றனர். தேவர்கள் திருமாலிடம் முறையிட, அவர் மோகினி வடிவத்துடன் அசுரர்கள் முன்னே காட்சி அளிக்கின்றார். இரு சாராருக்கும் அமுதத்தைத் தாமே பங்கிட்டுத் தருவதாகக் கூறிக் கலசத்தை வாங்கிக் கொள்ளுகின்றார். அமுதத்தைப் பங்கிடவும் முனைகின்றார். தேவர்கள் பக்கம் கலசமும் அகப்பையுமாக வருங்கால் அமுதத்தைத் தாராளமாக வார்க்கின்றார். அசுரர்கள் பக்கம் வருங்கால் தமது மோகனப் புன்னகையாலும் ஆடலாலும் பாடலாலும அவர்களை மயக்குகின்றார். அமுதத்தை வார்க்காமலேயே, இறுதியாக அசுரர்கட்கு ஒரு துளிகூட இல்லாமல் அமுதம் காலியாகி விடுகின்றது. இங்ஙனம் அசுரர்களை ஏமாந்த சோணகிரிகளாக்க எடுக்கப்பெற்றதே மோகனாவதாரம். இந்த அவதாரம் எழுந்த தலமே மோகனூர். அதுவே 'மோகூர் எனக் குறுகி, 'திரு' என்று அடையுடன் சேர்ந்து 'திருமோகூர்' என்றாயிற்று" என்று விளக்கம் கூறுகின்றார்.

ஆசிரியர் தொண்டை நாட்டுத்திருத்தலம் பயணத்தில் "சோளங்கிபுரம்" திருப்பதியின் புராண வரலாற்றைக் கூறுகின்றார். "இங்குப் பெரிய மலையான கடிகாசலத்தில் மூலவராக யோக நரசிம்மர் சேவை தந்தருளுகின்றார். ஒரு சமயம் இந்திரத்துய்மன் என்ற அரசன் வடமதுரையை ஆண்டு வந்தான். ஒரு நாள் வேட்டையாடிய அவன் ஒரு மானைக் கண்டு அம்பும் கையுமாக அதனைப் பின்தொடர்ந்து மான் கணங்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தான். மன்னனைக் கண்ட மான்கணங்கள் மருண்டு புல்மேய்தலை மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, அசையாத பதுமைகள் போல் திகைத்து நின்றன. அந்நிலையைக் கண்டஅரசன் அம்பெய்யச் சிறிது தயங்கி நின்றான். அவ்வளவில் ஒரு பெண்மான், 'அம்பெய்ய வேண்டாம்' என்று இறைஞ்சி வேண்டியது. அரசன் தன்செயல் மீது வெறுப்புற்று "இனி வேட்டை மேற் செல்வதில்லை" என்று உறுதி கூறித் தன்நாடு திரும்பினான்.

பின்னர் ஒரு சமயம் கும்போதரன் என்ற அரக்கனுடைய கொடுமையையும் அவன் ஒழித்து இப்பகுதி மக்களைக் காப்பாற்றினான். இப்போருக்கு இந்திரன் தன் வச்சிராயுதத்தையும் தேரையும் அரசனுக்கு வழங்கினான். மற்ற தேவர்கள் அவனுக்கு வேண்டிய ஆயுதங்களையும் சேனைகளையும் தந்தனர். அவ்வளவில் யோகநரசிம்மனின் ஆணையால் ஆஞ்சநேயரும் நான்கு புயங்களுடன் சங்கும் ஆழியும் தரித்துக் கொண்டு அந்த அரசனுக்கு உதவியுள்ளார். இந்த நிகழ்ச்சியின் நினைவாக சின்னமலையில் கோயில் கொண்டு இன்றும் சேவை சாதிக்கின்றார்.

இவ்வாறாக ஆசிரியர் ஒவ்வொரு திருத்தலப் பயணத்தின் போதும் அந்தந்தத் தலத்தின் புராண வரலாறுகளை விளக்கியுள்ளவிதம் படிப்பவர்க்கும், படிக்கும்போது கேட்பவர்க்கும் என்றும் மனதில் நிலைபெறச் செய்யும் விதத்தில் மிகவும் தெளிவாகவும், சுவையாகவும் அமைந்துள்ளது.

இத்தகைய புராண வரலாற்றுச் செய்திகளை எதிர்காலச் சமுதாயத்திற்குக் கொண்டு சேர்க்க வேண்டியது அனைவரின் கடமை என்பதை ஆசிரியர் மறைமுகமாக உணர்த்தியுள்ளார். ஒரு சமுதாயத்தின் உயிராகத் திகழக்கூடிய மக்களின் வழிபாட்டுச் சடங்குமுறைகள், திருத்தலப் பயணம், ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை இவ்வாறான வழிபாட்டுக் கூறுகளின் வழியாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

பாசுரங்களில் இயற்கைப் புனைவுகள்

ஆழ்வார் பாசுரங்களில் உருகிக் கண்ணீர் மல்கிய பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், 'ஒவ்வொரு திருத்தலங்களிலும்' அவர்கள் இயற்கையை வருணித்திருந்த விதத்திலும் தம் உள்ளத்தை ஈடுபடச் செய்துள்ளார். சோழ நாட்டுத் திருப்பதியின் தில்லைத் திருசித்திரக் கூடத்தில் தம் மனதை ஈடுபடச் செய்கின்றார். அதன் எழிலார்ந்த சூழ்நிலை இவர் மனத்தை கவர்கின்றது.

"சேமங்கொள் பைம்பூம் பொழில் சூழ்ந்த சோலைகளில் மயில் கூட்டங்கள் ஆடுகின்றன. அவை சோலைகளே ஆடுவது போல் காட்சி அளிக்கின்றன. தீர்த்தங்கள் மதுவோடு கூடிப்பெருகுவதால் மதுவின் நசையால் வண்டுகள் திரளாக மொய்க்கின்றன. அருகில் வெள்ளாறு தில்லையை வலங்கொண்டு வருகின்றது. இந்த ஆறு யானைக் கொம்புகனையும், சந்தன மரங்களையும் தள்ளிக் கொண்டு பெருக்கெடுத்து வருங்கால் முத்துக்களைக் கொழித்துக் கொண்டு வந்து, கழனிகளில் தள்ளும். அந்த முத்துக்கள் விதைத்துப் போல் காட்சி அளிக்கும். அவற்றைக் கயல்கள் கண்டு இவை என்னவோ என்று வெருவித் தாவித் திரியும். இயற்கை அழகு நிறைந்த ஊர் என்று ஆசிரியர் வர்ணிக்கின்றார்.

திருக்கோவலூரின் திருப்பயணத்தில் ஆசிரியர் தம் மனதை ஈடுபடச் செய்து நம்மையும் அவ் இயற்கை அழகில் ஈடுபடச் செய்கின்றார். திருக்கோவலூர் ஓர் அழகான திருப்பதி, நீர்வளமும் நிலவளமும் மிக்க ஊர். ஆண்டவனின் உடலாக இருக்கும் அசித்தின் அழகினை இப்பகுதியில் கண்டு களிக்கலாம். முதலாழ்வார்கள் மூவரும் திருமங்கையாழ்வாரும், இத்தலத்து எம்பெருமானை மங்களா சாசனம் செய்துள்ளனர்.

வயலும், பொழில்களும் அமைந்த இத்திருத்தலம் ஒரு பொற்கொல்லனின் களரிபோல் காட்சியளிக்கிறது. நீரிலிருந்து வெளிப்பட்ட கருநெய் தற்பூ கரியாகவும், புன்னை மரங்களின் மொட்டு முத்துகளாகவும், புன்னை மலர்கள் மலர்ந்த நிலையில் பொன்னாகவும், தடாகங்களில் உள்ள தாமரைகள் தீப்பிழம்பு போலவும் தோற்றமளிக்கின்றன

"எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்டச்
செழுந்தடநீர்க் கமலம்தீ விகைபோல் காட்டும்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே!" (1140)

என்றவாறு கோங்கம் பூக்களும், சுரபுன்னைகளும், குரவ மரங்களும் மிக்குள்ள சோலையிலே திரண்ட வண்டுகள் மது உண்டு களித்தனவாய் பாடும் பாட்டைக் கேட்டு இனிய கரும்பானது ஒரு கணு மேலெழுந்து நிற்கும்! ஈண்டு திருக்கோவலூர் எம்பெருமானையே கரும்பாகக்

குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம். வண்டுகள் வெறும் இன்னொலியை எழுப்பாமல், முதலாழ்வார்களின் பாடல்களையே பாடியதாகவும் கொள்ளலாம். அமுதூறும அப்பாடல்களின் இன்பப் பெருக்கில் திளைக்கும், 'திருக்கோவலூர்த் தீங்கரும்பு' (பெருமாள்) கண் வளருவதாகவும் கொள்ளலாம்.

முதலாழ்வார்கள் மூவரையும் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலை உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய திருக்கோவலூர் அருகில் வளையும் கரும்பாகவும், அப்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் தேசிகர் குறிப்பிட்டுள்ளமை மகிழத்தக்கது. இத்தகு சோலைகள் சூழ்ந்த திருப்பதியில் தென்றல் வீசி அச்சூழலை மேலும் இன்பமாக்குகிறது.

சுற்றிலும் உள்ள சோலைகளில் கமுக மரங்கள் உள்ளன. அவற்றின் நிறம் கருப்பு. பாளைகளின் நிறம் பசுமை, பாக்குப்பிஞ்சுகள் வெண்ணிற முத்துகளைப் போல் காட்சியளிக்கின்றன. பச்சைநிறக் காய்கள் மரகதம் போன்று காணப்படுகின்றன. பழுத்த செந்நிறப் பாக்கும் பழங்கள் பவளம் போன்று உள்ளன. பாக்கு மரங்களுடன் வளர்ந்துள்ள சுரபுன்னையின் மொக்குகள் மலர்ந்து சோலையைப் பொலிவுறச் செய்கின்றன என்பதை ஆசிரியர் சுவைபட உரைக்கின்றார். பாண்டிய நாட்டுத் திருப்பதியின் 'அழகர் கோயில்' என்று வழங்கும் திருமாலிருஞ்சோலை திவ்விய தேசத்தின் இயற்கை அழகில் ஆசிரியர் மனதை ஈடுபடச் செய்து சுவைபட இயம்புகின்றார்.

திருமங்கையாழ்வார் இந்த சோலையைச் சினைவளர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை, தேன் அமர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை, தேன் அருவி கொழிக்கும் திருமாலிருஞ்சோலை, சிலம்பு இயல் ஆறு உடைய திருமாலிருஞ்சோலை, திங்கள் மாமுகில் திருமாலிருஞ்சோலை என்றெல்லாம் வருணித்திருக்கும் பாசுரப் பகுதிகளில் ஆசிரியர் ஆழங்கால் பட்டு ஆனந்தம் அடைகின்றார். பாசுரங்களில் சோலையுடன் மலைச்சாரல்களையும் மலையையும் வருணிக்கும் பகுதிகள் கற்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. நம்மாழ்வாரும், இச்சோலையை, வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை, மதி தவழ் குடுமி மாலிருஞ்சோலை, மறு இல்வண் சுனை மாலிருஞ்சோலை, மறியோடு பிணை சேர் மாலிருஞ்சோலை, மழக்களிற்றினம் சேர் மாலிருஞ்சோலை, மாது உறு மயில் சேர் மாலிருஞ்சோலை என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அதன் இயற்கையில் ஆழ்வார்கள் தம் உள்ளத்தைப் பறி கொடுத்துள்ளதைக் கண்டு வியப்பெய்துகின்றார்.

சோலையின் சூழ்நிலை ஆசிரியரை திருமங்கையாழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் படத்தூண்டுகின்றது. சோலை மலைச்சாரலில் மூங்கில்கள் விண்டு விரிந்து வளர்ந்துள்ளன. நறுமணம் மிக்க குறிஞ்சி மலர்களிலுள்ள செவ்வித் தேனில் படிந்த வண்டுகள் இன்னொலியுடன் வட்டமிடுகின்றன. இக்காட்சியில் ஆழங்கால் பட்டுள்ள நம்மனம்,

"அறுகால் வரிவண்டுகள் ஆயிர
நாமம் சொல்லிச்
சிறுகாலைப் பாடும் தென்திரு

மாலிருஞ் சோலையே” (பெரி., திரு., 4.2:3)

என்ற பெரியாழ்வாரின் பாசுரப் பகுதியை எண்ணி மகிழ்கின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார். காலமுணர்த்தும் சோதிடன் போன்று உரிய காலங்களில், பூக்கும் மேக மண்டலம் வரை ஓங்கியுயர்ந்த வேங்கை மரங்களும், கோங்கு மரங்களும் அங்குச் சூழப்பெற்றுள்ளன. ஒன்றோடொன்று பிணங்கி நிற்கும் விண்ணளாவும் மூங்கில்களின் நுனிமலையுச்சியிலுள்ள தேனடைகளின் வாயைக் கிழிப்பதனால் தேனீக்கள் நாற்புறமும் பறந்தோடுகின்றன. அதனால் தேனின் மனம் எம்மருங்கும் வீசுகின்றது.

வருமழை தவழும் மாலிருஞ்சோலையில், முகில்கள் ஆழ்கடலில் நீரை முகந்து கொண்டு விண்ணில் ஏறி இடி முழக்கம் செய்கின்றன. அவ்வொலியைக் கேட்கும் சிங்கள் அது யானையின் பிளிறல் என்று கருதி எதிர்முழக்கம் செய்கின்றன. மதங்கொண்ட களிறுகளின் மதநீர் பெருகி வருகின்றது. அதனை வண்டுகள் பருகியும் அதனால் வற்றாது மேலும் பாய்ந்து சாரல்தோறும் வெள்ளமிடுகின்றது. மலையினின்று விழும் அருவிகள் சந்தனக் கட்டைகளையும், இரத்தினக் கற்களையும் உருட்டிக் கொண்டு வருகின்றன. இத்தகைய ஆழ்வார் கூறும் காட்சிகளில் ஆசிரியர் மனம் ஈடுபடுவதாகக் கூறுகிறார்.

சோழ நாட்டு திருப்பதியில் ‘நாதன் கோயில்’ என்று அழைக்கப்படும், ‘நந்திபுர விண்ணகரத்து நாதன்’ திருத்தலத்தின் சூழ்நிலைப் பற்றி ஆழ்வார் கூறுவதை ஆசிரியர் வாயிலாகக் காணலாம். கரிய அழகிய வண்டுகள் தம் இனங்களுடன் மதுவினைப் பருகிப் பூக்களைக் கோதி அதன் பிறகு களிப்புக்குப் போக்கு வீடாக இசைபாடப் பெற்ற சோலைகள் நிறைந்தது இத்திருத்தலம். புதிது புதிதாக மலரும் பூக்களையுடைய சோலைகளில் பன்னிறத் தும்பிகள் திரிந்து கொண்டுள்ளன. வயல்கள் எப்போதும் கருவடைந்த பயிர்களால் நிறைந்திருப்பதால் அவை இரவு போல் இருண்ட காட்சியைத் தருகின்றன. சிறந்த சிறகுகளையுடைய மயில்களும், குயில்களும் சோலைகளில் நெருங்கி வாழ்கின்றன. நறுமணம் மிக்க மலர்கள் எங்கும் சிந்தப் பெற்றுள்ளன. வண்டுகள் முரன்று இசை ஒலிகளை எழுப்புகின்றன. பரந்து வளர்ந்துள்ள மாமரங்கள் மணம் வீசி நிற்கின்றன.

இங்குள்ள சோலைகளில் குயில்கள் மரக்கிளைகளினின்றும் குதித்துக் கூவும். அவ்வொலிகளைக் கேட்டு மயில்கள் நடனமாடும். அன்றியும் வாத்தியங்களின் மெல்லோசையை இவை மேக முழக்கமாகக் கருதியும் கூத்தாடும். மாமுனிகள் அழகு மிக்க இசை நிறைந்த பாடல்களால் துதிசெய்வதையும் அந்த இசைக்குத் தக்கவாறு தாங்களே நர்த்தனங்களும் ஆடக் கண்ட தேவர்கள் இப்பூவுலகில் இத்திருப்பதியைப் போன்ற நகரம் எங்கும் இல்லை என்று கொண்டாடி மலர்கள் தூவுகின்றனர். நல்ல நீர் வாய்ப்பு அமைந்த இத்திருத்தலத்தில் நீர்ப்பெருக்கில் பலபல மணிகள் கொழிக்கப் பெற்று வரும். அம்மணிகளின் ஒளி எங்கும் பரவி இத்திருத்தலம் இரவிலும் பகல்போல் காட்சி தரும். இத்தகைய எழிலார்ந்த திருத்தலம் தான் ‘நாதன் கோயில்’ என்று ஆசிரியர் இயம்புகின்றார்.

திருநறையூரின் இயற்கைக் காட்சியில் அடுத்ததாக ஆசிரியரின் மனம் களிப்படைகின்றது. அக்காட்சிகள் திருமங்கை ஆழ்வார் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளதை பின்வருமாறு ஆசிரியர்

கூறுகின்றார். நறையூரை அடுத்துள்ள சோலையைப் பற்றி ஆழ்வார் கூறுவார். சோலையோ 'நறவு ஆர் பொழில் சோலையாகவும், நறைசேர் பொழில்' ஆகவும் காட்சி தருகின்றது.

தேமாவின் செந்தளிர்களைக் குயில்கள் கோதிக் கூவும். அவ்விடத்தின் நிலப் பண்பாலே மீன்கள் மிகவும் பருந்திருக்கும். அவற்றைப் பிடிக்கின்ற உழவர்கள் இரண்டு கையாலும் அவற்றைத் தழுவுவார்கள். மிக்க வலிவுள்ளவையாதலால் அவை பிடிப்பவர்களை உதறித்தள்ளி விட்டுப் போய்விடும். அங்ஙனம் தள்ளப்பெற்று விழுந்த உழவர்கள் மீண்டும் அவற்றைப் பிடிக்க எழுந்திருப்பார்கள். இதைக் கண்ட ஆமை அஞ்சி வரம்பிலே நின்ற மஞ்சள் புதரிலே புகுந்து மறையும். அவ்விடத்தில் எழில் மிக்க மயில்கள் நடனமாட, அதற்கேற்ப வண்டுகள் இசைபாடும்.

அங்குள்ள மரத்தின் பொந்துகளில் வாழும் குஞ்சுக்காக இரை தேடும் பறவைகள் நத்தைகளைத் திரட்டிக் கொண்டு செல்லும். மீன்களை மிகுதியாகப் பிடித்துண்ணும் கொக்குகள் தம் பேடைகளுடன் ஓடிச்சென்று தாமரைப் பூவினுள் தேனைப் பருகா நிற்கும். இன்னும் இச்சோலையில் வண்டுகள் அப்போதலர்ந்த செண்பக மலர்களின் நறுமணம் மிக்க தேனையுண்டு மகிழும் பூவின்மீது தங்கியிருக்கும். அன்னப் பறவைகள் தத்தம் பேடைகளோடு கூடி அங்குள்ள மகளின் நடையழகைக் கண்டு தாமும் அப்படியே நடக்க விரும்பும். அந்த நடை தமக்கு வாராமையால் வெள்கி ஒதுங்கிப் போகும். சில அன்னப்பறவைகள் நெய்தற் பூவிலுள்ள மதுவைப் பருகித் தாமரைப் பூவைப் படுக்கையாகக் கொண்டு அதிலே போய்ப் படுத்துறங்கும். மெல்லிய பூக்களின் மீதுள்ள வண்டுகள் களித்துத் தேனைப் பருகி நிற்கும். அழகிய தென்றல் மலர்களை வீசி இறைக்கும். முல்லை மலர்கள் முறுவலிப்பன போன்று மலரும் என்று ஆழ்வார் தம் பாசுரங்களில் சுவைபடக் கூறியுள்ளதாக ஆசிரியர் கூறுகின்றார்.

அடுத்து ஆசிரியர் தன் திருத்தலப் பயணத்தில் திருக்கண்ணன் குடியின் இயற்கை அழகில் தன் மனதை ஈடுபடச் செய்கின்றார். திருமங்கையாழ்வார் மட்டிலும் ஒரு திருமொழியால் இத்தலத்து எம்பெருமானை மங்களா சாசனம் செய்துள்ளார். ஆழ்வாரின் இயற்கை வருணனையில் ஆசிரியர் மனம் ஈடுபடுகின்றது.

குவளை மலர்கள், தாமரை மலர்கள், ஆம்பல் மலர்கள், செங்கழுநீர் மலர்கள், நெய்தல் மலர்கள் ஆகிய இம்மலர்களால் அழகு விளங்கப்பெற்ற கழனிகளால் சூழப்பெற்றது திருக்கண்ணங்குடி. இங்கு உரிய காலத்தில் மலரும் புன்னை, மல்லிகை, முல்லை ஆகிய மலர்களின் மீது அளாவி நறுமணத்துடன் கூடிய தென்றற்காற்று எல்லா பக்கங்களிலும் வீசும். இங்குள்ள கழனிகளில் மென்னடை அன்னங்கள் மெல்லிய தாமரை மலர்களாகிய இருக்கையில் அலையெறிகின்ற நீரில் உண்டான இலையாகிற குடை நிழலில் இருபக்கமும் செந்நெற் கவரி வீச வீற்றிருக்கும். குலைகள் நிரம்பிய வாழைத் தோப்பும், ஓங்கி வளர்ந்துள்ள பாக்கு மரங்களும், குரவ மரங்களும், பலா மரங்களும், குளிர்ந்த மாமரங்களும், குருகத்தியும் நிறைந்து செழிப்புள்ள சோலைகளால் சூழப்பெற்றது இவ்வூர்.

அன்றியும் மேகங்கள் முரசொலி போல் முழங்க, தேன்களில் திரியும் பொறிவண்டுகள் இன்னிசை முரல, கானில் உலாவும் மயிற்கணங்கள் கூத்தாடும், சிறந்த மணிகளையும், மரகதக் குவில்களையும், வயிரங்களையும், மூங்கில் உதிர்த்த முத்துக்களையும், ஆற்றலைகள் தள்ளிக்

கொண்டு வந்து கழனிகளெங்கும் குவிக்கும். நெருங்கிய குருக்கத்திகளும், சுரபுன்னைச் சோலைகளும், சூழ்ந்துள்ள செண்பகங்களும் ஆகிய இவற்றின் மலர்களில் வண்டுகள், 'தென்ன, தென்ன' என முரன்று இன்னிசைப் பண்களை எழுப்பிய வண்ணம் இருக்கும். உயர்ந்த கொடிகள் ஒளிமிக்க மதிமண்டலத்தளவும் சென்று சேரும்படியான ஓங்கிய சிகரங்களையுடைய அழகிய ஒளிமிக்க மாடமாளிகைகளைக் கொண்டது இவ்வூர். இத்தகைய சீரும் சிறப்பும் மிக்கது அழகிய இத்திருத்தலம்.

இவ்வாறாக ஒவ்வொரு திருப்பதி பயணத்தின்போதும் ஆசிரியர் அங்குள்ள இயற்கை வருணனையை ஆழ்வார்களின் பாடல்கள் மூலம் இன்புற்று மனம் மகிழ்ச்சி அடைவதுடன், இப்பாசுரங்களைக் கற்போரும் மகிழ வேண்டும் என விரும்புகின்றார்.

அகப்பொருள் மரபுகள்

ஆழ்வார்கள் தம்முடைய பாசுரங்களில் அகப்பொருள் தத்துவத்தைக் குழைத்துத் தருகின்றனர். பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும ஒன்பது வகையான தொடர்புகள் உண்டு என்று வைணவத் தத்துவம் கூறுகின்றது. அவற்றுள் "நாயக–நாயகி பாவனையும்" (தலைவன்–தலைவி உறவு) ஒன்றாகும். இந்த உறவே ஏனையவற்றுள் சிறந்ததாகும். இம்முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும், வைத்து விளக்கும் பாடல்களை நாலாயிரத்திலும் தேவராத்திலும் காணலாம். ஆயினும் வைணவப் பெருமக்களே சங்ககால நெறியையொட்டி ஓர் அகப்பொருள் நெறியினை அமைத்துக் காட்டிய பெருமையினைப் பெற்றனர். தாய் கூற்றாக, தோழி கூற்றாகப் பாடல்கள் பாடினர். புருடோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்னர் உலகிலுள்ள ஆன்மாக்கள் யாவும் பெண் தன்மையினை அடைந்து நிற்கும் என்பது அவர்கள் கண்ட தத்துவமாகும். எனவே ஆழ்வார்கள்–குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பெண் தன்மை எய்திப் பல திருக்கோயில் பெருமான்களை அனுபவித்ததை அவர்களுடைய பாசுரங்களில் காணலாம்.

நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்களிடம் சில சமயம் ஞானம் தலை தூக்கி நிற்கும். சில சமயம் பிரேமம் (காதல்) மீதூர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலிருக்கும் பொழுதும் அவர்கள் பாசுரங்கள் அருளியுள்ளனர். இதனை,

"ஞானத்தில் தம்பேச்சு;
பிரேமத்தில் பெண்பேச்சு"

என்று 'ஆசாரிய ஹிருதயம்' என்ற நூல் குறிப்பிடும். அதாவது ஞானநிலையிலிருக்கும் பொழுது அவர்கள் தாமானத் தம்மையில் நின்று பேசுவர். பிரேம நிலையிலிருக்கும் பொழுது பெண் தன்மையடைந்து வேற்று வாயாலே பெண் பேச்சாகப் பேசுவர். அப்போது நம்மாழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப், 'பராங்குச நாயகி' என்ற பெண்மை பெயரும்,

திருமங்கையாழ்வாருக்குப் ‘பரகாலர்’ என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் ‘பரகால நாயகி’ என்ற பெண்மைப் பெயரும் வழங்கப்படும்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு பெருமானை அனுபவிக்கும்பொழுது, அவர்கள் தோழி, தாய், தலைவி என்ற மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர். இதன் காரணமாகப் பாசுரங்களும் தாய் சொல்லுவது போல வடிவெடுத்துத் ‘தாய்ப் பாசுரம்’ என்றும், தோழி சொல்வதுபோல உருக்கொண்டு ‘தோழிப் பாசுரம்’ என்றும், தலைவி பேசுவது போல் வடிவெடுத்துத் ‘தலைவிப் பாசுரம்’ என்றும் பெயர்களைப் பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்களில் வெளி வந்தாலும்; பாசுரங்கள் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களே ஆவர். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்களுக்கு ஆசாரிய ஹிருதயம், “மூன்று பிரஜ்ஞாவாஸ்தைகள்” என்று விளக்கம் தருகின்றது.

வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கின்றது. இவர்கள் எம்பெருமான் மீது கொள்ளும் காமம், “பகவத் விஷய காமம்” என்று வழங்கப் பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன் மீது கொள்ளும் காமம் மங்கையர் மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது.

ஆண்டாளின் அகப்பொருள் பாடல்கள்

திருப்பாவையில் கிருஷ்ணானுபவத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஆண்டாள் கண்ணன்பால் கொண்ட காதல் நிறைவுடையதாயினும், அமைதியாகவுள்ளது என்று ஆசிரியர் கூறுகின்றார். நாச்சியார் திருமொழியிலும் கண்ணன் காதலே பாடற்பொருளாயினும் அக்காதல் வேகமாகவுள்ளது. திருப்பாவை மார்கழியில் நிகழும் மார்கழி நீராடுதலைப் பாடுவது. தைத்திங்களில் கண்ணனைப் பெற காமன் நோன்பினை மேற்கொள்வதை நாச்சியார் திருமொழியில் காண்பதாக ஆசிரியர் கூறுகின்றார். தொடக்கத்தில் காமனை வழிபடுவதாகவே பாடல்கள் உள்ளன. அவ்வாறு வழிபடும்போது கண்ணனிடத்தில் தன்னைச் செலுத்த அவன் துணையாவான் என்ற நிலையிலேயே பாடுகின்றாள்.

“வெள்ளை நுண்மணல் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன் முன்னம் துறைபடிந்து
முள்ளும் இல்லாக் கள்ளி எரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல்வண்ணன் என்பதோர் பேர் எழுதி
புள்ளினை வாய்ப் பிளந்தான் என்பதோர்
இலக்கினிற் புக என்னை எய்கிற்றியே” (நாச்சியார் திருமொழி, 505)

என்றவாறு பாடத் தொடங்கிப் படிப்படியாக அவனை அடையத் துடிக்கும் துடிப்பானையே நூல் முழுவதும் வெளிப்படுத்தி வருகிறாள் ஆண்டாள். “மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழ் கில்லேன், அவன் திருக்கண் நோக்கம் வேண்டும். அவன் திருக்கைகளால் தீண்டும் புகழ்

வேண்டும் கேசவ நம்பியைக் கால்பிடிக்க வேண்டும். பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழ வேண்டும்" என இவ்வாறெல்லாம் அவள் எண்ணம் செல்கிறது.

ஆண்டாள் கண்ணனையே நினைத்து உருகும் நிலையில் அவனை மணப்பதாகக் கனாக் காண்கிறாள். இக்கனா, அழகான திருமண நிகழ்ச்சியிலே தோய்ந்து நின்று பாடும் சுவையான பாடல்களை தருகிறது. தமிழ் இலக்கியத்திலே இவ்வகையான பாடல்கள் இல்லை. காதல் உணர்ச்சியைக் கனவைக் கொண்டு விளக்கப் புகும் முயற்சியுண்டு. திருமணக் காட்சியில் இந்த அளவுக்கு உள்ளம் ஒன்றிப் பாடிய பாடல்கள் இல்லை.

"வாரண மாயிரம் சூழ வலஞ் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்" (நாச்சியார் திருமொழி, 556)

எனத் தொடங்கிப் பல நிகழ்ச்சிகளையும் சுவை மிக்க பாடல்களாகப் பாடுகிறாள். திருமணத்தைக் கனவு கண்ட ஆண்டாளுக்குக் கிருஷ்ணானுபவத்திலும் உள்ளம் விரைகிறது.

"உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்ச சன்னியமே!" (நாச்சியார் திருமொழி, 573)

என்ற பாடலில் தானும் அவனோடு ஒட்டி உறையும் பொருளாகவில்லையே! என்ற ஏக்கமும் வெளிப்படுகிறது. இவ்வனுபவத்திலேயே நாட்டம் மிக அவனை அடைய மேகத்தைத் தூதுவிடுகின்றாள்.

"மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட தாளாளன் வார்த்தை என்னே ?
காமத்தீ உள்புகுந்து கதுவப்பட்டு இடைக் கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கு இலக்காள் நான் இருப்பேனே"
(நாச்சியார் திருமொழி, 576)

எனத் தூது விடும்போது காதல் வேகத்தின் எதிரொலியே காதில் விழுகிறது. ஆண்டாள் மங்களா சாசனம் செய்த திவ்ய தேசங்கள் 1. திருவரங்கம், 2. திருக்கண்ணபுரம், 3. திருப்பாற்கடல், 4. வடமதுரை, 5. திருவாய்ப்பாடி, 6. திருமாலிருஞ்சோலை, 7. திருவேங்கடம், 8. திருவில்லிபுத்தூர், 9. திருத்துவாரகை.

திருப்பாவையில் கிருஷ்ணானுபவத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஆண்டாளைக் காண்கிறோம். நாச்சியார் திருமொழியிலும் கண்ணன் காதலே பாடப்பொருளாயினும் அக்காதல் வேகமாகவுள்ளது. திருப்பாவை மார்கழியில் நிகழும் மார்கழி நீராடுதலைப் பாடுவது. தைத்திங்களில் கண்ணனைப் பெற காமன் நோன்பினை மேற்கொள்வதை நாச்சியார் திருமொழியில் காணலாம். இவ்விரண்டு பிரபந்தங்களுக்கும் இயைபு கூறப்புகுந்த பெரியோர்கள், "இறைப்பேற்றுக்கு வேண்டிய பிரதிபத்தி தோன்றிய பின்னரும் கிருஷ்ணானுபவ

கூடாமையின் ஆண்டாள் காமன் காலின் விழத் தொடங்குகின்றாள்" என அழகாக ஓர் இயைபு கூறுவர்.

காதல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிருக்கும் ஆண்டாள்,

"கற்றன பேசி வசவு உணாதே,
காலிகள் உய்ய மழை தடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின்" (நாச்சியார் திருமொழி, 624)

என்று தன்னை கோவர்த்தன மலையருகே கொண்டு போய் விடுமாறு வேண்டுகின்றாள்.

திருமங்கையாழ்வாரின் அகப்பொருள் பாடல்கள்

சங்க காலத்தில் மடலேறுதல் என்ற மரபு இருந்தது. தான் விரும்பிய பெண்ணை அடைய முடியாத தலைவன், அவள் இல்லாமல் தன்னால் வாழ முடியாத நிலையை வெளிக்காட்ட முயற்சிப்பான். பனை மடலால் செய்யப்பட்ட குதிரையின் மீது ஏறி எருக்கம்பூ மாலையை அணிந்து கொண்டு அப்பெண்ணின் படம் எழுதப்பட்ட கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு உடம்பெல்லாம் புழுதியை பூசிக் கொண்டு நாணத்தை விட்டு நடுத்தெருவில் வந்து என்னை விட்ட இரக்கமில்லாதவள் இவள்தான் என்று கூறி நிற்பானாம். இதைக் கண்ட ஊர் மக்கள், அவனுடைய நிலையைக் கண்டு இரக்கப்பட்டு அந்த பெண்ணை அவனுக்கு மண முடித்து வைப்பார்கள். இந்த நிலைக்கு மடலேறுதல் என்று பெயர்.

தன்னை நாயகியாக நினைத்துக் கொண்டு எம்பெருமானை நாயகனாக நினைத்து திருமங்கையாழ்வார் எனக்கு எம்பெருமான் முகம் காட்டவில்லை. என் காதலை அவர் ஏற்க வேண்டும் என்று பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகிய இரண்டு திருமடல்களை விடுத்தார்.

சிறிய திருமடலில்,

"தீரா உடம்போடு பேதுறுவேன் கண்டு இரங்கி,
ஏர் ஆர் கிளிக் கிளவி எம் அனை – தான்
வந்து, என்னைச்
சீர் ஆர் செழும் புழுதிக் காப்பிட்டு,
செங் குறிஞ்சித் (சிறிய மடல், 2679)
தார் ஆர் நறு மாலைச் சாத்தற்குத்
தான் பின்னும்
நேராதன ஒன்று நேர்ந்தாள் – ஆனாலும் (சிறிய மடல், 2680)
தீராது என் சிந்தை நோய் தீராது என் பேதுறவ;
வாராது மாமை; அது கண்டு, மற்று ஆங்கே
ஆரானும் மூது அறியும்
அம்மனைமார் சொல்லுவார்;
பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல்
ஆரானும் மெய்ப்படுவன் என்றார் – அது கேட்டு (சிறிய மடல், 2681)

கார் ஆர் குழல் – கொண்டை கட்டு விச்சி கட்டேறி,
சீர் ஆர் சுளகில் சில நெல் பிடித்து, எறியா,
வேரா, விதிர் விதிரா, மெய் சிலிரா, கை மோவா,
பேர் ஆயிரம் உடையான்
என்றாள் – பெயர்த் தேயும், (சிறிய மடல், 2682)
கார் ஆர் திருமேனி காட்டினாள்; கையதுவும்
சீர் ஆர் வலம்புரியே என்றாள் – திருத் துழாயத் (சிறிய மடல், 2683)
தார் ஆர் நறு மாலை கட்டுரைத்தாள்; கட்டுரையா,
நீர் ஏதும் அஞ்சேல் மின்; நும் மகளை
நோய் செய்தான்
ஆரானும் அல்லன், அறிந்தேன் அவனை நான்
கூர் ஆர் வேல் கண்ணீர்! உமக்கு
அறியக் கூறுகெனோ ?
ஆரால் இவ் வையம் அடி அளப்புண்டது – தான்
ஆரால் இலங்கை பொடி பொடியா
வீழ்ந்தது; மற்று
ஆராலே கல் மாரி காத்தது – தான் – ஆழி நீர் (சிறிய மடல், 2684)

என்று ஆழ்வாரின் வேண்டுகோளை இறைவன் நிறைவேற்றாத போது பிறந்த வேகத்தால் பாடிய பாடல். இதில், அறிவு கெட்டு நிறம் மாறிய உடம்போடு நான் திகைப்புற்றேன். இது கண்டு இரங்கினாள், கிளிச் சொல்லையுடைய என் தாய். அடியார்கள் பாதத் துளியைக் கொண்டு காப்பாக நெற்றியிலிட்டாள்.

குறிஞ்சி நிலத்தில் மலர்ந்த பூக்களலான மாலையைச் சூடிய சாத்தா தேவதைக்குத் தன்னுடைய கலக்கத்தால் குலத்தில் செய்யாத ஒன்றைச் செய்தான். இவ்வாறு செய்தும் என் மனநோய் தீரவில்லை. என் அறிவுக்கேடு தீரவில்லை. மேனி நிறம் மீண்டதில்லை. இதைக் கண்டு அங்கேயுள்ள சில அன்னையர், நோய்களுக்கு பழைய முறையை அறிந்தவர்கள் என தாயிடம் கூறினர். பாரோர் சொல்லும் வகையில் நீங்கள் செய்தீராகில் இந்த நோய்குறி தெரியும் என்றதும் யாவரும் இசைந்தார்கள்.

இதுகேட்டுக் குறி சொல்லுபவள் ஒருத்தி தானே அங்கு வந்தாள். அவள் கறுத்த முடியுடையவள். அவள் ஆவேசம் கொண்டு குறி சொல்ல முற்பட்டாள். அழகிய முறத்திலிருந்த நெல்லை ஒரு பிடி எடுத்து வீசினாள்; வேர்த்தாள்; விதிர் விதித்தாள்; அவளது மெய் சிலிர்த்தது. அவள் தனது கையை மோந்து "இது ஆயிரம் பேருடையவனால் வந்தது" என்று சொன்னாள்.

அதற்கு மேல் கறுத்த மேகத்தைக் காட்டிப் பெருமானது வடிவைக் காட்டினாள். திருக்கைகளின் பெருமை வலம்புரிச் சங்கு என்றாள். திருத்துழாய் மாலை வேய்ந்த திருமார்புடையவன் என்று குறி சொன்னாள். "நீர் சிறியதும் அஞ்சவேண்டா, உங்கள், பெண்ணுக்கு இந்த நோயைச் செய்தவன் வேறு ஒருவனுமல்லன்; அவனை நான் அறிந்தேன்;

கூர்மை மிக்க வேல் விழி மங்கையரே!” நீர் அறியுமாறு சொல்கிறேன். இவ் உலகம் யாரால் அடி அளக்கப்பட்டதோ, யாரால் இலங்கை பொடிப் பொடியாய் அழிந்ததோ, கல் மழை யாரால் தவிர்க்கப் பட்டதோ, கடல் நீர் யாரால் கடையப்பட்டதோ ? அவனே தான் என்று கட்டுவிச்சி கூறுவதாக ஆசிரியர் மடலேறும் தன்மையை அழகாக எடுத்துரைத்துள்ளார்.

திருநெடுந்தாண்டகத்தில் தாயார் பேசும் பேச்சாக ஒரு பாசுரம் அருளுவதாக ஆசிரியர் ந.சுப்பு ரெட்டியார் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

“தலைவன் திருமேனி மிகவும் அழகு வாய்ந்தது; அழியா அழகன். அவன் திருமேனி மேகம் போன்றது; அவன் திருக்கண்களும், திருவாயும், திருக்கைகளும், திருவடிகளும் தாமரையின் வண்ணமாய் அமைந்து சிவந்து விளங்குவன; அவன் நிலமடந்தை, திருமகள் ஆகியோர்க்கு நாயகன்; இப்படிப்பட்ட அழகனின் மையலில் மயங்கிய அழகிய என் மடமகள் எம்பெருமான் திருவரங்கம் எங்கே ? என்று வினவுவாள். நீர் வண்ணன் கோயில் கொண்டிருக்கும் நீர் மலைக்கே செல்வேன் என்று மயங்கி நிற்பாள்; என் மகள் பித்துப் பிடித்த நிலையை அடைய, நான் செய்த பாவம் தான் என்ன ? ஆ! இதுவே தன் நிறையழித்தவர்களின் நிலை! என்று தாயார் தலைவி நிலை கண்டிரங்கிப் பேசும் பேச்சாக அமைந்த அழகியப் பாடலாக உள்ளது.”

“கார் வண்ணம் திருமேனி; கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியினையும் கமல வண்ணம்
பார் வண்ண மடமங்கை பத்தர்; பித்தர்
பனிமலர்மேல் பாவைக்கு; பாவம் செய்தேன்!
ஏர் வண்ண என்பேதை என்சொல் கேளாள்;
“எம் பெருமான் திருவரங்க மெங்கே ?” என்னும்
“நீர் வண்ணன் நீர் மலைக்கே போவேன்” என்னும்
இதுவன்றோ நிறையழிந்தார் நிற்கு மாறே” (பெரி.திரு., 2069)

திருக்குறையலூரில் நின்றும் புறப்பட்டுத் திருநீர் மலைக்குப் போய், அங்கிருந்து திருவரங்கம் போகவேணும் என்று இங்ஙனே இவள் வழி கண்டிருக்கிறாள்போலும் என்று ஆசிரியர் கூறுமிடம் மிகவும் வியப்பாக உள்ளது.

அகப்பொருள் பாடுதலில் நம்மாழ்வார்

நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் உயர்ந்த தத்துவஞானப் பாடல்கள் இருத்தல் போலவே, காதல் துறைகளை அமைத்துப் பாடும் பக்திப்பாடல்களும் இருக்கின்றன. அப்படிப்பட்ட தெய்வக்காதல் துறைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது தூது. தூது என்பது நாரை, பூவை முதலிய பறவைகளைத் திருமாலிடம் தூது அனுப்பிப் பாடும் பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை.

நம்மாழ்வார் தம்மை நாயகியாகக் கற்பனை செய்து உணர்ந்து நாரை முதலிய பறவைகளைத் திருமாலிடம் தூது அனுப்புவதாகப் பாடும் பாடல்கள் பக்திச் சுவையும், இலக்கிய நயமும் நிரம்பியவை. “அழகிய சிறகுகளை உடைய நாரையே! நீயும் உன் சேவலுமாக எனக்கு உதவி செய்யும் பொருட்டு என் தூதாக என் நாயகராகிய திருமாலிடம் சென்றால், அவர்

உங்களைச் சிறைப்படுத்தி வைத்துவிட்டால், என்ன செய்வீர்களோ ? என்று வினவுவதாக ஆசிரியர் கூறுகின்றார்.

"அன்னப் பறவைகளே! நீங்கள் எனக்காகத் திருமாலிடம் தூது செல்ல மாட்டீர்களா ? அறிவில்லாத என்னுடைய கொடிய வினை தீராதோ என்று ஒருத்தி இப்படி அறிவெல்லாம் கலங்கி மயங்குகிறாள் என்று அவரிடம் சொல்லமாட்டீர்களா ?"

"அகன்றில் பறவைகளே! காதலால் மெலிந்து வாடும் என் தன்மையைக் கண்டு இரக்கம் கொண்டு அருள் செய்யாமலிருப்பது தகாது என்று அவர் உணரவில்லையே, அவருக்கு என்ன சொல்லி நான் தூது அனுப்புவேன் ? இப்படி இரக்கமில்லாமல் என்னைக் கைவிட்டால் அவரிடம் நல்ல பண்பு நிற்காது என்று ஒரு வாய்ச்சொல் சொல்லுங்கள். இந்த உதவி செய்வீர்களோ ? மாட்டீர்களோ ? "

"சின்ன பூவையே ! நீ என் பறவை அல்லவா ? திருமாலார்க்கு என்னுடைய தூதாகச் சென்று என் காதல் நோயைச் சொல் என்று பலமுறையும் உன்னைக் கேட்டுக் கொண்டேன். நீ சொல்லாமலே இருந்து விட்டாய். அந்தத் துன்பத்தால் வருந்தி வருந்தி இப்போது நான் என் அழகையும் நிறத்தையும் இழந்து தளர்ந்து விட்டேன். இதுவரையில் உனக்கு உணவு ஊட்டி வளர்த்தது போல் இனியும் வளர்க்கக் கூடிய வலிமை எனக்கு இல்லை. ஆகையால் இனிமேல் நீ உன் வாயில் இனிய உணவை வைத்து ஊட்டவல்லவர்களைத் தேடிக் கொள்."

நாயகரின் பிரிவாற்றாமையால் வாடி மெலிந்த நாயகி பறவைகளையும் உயிரில்லாத பொருள்களையும் நோக்கிப் புலம்புவதாகவும், அவைகளும் நாயகிபோல் துயரப்படுவதாகவும் நம்மாழ்வார் பாடியுள்ள பாடல்களும் அவ்வாறே பக்திச் சுவையும் இலக்கியச் சுவையும் உள்ளவை ஆகும். "கடற்கரைச் சோலையில் திரியும் நாரையே உன் தாயும் தேவருலகமும் உறங்கினாலும் நீ உறங்கவில்லையே! காதல் நோயும் பசலை நிறமும் மிகுந்து, நீயும் எம்மைப்போல் திருமாலிடம் நெஞ்சம் பறிகொடுத்தாயோ ?

"இருள் போன்ற நிறத்தோடு ஓடும் கழியே! இரவும் பகலும் மயங்கி உறங்கினாலும் நீ உறங்க வில்லையே! திருமாலின் அருளை விரும்பிய பெரிய ஆசையால் நீயும் மிக வருந்தி நொந்து விட்டாயோ ?"

"நந்தா விளக்கே! காதல் நோய் மெலிந்து உயிரை விட்ட நீயும் எம்மைப்போல் நாயகரின் துளசி மாலையைப் பற்றிய ஆசையால் வேகின்றாயோ ?"

திருமாலாகிய நாயகரின் பரிவாற்றாமல் வருந்திப் புலம்பும் நாயகியின் நிலையைத் தாய் கூறுவதாக அமைந்த பாடல்களும் பக்திச்சுவை நிரம்பிய கவிதைகளாக உள்ளன.

"மண்ணைத் துழாவி, "இது என் வாமனன் ஆகிய திருமாலின் மண்" என்கிறாள். வானத்தைப் பார்த்துத் தொழுது, 'இது அவன் வாழும் வைகுந்தம்' என்று காட்டுகிறாள். கண்களில் நீர் நிறைய நின்று, "என் நாயகன் இந்தக் கடல் போன்ற நிறம் உடையவன் என்கிறாள். இவ்வாறு என் பெண்ணுக்குப் பெருமயக்கம் செய்த திருமாலுக்கு நான் என்ன செய்வேன் ?" என்று தாய் கூறும் பாசுரமாக அமைந்துள்ளது.

மேலும், "சோர்ந்திருப்பாள், சுற்றிலும் நோக்குவாய், நெடுந்தொலைவு நீண்ட பார்வை பார்ப்பாள். வியர்வை கொள்வாள், கண்ணீர் துளும்பப் பெரும் மூச்சு விடுவாள். உடல் சோர்வாள், மறுபடியும், மறுபடியும் கண்ணா என்று சொல்வாள், பெருமானே வா என்று கூவுவாள். இப்படிய மயங்கிய பெருங்காதல் கொண்ட என் பேதைப் பெண்ணுக்காகத் தான் என்ன செய்வேன்?" என்று தாய் வருந்துகின்றாள்.

இவ்வாறு ஆழ்வார்கள் இறைவன் மீது கொண்ட அளவற்ற அன்பு தான் நாயகி நாயக பாவ பாசுரங்களாக வெளிப்பட்டன. இது இறைவனிடம் உள்ள பக்தித் திறத்தை வெளிப்படுத்துகின்றது என்பது ஆசிரியரின் தெளிவான கருத்து ஆகும். அவர் தம் திருத்தலப் பயணத்தில் தாம் கண்டு அனுபவித்தவற்றை சுவைபட எழுதியுள்ளார்.

தொகுப்புரை

பக்தி நெறி நின்ற அருளாளர்கள், சங்க அக இலக்கியங்களின் அகத்துறைப் பொருண்மையைத் தமது இறைக்காதலைப் பாடுவதற்கும் கருவியாகக் கொண்டனர். ஆன்மாவானது இறைவனை அடைய முயலும் முயற்சியைப் பாடுவதற்குத் தலைவனை அடைந்து இன்புறக் கருதும் தலைவியின் மனநிலை ஒப்பீடாகக் கொண்டு அடியார்கள் பாடியுள்ள தன்மை புலப்படுகின்றது.

ஒத்த அன்பினால் கூடும் உள்ளங்கள் அனுபவிக்கும் பேரின்பம் அவர்களின் உள்ளத்துள் நுகர்ந்து இன்புறுவதே நோக்கமாகக் கொண்டதாகும். இப்பேரின்ப உணர்வினைப் பெறவிழையும் அகமாந்தர்களின் மனநிலையினை ஆழ்வார்களின் பாசுரங்கள் வெளிப்படுத்திக் காட்டுவதை ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.

சிற்றிலக்கியக் கூறுகளில் ஒன்றாகிய உலா கூற்றின் அடிப்படையில் தலைவன் உலா வருதல் கண்டு மயங்கும் பெண்ணின் நிலையிலிருந்து ஆழ்வார்கள் பாடி மகிழ்வதைக் காணமுடிகின்றது. தலைவனின் மேற்கொண்ட அன்பின் மிகுதியால் தலைவி, குயில் ஆகியவற்றைத் தூதாக அனுப்பித் தன் நிலையை உரைக்குமாறு, செய்த பாடல்களைச் சுவைக்க முடிகின்றது.

சிற்றின்பத்தை விடுத்துப் பேரின்ப நிலையை அடைவதே உயிர்களின் குறிக்கோள் என்ற உண்மை ஆழ்வார் பாசுரங்களில் பதிவாக்கப்பட்டுள்ள பாங்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

தலைவனாகிய எம்பெருமானின் பிரிவாற்றாத தலைவி, பல்வேறு பொருள்களைக் கண்டு பேசிய காமம் மிக்க கழிபடர்க்கிளைவி தன் மூலமாகத் தலைவன் தலைவியருக்கு இடையேயுள்ள ஆழமான நட்புறவு வெளிப்படும் பாங்கு பதிவாக்கப்பட்டுள்ளது.

உயிருக்கு இன்பத்தைத் தருகின்ற வழிகள் பலவாறாக இருப்பினும், அவற்றையெல்லாம் பெரிதாக எண்ணி விரும்பாத உயிரானது தன் தலைவனாகிய இறைவனை அடைவதிலேயே தனிவிருப்பம் கொள்கின்றது என்பதனை ஆழ்வார்களின் பாசுரங்களின் வழி எடுத்துரைக்கப் பட்டுள்ளது. உணர்வதற்கரிய இறைபொருளை எளிதில் உணர்ந்து இன்புறுவதற்கு எண்ணிய அருளாளர்கள் இருவரும், தலைவி நிலையேற்றுத் தமது அன்புணர்வையும், ஆராத பேரின்ப வேட்கையையும் பாடிக் களிக்கின்றனர்.

இறைவனைப் பெற்றாலன்றி உயிர்வாழ இயலாது என்று அவனைச் சரண்புகுகின்றனர். அவ் அருட்திறத்தால் அடியார் இருவரும் அகத்துறை வழியே பாடியருளிய திருப்பாடல்கள் இலக்கியச் சுவையோடு, பேரின்பச் சுவையளிக்கும் அருட்பனுவல்களாகத் திகழ்கின்றன.

இயல்–5

முடிவுரை

ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்து உள்ளம் உருகிப் பாடிய பாசுரங்கள் சிலவற்றை ஆசிரியர் பாடி நம்மையும் எம்பெருமான் முன் நிறுத்தி ஆனந்த வெள்ளத்தில் நிலை தடுமாறச் செய்துள்ளார். இவற்றின் ஊடே வைணவச் சமயக் கருத்துக்கள் சிலவற்றை நம் எண்ண அலையில் தூண்டி விட்டிருக்கின்றார்.

வழிபாட்டுத்தலங்கள் திவ்ய தேசம் 108 என அழைக்கப்படுகின்றது. அத்தகைய தலங்களில் பெரும்பாலானவற்றைச் சென்று தரிசித்தும் சிலவற்றை மானசீகமாகவே சேவித்துப் பேரின்பம் பெற்றார் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார். அனைத்துத் தலங்களும் எல்லோராலும் சென்று தரிசிக்கும் வாய்ப்பிருக்காது. ஆனால் தரிசனம் செய்யவேண்டும் என்ற எண்ண உணர்வு இருக்கும். இவற்றிற்கு அச்சாணியாக பேராசிரியரின் திருத்தலப் பயண நூல்கள் அமைந்துள்ளன.

ஆசிரியரின் திருத்தலப்பயண நூலானது படிப்போரின் உள்ளங்களையும், அவர் கட்டுரைகள் ஆழ்வாரின் திருப்பாசுரங்களைச் சேவித்து அனுபவிக்கத் தூண்டும் கருவிகளாக அமைந்துள்ளது.

ஆசிரியர் தம் திருத்தலப் பயணத்தின் அனுபவத்தை கூறும் இடங்களில் எல்லாம் நம் மனது செல்லுகின்றது. நேரில் காணவேண்டும் என்ற எண்ண ஆவல் உருவாகுகின்றது. ஆழ்வார் பாசுரங்களில் ஆசிரியர் ஆழங்கால் பட்டதைக் கட்டுரை வாயிலாக அறியும் பொழுது அப்பாசுரங்களை தினமும் ஓத வேண்டும் என்ற எண்ண அலைகள் உருவாகுகின்றன. மேலும் அவரது ஆய்வு நூலானது ஒவ்வொரு திருத்தலத்திற்கும் நேரில் சென்று தரிசனம் கிடைத்த உணர்வை உருவாக்குகின்றது.

ஒவ்வொரு திருத்தலத்திற்கு செல்லும் வழிமுறைகள், வழித்தடங்கள் பேருந்து வசதிகள், இரயில் மூலப்பயணம் செய்யும் முறைகள் முதலியவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளவிதம் திருத்தலப் பயண யாத்திரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆழ்வார் பாசுரங்கள் மூலம் பக்தி நெறி என்ற விதையை விதைத்துள்ளார். இவ்விதையின் மூலம் முக்தி நிலையை அடைய ஆழ்வார் பாசுரங்கள் முழுவதையும் நெஞ்சுருகப்பாடி எம்பெருமானை அடைய ஆசிரியரின் நூல் ஒரு நல்ல வழிகாட்டி நூலாக உள்ளது என்பது தெளிவான உண்மையாகும்.

சமயம் பலவாறாகத் தோன்றினாலும் அவை உணர்த்தும் அறம் ஒன்றே என்பதை இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன. மனித வாழ்க்கையும், சமயங்களும் பிரித்தறிய முடியாத வகையில் இரண்டறக் கலந்துள்ளன. தமிழகம் பண்டு தொட்டு இன்று வரை அருளாளர் பலரைத் தோற்றுவித்து அரிய புகழைப் பெற்றுத் தந்த அருளாளர் வரிசையில் பிற்காலத்துத் தோன்றிய ஆழ்வார்களின் இலக்கியங்கள் பேசப்பட்டுள்ளது.

‘திராவிட வேதம்’ என்றும் ‘வேதத்தின் சாரம்’ என்றும் போற்றப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்தளித்த வரலாறு எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இறைவனின் கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டு மெய்ஞ்ஞானத்தில் மூழ்கித் திளைத்த ஆழ்வார்களின் அனுபவ மொழிகளே திவ்யப்பிரபந்தப் பாசுரங்களாக மிளிர்ந்துள்ளன.

ஆழ்வார்கள் தம் பாசுரங்களின் வாயிலாக மானுட வாழ்வு துன்பம் நிறைந்தது என்பதையும், துன்பக் கடலிலிருந்து நீந்திக் கரை சேர்வதற்கு இறைவனின் திருவடிகளே பற்று என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளார். ஆழ்வார்கள் திருமால் நெறியை நாடெங்கும் பரப்பி வைணவ சமயம் மறுமலர்ச்சி பெறக் காரணமாய் இருந்துள்ளார் என்ற செய்தி அறியப்படுகின்றது.

ஆழ்வார் பெருமக்கள் தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடித் துதித்து உலக உயிர்கள் உய்யும்பொருட்டுத் திருத்தொண்டு புரிந்துள்ளனர். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வதில்தான் பேரின்பம் நிறைந்திருக்கின்றது என்பதை ஆழ்வார்களின் அற்புதமான வாழ்க்கை அனுபவங்கள் உணர்த்துகின்றன.

பல்வகைச் சமயங்களும் அறிவுறுத்தி நெறிப்படுத்தும் அடிப்படை நெறியாகிய பக்திநெறி தமிழர் நெறியாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த பாங்கு அறியத் தக்கது. பெரியோரிடத்தும், இறைவனிடத்தும் காட்டும் அன்பே பக்தி என்பதையும், அச் சொல்லின் பொருளாழத்தையும் பல்வேறு இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

எல்லையில்லாப் பேரின்பம் கொண்ட இறைப்பரம்பொருள் இவ்வுலகினை உய்விக்கப் பல்வேறு நிலைகளில் காட்சியளிக்கின்றது என்ற உண்மை ந.சுப்புரெட்டியாரின் பயண நூல்களின் வழியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இறைவனை அடைவதற்கு மனத்தூய்மையே செம்மையான நெறி என்பதையும், மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டாம் என்பதையும் ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் உணர்த்தியுள்ளனர்.

ஆழ்வார்கள், திருத்தலங்கள் தோறும் சென்றுபாடி அங்குறைகின்ற இறைவனின் திருஉருவைத் தனது உள்ளத் திரையில் நிலை நிறுத்திக் கொண்டவர். உள்ளத் திரையில் காட்சி தருகின்ற இறைவனைத் தனது உள்ளக் குடியிலும் நிலையாக உறையச் செய்வதற்கும், ஆழ்வாரின் அப்பேரின்பப் பேராவலுக்கு, அவர்தம் பழுதிலாத பக்தித்திறம் துணை செய்தது என அறிய முடிகின்றது. அவ்வகையில் நாளும் தன்பால் குறைவிலாத அன்பு பெருக்கும் ஆழ்வாரின் உள்ளத்தையே தனக்குரிய அருட்குடிலாக இறைவனும் அருள்புரிந்தான் என்னும் செய்தியைப் பாசுரங்களின் மூலம் உறுதிப் படுத்துகின்றனர்.

இறைவன் தனக்கு எளியவன் என்றும், தானே வந்து உள்ளத்துள் புகுந்தான் என்றும், தன்னை இமைப்பொழுதும் அவன் பிரியான் என்றும், ஆழ்வார் பாடிக்களிக்கின்ற நிலைகள், அவர்தம் அன்புக்கு இறைவன் ஆட்பட்ட அருந்திறத்தை ஆழ்வாரின் பாசுரங்கள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

இறைவனைத் தந்தையாகவும், காவலனாகவும், ஆள்பவனாகவும், தலைவனாகவும், தாங்குபவனாகவும் நினைந்து பாடியுள்ள அருள்நிலைகள், ஆழ்வார் இறைவனோடு பூண்ட

அன்புறவுக்குச் சான்றுகளாக நின்று வழிகாட்வதை ந.சுப்புரெட்டியாரின் பயண நூல்கள் தெளிவாக்குகின்றன.

இறைவன் விரும்பி உலக உயிர்களைப் படைப்பதனால் அவனால் படைக்கப்பட்ட உயிர்களைப் பொறுத்தவரை பாரபட்சமில்லாத கருணையே இருக்கின்றது என்பதையும், உயிர்களின் வினைகளுக்கேற்பவே பரமபதநாதனின் திருவடி தரிசனம் கிடைக்கும் என்பதையும் பெரியாழ்வார் தம் பாசுரங்களின் பதிவாக்கியுள்ளார். ஆழ்வாரின் அருளியல் விண்ணப்பங்கள் பழுதிலா பக்தி உள்ளத்திலிருந்து பிறந்த அருள்மொழிகளாகத் திகழ்கின்றன.

'வழிபடு நெறியைக் கட்டியருள்க' என்றும், 'பக்தி நெறியைத் தந்தருள்க' என்றும், அன்பு அகலாது அடிமைத்திறம் பூணுகின்ற பக்தி உணர்வை வழங்கி அருள்க என்றும் ஆழ்வார்கள் இறைவனைப் பணிவது அவர்தம் சரணாகதி நிலையிலான பக்தித் திறத்தை உணர்த்துகிறது.

ஆழ்வார்கள் பக்தி வேறு, பக்தியினால் அடையும் பயன் வேறு என்று கருதாமல் பக்தி செய்வதையே பயனாகக் கொண்டார்கள் என்பதையும், இத்தகைய பக்தியைச் 'சாத்திய பக்தி' என்பர். இவ்வகையில் இறைவனின் அருட்குணங்களில் தன்னைக் கரைத்துக் கொண்டு இரண்டறக் கலந்து நின்றவர்கள் என்றசெய்தி ந.சுப்புரெட்டியாரின் எழுத்தின்வழி அறியலாகின்றது.

பக்தி நெறி நின்ற அருளாளர்கள், சங்க அக இலக்கியங்களின் அகத்துறைப் பொருண்மையைத் தமது இறைக்காதலைப் பாடுவதற்கும் கருவியாகக் கொண்டனர். ஆன்மாவானது இறைவனை அடைய முயலும் முயற்சியைப் பாடுவதற்குத் தலைவனை அடைந்து இன்புறக் கருதும் தலைவியின் மனநிலை ஒப்பீடாகக் கொண்டு அடியார்கள் பாடியுள்ள தன்மை புலப்படுகின்றது.

ஒத்த அன்பினால் கூடும் உள்ளங்கள் அனுபவிக்கும் பேரின்பம் அவர்களின் உள்ளத்துள் நுகர்ந்து இன்புறுவதே நோக்கமாகக் கொண்டதாகும். இப்பேரின்ப உணர்வினைப் பெறவிழையும் அகமாந்தர்களின் மனநிலையினை ஆழ்வார்களின் பாசுரங்கள் வெளிப்படுத்திக் காட்டுவதை ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.

சிற்றிலக்கியக் கூறுகளில் ஒன்றாகிய உலா கூற்றின் அடிப்படையில் தலைவன் உலா வருதல் கண்டு மயங்கும் பெண்ணின் நிலையிலிருந்து ஆழ்வார்கள் பாடி மகிழ்வதைக் காணமுடிகின்றது. தலைவனின் மேற்கொண்ட அன்பின் மிகுதியால் தலைவி, குயில் ஆகியவற்றைத் தூதாக அனுப்பித் தன் நிலையை உரைக்குமாறு, செய்த பாடல்களைச் சுவைக்க முடிகின்றது.

சிற்றின்பத்தை விடுத்துப் பேரின்ப நிலையை அடைவதே உயிர்களின் குறிக்கோள் என்ற உண்மை ஆழ்வார் பாசுரங்களில் பதிவாக்கப்பட்டுள்ள பாங்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

தலைவனாகிய எம்பெருமானின் பிரிவாற்றாத தலைவி, பல்வேறு பொருள்களைக் கண்டு பேசிய காமம் மிக்க கழிபடர்க்கிளைவி தன் மூலமாகத் தலைவன் தலைவியருக்கு இடையேயுள்ள ஆழமான நட்புறவு வெளிப்படும் பாங்கு பதிவாக்கப்பட்டுள்ளது.

உயிருக்கு இன்பத்தைத் தருகின்ற வழிகள் பலவாறாக இருப்பினும், அவற்றையெல்லாம் பெரிதாக எண்ணி விரும்பாத உயிரானது தன் தலைவனாகிய இறைவனை அடைவதிலேயே தனிவிருப்பம் கொள்கின்றது என்பதனை ஆழ்வார்களின் பாசுரங்களின் வழி எடுத்துரைக்கப் பட்டுள்ளது. உணர்வதற்கரிய இறைபொருளை எளிதில் உணர்ந்து இன்புறுவதற்கு எண்ணிய அருளாளர்கள் இருவரும், தலைவி நிலையேற்றுத் தமது அன்புணர்வையும், ஆராத பேரின்ப வேட்கையையும் பாடிக் களிக்கின்றனர்.

இறைவனைப் பெற்றாலன்றி உயிர்வாழ இயலாது என்று அவனைச் சரண்புகுகின்றனர். அவ் அருட்திறத்தால் அடியார் இருவரும் அகத்துறை வழியே பாடியருளிய திருப்பாடல்கள் இலக்கியச் சுவையோடு, பேரின்பச் சுவையளிக்கும் அருட்பனுவல்களாகத் திகழ்கின்றன.

எதிர்கால ஆய்வுக்களங்கள்

இவ்வாய்வினை அடித்தளமாகக் கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளத்தக்க ஆய்வுக்களங்கள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருத்தலங்களும் வரலாறும்
2. ந.சுப்புரெட்டியாரின் வைணவத் தொண்டு நெறி
3. ந.சுப்புரெட்டியார் தமிழுக்குச் செய்தி தொண்டுகள்

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள்

ந.சுப்புரெட்டியார்

சோழநாட்டுத் திருப்பதிகள் (முதல்பாகம்)
எண்.1, புதூர் 13வது தெரு
அசோக் நகர்,
சென்னை–600 083

சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பாகம்)
எண்.1, புதூர் 13வது தெரு
அசோக் நகர்,
சென்னை–600 083

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
எண்.1, புதூர் 13வது தெரு
அசோக் நகர்,
சென்னை–600 083

வடநாட்டுத் திருப்பதிகள்
எண்.1, புதூர் 13வது தெரு
அசோக் நகர்,
சென்னை–600 083

மலை நாட்டுத் திருப்பதிகள்
வேங்கடம் வெளியீடுகள்
ஏ–டி. 13. அண்ணா நகர்
சென்னை – 600 040

பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை
சென்னை – 600 108

துணைமை ஆதாரங்கள்

அடைக்கலசாமி. எம்.ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு,
திருநெல்வேலி,
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
154, டி.டி.கே.சாலை,
சென்னை–18,
பத்தாம் பதிப்பு–1996.

அருணாச்சலம். ப., பக்தி இலக்கியம்,
தமிழ்ப் புத்காலயப் பதிப்பு,
தஞ்சாவூர்,
முதற் பதிப்பு–1973.

அரங்க சீனிவாசன், வைணவத் தத்துவஞான அடிப்படைகள்,
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை–600 018,
முதற்பதிப்பு–1984.

அறிவுடை நம்பி. ம.சா., (ப.ஆ),
அபிதா சபாபதி, பக்தித் தென்றல்,
கலைஞன் பதிப்பகம்,
19, கண்ணதாசன் சாலை,
சென்னை–17,
முதற் பதிப்பு–2009.

ஆத்ம தத்வதாஸ். (மொ.ஆ), பகவத்கீதை (தமிழ் மொழி பெயர்ப்பு),
பக்தி வேதாந்த புத்தக நிறுவனம்,
32, பர்கிட்சாலை,
தி.நகர்., சென்னை–17,
முதற் பதிப்பு–2001.

இலக்குவன், அரு., (ப.ஆ)., அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்,
பூம்புகாரப் பேரவைக் கல்லூரி வெளியீடு,
மேலையூர்–609 107,
முதற் பதிப்பு–மே.1980.

இலஷ்மணன்.கி., இந்திய தத்துவ ஞானம்,
பழனியப்பா பிரதர்ஸ்,
ஏசியன் அச்சகம்,

சென்னை–600 014,
நான்காம் பதிப்பு–1987.

இராஜகோபாலன். டி.எஸ்.,
ஆண்டாள் திருப்பாவை,
பைலட் பப்ளிகேஷன்ஸ்,
109, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை–01,
இரண்டாம் பதிப்பு–1987.

நம்மாழ்வார் காட்டும் தெய்வம்,
வெற்றி அச்சகம்.
91, டாக்டர் பெசண்ட் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை–14,
முதற் பதிப்பு–1994.

இராகவையங்கார்.மு.,
ஆழ்வார்கள் காலநிலை,
மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம்,
மறுபதிப்பு–1981.

அருணாச்சலம், ப.,
வைணவ சமயம் ஓர் அறிமுகம்,
பாரி புத்தகப் பண்ணை,
சென்னை,
முதற் பதிப்பு–1982.

அருணை வடிவேல் முதலியார்.(கு.அ),
திருக்கோவையார்,
தருமையாதீனம், தருமபுரம்,
முதற் பதிப்பு–1995.

அருணகிரிநாதர்,
கந்தர் அனுபூதி,
பாரி நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு–1967.

அருணாச்சலக் கவுண்டர். கு.,
தமிழ்ப் பண்பாட்டில் வைணவம்,
(மாயோன்–மகாவிஷ்ணு),
சமுதாயம் பிரசுராலயம்,

கோவை–15,
சென்னை,
முதற் பதிப்பு–1982.

இந்திரா பார்த்தசாரதி,
தமிழ் இலக்கங்களில் வைணவம்,
தமிழ் புத்தகாலயம்,
58, டி.பி.கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை–5,
முதற் பதிப்பு–1992.

இராமஸ்சுவாமி ராமாநுஜதாஸர்.ஆர்.,
நாராணயனே பரம் பொருள்,
ஆழ்வார்கள் அமுத நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு–1983.

ஸ்ரீ வைஷ்ணவம்,
ஆழ்வார்கள் அமுத நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு–1984.

இராமபத்திரன்.ஆ.,
வைணவம் தந்த வளம்,
கங்கை புத்தக நிலையம்,
13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர்,
சென்னை–17,
முதற் பதிப்பு–1997.

கோபாலகிருஷ்ணமாச்சாரியர், வை.மு., (உ.ஆ),
சடகோபரந்தாதி,
வை.மு.கோ.கம்பெனி,
சென்னை,
முதற் பதிப்பு–1969.

கோபாலகிருஷ்ண நாயுடு, ஜி.டி.,
ஆழ்வார்கள் அனுபவித்த அலர்மேல் மங்கை உறை மார்பன்,
மெர்க்குரி புத்தகக் கம்பெனி,
கோயம்புத்தூர்,
முதற் பதிப்பு–1973.

கோவேந்தன், தி., | பாரதத்தில் செழித்த வைணவம்,
வேமன் பதிப்பகம்,
9, நியூ காலனி,
ஜோசியர் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை—34,
முதற் பதிப்பு—2005.

சியாமளா. மு.ப., | திருமழிசை யாழ்வாரின் பாசுரங்கள்
ஓர் ஆய்வு,
பாரி நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு—1992.

சீனிவாசன். ம.பெ., | திவ்வியப் பிரபந்த இலக்கிய வகைகள்,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம் 608 001,
முதற் பதிப்பு—2001.

சீதாபதி, அ.கு (உ.ஆ), | நம்மாழ்வர் திருவாய் மலர்ந்தருளிய
திருவாய் மொழி,
மஹிமா பதிப்பகம்,
12, ஏ.ஜி.கே.எஸ். நகர்,
பாப்பநாயக்கன் பாளையம்,
கோயம்புத்தூர்,
முதற் பதிப்பு—2004.

சீனிவாசன் அரங்க., | வைணவ தத்துவ ஞான அடிப்படைகள்,
பாரி நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு—1984.

சேஷாத்திரி மணவாளன், | திருமாலடியார்கள்,
சுகந்தா வெளியீடு,
3/2, நிலி வீராசாமி செட்டித்தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005,

முதற் பதிப்பு–1976.

சுதாகர், ஆ., கண்ணன்,
பிள்ளைத் திருவிளையாடல்கள்,
18–8/1–4, முத்து மேஸ்திரித் தெரு,
சித்தூர், (ஆந்திர பிரதேசம்),
முதற் பதிப்பு–1984.

சுப்பிரமணியம், ச.வே., தமிழ் இலக்கியக் கொள்கைகள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை,
முதற் பதிப்பு–1983.

சுப்புரெட்டியார். ந., திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்,
பாரி நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு–1975.

தரணி பாஸ்கர், பெரியாழ்வார்,
நல்லமுத்துக் கவுண்டர்,
மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி–642 001,
முதற்பதிப்பு–2006.

தனிநாயக அடிகள், தமிழ்த்தூது,
பாரி நிலையம்,
சென்னை,
முதற் பதிப்பு–1962.

தாயுமானவர், தாயுமானவர் பாடல்கள்,
கழக வெளியீடு,
சென்னை–600 018,
முதற் பதிப்பு–1997.

தேவராஜன். தே.ந.ச., ஆழ்வார்களும், வேதங்களும்,
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,
பழைய எண்.24,
கிருஷ்ணாதெரு,
தி.நகர், சென்னை–17,
முதற் பதிப்பு–2002.

நச்சினார்க்கினியர், (உ.ஆ), தொல்காப்பியம் (பொருளதிகாரம்),
கழக வெளியீடு,
திருநெல்வேலி,
முதற் பதிப்பு–1947.

நாகராசன். கரு., திவ்வியப் பிரபந்தத்தில் மனம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை–600 113,
முதற் பதிப்பு–1982.

பரிமேலழகர் (உரை.ஆ) திருக்குறள்,
கழக வெளியீடு,
சென்னை, ஐந்தாம் பதிப்பு–1953.

பிரபாகரி.க, நாச்சியார் திருமொழி,
மோகன் பதிப்பகம்,
4–பைகிராப்ட்ஸ் சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை–5,
முதற்பதிப்பு–1984.

புருஷோத்தம நாயுடு. டி.ஆர்., ஆசாரிய ஹருதய மூலம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை, முதற் பதிப்பு–1965.

மாருதிதாசன், திருமாலின் அவதாரங்கள்,
நர்மதா பதிப்பகம்,
சென்னை,
முதற் பதிப்பு–1982.

முருகன். ச., வைணவ வேதம்,
காவ்யா வெளியீடு,

14, முதலாம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
சென்னை–24,
முதற் பதிப்பு–2002.

முருகேசன்.க., திருமுறைகளில் அகப் பொருள் மரபுகளும் தொண்டு நெறியும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை–600 113,
முதற் பதிப்பு–2013.

ஸ்ரீ ராமுலு தேசிகன்,எ., கோதையும் கோவிந்தனும்,
ராம்குமார் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை,
முதற் பதிப்பு–1981.

அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும்

அனவரதம் விநாயகம் பிள்ளை, கலைக்களஞ்சியம்,
சென்னை,
முதற் பதிப்பு–1963.

ஜகந்நாதன். கி.வா., கலைக்களஞ்சியம் (தொகுதி–4),
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை,
முதற் பதிப்பு–1958.

ஆய்வேடுகள்

சிவகாமி,செ., நம்மாழ்வார் பாசுரங்களில் இறையியல்புகளும்,
இலக்கிய நயங்களும்,
முனைவர் பட்ட ஆய்வேடு–2011,
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்–641 046,

மதன்குமார். இரா., பக்திநெறியில் மணிவாசகரும் திருமங்கையாழ்வாரும், முனைவர் பட்ட ஆய்வேடு–2007, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்–608 002,

லோகநாயகி, தா., திருவிருத்தம்–திருவாய்மொழி ஒப்பீடு, முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம்–2008, கோயம்புத்தூர்–641 046,

ஆங்கில நூல்கள்

Vaiyapuri Pillai. S., History of Tamil Language and Literature, New Century Book House, Madras, First edition – 1956.

Varadhachari. K.C., Aspects of Bhakti, University of Mysore Publications, Mysore, First edition - 1956.

“ந.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் விருதுகளும்”

1.0 முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் சீரிய தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கதாகும். அறிவியல் பேராசிரியாக இருந்து தமிழ்ப் பேராசிரியராக வளர்ந்து திறம்படப் பணியாற்றியவர். இவர்தம் தமிழ்ப்பணி போற்றுதற்குரியது. இவரது வாழ்க்கைத் தகவல்களை நாம் இவ்வியலில் காண்போம்.

1.1 பிறப்பும் வளர்ப்பும்

ந.சுப்புரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்றை „நினைவுக் குமிழிகள்" என்னும் தலைப்பில் நான்கு பகுதிகளாக எழுதியுள்ளார். „மலரும் நினைவுகள்" „நீங்காத நினைவுகள்" ஆகிய தன் வரலாற்று நூல்களிலும் அவர்தம் வாழ்க்கை வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளார். இந்நூல்களின் துணைகொண்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகின்றது.

ந.சுப்புரெட்டியார் „ஞானியார்" பரம்பரையைச் சேர்ந்த ஞானி நல்லப்ப ரெட்டியாருக்கும், காமாட்சி அம்மாளுக்கும் மகனாக 27-08-1916இல் பிறந்தார். திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்திலுள்ள பெரகம்பி என்னும் சிற்றூரில் தன் தாய்மாமனாகிய பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் „பண்ணையார் வீடு" என்றழைக்கப்படும் பண்ணை இல்லமே ந.சுப்புரெட்டியார் பிறந்த இடமாகும். ‘பெரகம்பி’ என்னும் சிற்றூருக்கு மேற்கில் ஆறுகல் தொலைவிலுள்ள கோட்டத்தூர் என்னும்

சிற்றூரே ந.சுப்புரெட்டியாரின் தந்தையாகிய ஞானி நல்லப்ப ரெட்டியார் பிறந்த ஊராகும்.

"ந.சுப்புரெட்டியார் 1926 வரையில் பெரகம்பியில் வளர்ந்து பின்னர் கோட்டத்தூருக்குக் குடிபெயர்ந்தவர். ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனான பண்ணை நல்லப்ப ரெட்டியாருக்கும், ந.சுப்புரெட்டியாரின் தந்தையான ஞானி நல்லப்ப ரெட்டியாருக்கும் ஏறக்குறைய ஒத்த வயதே. ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனான பண்ணை நல்லப்ப ரெட்டியார் பரம சாது. இவருக்கும் பெரகம்பிலுள்ள ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. ஆயினும் இரண்டாடுகள் கூட அவர்களது இல்லற வாழ்க்கை இனிதாக நடைபெறவில்லை. பண்ணை நல்லப்ப ரெட்டியாரின் தாயாரும் தனது பாட்டியுமான செல்லாயம்மாள் அரவணைப்பில் ந.சுப்புரெட்டியார்

செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தார். ந.சுப்புரெட்டியாருக்கு தம் மூன்று வயது நிறைவடையும் முன்னர் ஞானி நல்லப்ப ரெட்டியார் தம் முப்பது அகவையை எட்டும் முன்னர் இறந்து விட்டார்".[1] ந.சுப்புரெட்டியாரின் தாய்மாமனாகிய பண்ணை நல்லப்ப ரெட்டியார் நம் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தார். அப்போது அவருக்கு மூன்று வயதில் செல்லப் பாப்பா என்ற பெண் குழந்தை இருந்தது. பண்ணை நல்லப்ப ரெட்டியார் தம் மனைவியைப் பிரிந்து வாழ்ந்ததாலும், அவருடைய தங்கையான காமாட்சி அம்மாள் இளம் வயதில் விதவையானதாலும் அவருடைய முழுக்கவனமும் ந.சுப்புரெட்டியாரின்பால் திரும்பியது. ந.சுப்புரெட்டியார் இளமையில் பண்ணையார் வீட்டுப் பண்ணைச் செல்லமாகப் போற்றி வளர்க்கப்பட்டார். ந.சுப்புரெட்டியாரின் பாட்டியார் அவருக்காக மட்டுமே அரிசிச்சோறு, பருப்பு, குழம்பு, ரசம் ஆகிய உணவைச் சுவைபடச் சமைத்தார்.

1.2 தொடக்க நிலைக்கல்வி

ந.சுப்புரெட்டியாருக்கு ஐந்து வயது நிறைவு வெறும் போது திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார், வைதிகச் சடங்குகளுடன் ந.சுப்புரெட்டியாருக்கு, பண்ணை நல்லப்ப ரெட்டியார் இல்லத்தில் வித்தியாப்பியாசம் (எழுத்தறிவித்தல்) என்னும் சடங்கினைத் தொடங்கி வைத்து அவருக்குத் தொடக்க நிலைக்கல்வியை ஊட்டினார். "ஆசிரியர் (இலிங்கச் செட்டியார்) மஞ்சள் தடவிய அளவுபடுத்தப் பெற்றுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறு கட்டில் „ஹரி:நமோத்துசித்தம்" என்று எழுதித் தந்ததும், சருக்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்தலும், அதன் மேற்படியேட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தை மூன்று முறையும் ஆசிரியர் சொல்ல அப்படியே என்னைச் சொல்லும்படி செய்தலும் இவையாவும், ஒரு சிறு விநாயகர் வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றன. மறுநாள் தொடங்கி பள்ளிக் கூடத்திற்கு முற்பகலும் பிற்பகலும் ஒழுங்காகப் போய்வந்ததும் நினைவுக்கு வருகின்றது"[2] என ந.சுப்புரெட்டியார் தம் தொடக்க நிலைக்கல்வி அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

1.3 ந.சுப்புரெட்டியாரின் தொடர்கல்வி முயற்சிகள்

கோமுட்டி செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த இலிங்கச் செட்டியாரிடம் ந.சுப்புரெட்டியார் அவரது திண்ணைப் பள்ளியில் 1921-1926களில் பயின்றார். பெரகம்பியில் செல்லப்பிள்ளையாக ந.சுப்புரெட்டியார் வளர்ந்த போது அவரிடம் அழுதழுதே காரியத்தை சாதித்துக்கொள்ளும் பண்பும், தான் செய்த குற்றத்தைப் பிறர்மேல் சுமத்தும் பண்பும் இருந்தது. பெரகம்பியில் ஆடிப் பதினெட்டு அன்று

நடைபெற்ற கரகாட்ட விழா, கண்ணன் பிறப்புத் திருவிழா, காமன் பண்டிகை ஆகிய மூன்று விழாக்களும் ந.சுப்புரெட்டியாரைப்4 பெரிதும் கவர்ந்தன.

"ந.சுப்புரெட்டியார் கோட்டதூரில் நான்கு வருடங்கள் (1927-1930) கழகத் தொடக்கப் பள்ளியிலும், சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப் பெற்ற ஆங்கிலப் பள்ளியிலும் படித்தார்".[3] 1931இல் ந.சுப்புரெட்டியார் முசிறியில் நான்காவது படிவம் படித்துக் கொண்டிருந்தார். கோட்டத்தூர் கழகத் தொடக்கப்பள்ளியில் வேலூர் வாத்தியார் சந்திரசேகரய்யர் என்னும் ஓராசிரியரே இருந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆயினும் சோதிடம் நன்றாகத் தெரிந்தவர். „சிவிக்ஸ்" என்ற பாடநூலும், „கணித நூலும்" பாடநூல்களாகும். "சந்திரசேகரய்யர் இவற்றைச் சொல்லித்தராமல் வாய்பாட்டினை மனப்பாடம் செய்தல், கூட்டல். கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகள், ரூபாய் அணா பைசா கணக்கு, அருணகிரி அந்தாதி, அறப்பளீசுர சதகம், அரிச்சந்திரபுராணம்"[4] ஆகியவற்றையே சொல்லிக்கொடுத்தார். பின்னர் அந்தப் பள்ளிக்கு சுப்பராய உடையார் என்னும் தலைமை ஆசிரியர் வந்தார். "சுப்பராய உடையாருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். அத்துடன் அவருக்கு நாட்டு வைத்தியமும் தெரிந்ததால் மிக விரைவாகப் பொதுமக்களிடம் செல்வாக்குப் பெற்றார். சுப்பராய உடையார் தம் வீட்டில் ஆங்கிலத்தையும் வட்டிக்கணக்கையும் இலாப நட்டக் கணக்கையும் தனிப்பாடமாகச் சொல்லிக் கொடுத்து கூடுதல் வருமானத்தைப் பெற்றார"[5]

கோட்டத்தூர் சந்திரசேகரய்யர், சுப்பராய உடையார், வி.கே.அரங்கநாத அய்யர் ஆகிய மூவரும் ந.சுப்புரெட்டியாருக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றினர். ந.சுப்புரெட்டியார் துறையூர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் சேர்ந்து எட்டாவது படித்த எட்டுமாதக் காலத்தில் தான் தசமபின்னக் கணக்குகளைக் கற்றுக் கொண்டார். ந.சுப்புரெட்டியார் கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்டு துறையூரில் ஒரு உயர்நிலைப்பள்ளியைத் தாமே நிறுவி அப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆனார்.

1.4 கல்லூரிக் கல்வி

ந.சுப்புரெட்டியார் 1937-1939 ஆம் ஆண்டுகளில் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் படித்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

1.5 குடும்ப வாழ்க்கை

ந.சுப்புரெட்டியார் 1936இல் தம் தந்தை வழியில் ஒன்றுவிட்ட அத்தை மகளான செல்லபாப்பா அம்மையாரை மணந்தார். அவர்களுக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் மக்கட்பேறு இல்லை. 1949இல் இராமலிங்கமும் 1953இல் இராமகிருஷ்ணனும் பிறந்தனர். இராமலிங்கத்திற்கு மிருணாளினி, அனுபமா என்ற இரு பெண் மக்கள்

உள்ளனர். மிருணாளினி தன் கணவன் அரவிந்த் விஷ்ணுராமனுடன் அமெரிக்காவில் ஒரே நிறுவனத்தில் உயர்பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.

மருத்துவக் கல்வியைப் பயின்ற டாக்டர் இராமகிருஷ்ணனும் அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் முதியோர் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர் மகன் வேங்கடவன் மருத்துவமும், இரண்டாம் மகன் பிரகாசு பொறியியலும் படித்து முடித்துள்ளனர்.

1.6 ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள நூல்கள்

ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள நூல்களை ஆசிரியத்தொழில், உளவியல், இலக்கியம், சமயம் - தத்துவம் குறித்த விளக்க நூல்கள், திருத்தலப் பயண நூல்கள், திறனாய்வு நூல்கள், வரலாறு மற்றும் தன் வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் என வகைப்படுத்திக் குறிப்பிடலாம். தமிழ்ப்பணிக்காகவே தமிழில் இவரெழுதிய நூல்கள் போற்றுதலுக்கும் சிறப்பிற்கும் உரியவை.

1.7 ஆசிரியத்தொழில், உளவியல்

ந.சுப்புரெட்டியார் ஆசிரியத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் பயன்படும் வகையில் ஆசிரியர்களுக்குத் தேவையான கற்றல், கற்பித்தல், உளவியல் கோட்பாடுகளை விளக்கி ஐந்து நூல்களை எழுதியுள்ளார். அவை வருமாறு:

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை

3. அறிவியல் பயிற்றும் முறை

4. கல்வி உளவியல் கோட்பாடுகள்

5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

